# பகுத்தறிவின் நீதிமன்றம்

(திருத்திய பதிப்பு)

ஷெய்குல் முப்லிஹீன்
எம். எஸ். எம். அப்துல்லாஹ் (ரஹ்)

வெளியீடு

அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன்
கொழும்புக்கிளை
www.kalimathuththayiba.com
T.P : 01-669682

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | *Paguthirivin Neethimantram* |
| Author | : | *Seyhul Mufliheen M.S.M.Abdullah (Rah)* |
| Subject | : | *Court of Reason* |
| Language | : | *Tamil* |
| First Publication | : | *1995 April (1000 Copies)* |
| Copy right | : | *All Ceylon Thareekathul Mufliheen* |
| Publisher | : | *All Ceylon Thareekathul Mufliheen Colombo Branch Sri Lanka* |
| Second Published | : | *2002 May (1000 Copies)* |
| Third Edition | : | *2003 June (2000 Copies)* |
| Paper Used | : | *Bank Paper* |
| Paper Size | : | *A5* |
| Size of the Book | : | *1/8* |
| Type used for Text | : | *Kalaham* |
| Number of pages | : | *216* |

Printed By :
**PARANAN ASSOCIATES PRIVATE LIMITED**
403 1/1, Galle Road, Wellawatta, Colombo - 06.
T.P : 507932, 551241 Hotline : 077-7370292.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | |
| 2. | அறிவு பேசுகிறது | |
| 3. | நீதிபதியும் நாஸ்த்தீகவாதியும் | 1-14 |
| 4. | நீதிபதியும் பொதுநலவாதியும் | 15-26 |
| 5. | நீதிபதியும் பரிணாமவாதியும் | 27-32 |
| 6. | நீதிபதியும் விஞ்ஞானியும் | 33-48 |
| 7. | நீதிபதியும் துவிதவாதியும் | 49-50 |
| 8. | நீதிபதியும் மௌலவியும் | 51-60 |
| 9. | நீதிபதியும் விசிட்டாத்வைதியும் | 61-62 |
| 10. | நீதிபதியும் அத்வைதியும் | 63-96 |
| 11. | நீதிபதியும் மூ.:.மீனும் | 97-197 |
| 12. | மூ.:.மீன் உலகுக்குக் கூறும் உபதேசம் | 198-205 |
| 13. | பகுத்தறிவு நீதிமன்றத்தின் தீர்ப்பு | 206-207 |

## முன்னுரை

சுமார் 600கோடி மக்களும் சாந்தியை சமாதானத்தை தன்னிறைவை பெறுவதற்காகவே வாழ்கிறார்கள் என்பதை நாம் அறிகிறோம். இதற்கு முன் இறந்துபோன எண்ணிலடக்க முடியாத மக்களும் சாந்தி சமாதானத்தை, தன்னிறைவை பெறும் நோக்கோடு தான் வாழ்ந்தார்கள் என்பதும் எமக்குத் தெரியும். எமக்குப் பின் வரப்போகின்ற பின்சந்ததியினரும் எமது குறிக்கோளோடுதான் வாழப் போகிறார்கள் என்பதும் நிச்சயமான உண்மைதான். எனினும் நிகழ் காலத்தில் வாழ்கின்ற மக்களிலும், முன்சென்றுபோன மக்களிலும் சாந்தியை, சமாதானத்தை, தன்னிறைவை பெரும்பாலார் பெற்றுக் கொண்டதாக தென்படவில்லை. உலக மக்கள் யாவருக்கும் தேவை ப்படுவது ஒரே வகையான சாந்தி, சமாதானம், தன்னிறைவு தான் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. எனினும் உலக மக்கள் யாவரும் சாந்தி சமாதானத்தை, தன்னிறைவைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வழியேதும் உண்டா என்பதை கண்டறிந்து செயல்பட எம் காலத்தில் எந்தவோர் அறிஞரும் மனித சமுதாயமும் முன்வந்ததாய் தெரியவில்லை.

தற்போது எம்மிடையே வாழும் ஷெய்குல் முப்லிஹீன் எம்.எஸ்.எம்.அப்துல்லா(ரஹ்) அவர்கள் இம்மை மறுமைகளில் சாந்தி சமாதானத்தை தன்னிறைவை எல்லோரும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு இலகுவான வழி உலகில் உண்டு என்பதை உலக மக்களுக்கு வெளிப்படையாய் விளக்குவதற்காகவே இந்த நூலை எழுதியிருக் கிறார்கள். இந்த நூல் ஒரு துணிகரமான ஆக்கமென்றே கூறலாம். எனவே மக்கள் யாவரும் கட்சிப் பற்று இல்லாமல் நடுநிலை நின்று இந்நூலைப் படித்து உண்மையை உணர்ந்து செயற்பட்டு வெற்றி பெறும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இந்நூலை அச்சிட்டு வெளியிட அனுமதி அளித்த நூலாசிரிய ருக்கு எமது நன்றியைக் கூறிக் கொள்கிறோம்.

**அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன்**
**கொழும்புக்கிளை.**

# அறிவு பேசுகிறது

**(நூலாசிரியர் உரை)**

***அகில உலகிலுமுள்ள அன்புப் பெருமக்களே!***

இன்று இவ்வுலகில் வாழும் சகல மக்களும் எவ்விடயத்தில் தீர்ப்புப் பெறுவதானாலும் பகுத்தறிவாகிய என்னையே நீதிபதியாக நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். என்னை நீதிபதியாக ஏகமன தாய் நீங்கள் ஏற்றுக் கொண்டமைக்காக உங்களுக்கு முதலில் நன்றி கூறிக்கொள்கிறேன்.

மனித இனம் ஆரம்ப காலத்திலிருந்து இற்றை வரையிலும் இம்மை மறுமைக்குரிய எத்தனையெத்தனையோ விடயங்களில், எத்தனை எத்தனையோ வகையான கருத்து மோதல்களில் ஈடுபட்டுக்கொண்டே இருக்கிறது. இவ்வித கருத்து மோதல்களுக்கும் போராட்டங்களுக்கும் மிக முக்கியமான காரணம், ஒவ்வோர் மனிதரும் சாந்தியை, சமாதானத்தை, தன்னிறைவை, நடுநிலையைப் பெற வேண்டுமென்ற அவாவுடையோராய் இருப்பதே. இயற்கையை மீறாமல் நல்வழியில் வாழ்வோரும், இயற்கையை மீறி தீயவழியில் வாழ்வோரும் சாந்தியை, சமாதானத்தை, தன்நிறைவை, நிறை நிலையைப் பெற்று வாழ்வதற்காகவே வாழ்கிறார்களென்பதை நாம் மறுக்க முடியாது. பஞ்சமா பாதகங்களைப் புரிவோர் மட்டுமல்லாமல் தன்னைத்தானே அழித்தொழிக்க விரும்பித் தற்கொலை செய்து கொள்பவன்கூடச் சாந்தியை, சமாதானத்தை, தன்நிறைவை விரும் பியே செயல்படுகிறான். மனிதனுக்கு வேண்டிய சாந்தியை, தன் நிறைவை விளக்கி வழிகாட்டுவதற்காக உண்மை வேதங்களும், போலி வேதங்களும், கலை கலாச்சாரங்களும், அரசியல், சமூக சட்டங்களும் உருவாகியிருந்தன. இப்போதும் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. இனிமேலும் உருவாகலாம். மனித சமூகத்திலுள்ள நல்ல, தீயசெயல்கள் அத்தனையையும் உங்களால் இயன்றவரை யிலும் ஆராய்வு செய்தால், மனித இனத்தின் குறிக்கோள் அல்லது முழுநோக்கம் சாந்தியை, சமாதானத்தை, தன்நிறைவைப் பெறுவதே என்பதை உங்களால் உணரமுடியும்.

சாந்தியை, தன்நிறைவைப்பெற வழிகாட்ட முன்வந்த வேதங்களும், போலி வேதங்களும், அரசியல் சமூகச் சட்டங்களும், பாரம்பரியச் சம்பிரதாயச் சடங்குகளும், கலை கலாச்சாரங்களும், பழக்கவழக்கங்களும் மனித இனத்தின் மிகப் பெரும்பாலான மக்களுக்குச் சாந்தியை, தன்நிறைவை ஏற்படுத்தியுள்ளனவென்று எவரும் கூற முடியாது. உண்மையான வேதங்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருப்பதால் மனிதரில் பெரும்பாலாருக்குச் சாந்தியை, தன்னிறைவைப் பெறக்கூடிய வழியை அவை காட்டியிருப்பதாகத் தெரியவில்லை. உண்மையான வேதங்களின் அடிப்படை உண்மை மறைக்கப்பட்டும், திரிபுபடுத்தப்பட்டுமிருப்பதால் தான் உலக மக்கள் கடலலைகள் ஒன்றோடொன்று மோதிக் கொள்வதுபோல, ஒரு கூட்டத்தோடு இன்னோர் கூட்டம் மோதிக் கொள்கிறதென்று நான் காணுகிறேன். எத்தனையோ வகையான யூகங்களைக் கையாண்டும் மனிதன் சாந்தியைப் பெறமுடியாமல் திணறுவதற்கும் அச்சமுடைய வனாய் வாழ்வதற்கும் மிகமுக்கிய காரணம் உண்மையான வேதத்தை விளங்கிக் கொள்ளாமைதான் என்றே நான் கூறுவேன். சாந்தியை, தன்நிறைவைப் பெற்று அச்சம் தீர்ந்தோராய் வாழ வேண்டிய மனித இனம் இன்று விரக்தி மனப்பான்மையுடையதாய்ச் சாந்தியை, சமாதானத்தைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறது. சந்தர்ப்பம் இருந்தால் சக்தியும் உடனிருந்தே ஆகும். இன்றுள்ள இக்கட்டான நிலையில் இருந்தும் விடுபட்டுச் சாந்தியைப் பெற ஏதோ ஓர்வழி இருந்தே ஆகவேண்டும். அப்படியோர் வழி உண்டென் றால் அவ்வழி மனித அறிவுக்குப் பொருந்தக் கூடியதாகவும் அமுல்படுத்தக் கூடியதாகவும் தான் இருக்கும். ஏனென்றால்,

நாம் வாழும் உலக நிகழ்வுகள் எம் அறிவு வட்டத்தில் கட்டுண்டவையாய்க், காரண காரியத் தொடர்புடையவையாய் இருப்பதால், நாம் எமதறிவை முறைப்படி பயன்படுத்திச் செயல் பட்டால் ஏறக்குறைய எல்லா நிகழ்ச்சிகளிலும் சாந்தியை சமாதான த்தை, தன்நிறைவை நிச்சயமாக எம்மால் பெறமுடியும் என்பது உறுதி. சிந்தனா சக்தியுடைய மனிதன் வாழும் காலமெல்லாம் கருத்து மோதல்கள் இடம்பெறலாம். ஆயினும் அடிப்படை சரியான உண்மையோடு ஒன்றியிருந்தால், மனிதனின் கருத்து மோதல்கள் மனித அறிவு வளர்ச்சிக்கு உதவியாயும் அமையலாம். பெரும்பாலும் மக்களிடையே ஏற்படும் கருத்து மோதல்கள் கண்மூடித்தனமான பின்பற்றலால்தான் ஏற்படுகின்றன.

உலக மக்களில் மிகமிகப் பெரும்பாலார் சாந்தியை, சமாதா னத்தை, தன்னிறைவை, நிறைநிலையைப் பெற்றுக் கொள்ள முடியாமல் வாழ்வதற்கு மிகமிக முக்கியமான காரணம் கொள்கை விளக்கம்தான் என்பதை நாம் மறுக்க முடியாது. உண்மையான வேதங்களால் தரப்பட்ட கொள்கை விளக்கம் பெரும்பாலும் இருட் டடிப்புச் செய்யப்பட்டுள்ளதென்று முன்பே கூறியுள்ளேன். செயல்கள் யாவும் நோக்கத்தை (கொள்கையைக், குறிக்கோளை)ப் பொறுத்த வைதான் என்பதை நாம் பூரணமாய் ஒப்புக்கொண்டிருக்கிறோம். எனவே மனித இனம் சாந்தியைப்பெற்று வாழ்வதற்கு உதவியான கொள்கை விளக்கம் எது? என்பதை தெளிவாய்ப் புரிந்து கொண்டு செயல்பட்டால் ஏறக்குறைய எல்லோருமே சாந்தியைப் பெற்றுச் சுபீட்சமாய் வாழலாம் என்பது எனது நம்பிக்கை. ஆதலால் உலக மக்களின் ஒவ்வொரு கூட்டத்தினதும் கொள்கை, குறிக்கோள் விளக் கங்களை அலசி ஆராய்ந்து, சாந்தி பெறக்கூடிய கொள்கை, குறிக்கோள் எது? என்பதை நாம் கண்டறிவதானால், அறிவு ரீதியா ய்ப் பிரித்து ஆராய வேண்டியது அவசியமாகும். அதன்படி நான் உலக மக்களை 9வகையினராய்ப் பிரித்து ஆராய விரும்புகிறேன்.

**1வது :**

அறிந்தோ அறியாமலோ கடவுளை நம்பி வாழும் மக்கள், இவ்வகையில் உண்மையான வேதங்களை நம்பி வாழும் மக்களும் போலி வேதங்களை நம்பிவாழும் மக்களும் இதிலடங்குவர். இவர்க ளுடைய வேதங்கள் என்ன குறிக்கோளை இவர்களுக்கு ஊட்டியுள் ளனவோ அக்குறிக்கோளுக்காகவே வாழ்பவர்கள். இவர்களில் மிகப் பெரும்பாலாருடைய குறிக்கோள் பின்பற்றல் முறையினால் உருவானதேயன்றி ஆராய்வினால் உருவானதல்ல. இன்னோர் வேதம், அல்லது மதம், அல்லது மார்க்கம், அல்லது கடவுள் நம்பிக்கையென்ற வட்டத்துக்குள் கட்டுண்டிருந்தாலும் எண்ணிலடக்க முடியாத அளவு கிளைகளும் பிரிவுகளும் உடையவர்களாய் இருக் கின்றனர். யூதர்களில் எத்தனையோ பிரிவு கிறிஸ்தவர்களில் எத்தனையோ பிரிவு, இந்துக்களில் எத்தனையோ பிரிவு, முஸ்லீம் களில் எத்தனையோ பிரிவு, இவ்வித பிரிவுகளுக்கெல்லாம் காரணம் கண்மூடித்தனமான பின்பற்றலே. இவ்வித மக்களை நாம் மதவாதி கள் என்று வைத்துக்கொள்வோம். இந்த மதவாதிகளை நாம் மூன்று பெரும் பிரிவுகளாய்க் கொள்ளலாம். அவை,

1. துவிதவாதிகள்
2. விசிட்டாத்வைதிகள்
3. அத்வைதிகள் அல்லது ஏகத்துவவாதிகள்.

துவிதவாதிகள் என்றால் இறைவன் ஓர் பொருள் என்றும், நான் அல்லது சிருட்டி உலகு வேறு ஓர் பொருள் என்றும் நம்பிச் செயல்படுபவர்கள். சிருட்டியான நாம் கடவுளின் அன்பைப் பெற்று இம்மையிலும், மறுமையிலும் தன்நிறைவைச் சாந்தியைச் சமாதானத் தைப் பெற வேண்டுமென்பதே இவர்களுடைய குறிக்கோளாகும். இக்குறிக்கோளை அடைவதே அவர்களுடைய சகல செயல்களி னதும் நோக்கமாகும். ஆயினும் இம்மக்கள் எவ்வளவோ அரும் முயற்சி செய்தும் தங்கள் வாழ்நாளில் தன்னிறைவைப் பெற்றார்களா? என்பது கேள்விக்குரிய விஷயம்தான். இம்மக்களைத் துவிதவாதிகள் என்று வைத்துக்கொள்வோம். (திரித்துவ வாதிகளையும் துவித வாதிகளாகவே கொள்வோம்.)

**2வது :**

முன்கூறிய மதவாதிகளில் இந்துக்களிலும், முஸ்லிம்களிலு முள்ள சிலர் துவிதவாதிகளுக்கு நேர் முரணான ஓர் கொள்கையில் தரிபட்டு வாழ்கிறார்கள். இவர்களுடைய கொள்கையை இந்துக்கள் அத்வைதம் என்றும் முஸ்லீம்கள் ஏகத்துவம் என்றும் கூறுகிறார்கள். இவர்களுடைய அடிப்படைக்கொள்கை, கடவுளும் சிருட்டியும் வெவ் வேறில்லாத ஒன்றே என்பதாகும். முஸ்லீம்களில் சிலர் ஒன்று என்பதை மறுத்து ஏகம் என்று கூறுகிறார்கள். இவர்களில் இன்னோர் சாரார் சிருஷ்ட்டியும் இறைவனும் வெவ்வேறாயினும் அவையிரண்டும் பாலும் நீரும் கலந்ததுபோல் கலந்துள்ளனர் என்று கூறுகிறார்கள். இன்னும் ஒரு சாரார் கடவுள் மட்டுமே உண்டென்றும் அவரே எல்லாமாய் அவதாரம் செய்திருக்கிறார் என்றும் கூறுகிறார்கள். மனிதன் பற்பல பிறவிகளை எடுத்து முடிவில் பிரம்மமாகவே ஆகி விடுகிறானென்று கூறுவோரும் அவர்களிலுண்டு. இக்கூட்டத்தினரை நாம் இருபிரிவாய்க் கொள்ளலாம். கடவுளும் மனிதனும் வெவ்வேறா யினும் இரண்டும் ஒன்றாய் இருக்கிறதென்போரை விசிட்டாத்வைதிக ளென்றும், கடவுள் மட்டுமே உண்டென்போரை அத்வைதிக ளென்றும் வைத்துக்கொள்வோம். இந்த மதவாதிகளின் நோக்கமும் தன்நிறைவை, சாந்தியைப் பெறுவதுதான். இவர்களின் கொள்கை மந்திரம் “ஓம் தத்துவ மசி” என்பதாகும். இதைப் பிரணவ மந்திரம் என்று கூறுவார்கள். முஸ்லீம்களுடைய கொள்கை மந்திரம் “லாஇலாஹ இல்லல்லாஹ்” என்பதாகும். இதை கலிமத்துத்தை யிபா என்று கூறுகிறார்கள்.

உலக முஸ்லீம்களை மட்டும் கொள்கை அடிப்படையில் நோக்கினால் இவர்களில் மிகப் பெரும்பாலார் இறைவன் வேறு சிருட்டி வேறு என்ற துவிதக் கொள்கையிலேயே ஊறியிருக்கிறா ர்கள். எனவே இவ்வகையினரை நாம் துவிதவாதமுஸ்லீம்கள் என்று கொள்வோம். இந்த முஸ்லீம் சமூகத்திலுள்ள ஓர் சொற்ப தொகை யினர்தான் ஏகத்துவவாதிகள் (தௌஹீது வாதிகள்) என்றழை க்கப்படுகிறார்கள். ஆனால் முஸ்லீம்கள் யாவரும் “லாஇலாஹ இல்லல்லாஹ்” என்பதே குறிக்கோளுக்குரிய மூல மந்திரமென்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மூலமந்திரத்துக்கு துவிதவாத முஸ்லீம் வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று பொருள் கொள்கிறார். அதாவது இறைவன் வேறு சிருஷ்டி வேறு என்று நம்புவதால்தான் இவரைத் துவிதவாத முஸ்லீம் என்று கூறுகிறோம். இதே மூலமந்திரத்துக்கு ஏகத்துவவாதியான முஸ்லீம் (அப்தும் றப்பும்) சிருட்டியும் சிருட்டிகர்த்தாவும் அல்லாஹ் வேயன்றி இல்லை என்று பொருள் கொள்வதால் இவரை அத்வைத முஸ்லீம் அல்லது ஏகத்துவ முஸ்லீம் அல்லது தௌஹீதுவாதியான மூ∴மீன் என்று பெயர் வைத்துக்கொள்வோம்.

நாம் மேலே கூறிய விபரப்படி மதவாதிகள், அல்லது மார்க்க வாதிகள் என்ற வகையில் 1வது துவிதவாதிகள், 2வது விசிட்டாத் வைதிகள், 3வது அத்வைதிகள், 4வது துவிதவாத முஸ்லீம்கள், 5வது ஏகத்துவ மூ∴மீன்கள் என்று ஐந்து வகுப்பாரை இங்கே எடுத்துக் கொண்டோம். இவ்வைந்து கூட்டத்திலும் குறிக்கோளுக் குரிய மந்திரத்தைக் கொண்டிருப்போர் அத்வைதிகளான ஒரு சில இந்துக்களும் துவிதவாத முஸ்லீம்களும் ஏகத்துவ மூ∴மீன்களும் மட்டுமே என்பதை நாம் கவனத்தில் இருத்திக்கொள்ள வேண்டும். கொள்கையில்லாத எம்மனிதரையும் நாம் ஆராயவேண்டிய அவசி யமே இல்லை. எனவே நாம் துவிதவாத முஸ்லீமையும் அத்வைதி யான இந்துவையும், விசிட்டாத்வைதியான மனிதனையும் ஏகத்துவ வாதியான மூ∴மீனையும் விசாரணைக்கெடுப்போம். அடுத்ததாக

மதவாதிகளல்லாத இன்னும் சில கூட்டத்தார் இருக்கிறார்கள். இவர்களை நாம் பொதுநலவாதிகள் என்று வைத்துக் கொள்வோம். பொதுநலவாதிகள் என்ற வகையில் அரசியல்வாதிகள், சமூக சீர்திருத்தவாதிகள் எல்லோரும் அடங்குவர். மேலும் நாஸ்த்தீக வாதிகள், பரிணாமவாதிகள், விஞ்ஞானிகள் போன்ற இன்னும் பல கூட்டங்கள் இருக்கின்றன. இவ்வகையினரின் நோக்கமும் சாந்தியைத் தன்னிறைவைப் பெறுவதுதான்.

மேலே நாம் மிகச் சுருக்கமாய்க் கூறிய இத்தனை கூட்டங்களும்தான் உலக மக்களை இயக்கும் இயக்குனர்களாய் அமைந்திருக்கிறார்கள். இக்கூட்டத்தினர் ஒவ்வொருவரும் தாங்களே சாந்தியைத் தன்னிறைவைப் பெறக்கூடிய நேர்வழியில் இயங்குவதாய் நம்பியிருக்கிறார்கள். எனினும் இக்கூட்டங்களிலுள்ள மிகப்பெரும்பாலார் சாந்தியைப் பெற்றார்கள், பெறுவார்களென்பதை என்னால் ஏற்க முடியாமலிருக்கிறது. ஆதலால் பகுத்தறிவாகிய நான் சாந்தியை, தன்நிறைவை, நிறைநிலையைப் பெறக்கூடிய வழியைக் கண்டறிய வேண்டியவனாயும் நான் கண்டறியும் சரியான வழியை உலகமக்களுக்கு எத்திவைக்க வேண்டியவனாயும் இருக்கிறேன். ஆதலால் சரியான ஓர் கலந்துரையாடல் நீதிமன்றத்தை உருவாக்கி முன்கூறிய 9வகைக் கூட்டத்தினரின் தலைவர்களையும் தனித்தனியே விசாரணை செய்து உண்மையைக் கண்டறிவதோடு அவ்வுண்மையை உலக மக்களுக்கும் எத்திவைக்கலாம் என்ற நன்நோக்கோடு இங்கே ஓர் நீதிமன்றம் கற்பனையாய் உருவாக்கப்படுகிறது.

ஓர் விடயத்தில் உண்மையைக் கண்டறிவதற்கு இருவகை ஆதாரங்கள் தென்படுகின்றன. அவற்றில் ஒன்றை “ம:.கூல்” என்றும் மற்றொன்றை “மன்கூல்” என்றும் கூறப்படும். “ம:.கூல்” என்றால் இயற்கைத்தத்துவ விதிகளை மீறாமல், கட்சிப்பற்றில்லாத நடுநிலை நின்று யூகித்து அறிதல் என்பதே அதன் அர்த்தமாகும். இந்த யூகம் ஒவ்வொருவருடையவும் அனுபவத்தைக் கொண்டமைவதால் இது நூறு வீதமும் சரியானதுதானென்று கூறமுடியாது. எமது யூகம் சரியானதுதானென்பதை உறுதிப்படுத்த ஓர் ஆதாரம் அவசியமாகிறது. இந்த ஆதாரத்தைத்தான் “மன்கூல்” என்று கூறுகிறோம். “மன்கூல்” என்றால் வேதவசனங்கள் (ஸ்ருதிகள்) என்பதே அதன் அர்த்தம். இதில் ஹதீஸுகளும் இடம்பெறுகின்றன. எனவே, எமது சரியான ஊகத்துக்கும் ஸ்ருதிகளான வேதவசனங்கள் ஹதீஸுகளுக்கும் அமைவாய் இருப்பது எதுவோ அதுவே உண்மையாக இருக்கும். ஆதலால் “ம:.கூல்” (யுக்தி) “மன்கூல்” வேதசுருதிகள் என்ற மூலப் பிரமாணங்களை அடிப்படையாய்க் கொண்டே நீதிமன்ற விசாரணை ஆரம்பமாகிறது.

இவ்வண்ணம்
**ஷெய்குல் முப்லிஹீன்**
எம். எஸ். எம். அப்துல்லாஹ்
மருதமுனை, சிறீலங்கா.

**குறிப்பு:** நீதிபதியான பகுத்தறிவும், யுக்தி அல்லது “அகில்” என்ற நீதிபதியும் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள். நீதிபதிகளின் உதவிக்காக வேதநூற்கள், தத்துவ நூற்கள் யாவும் மேசையில் வைக்கப்பட்டிருக்கின்றன. முதன் முதலில் விசாரணைக்காக நாஸ்த்தீகவாதியார் அழைக்கப்படுகிறார்.

# நீதிமன்றம்

## நீதிபதியும் நாஸ்த்தீகவாதியும்

**நீதிபதி :** நாஸ்தீகவாதியரே! உங்களுடைய கொள்கையையும், குறிக்கோளையும் இங்கே விளக்கிக் காட்டுங்கள் பார்ப்போம்.

**நாஸ்த்தீகவாதி :** நீதிபதியவர்களே! கடவுள் ஒருவருண்டு என்பது மனிதன் தன் அறியாமையினால் ஏற்படுத்திக் கொண்ட ஓர் குருட்டு நம்பிக்கையாகும். அப்படி ஓர் கடவுள் எங்கேயும் கிடையாது. கடவுளால் தரப்பட்ட வேதங்கள் என்று மக்கள் நம்பியுள்ள நூல்கள் யாவும் மனிதனின் கற்பனையால் உருவானவைதான். கடவுள் நம்பிக்கையும் வேதங்களும் பொய்யானவை. கற்பனையால் உருவானவை, பிரபஞ்சம் என்பது இயற்கையை அடிப்படையாய்க் கொண்ட இயற்கையேதான் அதாவது இயற்கைக்கு இயற்கையே ஆதாரமாயிருக்கிறதேயன்றி வேறோர் கடவுள் இல்லவே இல்லை. இந்தக் கடவுள் நம்பிக்கை, வேதங்களின் நம்பிக்கை, மனித இனத்தைச் சிந்திக்கத் தெரியாத மிருகங்களாய் மாற்றிக் கொண்டிருக்கிறது. இக்கொள்கையில், நம்பிக்கையிலிருந்தும் விடுபட்டால் மனிதன் உலகில் தன்நிறைவைச் சாந்தியைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதே எங்கள் குறிக்கோள். எங்களுக்கென்று ஓர் கொள்கை உண்டென்றால் அது நாஸ்த்தீகவாதம் தான்.

**நீதிபதி :** நல்லது. கடவுள் இல்லையென்று நீங்கள் கொண்டுள்ள முடிவுக்குக் காரணம் என்ன?

**நாஸ்த்தீகவாதி :** நீதிபதியவர்களே! எங்கள் கூட்டத்தில் பலஇன மக்கள் இருக்கிறார்கள். நாங்கள் ஒவ்வொருவரும் மதவாதிகளான தாய், தந்தையருக்குத்தான் பிறந்தோம். அவர்களிடத்தில்தான் வாழ்ந்தோம். அந்த நம்பிக்கையின்படி கடவுள் உண்டென்று அறிந்து கொண்ட நாங்கள் கடவுளைத் தேடினோம். அப்படி யாரும் இருப்பதாய் எங்களறிவுக்கும் புலன்களுக்கும் தென்படவில்லை. அப்படியோர் கடவுள் இருப்பதாய் அனுமானிக்கவும் முடியவில்லை.



ஆகையால் கடவுளைக் காட்டித்தரும்படி எங்கள் மதப் பெரியார்களைக் கேட்டோம். அவர்கள் காண்பித்துத் தரவில்லை. எவரெவரோ எல்லாம் கடவுளைக் கண்டதாக எமது தலைவர்கள் கூறுகிறார்கள். அக்கூற்றுக்களெல்லாம் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளாத விஷயங்களாய்த் தென்படுகின்றன. மதங்களை நம்பிய மனிதன் கடவுள் நம்பிக்கையென்ற பெயரில் ஏதோவெல்லாம் மூடநம்பிக்கையில், பின்பற்றலில், ஒத்துணர்வில் ஓடிக் கொண்டிருப்பதால் மனிதன் அவனுடைய உள்ளத்தில் பலவிதமான உளநோய்களை ஆக்கிக் கொள்கிறான். இந்த உளநோய்களில் மிகக் கடினமானதுதான் கடவுள் நம்பிக்கை என்பது. கடவுள் இல்லாதது அப்படியொன்று இருக்க முடியாது என்பதே எங்கள் கருத்து.

**நீதிபதி :** கடவுள் உண்டென்று கூறும் மதங்கள் மனிதனைச் சாந்தி, தன்நிறைவு, பெறக்கூடிய பாதையில் செலுத்தாதென்று நம்புகிறீர்களா?

**நாஸ்த்தீகவாதி :** ஆம். வேதங்கள் வேதநூற்கள் கடவுள் நம்பிக்கை, என்பவை மனிதகுலத்திற்குச் சாந்தியளித்திருப்பதாய்த் தெரியவில்லை. மதங்களைப் பற்றி வாழும் மக்கள் யாவரும் மதம்(வெறி) பிடித்தவர்களாய் வாழ்ந்தார்கள், வாழ்கிறார்களேயன்றி சிந்திக்குமாற்றலுடையவர்களாய் மனிதர்களாய் வாழ்கிறார்கள், வாழ்ந்தார்களென்பதற்கு எவ்வித ஆதாரங்களுமே தென்படவில்லை. மதங்களைப்பின்பற்றும் மக்கள், மறுமையில்தான் எங்களுக்குச் சாந்தி கிடைக்கும் என்று கூறுவது அறியாமையாகும். மறுமை என்று ஓர் உலகுகிடையாது. இறந்தவன் அழிந்தவன்தான். அவன் மறுமையில் உயிர்ப்பிக்கப்படுவதோ மறுபிறவியில் பிறப்பதோ கிடையாது.

மறுமையும், கடவுளும் இருப்பது உண்மைதானென்றாலும் அக்கடவுள் நீதி செய்வார், என்றும் நம்ப முடியாது. ஏனென்றால் கடவுளே படைக்கிறார், பாதுகாக்கிறார், அழிக்கிறார் என்றால் அவர் ஓர் நீதிமானாக இல்லையென்பது தென்படுகிறது. ஏனென்றால் ஒருவனை அங்கவீனனாயும் இன்னொருவனை நிரப்பமான அங்கங்கள் உடையவனாயும், ஒருவனைப் பணக்காரக் குடும்பத்திலும் இன்னொருவனைப் பிச்சைக்காரக் குடும்பத்திலும் படைத்துக் காத்து அழிக்கிறார். இப்படிப்பட்ட ஒருவரைக் கடவுளாக, நீதிமானாக எப்படி ஏற்கமுடியும்?

**நீதிபதி :** கடவுளின் உண்மையைப் புரிந்து கொள்வதற்காக மதங்கள், வேதங்கள் தரும் அனுமான இலட்சணங்களை நீங்கள் கற்றிருக்கிறீர்களா?

**நாஸ்த்திகவாதி :** ஆம். கற்றிருக்கிறோம். அந்த விபரங்கள் யாவும் அறிவுக்கு முரணானவை. கடவுள் வரைவிலக்கணத்தில் கட்டு ண்ணாத ஒன்று என்றால் அது என்றும் இல்லாததாகவே இருக்கும். வரைவிலக்கணத்தில் கட்டுண்ட ஒன்று சிருட்டியாய் இருக்கும். உள்ளதாயும் இருக்கும்.

**நீதிபதி :** உங்களுடைய வாதத்தை ஊன்றி நோக்கினால் உங்க ளுடைய அறிவை நீங்கள் முறைப்படி பயன்படுத்தவில்லை என்பது நிருபணமாகிறது உங்கள் வாதத்திலுள்ள அம்சங்கள்:

- **1வது:** கடவுள் இல்லையென்பது.
- **2வது:** கடவுள் உண்டு என்றால் அவர் ஓர் நீதிமானல்ல என்பது.
- **3வது:** கடவுட் கொள்கையும் வேதங்களும் மனிதனுக்கு அவசியமல்ல என்பது.
- **4வது:** இறந்தபின் நரக, சுவர்க்கம் கிடைக்கும் என்ற கூற்றுப் பொய்யானது. அதாவது மறுமையென்று ஒன்று கிடையாதென்பது.

உங்களுடைய வாதத்திலுள்ள முக்கிய அம்சங்கள் இவை தான். உங்களுடைய கூற்று அறிவுக்குப் பொருந்துகிறதா? வேதங் களின் கூற்று அறிவுக்குப் பொருந்துகிறதா? என்பதை நாம் ஓரளவு ஆராய்ந்து பார்ப்போம். கடவுள் இல்லை என்று நீங்கள் கூறுவதற்கு நீங்கள் தரும் காரணம் என்னவென்றால் கடவுளைக் காணமுடிய வில்லை. அவரை அனுமானிக்க முடியவில்லை என்பதே. உங்கள் கூற்றின்படி, வேதங்களில் தரப்பட்ட கடவுள் இலட்சணங்களை அலட்சியம் செய்துவிட்டு அல்லது விளங்கிக் கொள்ளாமல் காணக் கூடிய ஓர் பொருள்தான் கடவுளென்று நம்பிக் கொண்டே கடவுளைத் தேடியிருக்கிறீர்கள். மேலும் உங்கள் அனுபவத்தில் கண்டறிந்த தோற்றங்களை அடிப்படையாய் வைத்துக் கொண்டே கடவுளைத் தேடியிருக்கிறீர்கள். அதாவது கடவுளென்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஓர் கற்பனைக் கடவுளை தேடியிருக்கிறீர்கள். சிருட்டிக்குச் சிருட்டிகர்த்தாவான கடவுள் நேர் முரணானவர் என்பது



வேதங்களின் வாதம். அனுபவ அடிப்படையிலுள்ள அனுமானம் யாவும் நூறுவீதமும் சரியான உண்மையாய் இராது என்பது தெளிந்த அறிவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தத்துவ உண்மையாகும்.

நீங்கள் உங்கள் உள்ளத்தில் கற்பனையாய் உருவாக்கிக் கொண்ட கடவுள் வெறும் கற்பனையான, இல்லாத ஒன்றாதலால் ஒரு போதும் காணமுடியாதென்பது உண்மை. உங்களறிவுக்கு நீங்களே ஓர் திரையைப் போட்டுக் கொண்டுதான் கடவுளைத் தேடினீர்களென்பது தென்படுகிறது. உங்களுடைய திரையிடப்பட்ட அறிவை நீங்கள் பகுத்தறிவென்று நம்பியிருந்தாலும் உண்மையில் அது பகுத்தறிவேயல்ல. அதன் பெயர் ‘வஹ்மு’ பேதபுத்தி, சபலபுத்தி என்பதே.

கடவுள் என்ற தமிழ் சொல்லுக்கு உள்ளுதலை, (நினை விலுள்ள கற்பனையை)க் கடந்தது என்று பொருள். இதன்படி உள்ளுதலினால் அறிய முடியாத ஒன்றை புலனறிவைத் துணை யாய்க் கொண்டு தேட ஆரம்பித்திருக்கிறீர்கள். இது உங்களுடைய மிகப் பெரிய தவறாகும். சூரியனை நேரடியாய் நாம் பார்க்கும்போது எம் கண்கள் இருளடைந்து அல்லது ஒளியிழந்து விடுவதால் சூரியன் எமக்கு தென்படாமல் இருக்கலாம். ஆனால் சூரியன் இல்லவே இல்லையென்று நாம் கூற உறுதிப்படுத்த முடியாது. கடவுளைக் கண்டறிய முயற்சித்த நீங்கள் முதலில் உங்களையே எப்போதாவது எங்கேயாவது கண்டிருக்கிறீர்களா? கண்ணாடியில் உங்கள் உடலைக் கண்டிருக்கலாம். உடலுக்குரிமையாளனாய், உடலின் உயிராயிருக்கின்ற நான் என்றுணர்கிற உங்களை நீங்கள் பார்த்த துண்டா? இல்லவேஇல்லை.

உங்களுடைய பெயரை ஏ என்று வைத்துக் கொள்வோம். ஏ என்ற உங்களுக்கு ஓர் தோற்றும் உடலும் தோன்றா உயிரும் உண்டென்பதை உங்களால் மறுக்க முடியாது. ஏ என்ற உங்களின் உடலை உலகாகவும், உடலை இயக்கும் புலன்களுக்கெட்டாத உயிரைக் கடவுளாகவும் இங்கே நாம் கற்பனைபண்ணிக் கொள் வோம். உங்களுடலில், அதன் உயிரான நீங்கள், எவ்விடத்திலி ருக்கிறீர்கள் என்பதை உங்களால் காணமுடியுமா? காண்பித்துத்தர முடியுமா? உடலை வேண்டியபடி ஆட்சி செய்யும் நீங்கள் உடலுக்கு

வெளியே, அல்லது உள்ளே அல்லது குறிப்பிட்ட இடத்தில்தான் இருக்கிறீர்கள் என்று கூறமுடியுமா? அல்லது உங்கள் உடல், உயிரான உங்களை விட்டும் வேறானதென்று கூறமுடியுமா? உடலும் உயிருமாகிய இரண்டும் ஒன்றேயென்று கூறமுடியுமா? உங்களால் முடியவே முடியாது. உயிராகிய உங்களுடைய ஓர் (சூறத்) தோற்றம்தான் உடல் என்றால் இருபொருள் ஏது? அவை இரு பொருள்தான் என்றால், இருபொருள் ஏககாலத்தில் ஒன்றென் றாகாது என்பது தத்துவ உண்மை. என்னுடல் மட்டுமே நான் என்றோ, என்னுயிர் மட்டுமே நானென்றோ கூறுபவன் பித்தனாகவே இருப்பான். இரண்டும் ஒன்றேயென்பவனும் அதே நோயுடையவன் தான்.

ஏ என்ற நீங்கள் உடலின் வெளியே, அல்லது உள்ளே, அல்லது ஓர் குறிப்பிட்ட இடத்தில்தான் இருக்கிறீர்கள் என்று தீர்ப்பிட முடியாதபடி, உடலென்ற தோற்றப்பாடாயும் உயிரென்ற தோற்றமின் மையாயும் (லாஹிறாயும் - பாதினாயும்) உடலில் ஏகமாய்த்தான் இருந்து கொண்டிருக்கிறீர்கள். உடலின் ஒவ்வோர் அணுவையும் கூட ஏகமாய்ச் சூழ்ந்த முஹீதாய், உங்களுடைய உடற்புலன்களுக் கெட்டாமல் தன்னில் தானே உணரக்கூடியதாய், ரூபியாயும், அரூபி யாயும் இருக்கிறீர்கள். உடலுக்குமுன் உயிர் அல்லது உயிருக்கு முன் உடல் என்றும் உங்களை நீங்களே எடைபோடவும் முடியாது. ஏன்? இல்லாதது இருப்பதாகா, இருப்பது இல்லாததாகாது என்ற கோட்பாட்டின்படி உருவமும், அரூபமும் ஏகமாய் இரண்டில்லாததாய், உங்களுடலில் உங்களையன்றி வேறில்லாததாய் தான் இருக்கி றீர்கள்.

சர்வ சிருட்டி உலகான பிரபஞ்சத்தையும் (அறிவுக்கெட்டு பவை, அறிவுக்கெட்டாதவை யாவற்றையும்) உடலாய்க் கொண்டு (தோற்றப்பாடாய்க் கொண்டு) பிரபஞ்சத்தை இயக்கும் உயிராயும் இருப்பவனே கடவுள் என்றால் இவனை எங்கே தேடிக் கண்டறி யலாம்? நாம் காணும் பிரபஞ்சம் அவனுடைய தோற்றப்பாடுதான் என்றால் நாம் அவனைக் காணாத நேரம் எப்போ? ஏயின் உடலை நாம் என்றும் பார்க்கிறோம். ஆனால் ஏயின் உயிரை நாம் காண்ப துமில்லை காணப்போவதுமில்லை. உடலின் இயக்கத்தைக் கொண்டே உயிர் என்பதொன்றுண்டென்று கணிக்கிறோம். இதே போல சர்வ பிரபஞ்சத்தையும் தோற்றப்பாடாய்க் கொண்ட ஓர்



உயிரே பிரபஞ்சத்தை இயக்கிக் கொண்டிருக்கிறதென்றும் அதுவே புலன்களைக் கடந்து, அறிவு வட்டத்தை மீறிநிற்கும் கடவுள் என்றும், வேதங்கள் கூறுவதை நீங்கள் மறுத்தால் உங்களைப் பகுத்தறிவுவாதிகள் என்று கூற முடியுமா? கடவுள் இல்லையென் பதும் கடவுளைக் காணமுடியவில்லையென்பதும், உங்களுடைய அறியாமையினால், ஒப்பிட்டு நோக்கும் ஆற்றலில்லாமையால் ஏற்பட்ட மருட்சி வாதமாகும். உண்மைக்கு அறிவுக்கு முரணான வாதமாகும். இவ்வாதம் விரக்தியென்னும் உளநோயிலிருந்து பிறந்திருக்கிறது.

அடுத்ததாக, உங்கள் உடலில் ஒன்றுக்கொன்று முரணான கை, கால், முண்டம், செவி, தோல், நரம்பு, சதை போன்ற எண்ணில டக்கமுடியாத அங்கங்கள், அணுக்கள் இருப்பதை நாம்பார்க்கிறோம். உங்கள் உடலிலுள்ள ஒவ்வோர் அணுவும்கூட உயிராகிய உங்க ளால்தான் பரிபாலிக்க, இயக்கப்படுகிறது. இதை உங்களால் மறுக்க முடியாது. நீங்கள் நகத்தை, முடியை வெட்டி வீசுகிறீர்கள், வயிற்றில் ஓர் கோளாறு ஏற்பட்டால் கசப்பு மருந்து சாப்பிடுகிறீர்கள் அவசியத் தின்போது குடலை, வெட்டியெறிந்து ஆட்டின் குடலைப் பொருத்திக் கொள்கிறீர்கள். நுளம்பு கடித்தால் அவ்விடத்தில் தட்டி தடவிக் கொள்கிறீர்கள். அதாவது உடலங்கங்களை வேதனை செய்கிறீர் கள். அதேபோல, அங்கங்களைத் திருப்தியும் படுத்துகிறீர்கள். உங்களுடலின் அங்கங்களுக்கு அநீதி செய்கிறீர்களா, அல்லது விசேட உதவி செய்கிறீர்களா? நீங்கள் உங்களுக்கு அநீதி செய்யும் அநீதிமானாய் இருக்கிறீர்கள் என்று கூறப்பட்டால் அக்கூற்றை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? உங்களுடைய உயிரை உடலைப்பற்றிய சரியான தெளிந்த அறிவே உங்களிடமில்லாதிருக்கும் போது கடவுள் இல்லையென்றும் இருந்தால் அவர் அநீதிமான் என்றும் கூறுகிற உங்களறிவை நீங்களே மீளாய்வு செய்து எடைபோடுங்கள்.

உயிரற்ற ஒன்று, இல்லாத ஒன்று (இயங்குவதாயினும் இயங் காததாயினும்) பொருளாய்த், தோற்றப்பாடாய்க் காட்சியளிக்கா தென்ற தத்துவஉண்மை உங்களுக்கு அறிவில் பிடிபடாத ஓர் விஷயமாய் இருக்கிறது. உயிர் என்பதொன்றில்லையானால் தோற்றம் என்பதும் இல்லை. தோற்றமில்லையானால் முப்பரி மாணமும் இல்லை. முப்பரிமாணமில்லையானால் பொருள் என்ற

ஜடமும் இல்லை. எனவே, உயிர், தோற்றம், முப்பரிமாணம், ஜடம் என்பவை, காலத்தால், இடத்தால், வேறுபட்டிருக்க முடியாது. வேறுபட்டவையாகத் தென்படுவது காலத்தையும் இடத்தையும் பகுத்தெடுத்துக் கொண்டதாலேற்பட்ட மருட்சியாகும். உடலும் உயிரும் இரண்டற்ற ஏகமாய் இருப்பதைப் போல தோற்றமான பிரபஞ்சமும் அதன் உயிரான கடவுளும் இரண்டற்ற ஏகமாய் இருக்கிறதென்று வேதங்கள் கூறும் உண்மையை உங்களால் மறுக்கவே முடியாது. மறுப்பீர்களானால், நீங்கள் இருந்து கொண்டி ருக்கும் போதும் நாங்கள் இல்லையென்று கூறுகிற பொய்யர்களே என்பதை உறுதிப் படுத்தியவர்களாவீர்கள்.

கடவுள் நீதிமானல்ல என்று கூறுவது அறிவுக்குப் பொரு ந்தாத வாதமாகும். ஏனென்றால் அறிவுடைய உலக மக்களும் வேதங்கள் (மதங்களும்) அரசாங்கங்களும் நீதி-அநீதி என்பவற்றின் வரைவிலக்கணத்தைத் தெளிவாய் விளக்கியிருக்கிறார்கள். ஒருவரு டைய உடமையில்(பொருளில்) உரிமையில் (அவசியமான நீதியான சுதந்திரத்தில்) இன்னொருவர் அல்லது பலர் கையாட்சி பண்ணுவது அல்லது அதிகாரம் செலுத்துதல்தான் அநீதியென்று நாமெல்லோ ருமே ஒப்புக் கொண்டிருக்கிறோம். அப்படியானால் ஒருவர் தன் பொருளில், உரிமையில் சுதந்திரமான முறையில் கையாட்சி பண்ணுவது, அதிகாரம் செலுத்துவதே நீதியாய் இருக்கிறது. உண்மையான வேதங்கள் விசேடமாய் குர்ஆனின் வேதவசனங்கள் கடவுளேயன்றி அவருடன் பிறிதொன்று இணைதுணையாய் இல்லவே இல்லையென்று ஆணித்தரமாய் வற்புறுத்துகிறது. இருப்பவை யாவும் கடவுளுடைய (சூறத்) தோற்றப்பாடே, அத்தோற்றப்பாட்டின் உயிரும் இயக்குனரும் உரிமையாளனும் அவரேதான் என்றால் யாருக்கு யார் அநீதி செய்கிறார்?

நோயுற்ற உங்களுடலைச் சீர்படுத்திக் கொள்வதற்காக உடலுக்குக் கஷ்டமான மருந்தை, சிகிச்சையை (ஒப்பறேஸனை) செய்கிறீர்களென்றால் நீங்கள் உங்களுடலுக்கு அநீதி செய்கிறீர்க ளென்பது பொருளா? உங்களுடலோடு கொண்ட அன்பினால் நீதி செய்கிறீர்களென்பது பொருளா? கடவுள் முற்றறிவனாய் இருக்கிறார். பிரபஞ்சமென்ற தன் உடலில் ஏற்படும் கோளாறுகளை நீக்குவான் வேண்டி ஒருவனை நெட்டையனாயும், ஒருவனை வறியவனாயும்



படைக்கிறார், பாதுகாக்கிறார், அழிக்கிறார், இதிலென்ன அநீதி யிருக்கிறது? உங்களுடைய அறிவீனத்தால் இறைவனுடைய பேர றிவை உங்கள் சிற்றறிவென்ற கட்டுப்பாட்டில் அமைக்க முயல்கி றீர்கள். அதனாற்றான் கடவுளை அநீதிமான் என்று கூற முன்வந்திரு க்கிறீர்கள். உங்கள் அறியாமையை நீங்கள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

அடுத்ததாகக் கடவுளைப் படைத்தவன் யார்? என்று வினவு கிறீர்கள். உங்களறிவைப் பற்றி வெட்கமடைய வேண்டியதாய் இருக்கிறது. கடவுள் இன்னொருவரால் உருவாக்கப்பட்டவரென்றால் அது ஒரு சிருட்டியாய்ப் படைக்கப்பட்ட பொருளாய் இருக்குமே யன்றிக் கடவுளாய் இருக்க முடியாதே. உங்களறிவை ஏன் இப்படி பாழ்படுத்திக் கொண்டீர்களோ எனக்குத் தெரியவில்லை. நீங்களும் படைக்கப்பட்டவர்களாயிருந்து மற்றும் படைக்கப்பட்ட பொருட்க ளையும் நீங்கள் சொந்த அனுபவத்தில் கண்டிருக்கிறீர்கள். இந்த அடிப்படையை ஆதாரமாய்க் கொண்டே, எல்கையை பகுத்தறிவு வட்டத்தைக் கடந்து நிற்கும் நிலையான கடவுளை ஒரு சிருட்டியாய்க் கற்பனைபண்ணிக் கொண்டுதான் கடவுளைப் படைத்தவர் யார்? என்று கேட்கிறீர்கள். உங்கள் கற்பனையிலுள்ள கடவுளைப் படைத்தவர்கள் நீங்களேதான். படைக்கப்பட்டவர் கடவுளாயிருக்க மாட்டார். சிருட்டியாகவே இருப்பார் என்பதை நீங்கள் மறந்துவிட்டது ஏன்? தர்க்க வாதப்படி நோக்கினால் இன்னும் ஓர் உண்மை புலனா கிறது. சிருட்டிக்குச் சிருட்டிகர்த்தா நேர் முரணானவர் என்பது வேதங்களினதும் அறிவாளர்களினதும் ஏகோபித்த தத்துவ உண்மை யாகும். அதன்படி சிருட்டி படைக்கப்பட்டதென்றால் சிருட்டி கர்த்தா வானகடவுள் படைக்கப்படாதவராய்தான் இருப்பார். இதனைப் போல நீதியும் அநீதியும் சிருட்டியிடத்திலுண்டு என்றால் கடவுளிடத்தில் நீதியும் அநீதியும் இருக்கவே முடியாது. சிருட்டியென்பது கடவுளின் சொந்த உடமைப் பொருள்தானென்றால் அவருடைய உரிமைப் பொருளில் அவருடைய சுதந்திரப்படி அவர் விரும்பியதைச் செய்கி றார். இதில் நீதியோ அநீதியோ கிடையாது. ஆயினும் நாம் கடவுள் நீதியே செய்கிறார் என்று கூறுவது மரபு வழக்காகும். அநீதியில்லை யென்றால் நீதியென்பதும் கிடையாது. இவ்விரண்டு சொற்களும் ஒன்றுக்கொன்று முரணானவை. எனவே, நீதி, அநீதியென்பவை சிருட்டியை நோக்கியதாயிருக்கிறது. இவ்விரு தளைகளைவிட்டும்

கடவுள் மிகமிகப் பரிசுத்தமானவராயிருந்து கொண்டு அவர் நாடிய தைச் செய்கிறார். இவ்விஷயத்தில் தலையிடஎவ்வகைச் சிருட்டிக்கும் உரிமை கிடையாது. கடவுளுடைய விஷயத்தில் நாம் தலையிட்டு நீதி, அநீதி கணிப்பதானால் நாம் தான் அநீதி செய்கிறோம் என்பது அர்த்தமாகும். எனவேதான் கடவுளை அறியவேண்டிய முறைப்படி அறியும் படியும், கடவுளை துருவித் துருவி ஆராயாமல் சிருட்டியுலகை ஆராயும் படியும் வேதங்கள் கூறிக்கொண்டி ருக்கின்றன.

வேதங்களின் கூற்றுப்படி அகண்டப் பொருளான கடவுளைக் கண்டப் பொருளான சிருட்டி மட்டுப்படுத்தப்பட்ட குறையறிவில் மட்டுப் படுத்த முனைவது, குழந்தைகள் மண்குடிசை கட்டி விளையாடுவதற் கொப்பான செயலாய் இருக்கிறது. பகுபடு பொருள் உண்டென்றால் தான் பகுத்தறிவு இயங்க முடியும். பகுபடுபொருள் இல்லையானால் பகுத்தறிவும் இல்லாமலாகிவிடும். பகுபடும் பொருட்களும் ஒன்றுக் கொன்று முரணாயில்லையெனினும் பகுத்தறிவு தொழிற்படாது. முரண்படுதன்மையுள்ளதே சிருட்டி என்பது. முரண்படுதன்மை யில்லாத பகுபடாப் பொருளே கடவுள் என்பது. எனவே, பகுபடாப் பொருளான, முரண்படு தன்மையில்லாத கடவுளைப் பகுத்தறிவி னால் எப்படிக்கண்டறிவது? எப்படிப்பார்ப்பது?

பகுபடும் பொருட்கள் எங்கெங்குண்டோ அங்கெல்லாம் பகுத்தறிவு தொழிற்பட முடியும். 7ம் வானத்திலுள்ள ஓர் அழகியை இவ்வுலக வாலிபன் ஒருவன் காதலியாய்க் கூட்டிக்கொண்டு வந்திரு க்கிறான் என்றாலும் கூடப் பகுத்தறிவு அதை ஏற்கமுடியும். ஏனென் றால் 7ம், 8ம் அல்லது 100ம் வானம் என்றால்தான் என்ன? அவை யாவும், சிருட்டிதானே. சிருட்டியென்பது அணுவாயிருப்பினும் ஒன்றுக் கொன்று முரண்பாடுடையவைதான். முரணானவற்றைப் பகுத்தறிவ தும் சிற்சில தத்துவங்களோடிணைந்து ஆட்சி பண்ணுவதும்தான் பகுத்தறிவின் வேலை. சிருட்டி எங்கிருப்பினும் அங்கு பகுத்தறிவு தொழிற்பட முடியும். பகுத்தறிவு முறைப்படி தொழிற்பட முடியாத வரால் முடியாமலிருக்கலாம். வளர்ச்சியடைந்த பகுத்தறிவினால் உண்மையைக் கண்டறிய ஆட்சியதிகாரங்களை நடாத்த முடியும். கடவுள் பகுத்தறிவின் வட்டத்தில் கட்டுப்படுத்த முடியாத, பகுபடாப் பொருளாயிருக்கும் போது அவரைப் பகுத்தறிவு படைத்த மனிதனால்



பார்க்க, அவருடைய செயல்களில் பிழைகாணமுடியவே முடியாது. கண்டப்பொருளான கண்கள் மூலம், திரையிடப்பட்ட பகுத்தறிவுடைய மனிதன் கடவுளைத் தேடினேன் அவனைக் கண்டுகொள்ள முடிய வில்லையென்று கூறினால், அம்மனிதன் அறிவுத் துறையில் குடிசை கட்டி விளையாடும் குழந்தையாய் இருக்கிறானென்பதே அதன் அர்த்தமாகும். இவ்வகை வாதத்துக்கு விரக்தி மனப்பான்மையே வித்தாயிருக்கிறது.

இவ்விதமான மூடப்புத்திக்கு அறிவு என்று பெயர்சூட்டுவது தவறாகும். கடவுள் இல்லை என்றமுடிவு சரியானதுதானென்ற முடிவுக்கு உங்களால் வரமுடியாது. ஏனென்றால் ஒருவர் நான் கடவுளைக் காட்டுகிறேன். வாருங்களென்று உங்களை அழைத்தால், நிச்சயமாய் அக்கடவுளைப் பார்க்கவே விரும்புவீர்கள். இந்த விருப்பம் உங்களுக்கு ஏன் ஏற்படுகிறது? கடவுள் இல்லையென்ற கூற்றில் நீங்கள் உறுதி கொள்ளாததினால் கடவுளில்லையென்ற உங்க ளுடைய முடிவில் நீங்களே சந்தேகம் கொண்டிருப்பதனால் தான் கடவுளைப் பார்க்க விரும்புகிறீர்கள். உங்களுடைய கடவுள் இல்லை யென்ற கூற்றை உங்கள் உள்ளம் பூரணமாய் ஒப்புக்கொண்டி ருந்தால், கடவுளைக் காண்பிக்க அழைத்த மனிதனை வெருட்டி யிருப்பீர்கள். எனவே, உங்கள் கூற்றுச் சபல புத்தியின் மருட்சியாய் இருக்கிறது. விரக்திமனப்பான்மைதான் நாஸ்த்தீகவாதத்தின் ஊற்றுக் கண்ணாயிருக்கிறது. கடவுள் இல்லையென்ற முடிவை நீங்கள் உறுதியாய் நம்பியிருந்தாலும்கூட அம்முடிவினால் எவ்வித நன்மை யும் சாந்தி, தன்னிறைவு பெறவும் முடியாது. நல்லொழுக்கங்க ளைக்கூடப் பெறவே முடியாது. உண்மையைப் பொய் போலவும் பொய்யை உண்மை போலவும் காட்டக்கூடிய வெளிப்புலன்களையே அளவுகோலாய்க் கொண்ட உங்களைப் போன்ற மக்கள், அவர்களு டைய புலன்களுக்கெட்டாத எதையுமே நம்பமாட்டார்கள் அனுமானிக் கும் ஆற்றல்கூட இம்மக்களிடத்தில் தொழிற்படுவதில்லை. இவ்வகை யினர் மனம்போன போக்கில் வாழ்ந்து சுகம்பெற வேண்டுமென்ற நோக்கில் ஊறியிருக்கிறார்கள். வேதச்சட்டங்களோ சமூக அரசியல் சட்டங்களோ, கலை கலாச்சாரங்களோ இவர்களுக்கு அவசியமற்ற தாகிவிடுகின்றன. கடவுள் இல்லையென்றவாதம் முடிவில் மனிதனை விலங்காகவே (மிருகமாகவே) மாற்றியமைத்துவிடும். இவ்வகை மனிதர்கள் தங்களுக்கவசியமான சட்டங்களைத் தாங்களே கற்பனை

பண்ணிக்கொண்டு வாழும்போது, அச்சட்டம் பயன்தரவில்லையென்றால் வேறோர் கற்பனைச் சட்டத்தைத் தங்களுள்ளத்திலேயே ஆக்கிக் கொள்கிறார்கள். இது ஓர் உளநோயாய் இருக்கிறது. முடிவில் திராட்சைப்பழத்தை ஆசைப்பட்ட நரியின் நிலைமையில் ஆகிவிடுகிறார்கள். கடவுளில்லையென்ற இந்தக் கொள்கையைத் தான் உலகாயதக் கொள்கையென்று கூறுகிறோம். “சர்வர்” என்ற ஒருவரால் தான் இக்கொள்கை முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டதென்று சில நூற்களறிவிக்கின்றன.

இவ்விஷயத்தில் நீண்ட நேரத்தைச் செலவிட நான் விரும்பவில்லை. நாஸ்தீகவாதியார் அவர்களே! உங்களுக்குச் சில அறிவுரைகளைக் கூறிவைக்க நான் விரும்புகிறேன். உங்களுடைய அறிவுப் போதைக்கு நான் விரக்தியென்று பெயர்கூற விரும்புகிறேன். நீங்கள் உண்மையைக் கண்டறிந்து அதன்படி வாழ்ந்து முடிவில் தன்னிறைவை, சாந்தியைப் பெறவேண்டுமென்று விரும்பினால் முதலில் சரியான ஓர் கொள்கையும், சரியான ஓர் குறிக்கோளும் மிகமிக அவசியமாகும். கடவுளைக் காண்பதே எங்கள் கொள்கையென்றால் அதை என்னால் ஏற்கமுடியாது. ஏனென்றால், வாழ்நாளில் அமுல்படுத்த முடியாத ஓர் விஷயத்தை உள்ளத்தில் ஆக்கிக் கொள்வதை கொள்கை என்றும் அதற்காக வாழ்வதைக் குறிக்கோளென்றும் கூறமுடியாது. வாழ்வில் அமுல்நடாத்தக்கூடிய ஓர் விஷயத்தைக் கொள்கை என்றும் அதற்காக வாழ்வதைக் குறிக்கோள் என்றும் கொள்ளலாம்.

கடவுளுடைய சுயதன்மை அவராலேயேயன்றி வேறெந்த ஓர் சிருட்டியினாலும் பார்க்க, அறிய முடியாதென்பது வேதங்களுடையவும் தெளிந்த அறிவுடையவும் தீர்ப்பாகும். உலகில் மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இதுவரை எவருமே இறைவனை, அவனுடைய “குன்ஹு” என்ற சுயதன்மையை கண்டறிந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் ஒரு சிலர் ஒவ்வோர் வகைத் தோற்றத்தில் பார்த்ததாகக் கூறியிருக்கிறார்கள். அது உண்மையாயிருந்தாலும் கூட, அவ்வகைக் காட்சிகள் உண்மையானவைதானென்றோ, முழுமையானவைதானென்றோ பகுத்தறிவிடத்தில் நிரூபிக்க முடியாது. அவ்வித காட்சிகளைக் கண்டதாகக் கூறுபவர் சாட்சிகளை வைத்துக் கொண்டு அக்காட்சிகளைக் காண்பதில்லை. எனவே அவ்வகைத் தரிசனையை நிரூபிக்க முடியாது. மறுப்பவர் மறுக்கலாம். நம்புபவர்



நம்பலாம். இவ்வித தரிசனை உண்மைதானென்றாலும் கூட அது கடவுளின் முழுமைபெற்ற பூரணதரிசனையாயில்லை. அகண்டப் பொருள் கண்டப் பொருளில் எப்படி முழுமையாய் அமையமுடியும்.

கடவுள் இல்லையென்று கூறுகிற நீங்கள் இன்னும் கடவுளைத் தேடிக்கொண்டே இருக்கிறீர்களென்பதை உங்களால் மறுக்க முடியாது. தேடியது கிடைக்கவில்லையானால் அப்படியோர் பொருள் கிடையாதென்ற முடிவுக்குவருவதும் அறிவுடைமையாகாது.

அடுத்ததாக, உலக இயக்கத்துக்கு மூலகாரணம் இயற்கைதான் என்று முதலில் நீங்கள் கூறினீர்கள். இதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியும். நீங்கள் கூறும் இயற்கையென்பது என்றும் மாறாததாய், சரியான உறுதியான சட்டங்களுக்கமைவாய் உலகை இயக்குவதாய் இருக்கிறது. அறிவில்லாத ஒன்று பூரணசக்தி இல்லாத ஒன்று. இவ்வித கட்டுப்பாடான நிலையான சட்டங்களைக் கொண்டு உலகை இயக்க முடியாது. அப்படியானால் அந்த இயற்கையென்பது பூரண அறிவும், பூரண ஆற்றலுமுடையதாகவே இருக்கும். எனவே, எவ்வுலகிலும் தற்செயல் நிகழ்ச்சி என்பது இருக்க முடியாது. யாவும் இயற்கையின் திட்டப்படியேதான் நிகழ்கிறதாய் நாம் ஏற்கமுடியும். அப்படியானால் நிலையாய்த் தரிபட்டதாய், அறிவுடையதாய், ஆற்றலுடையதாய் வேறெவரின் தேவையுமற்றதாய், அறிவுவட்டத்தைக் கடந்ததாய் இருக்கும் அந்த இயற்கையை மனிதன் கடவுளென்று கொண்டால் அதை உங்களால் எப்படி மறுக்கமுடியும்?

கடவுளை இல்லையென்று மறுக்க, வேதங்கள் அவசியமற்றவையென்றுகூற உங்களுக்கு எவ்வித ஆதாரங்களுமே கிடையாது. நீங்கள் இயற்கை என்று கூறுகிற அதே விஷயத்தை இன்னொருவர் கடவுள் என்று கூறினால் அதை நீங்கள் ஏன் மறுக்க வேண்டும்? மறுப்பது அறிவீனமாகும்.

கடவுளும் இல்லை மதங்களும் அவசியமில்லையென்று கூறுகிற மனிதனிடத்தில் எவ்வித நல்லொழுக்க நற்செயல்களுமே இடம்பெறாதென்பதை முன்பே கூறினேன். ஆனால் கடவுளையும் ஏதோ ஒரு வேதத்தையும் மறுமையையும் குருட்டுத்தனமாய் நம்பியிருந்தாலும் கூட, மறுபிறவியைப் பற்றிய, அல்லது மறுமையைப் பற்றிய, கடவுளைப் பற்றிய அவரளிக்கும் தண்டனைகளைப் பற்றிய

அச்சம் அவனிடத்தில் இருப்பதனால் அவன் ஏறக்குறைய நல்லொழு க்க நற்செயல்களுடையவனாகவே இருப்பான். அவனுடைய குருட்டு நம்பிக்கை பூரண தன்நிறைவைச் சாந்தியைத் தராவிட்டாலும் கூட அம்மனிதனால் சமூகம் தொல்லைகளுக்குள்ளாகாமல் தப்பலாம். இவ்வகையில் வேதங்கள், அல்லது மதங்கள் சரியானவையானா லும் பிழையானவையானாலும் மனித இனத்தின் உலக வாழ்வுக்கு ஓரளவு உதவி செய்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

அடுத்ததாக, இல்லையென்ற சொல் எப்பாஷையில் கூறப் பட்டாலும் அது ஓர் எதிர்மறைச் சொல் என்பதை யாரும் மறுப்பதற் கில்லை. இச்சொல் தன்மை, முன்னிலை, படர்க்கையென்ற மூவிடங் களையும், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக்காலங் களையும், உயர்திணை, அ்ஃறிணை, என்ற இருதிணைகளையும், ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்ற ஐம்பால்களையும் (இந்தப் பதின்மூன்று அம்சங்களையும் கொண்ட யாவற்றையும்) ஒரே முறையில் இல்லையென்று மறுப்பதாய் இருக் கிறது. எனவே, இல்லையென்ற எதிர்மறைச் சொல் எப்பாஷையில் கூறப்பட்டாலும் நாம்கூறிய 13அம்சங்களையும் கொண்ட சிருட்டி களை மட்டும்தான் மறுக்கும். ஆனால் கடவுள் என்பதை இல்லை யென்றசொல் மறுக்காது. மறுக்க முடியாது. ஏனென்றால் கடவுளுக்கு எதிர்ச்சொல்லும் எதிர்ப் பொருளும் கிடைக்கவே கிடையாது. எனவே கடவுள் இல்லை (நோ கோட்) என்ற சொல் மூடத்தனமான மருட்சி வாதமாகும்.

மனித இனத்தின் அறிவு மேலும் மேலும் வளர்ச்சியடைய வேண்டியது. இதற்கு எல்கை கிடையாது. அறிவு வளர்ச்சியடையாத வரையில் தன்நிறைவோ, சாந்தியோ கிட்டவும் முடியாது. மனித அறிவு வளர்ச்சி பெற வேண்டுமானால் அவ்வறிவை ஒரு முகப்படுத்த வேண்டியது அவசியமாகும். ஒரு முகப்படுத்துவதானால் அவ்வறி வுக்கு உண்மையான ஓர் குறிக்கோளும் கொள்கையும் அவசிய மாகும். கொள்கையிலும் குறிக்கோளிலும் தரிபடுவதற்கு அச்சமும், எச்சரிக்கையும், ஆதரவும் ஊட்ட வேண்டியதும் அவசியமாகும். இந்த முச்செயல்களையும் தான் உலகிலுள்ள ஏறக்குறைய எல்லா மதங்களும் வேதங்களும் வற்புறுத்துகின்றன. வேதங்களைப் பின்பற்றும் மக்கள், அச்சம், எச்சரிக்கை, ஆதரவு (நன்மராயம்)



ஆகிய மூன்று விஷயங்களையும் எடுத்துக் கொண்டிருப்பது உல குக்கு ஓர் அருட்கொடையென்றே கூறலாம். ஏனெனில், கடவுளின் அச்சம், ஆதரவு போன்றவை மனித இனத்துக்கில்லையானால் வலிமைபெற்ற ஒன்றிரண்டு மனிதரைத்தான் உலகில் எம்மால் காணமுடியும். கடவுள் நம்பிக்கை மறுஉலக நம்பிக்கை, போன் றவை, சிற்சில தப்புத் தவறான வியாக்கியானங்களுடன் அமைந்தி ருந்தாலும் கூட மனிதன் ஓரளவேனும் அமைதியுடன் வாழ வழிவகு த்திருக்கிறதென்பதை நாம் ஏற்கத்தான் வேண்டும்.

நாஸ்த்தீகர்களான நீங்கள் கூறுவதுபோல இறப்பின் பிறகு நரக சுவர்க்கம் இல்லையென்றால் எவருக்கும் எவ்வித கவலையுமே கிடையாது. ஆனால் வேதங்கள் கூறுவதுபோல இறப்பின் பிறகு நரக சுவர்க்கம் உண்டென்பது உண்மையானால் நாஸ்த்தீக வாதி களான உங்கள் கூட்டத்தின் நிலைமை என்னாகும் என்பதை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள். நரக சுவர்க்கம் உண்டென்பதைப் பெரும்பாலும் வேதங்கள் அறிவுக்குத் தெளிவாய் நிரூபணம் செய்ய வில்லை என்பது உண்மை. அதேபோல நாஸ்த்தீகவாதிகளான நீங்களும் சுவர்க்கம், நரகம் இல்லையென்பதை நிரூபிக்கவில்லை. ஆதலால் சந்தேகக் கண்ணோட்டத்தோடாவது வேதங்களை நம்பி வாழ்வதில் நன்மையுன்டென்று கூறிவைக்கிறேன். கடவுள் இல்லை யென்ற வாதம் கடவுள் உண்டென்பதையே நிரூபணம் செய்கிறது. இதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். இப்போது இவ் விஷயத்தை இவ்வளவோடு நிறுத்திக் கொண்டு பொதுநலவா தியரை விசாரணை செய்ய விரும்புகிறேன்.

**குறிப்பு:** (பொதுநலவாதி அழைக்கப்பட்டு விசாரணைக்காக நீதிப தியின் முன்னிலையில் நின்று கொண்டிருக்கிறார்)

# நீதிபதியும் பொதுநலவாதியும்

**நீதிபதி :** பொதுநலவாதியரே! நீங்களும் உங்கள் கூட்டத்தினரும் உலகுக்கு வகுத்தளித்த பொதுஉடமைக் கொள்கை, ஜனநாயகக் கொள்கை, பொருள் முதல் வாதம், கருத்து முதல் வாதம், போன்ற கொள்கைகளையும் வாதங்களையும் ஒவ்வோர் கூட்டத்தினர் பின்பற்றுவதால் உலகின் நாலாபாகங்களிலும், சண்டை சச்சரவு, ஒற்றுமையின்மை, சிந்தனைத்தடை, போன்ற பல தீயவிளைவுகள் ஏற்பட்டிருப்பதாய் நான் அறிகிறேன். இவ்விஷயத்தையிட்டு நீங்கள் என்ன விபரம் எனக்குத் தரப்போகிறீர்கள்?

**பொதுநலவாதி :** எங்களுடைய கொள்கைகளை நாங்கள் மூடத்தனமாய் உருவாக்கி உலகுக்கு அளிக்கவில்லை. மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை பொருளாதாரம், உடற்சுகம் போன்ற அடிப்படைத் தேவைகளை ஆதாரமாய்க் கொண்டு எடைபோட்டோம். மக்களில் மிகமிகப் பெரும்பாலார் தன்னிறைவுபெற்றுச் சாந்தியுடன் வாழ்வதாக நாங்கள் காணவில்லை. ஆதலால் மக்கள் தன்னிறைவு பெற்றுச் சாந்தியடையக்கூடிய வழிவகைகளை நாங்கள் எங்களுடைய அறிவுக்கேற்றபடி ஆராய்ந்து வெளிப்படுத்தியிருக்கிறோம். உலக மக்களின் நலன்கருதித்தான் இவ்வேலையில் (பொதுநலத்தில்) ஈடுபாடு கொண்டிருக்கிறோம்.

**நீதிபதி :** நல்லது. உங்களுடைய கொள்கைகளை, வாதங்களை ஏற்றுச் செயல்பட்ட, செயல்படும் மக்கள் தன்னிறைவைச் சாந்தியைப் பெற்றிருக்கிறார்களா? பெறுவார்களா?

**பொதுநலவாதி :** ஆம். ஒருசிலர், ஒருசில சமூகங்கள், ஒருசில நாடுகள் தன்னிறைவு பெற்றுள்ளன. எங்கள் கொள்கைகளை வாதங்களை முறைப்படி கையாண்டால் எல்லா உலக மக்களும் தன்னிறைவைச் சாந்தியைப் பெறமுடியும் என்று நாங்களும் ஒவ்வோர் கூட்டத்தினரும் நம்புகிறோம்.



**நீதிபதி :** நீங்கள் கூறிய விபரத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது. ஓர் இலக்கை(குறிக்கோளை) அடைவதற்கு நேர்வழி ஒன்றேயொன்றுதான் இருக்க முடியும். ஏனென்றால் அகில உலக மக்களும் ஒரே வகையான தன்னிறைவைச் சாந்தியைத் தான் தேடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே சாந்தியைப் பெறக்கூடிய வழி ஒன்றேயொன்று தானிருக்க வேண்டும். இன்னும் பல வழிகளுண்டென்றால் அவையாவும் நேர்வழிக்கு விரோதமான கோணல் வழிகளாகவே இருக்கும். கோணல் வழிகள் யாவும் மனிதனின் கற்பனையால் உருவானவையாயும் குறிக்கோளையடைய மனிதனுக்கு உதவாதவையாயும்தான் இருக்கும். இயற்கையாய் அமைந்துள்ள நேர்வழி எதுவோ அவ்வழிமட்டும்தான் மனித உலகுக்குத் தன்னிறைவைச் சாந்தியைத் தரக்கூடியதாய் இருக்கும். அப்படியானால் உங்களுடைய கொள்கைகள் வாதங்கள் பலவாய்ப் பல பிரிவுகளாயிருக்கும் போது நாங்கள் மனித குலத்தின் தன்னிறைவையே நாடுகிறோம் என்று கூறுவது உங்களை நீங்களே ஏமாற்றிக் கொண்டீர்கள், ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்பது என் கருத்து. உலக மக்கள் யாவரும் ஒரே வகைச் சாந்தியையே எதிர்பார்க்கிறார்கள் என்பதை மறந்து விட்டீர்கள்.

**பொதுநலவாதி :** உங்களுடைய கருத்து மறுக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. ஏனென்றால் எங்களுடைய கொள்கைகள், வாதங்கள் ஒவ்வோர் நாட்டுக்கு, அல்லது ஒவ்வோர் சமூகத்துக்குப் பொருத்தமானதாயிருக்கலாம். எந்தச் சமூகத்துக்கு எந்த நாட்டுக்கு அக் கொள்கையிலொன்று தன்னிறைவைத் தரக்கூடியதாய் அமையுமோ அந்தச் சமூகத்துக்கு அந்த நாட்டுக்கு அந்தக் கொள்கை நேர்வழியாய் அமையலாம் தானே! எங்கள் கொள்கைகள், வாதங்கள் ஒன்றுக்கொன்று முரணாயிருப்பினும் பாதகமில்லை. எனவே நாங்கள் ஏமாறவும் இல்லை. ஏமாற்றவும் இல்லை.

**நீதிபதி :** அப்படியானால் உங்களுடைய கொள்கைகள், வாதங்கள் எல்லாம் ஒவ்வோர் குறுகிய வட்டத்திற்குட்பட்டவையென்பதையும், உங்கள் கொள்கைகள் வாதங்கள் முழு உலகுக்கும், எக்காலத்திற்கும் பொருத்தமானவையல்ல என்தையும் நீங்கள் ஏற்றுக் கொண்டீர்களென்பது தென்படுகிறது. சந்தோஷம். ஓர் சமூகம் அல்லது ஓர் நாடு சிற்சில வேளைகளில் தங்களுடைய கொள்கைகளை மாற்றிக் கொள்கின்றனவே! அவை ஏன் அப்படி மாற்றிக் கொண்டிருக்கின்றன?

**பொதுநலவாதி :** சூழல் பரிணாம முறைப்படி அடிக்கடி மாற்றம் பெறுவதை நாம் பார்க்கிறோம். மனித அறிவு சூழ்நிலைகளுக் கேற்றபடி, காலத்துக்கேற்றபடி வளர்வதாயும், தேய்வதாயும் அமைந் திருக்கிறது. ஆதலால்தான் நிலைமைகளுக்கேற்றபடி மக்கள் சமூகம் கொள்கைகளை மாற்றிக்கொள்கிறார்கள். இதிலொன்றும் தவறி ல்லையே!

**நீதிபதி :** இக்கூற்றின்படி நோக்கினாலும் உங்கள் கொள்கைகள், வாதங்கள், எக்காலத்துக்கும் எல்லா மக்களுக்கும், எல்லா நாடுகளு க்கும், பொருந்தாத சந்தர்ப்பகொள்கைகள், சந்தர்ப்ப வாதங்கள் தானென்பதும் உங்களைப் போன்றவர்கள் சந்தர்ப்பவாதிகளே என்பதும் நிரூபணமாகிறது. உங்கள் வாதங்களையும் கொள்கை களையும் நுட்பமாய் நோக்கினால், பணத்தை, அதிகாரத்தை, செல்வாக்கை, நோயற்ற சுகவாழ்வைப் பெற்றுக் கொண்டால் தன் நிறைவைச் சாந்தியைப் பெறமுடியுமென்பதே உங்கள் நம்பிக்கை யாய் இருக்கிறதென்பது உறுதியாகிறது. ஆனால் உலக சரித்திர த்தை நோக்கினால் உங்கள் நம்பிக்கை தவறானதென்பது வெளிப் படுகிறது. பணம், அதிகாரம், செல்வாக்கு, நோயற்ற சுகவாழ்வு வாழ்ந்த பல மக்கள் தன்நிறைவைச் சாந்தியைப் பெறமுடியாமல் தற்கொலை செய்து கொண்ட பல செய்திகளை நாம் அறிந்துள் ளோம். பணம் செல்வாக்கு நோயற்றவாழ்வு போன்றவற்றிலே தான் தன்னிறைவு சாந்தி தங்கியிருக்கிறதென்று நம்புவது மருட்சியாய் இருக்கிறது.

உலக மக்கள் பாஷை, வேதம், உணவு, நிறம், நாடு, கலை கலாச்சாரங்களால், வேறுபட்டவர்களாயிருப்பினும் எல்லோ ரும் ஒரே தாய் தந்தையரிலிருந்து வெளியானவர்களேதான். ஒரே குடும்பத்தினர்தான். ஒரேயோர் உலகில் வாழும் மனிதர்களேதான். இவர்கள் யாவரும் எக்காலத்திற்கும் ஒரே வகையான சாந்தியையே தேடுகிறார்களென்று முன்பே கூறினேன். ஒரு நாட்டுக்கு ஒரு சமூகத் துக்கு உங்களுடைய ஒரு கொள்கை ஒரு காலத்திற்குப் பொருத்த மானதென்று நீங்கள் கூறுவது உண்மைதானென்று நீங்கள் ஏற்றுக் கொண்டிருந்தால், அதைப்போல அகில உலக மக்களுக்கும், அகில உலக நாடுகளுக்கும் எக்காலத்திற்கும் பொருத்தமான, மாற்ற முடியாத, மாற்ற அவசியமில்லாத, மனித சுபாவத்துக்கு முர ணில்லாத, அறிவுக்கு விரோதமில்லாத இயற்கையான ஓர்



கொள்கையோ ஓர் வேதமோ இருக்கத்தான் வேண்டுமென்பதை ஒப்புக் கொண்டவர்களாய் விட்டீர்கள் என்பதே என்கருத்து. நாங்கள் பொதுநலவாதிகள் என்று நீங்கள் கூறுவது உண்மைதானென்றால், மனிதன் தன்னிறைவைச் சாந்தியைப் பெறக்கூடிய உலக மக்களை ஒருமுகப்படுத்தி உடன் பிறந்த சகோதரர்களாய்ப் பிணக்கின்றி வாழவைக்கக் கூடிய ஓர் இயற்கைக் கொள்கை, அல்லது இயற்கை வேதம் எது? என்பதைக் கண்டறிய வேண்டியது பொதுநலவாதி களான உங்களுக்குக் கட்டாய கடமையாய் அமைகிறது.

மனிதன் இன்ப துன்பமென்ற நெருப்பில் வீழ்ந்து சாந்தியற்ற வனாய் வாழ்வதற்குக் காரணம் ஆசைதான். இந்த ஆசை, இயல் புக்கு விரோதமாய் அமையும் போது மனிதன் அதிக தேவையை அவசியமற்ற தேவைகளை உருவாக்கிக் கொள்கிறான். சாந்தியைத் தன்னிறைவைத் தேடிச் செயல்படுகிற மனிதன், முடிவில் தன்னிறை வைச் சாந்தியைப் பெறமுடியாத மனிதன் தேவைகளை அவசியத்தி னளவு பெறக்கூடிய வகையில்தான் ஆசையை எடுத்துக்கொள்ள வேண்டியவனாயிருக்கிறான். இந்த ஆசையின் அளவு எது என்பதை அறியாத மனிதன் அவனையறியாமலே ஆசையை வளர்த்துப் பேராசைக்காரனாய் மாறுகிறான். இதனால் ஒருபோதும் எங்கேயும் தன்னிறைவைச் சாந்தியைப்பெற முடிவதில்லை. உங்களுடைய கொள்கைகள் வாதங்கள் யாவும் மனிதர்களோடு நாங்கள் கொண்ட அன்பினால் தான் உருவானவையென்றும் நாங்கள் பெதுநலவாதிகள் என்றும் கூறிக் கொள்கிறீர்கள். உங்கள் கூற்றை நுட்பமாய் நோக்கி னால் நீங்களும் பேராசைக்காரர்களே என்பது தென்படுகிறது. பொது நலவாதிகளான நீங்கள் உலக மக்கள் தன்னிறைவு பெற்றுச் சாந்தியுடன் வாழவேண்டுமென்று விரும்புவது ஏன்? நாங்கள் உலக மக்களோடு கொண்ட அன்பினால்தானென்று நீங்கள் கூறலாம். அவ்வன்பே பொதுநலசேவையில் எங்களை ஈடுபடுத்துகிறதென்றும் நீங்கள் கூறலாம். இது ஏற்கக் கூடிய விஷயமாய்த் தென்படவில்லை. ஏனென்றால் சுயநலத்தை அடிப்படையாய்க் கொள்ளாத எந்த ஓர் பொதுநலமும் கிடையாது. கிடைக்கவே கிடையாது.

எனது மகன் நல்லவனாய் வாழ்வதையும் கல்வியில் தேர்ச்சி பெற்று மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றவனாய் வாழ்வதையும் நான் விரும்பியிருக்கிறேன். நல்லவன் என்பதை என்அறிவில் நான் எப்படிக் கற்பனை பண்ணினேனோ அந்தக் கற்பனையிலுள்ள

நல்லவனையே என் குழந்தையில் நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். என் மகன் எனது குறிக்கோளுக்கு எதிரிடையாய் நடந்து கொண்டால் அவனை நான் தண்டிக்கிறேன். என் குறிக்கோளுக்கு ஒத்து நடந்து கொண்டால் நான் இரங்கி என் மகனுக்கு வேண்டிய சௌகரியங்களையும் செய்து கொடுக்கிறேன். என் மகனை முறையாகவோ முறையற்றதாகவோ தண்டித்தேனே அது ஏன்? நான் என் குறிக்கோளோடு (என்னோடு) கொண்டிருந்த ஆசை அன்புதான் காரணம். இதேபோல குறிக்கோளை நிறைவேற்றி வைத்த மகனை நான் மெச்சுவது ஏன்? அதுவும் என் குறிக்கோளோடு(என்னோடு) நான் கொண்டிருந்த அன்பினால் ஏற்பட்டதேயாகும். நான் எனது சுயநலத்தின் நோக்கமாய்க் கற்பனைபண்ணிக் கொண்ட ஓர் விஷயத்தை மகனில் எதிர்பார்த்தேன். அப்படியானால் கோபம்(அன்பு) இரக்கம் ஏன் எனக்குப் பிறந்தது? என் சுயநலத்தினால் தான் பிறந்தது. ஆகவே மனிதன் விரும்புவதும் வெறுப்பதும் தன் சுயநலத்தை அடிப்படையாய்க் கொள்வதனால் தானென்பது தெளிவாகிறது. இதைப் போல சுயநலத்தை வெளியுலகில் கண்டு களிக்கவே மனிதன் பொதுநலமென்ற பெயரில் செயல்படுகிறான். பொதுநலமென்பது ஓர் ஸ்லோகமாகவும் அதன் உண்மையான அர்த்தம் சுயநலனாகவும் இருக்கிறது. இந்தச் சுயநலத்தில் முளைத்த பொதுநலன்தான். நீதியை அநீதியாகவும் அநீதியை நீதியாகவும் காட்டிக்கொண்டிருக்கிறது.

இரக்கம், கோபம், ஏன் பிறக்கிறது? சுயநலத்தில் வெற்றிபெற வேண்டுமென்ற நோக்கமே இரக்கமாகவும் கோபமாகவும் தென்படுகிறது. சுயநலனைப் பெறுவதற்காக உள்ளம் இரக்கத்தையும் கோபத்தையும் எடுகோள்களாய்க் கொள்கிறது. உண்மை என்னவென்றால் ஒரே விஷயத்தைப் பெற்றுக் கொள்வதற்குரிய இரு வழிகள்தான் விருப்பு, வெறுப்பு, கோபம், இரக்கம், என்பவை. இவற்றின் நோக்கம் ஒன்றேயொன்றுதான். ஒரே விஷயம் இரு வேடங்களில் வேலை செய்கிறது. ஆதலால் பொதுநலமென்பது சுயநலத்தின் மறுபெயர்தான் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். சுயநலன் அவசியமற்றதென்று நான் கூறவில்லை. அதைப்பயன்படுத்தும் முறை பிழையென்றுதான் கூறுகிறேன்.



அடுத்ததாக நீங்கள் குறிப்பிடுகிற அல்லது நோக்கமாய்க் கொண்ட உலகவாழ்வை மட்டும் அடிப்படையாய்க் கொண்டு தன்னிறைவை, சாந்தியை (இன்பத்தை)ப் பெறமுற்படும் மனிதனுக்கும் மிருகத்துக்கும் தோற்றத்தில் வேறுபாடு தென்படினும் மனிதன் சாந்தி தன்னிறைவு என்பவை ஊண், உடை மற்றும் உலக விஷயங்களில்தான் தங்கியுள்ளதென்று நம்புவது போலத்தான் மிருகமும் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறது. மனிதன் இந்த உலக விஷயங்களில்கூட மிருகங்களை விடக்கேவலமாகவும் காணப்படுகிறான். மிருகம் தன் தேவைகளைப் பெருக்கிக் கொண்டு இன்னலடைவதில்லை. மனிதன் எவ்வளவு தூரம் தேவைகளைப்பெருக்க முடியுமோ அவ்வளவு தூரம் பெருக்கிக் கொண்டேயிருக்கிறான். மேலும் மேலும் தன்நிறைவைச் சாந்தியை இழந்து கொண்டேயிருக்கிறான்.

இன்ப துன்பமெல்லாம் ஆசையின் மிகைப்பட்ட வேகத்தினால்தான் உருவாகின்றன. தன்னிறைவைப் பெறவிரும்புவது கூட ஆசைதான். ஆயினும் அது வரவேற்கப்பட வேண்டிய அவசியமான ஆசையாய் இருக்கிறது. ஆனால் மனித அறிவை முறைப்படி செயல்படுத்தினால் இன்ப துன்பங்களின் போது அவற்றில் சமனிலை காணும் மனோபக்குவத்தை மனிதனால் பெறமுடியும். சமநிலை காணும் மனோபக்குவம் ஏற்பட்ட மனிதன் இன்பத்தில் இறுமாப்புக் கொள்வதுமில்லை துன்பத்தில் துவண்டு தற்கொலை செய்து கொள்வதுமில்லை. இவ்வித மனோபக்குவம் உலக மக்களுக்கேற்பட்டு விட்டால் பெரும்பாலும் உலகம் ஒரு சுவர்க்கமாக காட்சியளிக்கலாம். நீதிமன்றங்கள் கூடப் பெரும்பாலும் அவசியமில்லையென்ற அளவுக்கு உலகம் மாறிவிடும். எல்லோரும் தன்னிறைவைப் பெற்றுச்சாந்தியுடன் வாழ்வதற்கு இந்த மனோநிலை மிக மிக உதவியாய் அமையலாம். மறுமையும் நரக சுவர்க்கங்களும் இருந்தாலும் கூடப்பரவாயில்லை. எல்லா இடங்களிலுமே மனிதன் நிம்மதியாய்த் தன்நிறைவோடும் சாந்தியோடும் நிச்சயமாய் வாழமுடியும். நரகம் கூட அவசியமற்றதாய் மாறிவிடும். நரகம் பாழடைவதில் நமக்கென்ன கவலை.

இன்பதுன்பங்களில் சமனிலை காணும் மனோபக்குவமுடைய மனிதன் பெரும்பாலும் குறுகிய சுயநல நோக்குடையவனாய், தீய செயல்களில் மூழ்கியவனாய் இயல்பூக்கங்களுக்கு முரணானவனாய் வாழமாட்டான். பொதுநலவாதிகளான உங்களுடைய

கொள்கைகள் தான் உலக மக்களிடையே பிளவு, யுத்தம், அடக்கு முறைகளை ஏற்படுத்தியிருக்கின்றன. மனிதனின் உள்ளம் சமய சந்தர்ப்பங்களுக் கேற்றபடி மாறுபடக் கூடியது என்பது உண்மை. எனினும் மனோபக்குவமுடைய மனிதன் பெரும்பாலும் தன்னைத் தானே கட்டுப்படுத்தக்கூடியவனாய் நேர்பாதையில் செல்பவனாய் நிச்சயமாய் வாழமுடியும். இவ்வகை மனிதர்களில் சிற்சில அபிப்பி ராய பேதங்களும் சிற்சில சிறியதவறுகளும் இருந்தாலும்கூட உலக சமுதாயத்தை அவை பாதிக்கா.

மனிதன் மனிதனாய் வாழ்வதானால் தனக்கு இன்றியமை யாத தேவைகள் எவை? நான் ஏன் பிறந்திருக்கிறேன். எனது வாழ்வின் குறிக்கோள் என்ன? எனது முடிவு என்ன? எனது இன்றிய மையாத தேவைகளை, என்னிலும் வேறான பிறமனிதர்களுக்கு இன்னலேற்படாமல் பெற்றுக்கொள்ளக்கூடிய சரியான வழிகள் எவை? என்பவை போன்ற பிறவிஷயங்களையும் தெளிவாய் அறிய வேண்டி யவனாயிருக்கின்றான். இவ்விஷயங்களை அறிந்து கொள்ளவும் மிகநீண்டகாலம் தேவையாய் இருக்கிறது. இவ்விஷயங்களைக் குறுகிய காலத்துக்குள்ளறிந்து வாழ்க்கையை முறைப்படி அமைத் துக் கொள்வதானால் நிச்சயமாக மனிதனுக்கு ஓர் வழிகாட்டி அவசியமாகிறது. எனவே, பொதுநலவாதிகளென்ற போர்வையில் சுயநலவாதிகளாய் இருக்கிற நாமும் பிறரும் சேர்ந்து தன்னிறை வைப் பெறக்கூடிய ஓர்வழிகாட்டி, அல்லது ஓர் வேதநூல் உலகி லுண்டா? என்பதைக் கண்டறிய வேண்டியது அவசியமாகும்.

எமது வாழ்வின் குறிக்கோளை உணர்த்தி, குறிக்கோளை அடையக்கூடிய, இலகுவாய் எல்லா மக்களாலும் கடைப்பிடித் தொழுகக்கூடிய, வழிவகைகளை விளக்கி, அவ்வழிவகைகளில் ஏற்படும் நன்மை தீமைகளை பிரித்துக் காட்டக்கூடிய, எல்லா மக்க ளுக்கும், எல்லா நாட்டுக்கும், எக்காலத்துக்கும் பொருந்தக் கூடிய கொள்கை, குறிக்கோள், நடைமுறை, நீதிநிர்வாகம் போன்ற விஷயங்களில் தெளிவான அடிப்படைச் சட்டங்களை விளக்கக்கூடிய ஓர் வேதநூலான வழிகாட்டியை நாம் கண்டறிந்து, அதை உலகுக்கு அறிமுகப்படுத்தி வைப்பதே உலகுக்கு நாம் செய்யும் பொதுநலம் கருதிய தொண்டாயமையுமென்பதைவிட நமக்கு நாமே செய்யும் தொண்டாயமையும் என்பதே பொருத்தமானது.



உலகிலுள்ள இயங்கும் உயிரினங்கள் யாவும் தன்னி றைவைப் பெறுவதற்காகவே வாழ்கின்றன. ஓர் கல்லின் கீழ் அகப் பட்டுக்கொண்ட ஓர் புல், வெளிச்சத்தையோ, காற்றையோ அல்லது அதற்கு வேண்டிய வேறு எதையோ தேடித்தான் சுற்றிச் சுழன்று காலக்கிரமத்தில் வெளிவருகிறது. எவ்வளவோ அரும் முயற்சி செய்து தன்னிறைவைச் சாந்தியைப் பெற்றுக்கொள்கிறது. இது ஓர் புல்லின் செய்திதான். ஆனால் எவ்வளவோ நுண்ணறிவும் உடல் வலிமையுமுள்ள மனித சமுதாயம், பல்லாயிரம் வருடங்கள் அரும் பிரயாசைப்பட்டும், தன்னிறைவைப் பெற்றுச் சாந்தியடையக் கூடிய ஓர்வழியைக் கண்டறிய முடியாமல் இன்னலடைகிறதென்றால் இது மனிதகுலத்துக்கு, மனித அறிவுக்கு மாபெரும் வெட்கக் கேடாகும்.

ஜீவராசிகள் எவையாயிருப்பினும் அவை சுயநல நோக்கில் தான் இயங்குகின்றன. சுயநலத்திலிருந்தே விருப்பு வெறுப்புக்கள் உருவாகின்றன. சுயநலம் என்பது பிழையானதுமல்ல, சரியானது மல்ல, இந்தச் சுயநலத்தைப் பயன்படுத்தும் முறையில்தான் சரிபிழை கணிக்கப்படுகிறது. சுயநலத்தை உரிய முறைப்படி பயன்படுத்திய மனிதன் இம்மையிலும் சாந்தியடைகிறான். மறுமையிலும் அவனால் சாந்தியைப் பெறமுடியும். சுயநலத்தைத் தவறான முறையில் பயன் படுத்திய மனிதன் இம்மையிலும் இன்னலுக்குள்ளாகிறான், மறுமை யிலும் நிச்சயமாக இன்னலடைவான். இதுகாலவரையிலும், சுயநல த்தை எப்படிப்பயன்படுத்திச் சாந்தியைப்பெறலாம் என்ற வழிவகையை எவரும் கண்டுபிடித்ததாக நாமறியவில்லை. சுயநலம் என்றால் என்ன? என்பதன் பூரண விளக்கமும் எமக்குச் சரியாய் பிடிபட வில்லை.

உலகில் வாழும் ஜீவராசிகள் யாவும் நான் நான், என்ற தன்னுணர்வோடுதான் வாழ்கின்றன. இந்தத் தன்னுணர்வு என்பது புலனறிவு என்ற சிறையில், பலவிலங்குகளால் பிணைக்கப்பட்ட ஓர் கைதியாய் இருக்கிறது. இந்தத் தன்னுணர்வுக்குச் சுதந்திரம் அவசியமாகிறது. இந்தச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள மனிதன் நீங்கலாயுள்ள ஜீவராசிகள் யாவும் இயற்கை நியதியை, இயல்பூக் கத்தை அடிப்படையாய்க் கொண்டு இயங்குகின்றன. மனிதன் மட்டும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான இயற்கை வழி யைக் கண்டறிந்து கொள்ளாதவனாய், மனம்போன போக்கில்,

தான்தோன்றித்தனமான சட்டங்களைக் கட்டுப்பாடுகளை அமைத்துக் கொண்டு வாழ்கிறான். இயற்கைக்கு முரணான நேர் எதிர்திசையில் நீந்துகிறான். சுதந்திரமென்பது உடலுக்கு மட்டுமேயென்று அவன் நம்புவதால், சாந்தியைத் தன்நிறைவைச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள விரும்பிய மனிதன் மீண்டும் சாந்தியின்மையையே அடை கிறான். இவ்வுலகச் சிறையில் வாழ்ந்து இன்னலடைந்து நொந்த அதே மனிதன் இறந்த பின்பும், வெவ்வேறு சிறைகளில்தான் வாழப்போகிறான். இவன் சாந்தியைத் தன்னிறைவை, சுதந்திரத்தை எப்போது பெறுவான்?

இற்றைக்கு சுமார் 1410 வருடங்களின் முன் வெளியான குர்ஆன் என்ற பெயருடைய ஒரு வேதநூல் மனிதனுக்கு வேண்டிய இம்மை மறுமைக்குரிய சகல விஷயங்களிலும் தன்னால் வழிகாட்ட முடியும் என்று கூறிக்கொண்டிருப்பதாய் நான் அறிகிறேன். அது மட்டுமல்லாமல் எவ்விஷயத்தில் நீங்கள் தர்க்கம் செய்கிறீர்களோ அவ்விஷயத்தில் தெளிவை ஏற்படுத்தி உண்மையை உணர்த்தவே நான் வந்திருக்கிறேன் என்றும், மனிதனுடைய இறுதிப்பிரமாணம் நானே என்றும் என்னை நீங்கள் பின்பற்றினால் இம்மையிலும் மறு மையிலும் நிச்சயமாகத் தன்னிறைவை, சாந்தியை, சுதந்திரத்தைப் பெற்ற அச்சமற்ற மக்களாய் வாழலாம் என்றும் அவ்வேதம் வெளிப்ப டையாகவே கூறிக்கொண்டிருக்கிறது. அன்றிலிருந்து இன்றுவரை அல்லடைந்து கொண்டுள்ள எமது உலக மக்கள் இந்த வேதநூலை ஆராய்ந்து அது கூறுவது உண்மையா? பொய்யா? என்று கண்டறிய முன்வந்ததாகத் தெரியவில்லை. பொதுநலவாதிகளான நீங்கள் தானும், எப்போதும் புதுப்புதுக் கொள்கைகளை உருவாக்கிக் கொண்டு மேலும் மேலும் கஷ்டத்தை அனுபவிக்கிறீர்களேயன்றி, அந்த வேதநூலின் வாதத்தைச் சரிபிழைகாண முற்படுகிறீர்களே இல்லை. உண்மையைக் கண்டறியாமல் அலட்சியம் செய்துவிட்டுக் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழ்வது மனித இனத்துக்குப் பொருந்தாது.

சமுதாயம் நிலையான இருப்புடையதென்று கூறமுடியாது. பரிணாமமுறையை அடிப்படையாய்க் கொண்டு நோக்கினாலும் மனித சமுதாயம் ஆரம்பத்தில் இருந்ததில்லை. படிப்படியாய் வளர்ச் சியடைந்ததுதான் தற்போதுள்ள சமுதாயம். இச்சமுதாயம் எவ்வ ளவோ வளர்ச்சியடைந்து பல மாறுபாடுகளுடன் எதிர்காலத்தில்



வர இருக்கிறது. எக்காலமக்களுக்கும் பொருந்தக்கூடிய ஓர் வாழ்க்கை முறையை மனித அறிவினால் உருவாக்க முடியாது. அவ்வக் காலங்களில் நடைமுறையிலுள்ள கலை, கலாச்சாரம், நூலறிவு, கேள்வியறிவு, பழக்கவழக்கம் போன்ற குறுகிய ஓர் வட்டத்துக்குள் கட்டுண்ட அறிவைக் கொண்டு தன்னிறைவைச் சாந்தியை மனிதனால் பெறமுடியாது. உலகமக்கள் ஒரே குடும் பத்தினர். இக் குடும்பத்திலுள்ள, சென்றுபோன, இருந்து கொண்டி ருக்கிற, வரப்போகிற அத்தனை மக்களும் ஓரினமான, ஓர் வகைத் தன்னிறைவைச் சாந்தியைத்தான் வேண்டி நிற்கிறார்கள். ஆதலால் உலக மக்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில், இம்மை மறுமைப் பயன்களைத் தரக்கூடிய ஓர் வழிகாட்டியை (வேதநூலை)க் கண்டறிவதே உலக மக்களுக்கு நல்லறிஞர்கள் செய்யக்கூடிய மிகப்பெரிய முதற்சேவையாயும் கண்டறிந்த உண்மையை உலகுக்கு எத்திவைப்பது இரண்டாவது சேவையாகவும் இருக்கிறது. இந்த நீதிமன்றத்தின் முழுநோக்கம், மனிதகுலத்துக்கு அவசியமான கொள்கையை ஓர் வழிகாட்டும் வேதநூலைத் தெரிவு செய்வதே.

**பொதுநலவாதி :** நீதிபதியவர்களே! உலக மக்கள், இடத்தால், காலத்தால், அறிவால், பண்பாட்டினால், பழக்கவழக்கத்தால், இன் னும் எத்தனையெத்தனையோ வகையால் வேறுபட்டவர்களாய் இருந்தார்கள். இருக்கிறார்கள், இனிமேலும் இருப்பார்கள். இம்மக்க ளெல்லோருக்கும் பொருந்தக்கூடிய ஓர் வேதமுண்டென்றால், தன்னி றைவைப் பெறக்கூடிய, சாந்தியைப் பெறக்கூடிய வழியை அந்த (நூல்) வேதம் காட்டுமென்றால் இதை எப்படி ஒப்புக்கொள்வது?

**நீதிபதி :** நியாயமான கேள்விதான். ஆரம்பத்திலிருந்து இறுதிவரை வாழும் மக்கள் யாவரும் தேடிக்கொண்டிருப்பது ஒரே வகையான தன்னிறைவுதான், ஒரே வகையான சாந்திதான் என்றால் அதைப் பெற்றுக் கொள்ளும் வழியும் ஒன்றாகத்தானே இருக்கும். இந்த வழியை மனிதனால் உருவாக்கியிருக்க முடியாது. ஏனென்றால் மனிதன் இறந்தகால, நிகழ்கால, அறிவைப் பெற்றிருந்தாலும் எதிர் காலத்தைப் பற்றியும் அறிந்தவனல்ல. எதிர்காலத்தை அனுமான அறிவைக் கொண்டு மனிதன் ஓரளவு யூகித்தாலும் அது பூரணமான உண்மையாகாது. மனிதஅறிவுக்கெட்டாத எத்தனையோ வகையான, இனமான மாற்றங்களை இயற்கை(கடவுள்) ஏற்படுத்திக் கொண்டிருக் கிறது. எனவே முக்காலங்களையும் உணர்ந்து கொண்டிருக்கிற இயற்கை (கடவுள்)தான் உண்மையான தன்னிறைவுக்குச் சாந்திக்கு

வழிகாட்டக் கூடிய அந்த வேதநூலை அருளியிருக்கும். அப்படியானால் எமது அறிவு வட்டத்திலெட்டாத அந்த இயற்கைதரும் விபரம் நம்பக்கூடியது தான். உதாரணமாக பிரிட்டிஸ் மூ.ஃ.மீனுக்கும், அமெரிக்க மூ.ஃ.மீனுக்கும், ஆபிரிக்க மூ.ஃ.மீனுக்கும் மற்றும் உலகின் நாலா புறங்களிலுமுள்ள மூ.ஃ.மீன்களுக்குமிடையில் கலை, கலாச் சாரம், பாஷை, உணவு போன்ற அனேக முரண்பாடுகள் தென் பட்டாலும் அவர்கள் யாவரும் கொள்கையில், கொள்கையை அமுல்படுத்தும் முறையில் ஒன்றுபட்டிருப்பதால் அவர்களிடையே எவ்வித பிணக்குமே ஏற்படுவதில்லை. மூ.ஃ.மீன்களை மட்டுமன்றி ஒவ்வோர் கொள்கையில் இருந்து கொண்டிருக்கிற ஒவ்வோர் கூட்டத்தினரையும் நோக்கினால் இவ்வுண்மையை இலகுவாய் உணரலாம்.

**பொதுநலவாதி :** நீதிபதியவர்களே! என்னை மன்னியுங்கள். தாங்கள் கூறுவது சரிதானென்றால் இன்று முஸ்லிம்கள் முஸ்லிம்களோடும், கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களோடும் எஹுதுகள் எஹுதுகளோடும் ஏன் மோதிக் கொண்டும் அணுவாயுதம் பாவித்துக்கொண்டுமிருக் கிறார்களென்று வினவ ஆசைப்படுகிறேன்.

**நீதிபதி :** சந்தோஷம், இந்த மோதல்வாதிகள் ஒவ்வொரு கூட்டத் தினரும் நாங்கள் ஒவ்வோர் மதத்தை ஒவ்வோர் கொள்கையைப் பின்பற்றியவர்களென்று வாயினால் கூறிக்கொள்கிறார்களேயன்றி உண்மையாகவே அவர்களுக்கு ஒரு முகப்படுத்தப்பட்ட கொள்கை விளக்கமோ, ஒருமுகப்படுத்தப்பட்ட அனுஷ்டானங்களோ கிடையாது. முஸ்லிம்களை மட்டுமே எடுத்துக்கொண்டால் நடை உடை பாவனை களில் கூட எத்தனையோ வகைகள் தென்படுகின்றன. எத்தனையோ கூட்டங்கள் தங்களை முஸ்லிம்களென்று கூறிக்கொண்டாலும் தப்லீக், ஜமாஅத்தே இஸ்லாமி, வஹ்ஹாபி, தர்வேஸ்போன்ற மிக அனேகமான கூட்டங்கள் தென்படுகின்றன. இவர்கள் கொள்கையோ, கொள்கையை அமுல்படுத்தும் செயல்முறைகளையோ விளங்கிய றியாமலே செயல்படுகிறார்கள். இவர்களிடத்தில் கட்சியின் அடை யாளம் (வேஷம்) மட்டும்தான் உண்டு. கட்சியைப் பற்றிய எள்ளளவு அறிவும் இவர்களிடத்தில் கிடையாது. குளக்கரையில் மேய்ந்து கொண்டிருக்கிற கால்நடைகளிலொன்று வாலைக்கிளப்பிக் கொண்டு பாய்ந்தோடினால் அதைக்கண்ட எல்லாக் கால்நடைகளுமே ஓடுகின் றன. தாங்கள் ஏன் ஓடுகிறோம் என்பதுகூட அந்த மந்தைகளுக்கே தெரியாது. இதை ஒத்துணர்வு என்று கூறுகிறோம். இதைப்போல



பெரியார் என்று பாமரமக்களால் நம்பப்படுகின்ற ஒருவர், ஓர் விஷயத்தைச் செய்துகொண்டு நீங்களும் அப்படியே செய்யுங்க ளென்றால், வேஷத்தில் இனிமையான பேச்சில் மயக்குண்ட மக்கள் பெரியாரையே பின்பற்றுகிறார்கள். அவரில் வெளியாகும் மூடத் தனத்தை ஞானஒளியாய்க் கணிக்கிறார்கள். அவரின் அடாத செயல் களைக் கண்ணாரக் கண்டாலும்கூட அது தெய்வீகச்செயல் என்று கணிக்கிறார்கள்.

அப்பெரியார் சிந்தனையாளர்களின் பிடியில் மாட்டிக் கொள் ளாமல் தப்பித்துக் கொள்வதற்காக முதலில் ஓர் உபாயத்தைக் கையாளுகிறார். அதாவது ஓர் ஸ்லோகத்தைக் கூறுகிறார். ஸ்லோகம் என்னவென்றால், உங்களுடைய வேதநூலை நீங்கள் ஆராயவோ வாசிக்கவோ சந்தேகப்படவோ கூடாது. பெரியார்களான நாங்கள் எதைக் கூறுகிறோமோ அதை மட்டுமே நீங்கள் நம்ப வேண்டும். எங்களுக்கு மாறானவர்கள் கூறுகிற கூற்றைக் கேட்பது ஹறாம். இதுதான் ஸ்லோகம். இவ்வித மருண்ட வார்த்தைகளில் மயங்கிய மந்தபுத்தியுடன் மதவெறிபிடித்த மனிதக் கூட்டம் ஒன்றை யொன்று மோதித் தாக்கத்தான் செய்யும். யுத்தங்கள் நிகழத்தான் செய்யும். சாந்தியைப் பெறவிரும்பிய மனிதக் கூட்டம் சாந்தி யின்மையைத்தான் பெற்றுக் கொள்கிறது. இதற்கெல்லாம் மூல காரணம் வேதத்தை ஆராய வேண்டிய முறைப்படி ஆராயாமல் கொள்கை விளக்கம் தெரியாமல் குறிக்கோள் புரியாமல் பின்பற்றல் முறையில் நானும் ஓர் முஸ்லீம் என்று நம்பியிருப்பதே. நிற்க,

எம்நீமன்றத்தில் இன்னும் இன்னும் பலரை நான் விசாரணை செய்ய வேண்டியிருக்கிறது. இங்கே அத்வைதி என்றொருவரும் மு.ஃ.மீன் என்று இன்னொருவரும் இருக்கிறார்கள். இவர்கள் இரு வரும், மனிதன் சாந்தியடையக்கூடிய வழியைக் காட்டுவோம் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். சாந்தியைப் பெறக்கூடிய வழி ஒன்று தான் இருக்க முடியும். அந்த ஒன்றை இருவர் தனித்தனியாய் வெவ்வேறாய்த் தரமுடியாது. எனவே இறுதியில் அவ்விருவரையும் நாம் நீண்டதூரம் விசாரிக்க வேண்டியிருப்பதாலும் விசாரணை முடியாமல் தீர்ப்புச் செய்ய முடியாமலிருப்பதாலும் என்பேச்சை நிறுத்திக் கொண்டு இப்போது பரிணாமவாதியாரை விசாரணை செய்ய விரும்புகிறேன்.

(விசாரணைக்காக பரிணாமவாதி அழைக்கப்பட்டு நீதிபதி முன்னிலையில் நின்றுகொண்டிருக்கிறார்)

# நீதிபதியும் பரிணாமவாதியும்

**நீதிபதி :** பரிணாமவாதி அவர்களே! உங்களுடைய கொள்கை யையும், கோட்பாடுகளையும் குறிக்கோளையும் இம்மன்றில் விளக் கிக் காட்டுங்கள் பார்ப்போம்.

**பரிணாமவாதி :** நீதிபதியவர்களே! எங்களுக்கென்று ஓர் கொள்கை கிடையாது. ஆயினும் எங்களுடைய குறிக்கோள் இவ்வுலகில் தன்நிறைவு, சாந்திபெற்று வாழவேண்டுமென்பதே.

**நீதிபதி :** உங்களுடைய பரிணாம விபரத்தை ஓரளவு விளக்கிக் காட்டுங்கள்.

**பரிணாமவாதி :** இயற்கையென்று ஒன்றுண்டு. இது சிற்சில சட்டங்க ளுக்கமைவாய் இயங்குகின்றது. இதன்படி மண், தண்ணீர், காற்று, நெருப்பு, முதலாம் இயற்கைப் பொருட்கள் எப்போதும் ஒன்றை யொன்று தாக்கிக் கொண்டிருக்கின்றன. ஆதலால் ஒவ்வோர் கணமும் புதிது புதிதான விளைவுகள் ஏற்படுகின்றன. இதில் ஓர் விளைவுதான் “அமீபா” என்ற ஜீவன்(நுண்ணுயிர்) தோன்றுவது. இவ்வுயிர் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப பரிணாமமடைந்து வளர்கிறது. இப்பரிமாணமடைந்த ஓர் இனக் குரங்கிலிருந்து தான் மனிதன் தோன்றியிருக்கிறான். உலக ஜீவராசிகள் எல்லாமே இந்தப் பரிணாமத்தில் கட்டுண்டவைதான். எங்கள் கூட்டத்தினரின் மையக் கருத்து இதுதான்.

**நீதிபதி :** நல்லது உங்களுடைய அறிவுத் திறமையை மெச்ச வேண்டியதாய் இருக்கிறது. மிகமிக அரும் முயற்சி செய்திருக்கி றீர்கள். ஆயினும் நீங்கள் ஓர் குறுகிய வட்டத்திற்குள் நின்று கொண்டே ஆராய்கிறீர்கள். உங்களாராய்வு பௌதீகப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டே தரிபடுத்தப்பட்டிருக்கிறது. உங்கள் ஆராய்வு உங்களிடத்தில் உண்மைபோல் தென்பட்டாலும், நவீன கால விஞ்ஞானிகளிடத்திலும் மார்க்கவாதிகளிடத்திலும் நீங்கள் தோல்வியடைகிறீர்கள். மார்க்கவாதிகளின் நியாயமான கேள்வி களுக்கு உங்களால் விடைகூற முடியாதிருக்கிறது. உதாரணமாக,



ஒன்றிரண்டை நோக்குவோம். சூழலை மாற்றும் காரணிகளா யமைந்த மண், தண்ணீர், காற்று, நெருப்பு முதலாம் மூலப் பொருட்களின் பரிணாமம் இன்னும் உங்களால் விளக்கப்படவில்லை. இன்னும் பரிணாமத்தின் இறுதி எல்லையையும் நீங்கள் விளக்கவு மில்லைக் கண்டறியவும் இல்லை. இயற்கைத் தேர்வுமுறை, சார்புக் கொள்கைகளை நாம் ஓரளவு அங்கீகரிக்கலாம். இவற்றை வேதங் களும் மறுப்பதாய்த் தெரியவில்லை. எனினும் இவை அவற்றின் கீழ்ப்படித்தரமாய் இருக்கின்றன.

சுமார் 30இலட்சம் வருடங்களுக்கு முன்பிருந்து இற்றை வரையிலும் வாழ்ந்து இறந்த மனிதர்களின் மண்டை ஓடுகளை நீங்கள் 9வகையாய்த் தேர்ந்தெடுத்து அவற்றை அடிப்படை ஆதார மாய்க் கொண்டுதான் உங்கள் அனுமானப்படி பரிணாம இயற்கை தோற்ற முறையை விளக்கியிருப்பதாய் கூறியிருக்கிறீர்கள். குர்ஆன் என்ற வேதநூலை ஆராயும்போது உங்கள் வாதத்தில் பல குற்றம் குறைகள் தென்படுகின்றன. தற்கால மக்களையும் மிகப் பூர்வகால மக்களையும் குர்ஆனின் அடிப்படையில் நோக்கினால், 21ம் நூற்றா ண்டில் வாழும் நம்போன்ற மக்களைவிட அறிவில், நாகரீகத்தில் சிறந்த எத்தனையெத்தனையோ சமூகங்கள் வாழ்ந்து மறைந்திருக் கின்றன என்பது தென்படுகிறது. இதை விளக்க மிக நீண்ட நேரம் அவசியமாகும். உங்களில் சிலர் ஓரினக் குரங்கிலிருந்தே மனிதன் தோன்றினான் என்று கூறுகிறீர்கள். இதை மறுப்போரும் உங்களி லுண்டு. குரங்கிலிருந்து மனிதன் பரிணாமமடைந்தான் என்றால், மனித மாற்றமடைந்த ஆரம்பக் குரங்குகளுடன் அதே சூழலில் வாழ்ந்த அதேஇனக் குரங்குகள் இன்னும் குரங்குகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனவே! அவை இன்னும் மனிதனாக ஏன் மாற்ற மடையவில்லையென்று மார்க்கவாதிகளால் வினாவப் படும் கேள்விக்கு உங்களால் விடைகூற முடியாது. ஆரம்பத்தில் பரிணாமமடைந்த குரங்குகள், உங்கள் கூற்றுப்படி முன்மாதிரி இல்லாமல்தான் பரிணாமமடைந்தனவென்றால், இப்போது எக் கோணத்திலும் முன் மாதிரியைக் கண்டறிந்த அதே இனக்குரங்குள் பரிணாமமடைந்த மனிதனாய் மாற முடியாதிருப்பது ஏன்? உங்களுடைய ஆராய்வு சரியான அடிப்படையில் அமைந்ததா யில்லையென்றும் அவை பூரணமான முறையில் உறுதியான ஆதாரங்களோடு நிருபிக்கப்படவில்லை என்றும் தற்கால விஞ்ஞானம் தெளிவாய் விளக்கிக் காட்டிக்கொண்டிருக்கிறது.

அடுத்ததாகப் பரிணாமத்தின் முடிவில் மனிதன் என்ன ஆவான் என்பதை நீங்கள் யூகித்தாலும் உங்கள் யூகமே முடியான தென்று கூறமுடியாது. உங்கள் வாதத்தை நுட்பமாய் ஆராய்ந்தால் பௌதீகப் பொருட்களின் சேர்க்கையிலிருந்தே உயிர் தோன்றுகிற தென்பது தென்படுகிறது. மேலும் பௌதீகமே இயக்கத்துக்கு மூல காரணம் என்பதும் தென்படுகிறது. விஞ்ஞானிகளிடத்திலும் மார்க்க வாதிகளிடத்திலும் வேதநூற்களிடத்திலும் இவ்விபரம் பிழையான தென்று கணிக்கப்படுகிறது. வேதநூற்கள், ஜடம் என்பது (பௌதீகம்) வெறும் மாய்கை, மருட்சியென்றும் ஜடம் என்பதொன்று கிடையாது என்றும் ஜடம் இருப்பதாய்த் தென்படுவது புலனாட்சியில் கட்டுண்ட மயக்கு என்றும் கூறுகின்றன. இன்றைய விஞ்ஞானமும் ஜடம் என்பது வெறும் தோற்றப்பாடே என்றும் இத்தோற்றப்பாடு இயக்க மற்றதென்றும், இதை இயக்குவது அதனுடன் வேறில்லாததாய் அறிவுவட்டத்தைக் கடந்ததாயுள்ள ஏதோ ஓர் அளப்பரிய ஆற்றலே யென்றும் ஒப்புக் கொண்டிருக்கிறது. எனவே, உங்கள் முடிவு வெறும் யூகமே என்பது தென்படுகிறது.

மனித சிருட்டியின் புலன் பொறிகள் ஓர் கட்டுப்பாடான திட்டத்துக்கமைவாய் இயங்குகின்றன. உங்களுடைய புலன்களை எண்ணிக்கையில் கூட்டியோ, குறைத்தோ, தன்மையில் கூட்டிக் குறைத்தோ தரப்பட்டிருந்தால் இப்போது நீங்கள் காணும் இதே உலகை வேறோர் உலகாகக் கண்டிருப்பீர்கள், உங்கள் அனுபவ அறிவுகூட வெவ்வேறு வகையாய் அமைந்திருக்கும். அப்படியானால் உங்களாராய்வு அரைகுறையான பொய்யாய் அமையும். உங்களு டைய கல்வியை உண்மையான வேதங்களின் உபதேசங்களோடு ஒப்பிட்டு நோக்காமல் முடிவுக்கு வரமுடியாது. பௌதீகம், ஜடம் என்றால் என்ன? அது எப்படி உருவானது? என்பதை நீங்கள் முறையாய் அறிந்து கொண்டால் நீங்கள் ஆராய்ந்து முடிவுகட்ட வேண்டிய ஓர் கரு உங்களுக்குக் கிடைக்கலாம். நீங்கள் காணும் பொருட்கள் யாவுக்கும் முழுமுதற் காரணம் என்ன? என்பதை அறிந்து கொள்ளாத வரையிலும் உங்களாய்வு பயன்பட முடியாது. நீங்கள் உங்கள் வாதப்படி அறிவுத்துறையில் இன்னும் பரிணாம மடைய வேண்டியவர்களே. ஆதலால் உங்கள் கண்டுபிடிப்புக்கள், எல்லைக்குட்பட்ட உங்களறிவின் வட்டத்தில் கட்டுண்ட ஓர் மயக்கமே என்பது தென்படுகிறது. கெட்டவன் நல்லவனாவதும் நல்லவன் கெட்டவனாவதும் வெள்ளையனுக்குக் கறுப்பன் பிறப்பதும்



கறுப்பனுக்கு வெள்ளையன் பிறப்பதும் நாம் வாழ்க்கையில் கண்டறிந்த உண்மை. காரணமில்லாத காரியம் இல்லை. மனித உடல் எப்படி பரிணாமமடைகிறதோ அதேபோல மனிதஅறிவும் பரிணாமமடைந்து கொண்டுதானே இருக்கிறது. இவ்விரண்டும் (உடலும் உணர்வு என்ற உயிரும்) ஏகமாய் அமைந்திருப்பவை தான் ஜீவப்பிராணிகள். இவை ஒன்றையொன்று முந்தியவை, பிந்தியவையென்று தீர்ப்பிடுவது தவறாகும். உங்கள் கருத்துப்படி ஒன்று இன்னொன்றாய் மாற்றமடைவதே பரிணாமமென்றால் இதற்கு ஆரம்பமோ முடிவோ இருக்க முடியாது. ஏன்? இல்லாதது இருப்ப தாகவோ, இருப்பது இல்லாததாகவோ அமையாது. எனவே ஜடவஸ்த்துக்களும், ஜடவஸ்துக்களின் மோதலால் உருவாகும் பரிணாமமும் உங்களறிவில் புதிதாய்த் தென்பட்டாலும் அது என்றும் உள்ளதாகவே இருக்கும். அது உள்ளதுதான் என்பதை நீங்கள் அறிவதானால் தன்மை, முன்னிலை, படர்க்கையென்ற மூவிடங் களையும் நேற்று, இன்று, நாளை அல்லது இறந்தகாலம், நிகழ் காலம், எதிர்காலமென்ற முக்காலங்களையும் விட்டு நீங்கி, இவற்றை விட்டும் நீங்கள் தனித்திருந்தாலேயன்றி அறிய உணர முடியாது. இவ்வறிவு உங்களிடம் இல்லவே இல்லையென்பது தென்படுகிறது. இயற்கை ஓர் உறுதியான கட்டுப்பாட்டில் இயங்குகிற தென்பதை மறுக்க முடியாது. ஒவ்வோர் கிரகத்துக்கும் ஒவ்வோர் வகையான இயற்கைத்தன்மை(களாகத்ர்) இருக்கலாம். இவ்வுலகின் இயற்றன்மையை மையமாகக் கொண்டே நீங்கள் ஆராய்வு செய்கிறீர்கள். உங்களாராய்வு வேறோர் கிரகத்தில் வாழும் உயிரினத்துக்குப் பொருந்தும் என்று கூறமுடியாது. எல்லா உலகங் களிலும் வாழும் எல்லா உயிரினங்களினதும் பரிணாமத்தை நாம் அறிவதானால் எல்லாக் கிரகங்களையுமே நாம் ஆராயவேண்டி வரும். இது மனிதனால் சாதிக்க முடியாத ஒன்றாகும். சாதித்தாலும் கூட இச்சாதனை மனிதனுக்குத் தன்நிறைவைச் சாந்தியை ஏற்படுத்த முடியாது. பரிணாம அறிவு ஒரு சிலருக்கு அவசியமாயிருக்கலாம். ஆனால் இன்றுள்ள மனித குலத்துக்கு அவசியமானது தன்னிறைவு, சாந்தி, சமாதானம்தான். பரிணாமவாதம் அறிவுத்துறையில் குழந்தை களின் விளையாட்டென்றே நான் கருதுகிறேன்.

அடுத்ததாக இருபொருட்கள் ஒன்றையொன்று தாக்கினால் அவ்விரண்டுக்கும் மாறான மூன்றாவது பொருள் காட்சியளிக்கும் என்பது இயற்கை விதியாகும். விறகும் நெருப்பும் மோதிக் கொண்டால் சாம்பரை மூன்றாம் பொருளாக காணுகிறோம்.

இது எமது சொந்த அனுபவமும் விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்ட ஓர் உண்மையாகும். இவ்வுண்மையை அடிப்படையாய் வைத்துக்கொண் டாராய்ந்தாலும் உங்களாராய்வில் சில பிழைகள் தென்படுகின்றன.

விதையாயிருந்த ஒரு பொருள் பலவகைத் தாக்கங்களை ஏற்று மரமாய் வெளிவருகிறது. மரம் இன்னும் பலவகைத் தாக்க ங்களைப் பெற்றுப் பூவாய், காயாய், பழமாய், மாறிக்கொண்டே யிருந்து முடிவில் விதையாகவே மிஞ்சுகிறது. இதுதான் பரிணாம மென்றால் ஆரம்பத்தில் குரங்காயிருந்த மனிதன் இப்போது (நடுப் பகுதியில்) நாகரீக மேதையாய்க் காட்சிதரினும் முடிவில் அவன் குரங்காகவே மாற்றமடைய வேண்டும். சரி அது இருக்கட்டும். இவ்வித மாற்றங்கள் ஓர் இயற்கைச் சட்டத்தை அடிப்படையாய்க் கொண்டே நிகழ்கின்றன என்பது அறிவுக்குப் புலனாகிறது. இவ்வு ண்மையை நீங்களும் மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். சோளன்விதை எப்போதும் தென்னை மரமாக முளைப்பதில்லை. இது ஓர் இயற்கை நியதிதானென்றால் பரிணாமத்துக்கும் ஓர் இயற் கைநியதி(சட்டம்) இருந்தே ஆகவேண்டும். இயக்குவது இயற்கை என்ற சட்டமாயும் இயங்குவது ஜடமாயும் இருக்க வேண்டும். ஜடம் வெறும் சூறத்(தோற்றம்) மட்டுமேயென்றால் இயங்குவதும் இயக்குவதும் ஒரே விஷயமாய், (ஒரே பொருளாய்) இரண்டில்லாத ஏகமானதாகவே இருக்கும். இயங்கும் ஜடம் தோற்றுவதாயும் இயக்கும் இயற்கை தோன்றாததாயும் இருக்கிறது. இவ்வியற்கை என்பது என்றுமுள்ளதாய், அறிவுடையதாய், சக்தியுடையதாய், மனித அறிவில் இலகுவாய் அமையமுடியாததாய், அனுமான அறிவில் ஓரளவு அமையக் கூடியதாய் இருப்பதாலும் பிரபஞ்சத்துக்கு எம்மறிவில் முதற்காரணமாய் இருப்பதாலும் அவ்வியற்கையைக் கடவுள், பிரம்மம், இறைவன் என்றெல்லாம் மனிதன் கூறுகின்றான். இதிலொன்றும் தவறே கிடையாது.

இயக்குவது உயிராயும் (அறிவாயும்) இயங்குவது அவ்வறி வின் தோற்றப்பாடாயும் கொண்டால் இயக்குவதும் இயங்குவதும் ஒரே விஷயம் என்பது தென்படுகிறது. இவ்விஷயத்தைப் பரிணாம வாதிகளான நீங்கள் தெளிவாய் அறிந்து கொண்டால், பரி ணாமவாதம் அறிவுத்துறையில் குழந்தைகளின் விளையாட்டுக் கொப்பானது என்பதை நிச்சயமாக ஏற்றுக் கொள்வீர்களென்பது



எமது நம்பிக்கை. இயற்கை என்பது ஓர் கட்டுப்பாட்டின் கீழ் (களா கத்ர்) இயங்குவதாய் நீங்கள் ஏற்றுக்கொண்டிருப்பதை நான் பாராட் டுகிறேன். ஆயினும் வேதங்களின் அறிவுரைகளையும் உங்களாராய் வையும் ஒப்பிட்டு நோக்கும் போது, நீங்கள் அறிவின் ஆரம்பப்படியில் (முதல் வகுப்பில்) படித்துக் கொண்டிருக்கிறீர்களென்று காணுகிறேன். உங்கள் வாதத்தில் உலக வாழ்வுக்கு உதவக்கூடிய சில நுட்பங் களுண்டு என்பதை நான் மனதார ஏற்றுக் கொள்கிறேன். ஆயினும் பரிணாமவாதத்தால் ஏற்படும் நன்மையைவிடத் தீமையே அதிகமா யிருப்பது தென்படுகிறது. மனிதன் தன்சொந்த உண்மையைக் கண்ட றிவதற்கு உங்கள் வாதம் தடையாய் அமையலாம். உங்கள் வாதம் வெளிப்புலன்களில் கட்டுண்டிருப்பதால் சாந்தியைத், தன்னிறைவைப் பெறவேண்டிய ஆத்மா(ஜீவனுக்கு) இக்கல்வி பிரயோசனம் தராதென்பதே என்கருத்து. எனவே, இவ்விஷயத்தை இவ்வளவோடு நிறுத்திக் கொண்டு, நான் விஞ்ஞானியாரின் விபரங்களைக் கேட்டறிய விரும்புகிறேன்.

**குறிப்பு :** விஞ்ஞானியார் அழைக்கப்பட்டு நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு ஆயத்தமாய் நின்று கொண்டிருக்கிறார்.

# நீதிபதியும் விஞ்ஞானியும்

**நீதிபதி :** விஞ்ஞானி அவர்களே! மனித இனத்தின் தன்னிறைவென்ற சாந்திக்காக என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய கொள்கை செயல்விளக்கங்களை விளக்கிக்காட்டுங்கள்.

**விஞ்ஞானி :** நீதிபதி அவர்களே! நாங்கள் மனித முன்னேற்றத் திற்காக, தன்னிறைவைச் சாந்தியைப் பெறுவதற்காக அரும்தொண்டு செய்து கொண்டிருக்கிறோம். மனிதவாழ்வின் தேவைகளை இலகு வாய்ப் பெற்றுக்கொள்வதற்காக என்ன என்ன இலகுவான வழிக ளுண்டோ அந்த வழிவகைகளைக் கண்டறியவே முயன்று கொண்டி ருக்கிறோம். மனிதஇனம், சுபீட்சமாய் வாழும் உபாயங்களை, அதற்குரிய கருவிகள், காரணிகளைக் கண்டறிந்து உலகுக்கு எத்திவைப்பதே எங்கள் நோக்கம். எங்களுடைய கண்டுபிடிப்புக் களில் ஆக்கங்களில் மனித இனத்துக்குச் சிற்சில தீய விளைவுகள் தோன்றுகின்றன. இது எங்களுடைய குற்றமல்ல. ஒவ்வோர் பொருளி னதும் உண்மையை, அதன் சக்தியைக் கண்டறிந்து அவற்றை மனித முன்னேற்றத்துக்காக பயன்படுத்துவதே எங்கள் குறிக்கோள்.

**நீதிபதி :** சந்தோஷம், உங்களுடைய முயற்சி பாராட்டப்பட வேண்டி யதுதான், எனினும் உங்களுடைய முயற்சிகளில் ஓர் பாரதூரமான குற்றம் இருப்பது எனக்குத் தென்படுகிறது. அது என்னவென்றால், மனிதன் உண்பதும், உறங்குவதும், இனப்பெருக்கம் செய்வதும், ஒருவரையொருவர் அல்லது ஓர் நாட்டை இன்னோர்நாடு ஜெயிப்ப தும்தான் தன்னிறைவு, சாந்தி என்று நீங்கள் நம்பிச்செயல்படு கிறீர்கள் என்பதே. சகல சுகபோகங்களுடன் வாழும் மனிதனும் இறந்துவிடுகிறான். வெளியுலகில் அவன் சுபீட்சமாய் தன்னிறை வோடு வாழ்கிறானென்று நாம் நம்பினாலும்கூட அவனுடைய உள்ளத்தில் சாந்தியோ தன்னிறைவோ இருப்பதில்லை. ஏனென் றால், மனித இனத்தின் சாந்திக்காக எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகள் யாவும் தற்காலிகமானவையாகவே இருக்கின்றன. அம்முயற்சியினால் பெறப்படும் சாந்தியும் தற்காலிகமானதுதான். உண்டவுடன் சாந்தி கிட்டிவிடுகிறது. ஆனால் அவ்வுணவு சமிபாட டைந்து விட்டால் மீண்டும் சாந்தியின்மையே தலைதூக்குகிறது.



சிருட்டியுலகு ஒன்றுக்கொன்று முரணாகவே அமைந்திருக் கிறது. மனிதனின் குணங்கள்கூட ஒன்றுக்கொன்று முரணா னவைதான். பசியும், பசியின்மையும் ஒரே வேளையில் ஒன்றுபடா. இன்பமும் துன்பமும் ஒரே வேளையில் ஒன்றுபடா. அப்படியானால் இன்பத்தின் முடிவு துன்பமாயும், துன்பத்தின் முடிவு இன்பமாயும் தானிருக்கும். சகல செல்வங்களையும் ஆடம்பரமான வாழ்வையும் பெற்ற ஓர் சீமானின் மனைவி இன்னோர் கள்ளக் காதலனுடன் ஓடிவிட்டாள் என்பதை அவன் அறியும்போது சாந்தி, தன்னிறைவு, சுபீட்சமான வாழ்வு யாவும் அவனைவிட்டு மறைந்துவிடுகின்றன. அவனுடைய உள்ளம் கொந்தளிப்புடைய தீச்சுவாலையாக மாறி விடுகிறது. இவ்வித நிகழ்சிகளிலிருந்து நாம் ஓர் உண்மையை உணரக் கூடியதாய் இருக்கிறது. அதாவது உடலுக்காக நாம் அமைத்துக் கொண்ட, சாந்திபெறும் வழிகள் யாவும் தற்காலிக மானவை என்பதும் இவ்வழிகளால் மனித உள்ளம் நிரந்தர சாந்தியைத் தன்னிறைவை பெறமுடியாதென்பதுமே நாம் ஊன்றி உணர்ந்த உண்மையாகும். எனவே இவ்வுலகில் நாம் அனுப விக்கும் ஒவ்வோர் இன்பத்தின் முடிவும் துன்பமாகவே அமைகிறது. சுருங்கக் கூறினால் இன்பம் துன்பத்துக்கு விதையாகவும் துன்பம் இன்பத்திற்கு விதையாகவும் அமைந்திருக்கிறதென்பதே. உலக இன்பத்தைச் சுபீட்சத்தைப் பெற்றுக் கொண்டால் தன்னிறைவைச், சாந்தியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நாம் நம்புவது தவறாகும். இன்பதுன்பங்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப வெளியிலிருந்தே எம்மை வந்தடைகின்றனவென்று நாம் மேலோட்டமாக நம்பி யிருக்கிறோம். இது தவறான நம்பிக்கையாகும். உண்மையை நோக்கினால் இன்பதுன்பங்கள், சாந்தி, சாந்தியின்மை என்பவை எம்முள்ளத்திலிருந்தே பிறக்கின்றன. மாசடைந்த சூழல் உடலுக்கு நோயை ஏற்படுத்துவது போல, மாசடைந்த எண்ண அலைகளே சாந்தியின்மையென்ற உளநோயை ஏற்படுத்துகின்றன என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

விஞ்ஞானிகளான உங்களுடைய கண்டுபிடிப்புக்கள் ஆக்க ங்கள் யாவும் மனிதஉடலோடு (பௌதீக உலகோடு)மட்டும் தொடர் புடையனவாய் இருக்கின்றன. இவை மனிதனுடைய வெளி மனதுக்குச் சாந்தியைத் தருவதுபோல் தென்பட்டாலும் அவை சாந்தி யின்மையையே உலகுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. சாந்தியைத் தன்னிறைவைப் பெறவேண்டியது

உள்ளம் என்ற ஆத்துமாவோடு சம்பந்தப்பட்ட ஓர் விஷயமாய் இருக்கிறது. உங்கள் முயற்சிகள் கண்டுபிடிப்புக்கள் மனித ஆத்மாவுக்குச் சாந்தியைத் தன்னிறைவைத் தரமுடியாதவை யென்றே நான் கருதுகிறேன். ஏனென்றால் உங்கள் ஆக்கங்கள் பெரும்பாலும் மாசுபட்ட எண்ண அலைகளையே உருவாக்குகின்றன. அச்சத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட உங்கள் ஆக்கங்கள் மனிதகுலத்திற்குச் செய்யும் நன்மையைவிடத் தீமையே அதிகமாகச் செய்து கொண்டிருக்கின்றன.

நாம் பெற்றுள்ள இன்றைய விஞ்ஞான உண்மைகளைப் பூரணமான உண்மைகள் தானென்றும் ஏற்றுக்கொள்ள முடியாது. விஞ்ஞான ஆய்வுகள் பகுதிகளைப் பொறுத்தவையாகும். விஞ்ஞான முடிவுகள் தொடர்நிலை உண்மைகளேயன்றி பூரணமான முடிவான உண்மைகளல்ல. முடிவான உண்மையைப் பெறுவதானால் விஞ்ஞானம் சர்வபேரண்டத்தையும் ஆய்வு செய்யவேண்டி வரும். அப்படி ஆய்வு செய்தாலும் அதுவும் தற்காலிக உண்மையாக இருக்குமேயன்றிப் பூரண உண்மையாக அமையாது. ஏனென்றால் பிரபஞ்சமென்பது தோன்றிமறையும் தற்காலிகப் பொருளாய் அமைந்திருக்கிறது. ஒவ்வோர் கணமும் பிரபஞ்சம் மாறுபட்டுக் கொண்டேயிருக்கிறது. தோன்றிமறைவது புலனாட்சியில் கட்டுண்ட மயக்காகவே இருக்கும். மயக்கத்திலிருந்து மயக்கோடு பெறப்படும் கருத்தை உண்மையென்று கூறமுடியாது. நீங்கள் ஜடஉலகையும் அதன் சக்தியையும் பயன்படுத்தி, மனிதகுலத்தை மிகமிக இக்கட்டான நிலைக்கே இழுத்துச் செல்கிறீர்களென்பது என்கருத்து. இவ்வுலக வாழ்வில் ஓர் மனிதனின் நீண்டஆயுள் சுமார் 100 வருடங்கள் எனக்கொண்டால் அதில் சரிபாதி (இரவாய்) தூக்கத்தில் கழிந்துவிடுகிறது. குழந்தை, வாலிபன், வயோதிபன் என்ற நிலைமை களைச் சீர்தூக்கி நோக்கினால், உலகில் பெறும் தற்காலிகமான புலனின்பம் வெகுவெகு செற்பகாலமே. இவ்வித ஓர் குறுகியகால இன்பத்தைப் பெறுவதே குறிக்கோளாகக் கொண்டோர் இறப்பின் பின் மிக நீண்ட காலம் துன்பத்தை அனுபவிக்க வேண்டிவருமென்று வேதங்கள் கூறிக்கொண்டிருக்கின்றன. இறப்பின் பின்பு மிக நீண்டகால இன்பத்தைப் பெறுவதற்காக, துன்பத்துடன் பிணைந்த குறுகியகால உலக இன்பத்தைப் புறக்கணித்தால், அல்லது அவசியத்தினளவு பெற்றுக் கொண்டால் அதில் என்னதவறு என்று வேதங்கள் வினவுகின்றன.



உலகைத் துறந்து சன்யாசம்போட வேண்டாமென்றும், அவசியத்தினளவு உலகை, உலக இன்பத்தைப் பெற்றுக்கொள்ளும் படியும், குறிக்கோளுக்கும் கொள்கைக்கும் அமைவாய் வாழ்வை அமைத்துக் கொண்டால், இவ்வுலகிலும் இறப்பிற்குப் பிறகும் (எல்லா உலகிலும்) மனிதனால் தன்னிறைவை, சாந்தியை நிச்சயமாய்ப் பெறமுடியுமென்றும் மூ.ஃ.மீன்களின் வேதநூல்(குர்ஆன்) கூறிக்கொண் டிருக்கிறது.

விஞ்ஞானிகளான நீங்கள் ஜடம் என்பது வெறும் தோற்றப் பாடே என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். ஜடம் நிலையற்ற ஓர் கற்பனைத்தோற்றம் என்பதை ஏற்றுக்கொண்டும் நீங்கள் ஜட வாதிகளை ஆதரிக்கிறீர்கள். அதாவது நிழற்பாடான ஜட உலகை மையமாய்க் கொண்டு, அதில் நிலையற்ற, இன்பமாய்த் தென்படும் துன்பத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, அரும் முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். சாந்தியைப்பெற விரும்பிய நீங்கள் உங்க ளறியாமையால் சாந்தியின்மையையே பெறுகிறீர்களென்றுதானே கூறவேண்டியிருக்கிறது. மனிதனுக்குப் பூரணசாந்தியைத் தன் நிறைவை ஏற்படுத்தக்கூடிய ஒரு வழி இருந்தே ஆகவேண்டும். இல்லையென்றால் இயல்பாகவே மனித உள்ளத்துக்குச் சாந்தியின் தேவை ஏற்படாது. பரிணாமமுறைப்படி நோக்கும்போது, கொந்த ளிக்கும் மனோபாவமில்லாமல் இருந்த ஓர் மனிதன் (சாந்தியுட னிருந்த மனிதன்) கொந்தளிக்கும் மனோபாவத்தைப் பெறுகிறான், சாந்தியின்றி கஷ்டமடைகிறானென்றால், அவனுடைய மனோ நிலையை நாம் மாற்றும் போது நிச்சயமாக அவன் பழைய நிலையை, சாந்தியுடைய நிலையை எய்துவான் என்பது உண்மை. அப்படியானால், சாந்தியின்மை அவனுடைய விளக்கப் பிசகினால் சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் மாசுபட்ட எண்ணஅலைகளினால் தான் அவனுடைய உள்ளத்தில் உருவாகிறது. எனவே, மனிதனின் சாந்தியை நாம் பெறவேண்டுமானால், எமதுள்ளத்தில் குடி கொண்டுள்ள மருட்சியை அறிவீனத்தை முதலில் நாம் நீக்க வேண்டியது அவசியமாகிறது.

உங்களுடைய ஆராய்வுகளினால் கண்டறிந்த பல தத்துவ உண்மைகள், சாந்தியைத் தேடிக்கொண்டிருக்கும் மனிதர்களுக்கு இயற்கை வழியைக் காட்டக்கூடியவையாய் அமைந்திருப்பது பாராட்ட

ப்படவேண்டிய விஷயம்தான். உங்கள் ஆராய்வினால் கண்டறிந்த அடிப்படைத்தத்துவங்கள் மனிதனுக்குச் சாந்தியின் வாயிலைக் கண்டறியக்கூடிய வகையில் அமைந்திருப்பது மனிதகுலத்துக்கு நீங்கள்செய்த பேருதவிதான் என்பதை நான் பூரணமாய் நம்புகிறேன், விரும்புகிறேன். ஆயினும் உங்களால் கண்டறியப்பட்ட அடிப்படைத் தத்துவங்களுக்கு மாறாய் அழிவுப்பாதையில் மனிதனை அழைத்துச் செல்வதை வெறுக்கிறேன். அவசியமற்ற அழிவுப்பாதையில் நீங்கள் முன்னேறிக் கொண்டிருப்பது மனித அறிவுக்கும் சாந்திக்கும் முரணா யிருக்கிறது. மனிதனை மனிதனே கொன்றொழிக்கக்கூடிய ஆயுதங் களின் உற்பத்திக்காக உங்களில் சுமார் ஐந்து இலட்சம் பேர் முயன்று கொண்டிருக்கிறீர்களென்றால் அறிவுள்ள மனிதனால் ஆச்ச ரியப்படாமலிருக்க முடியுமா? ஆயுதஉற்பத்திக்காக இவ்வளவு அரும் முயற்சி செய்கிறீர்களென்றால் அச்சம்தான் அதற்குக் காரணமென்று கூறுவது பிழையாகாது. இயற்கை மனிதனுக்குக் கொடுக்கும் தண்டனையின் விதைதான் அச்சமென்பதை நாம் ஊன்றி உணர வேண்டும். மனிதன் மனிதனுக்கு அச்சமடைகிறானென்றால் இது ஆச்சரியப்படவேண்டிய ஓர் விஷயம்தான். பல்லாயிரம் அணுக் குண்டுகளை அடுக்கிவைத்துக்கொண்டு நாம் சாந்தியைத் தேடுகி றோமென்றால் இதன் அர்த்தம் என்ன? மனோவலிமை இல்லாமை யால் (வெறும் கற்பனை யூகங்களால்) தெய்வநம்பிக்கை இல்லா மையால், இறைவனையும், அவனுடைய ஆட்சி அதிகாரத்தையும் அறிந்துகொள்ள முடியாத அறிவீனத்தினால்தான் அச்சம் உருவா கிறது. அச்சமற்று வாழ்வதற்கு வழி, அச்சத்தை உருவாக்கும் விரோதிகளை கொன்று குவிப்பதேயென்று, அச்சமுற்ற உள்ளம் நம்புகிறது. எதிரியின் உடல்தான் எம்மை அச்சமடையச் செய்கிற தென்று நம்புவது அறியாமை. எதிரியின் உடலை இயக்கும் மூடத்தனமான போக்கை அறிவைக் கொன்றொழிப்பதே புத்திஜீவிக ளின் கடமையாகும். இதற்கு அணுக்குண்டு பயன்படாது. கெட்ட, தவறான அச்சத்தை, மனித அறிவிலிருந்து கொன்று குவிப்பதற்காக நாமெல்லோரும் சேர்ந்து ஓர் அணுகுண்டை நிச்சயமாகக் கண்ட றிந்தே ஆகவேண்டும். மனிதனுடைய இயலாமைதான் பொறாமை, வஞ்சகம், மேலெண்ணம் போன்ற தீயகுணங்களை உருவாக்குகிற தென்ற உண்மையை நாம் ஊன்றி உணரவேண்டும். 2வயதுக் குழந்தையிடம் சவரஅலகைக் கொடுப்பது ஆபத்தான ஓர் விஷயம். இதைப்போல அறிவுகுறைந்த குழந்தைகளுக்கொப்பான பாமர மனிதரிடத்தில் சவரஅலகுக்கொப்பான உங்கள் ஆக்கங்களை



கையளிப்பது மாபெரும் ஆபத்தாக அமைந்திருக்கிறது. குழந்தை யிடம் சவர அலகைக் கொடுப்பதானால் அதை முறைப்படி பயன் படுத்தும் அறிவைக் குழந்தைக்கு முதலில் ஊட்ட வேண்டியது அவசியம். இதைப்போல பாமரமக்கள் உங்கள் ஆக்கங்களால் அழிவைப் பெறாமல் முறைப்படி பயன்படுத்தக்கூடிய அறிவை முதலில் ஊட்ட வேண்டியது உங்கள் கடமையாகும்.

**விஞ்ஞானி :** அது எங்கள் கடமையல்ல. மக்களை மக்களாய் வளர்த்தெடுக்க முயலும் அரசாங்கத்தினதும் அதன் கல்வித்திட்ட த்தினதும், கல்வித் திட்டத்தை சீராய் அமைத்துக் கொடுக்க முயலும் அறிஞர்கள் மதப்பெரியார்களினதும் கடமையாகும்.

**நீதிபதி :** ஆம். அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மை தான். விஞ்ஞானிகளான உங்கள் கண்டுபிடிப்புக்கள் அதிக பணச் செலவுக்கும் கஷ்டத்துக்கும் மத்தியில்தான் உருவாகியிருக்கின்றன. உங்களுடைய ஆக்கங்களுக்குரிய அடிப்படைத் தத்துவ உண்மை கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் கண்டறியப்படாமலிருந்தவை யென்றும் நாங்களே புதிதாகக் கண்டறிந்தோமென்றும் நீங்கள் கூறலாம். உங்கள் கூற்றை என்னால் ஏற்கமுடியாதிருக்கிறது. நான் மு.ஃமீன்களுடைய குர்ஆனென்ற வேதநூலை ஆராய்ந்தபோது உங்கள் கண்டுபிடிப்புக்கள் புதியவையல்ல என்பதும் சிற்சில கண்டுபிடிப்புக்கள் மனித இனத்திற்கு அவசியமற்றவை என்பதும், நீங்கள் கண்டறிய வேண்டிய விஷயங்கள் இன்னுமனேகமுண்டு என்பதும் தெரியவந்தது. நீங்கள் மட்டுமல்லாமல், குர்ஆனுக்கு உரிமைபாராட்டும் முஸ்லிம்கள்கூட அந்தவேதநூலை முன் மாதிரியாய்க் கொண்டியங்கியிருந்தால் இன்றுள்ள உலகு சாந்தி யைத் தன்னிறைவைப் பெற்றிருக்கலாமென்பது தென்படுகிறது. உதாரணமாக.

மூன்று இருள்களுக்குள்ளிருந்தே குழந்தை உருவாகிற தென்றும், ஆண், பெண் கலப்பிந்திரியத்தினாலேயே குழந்தை உருவாகிறதென்றும், மனிதக்கருவின் வளர்ச்சி பற்றி விஞ்ஞானி களான நீங்கள் 20ம் நூற்றாண்டில்தான் தெளிவாய் கண்டறிந் தீர்கள். ஆனால் நீங்கள் கண்டறிந்த அதே உண்மையை சுமார் 1410வருடங்களின் முன்பே (7ம் நூற்றாண்டில்) குர்ஆனென்ற வேதநூல் விளக்கமளித்துள்ளது. இந்த வேதநூல் வெளியான

காலத்திலும் அதற்கு முன்பும் மனிதக்கருவின் வளர்ச்சிபற்றி எந்த ஓர் அறிஞரும் எந்த ஓர் வைத்திய நிபுணரும் கண்டறிந்ததாக ஆதாரங்கள் தென்படவில்லை. 15ம் நூற்றாண்டில் “லியனார் டோடாவின்ஸ்” என்ற இத்தாலியரால் குழந்தை வளர்ச்சிபற்றி படம் ஒன்று முதன் முதலில் வரையப்பட்டது. 16ம் நூற்றாண்டில் “லிவின் ஹுக்” என்பவரால் “மைக்குரோஸ்கோப்” கண்டுபிடிக்கப்பட்டு கோழிக்கருவின் ஆரம்பநிலை உலகுக்கு அறிமுகம் செய்யப் பட்டது. அப்போதும் கூட மனிதக் கருவின் நிலைமை எவராலும் கண்டு பிடிக்கப்படவில்லை. 1941ம் ஆண்டில் ஸ்ரீட்டர் என்பவரும் 1872ல் “ஒராஹிலி” என்பவரும் மனிதக் கருவினைப் பற்றிய ஒருசில உண்மைகளை உலகுக்கு விளக்கினார்கள். இன்றுள்ள நீங்கள் அவ்வுண்மைகளை ஆதாரங்களாய்க் கொண்டாராய்ந்து இன்று குர்ஆனின் கூற்றை ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். இவ்வித விபரங் களை உங்களின் கட்டுரைகளே விளக்கமளிக்கின்றன. அப்படி யானால் குர்ஆனின் அடிப்படைத் தத்துவங்களை கருவாய்க் கொண்டாராய்ந்திருந்தால், இப்போதுள்ள அரைகுறைக் கண்டு பிடிப்புக்களை விட, மனித இனத்துக்குத் தீமையளிக்கக் கூடிய கண்டுபிடிப்புக்களை விட, மனித சமூகம் சாந்தியை, தன்நிறைவைப் பெறக்கூடிய அனேக நல்ல கண்டுபிடிப்புக்களை உருவாக்கி யிருக்கலாம். இன்று சாந்தியைத்தேடி மனிதன் அலைய வேண்டிய அவசியமே இல்லை என்ற நிலையேற்பட்டிருக்கும்.

அந்த வேதநூலை, ஆராய்ந்தபோது 77:25, 26, 27, 28, 78:6, 7 போன்ற வேதவசனங்கள் பூமியை ஆராயும் படியும் 67:30, 35:12, 16:10, போன்ற வசனங்கள் நீரை ஆராயும் படியும் 30:48, 35:91, 7:57, போன்ற வசனங்கள் காற்றை ஆராயும் படியும் 14:32, 24:43, 44 போன்ற வசனங்கள் மழையை ஆராயும் படியும் 30:24, 13:12, 13 பேன்ற வசனங்கள் மின்னலை ஆராயும்படியும் இன்றும் மனிதனைத் தூண்டிக் கொண்டிருப்பதை நான்கண்டேன்.

மனித இனத்தின் முழுத்தேவைகளையும் விளக்கிக் காட்டி அவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வழிவகைகளையும் அவசிய மான சட்ட அடிப்படைகளையும் விளக்கிக் கொண்டிருக்கிற ஒரே யோர் இயல்பான வழிகாட்டி அந்த குர்ஆனென்ற வேதநூல் ஒன்று மட்டும் தான் என்று கூறவேண்டியிருக்கிறது. ஆயினும் நீதிபதி



யாகிய எனக்குக் கூட அந்த நூலில் சிற்சில மயக்கங்கள் தென்படவே செய்கின்றன. இவ்வித மயக்கங்களை எம்முடனிருந்து கொண்டிருக்கிற மூ.ஃ.மீன் அவர்கள் நீக்கி வைப்பார்களென்று நம்புகிறேன்.

மனித உடலை அழித்தொழிக்காமல், மனிதனுடைய மூடத்த னமான அறிவை, அழித்தொழித்துச் சாந்திக்கு வழியும் காட்டக்கூடிய ஓர் அணுகுண்டு தம்மிடம் இருப்பதாக அந்த மூ.ஃ.மீன் கூறிக்கொண்டி ருக்கிறார். அதுமட்டுமல்லாமல் அந்த அணுகுண்டை எல்லோரும் இலகுவாய்க் கையாளக்கூடிய வழிவகைகளை விளக்கம் தரக்கூடிய ஓர் புத்தகமும் தம்மிடமுண்டென்று கூறுகிறார். நாம் அவரைப் பின்னால் விளங்கியறிவோம்.

ஆத்மீகத் தன்னிறைவு ஓர் புறமிருக்கட்டும் இவ்வுலக வாழ்வுக்கு மட்டுமாவது தன்னிறைவு சாந்தி பெறக்கூடிய வழி வகைகளை முற்றாய் உங்களால் கண்டறிய முடியாதென்பது குர்ஆனென்ற வேதத்தின் வாயிலாய்த் தெளிவாகிறது. ஏனென்றால் நான் காட்டிய வேதவசனங்கள் ஓர் குறிப்பிட்ட காலம் வரையிலும் ஆராயுங்கள் என்று கூறப்படாமல், என்றும் ஆராயுங்கள் என்று நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் இணைத்துக் கூறப்பட்டிருப் பதாக தென்படுகிறது. ஏனெனில் மனிதயுக்திக்கு ஓர் எல்கையுண்டு. எனவே, இவ்விஷயத்தை இலகுவாக்குவான் வேண்டி, இன்ன இன்ன அடிப்படையில் இன்ன இன்ன மாதிரி ஆராய்வு செய்யுங்க ளென்றும், அப்படி ஆராய்ந்தால் இவ்வுலகிலும் மறுமையிலும் நீங்கள் தன்நிறைவைச் சாந்தியைப் பெறமுடியுமென்றும் அந்த வேதநூல் இன்றும் கூறிக்கொண்டிருக்கிறது. விஞ்ஞானிகளான உங்களில் பல வேதங்களையும் பின்பற்றும் பலஇன மக்களும் இருந்து கொண்டி ருக்கிறீர்கள். உங்கள் ஆராய்வுகள் கண்டுபிடிப்புக்கள் யாவும் குர்ஆனுடன் ஒத்ததாய் அமைவதை நீங்கள் என்றோ ஓர் நாள் காண்பீர்களென்பது உங்களாராய்வுகள் கண்டுபிடிப்புக்களிலிருந்தே தெளிவாகிறது. எப்போதோ ஓர்நாள் இவ்வுண்மையை (குர்ஆனு டைய உண்மையை) நீங்கள் ஏற்றுக் கொண்டவர்களாகி விடுவீர்க ளென்பதும் தெளிவாகிறது. நீங்கள் உங்களுக்கும் உலகுக்கும் சாந்தியைத் தன்னிறைவைத்தேடி உழைப்பவர்கள் என்பது உண்மையானால், உங்களுடைய பிரத்தியட்சம் என்ற அனுபவ அறிவை அடிப்படையாய்க் கொண்ட அனுமான அறிவைக் கொண்டா

ராய்ந்தும் பூரண உண்மையைக் காணமுடியாதவர்களாய்ப் பல வருடங்கள் கஷ்ட நஷ்டமடைய வேண்டிய நீங்கள் குர்ஆனின் கூற்றை ஏன் ஒரு முறை ஆராய்ந்து பார்க்கக்கூடாது?

ஹதீஸுகளிலும், குர்ஆன் வசனங்களிலும் பல அபூர்வ மருந்துகள் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக ஓர் ஹதீஸ், "மரணத்தைத்தவிர மற்றெல்லா நோய்களுக்கும் கருஞ்சீரகத்தில் மருந்துண்டு" என்று கூறுகிறது. ஓர் வேதவசனம் தேனில் உங்களுக்கு சொஸ்த்தமுண்டு என்று கூறுகிறது. இவை உண்மைதானென்றால் விஞ்ஞானிகளான நீங்கள் கருஞ்சீரகத்திலிருந்து இதுவரை எத்தனை மருந்துகளை உருவாக்கியிருக்கிறீர்கள்? தேனிலிருந்து எத்தனை மருந்துகளை உருவாக்கியிருக்கிறீர்கள்? இன்றுள்ள கொடிய நோய்களுக்கெல்லாம் மூலகாரணம் உங்களால் கண்டறியப்பட்ட மருந்துகளினால் உருவாகும் பக்கவிளைவேயென்று கூறினால் மிகையாகாது. முன்மாதிரியைக் கொண்டே மனிதன் முன்னேற வேண்டியவன். அப்படித்தான் மனிதஇனம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அப்படியானால் வேதத்தில் முன்மாதிரிகள் யாவும் பூரணமாய் விளக்கப்பட்டிருந்தும், தத்துவ உண்மைகள் தரப்பட்டிருந்தும், அவற்றை அலட்சியம் செய்துவிட்டு நீங்கள் அனுமானத்தை மட்டும் அடிப்படையாய்க் கொண்டியங்குவது நீங்கள் அலட்சியவாதிகளே யென்பதை நிரூபிக்கிறது.

**விஞ்ஞானி :** நீதிபதியவர்களே! நாங்கள் அலட்சியவாதிகளல்ல. குர்ஆன், ஹதீஸுகளை நாங்கள் ஓரளவு ஆராய்ந்துள்ளோம். அந்த வேதநூலில் ஒன்றுக்கொன்று முரணான பல வசனங்கள் தென்படுகின்றன. புத்திக்கு விரோதமான சில வசனங்கள் தென்படுகின்றன. ஹதீஸுகளும் இப்படித்தான் அமைந்திருக்கின்றன. குர்ஆன் ஹதீஸுகளை மட்டுமல்லாமல் உலக மதங்கள் யாவற்றையும் நோக்கினால் இவை இறைவன் பேச்சல்ல மனிதனின் பேச்சே யென்றுதான் கூற வேண்டியிருக்கிறது. உதாரணமாக நோய் ஒட்டுவதோ தொற்றுவதோ இல்லையென்று முஹம்மத்நபி அவர்கள் கூறியுள்ளதை நாங்கள் ஹதீஸுக் கிரந்தங்களில் வாசித்திருக்கிறோம். நாங்கள் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்கிடையில் தான் நோய் ஒட்டுவதையும் தொற்றுவதையும் கண்டறிந்தோம். எங்கள் கண்டுபிடிப்பின்படி நாங்கள் செயல்பட்டு வெற்றியும் கண்டிருக்கிறோம். விஷயம் இப்படியிருக்கும் போது முஹம்மத் நபி அவர்கள் சொன்னதுதான் உண்மையென்பதை நாங்கள் எப்படி



ஏற்றுக் கொள்ள முடியும்? அறிவுக்கு முரணான அந்த அடிப்படையை நாங்கள் வைத்துக் கொண்டாராய்ந்திருந்தால் நோய் விஷயத்தில் தன்னிறைவைப் பெறும் வழிவகைகளை எங்களால் பெற்றிருக்க முடியாது.

**நீதிபதி :** விஞ்ஞானி அவர்களே! நீங்கள் வேதநூலில் கண்ட சில சந்தேகங்கள் பகுத்தறிவென்ற எனக்கும் உண்டு. நானும் அறிஞனேயன்றி அனுபவஸ்தனல்ல. நான் வேதத்துக்கு உரிமை பாராட்டும் தகுதியுடையோனுமல்ல. எம்மிடையே அனுபவஸ்த்தரான ஓர் மூஃமீன் விசாரணைக்காக இங்கே இருந்து கொண்டிருக்கிறார். எமக்கேற்பட்ட சந்தேகங்களை அவர் மூலம் நாம் கேட்டு விளங்கியறிவோம். அதுதவிர முஹம்மது நபியினால்கூறப்பட்ட "நோய் ஒட்டுவதுமில்லை தொற்றுவதுமில்லை" என்ற வசனத்தை நீங்கள் பிழையாய்க்காண்பது தவறென்பதை என்னால் நிரூபணம் செய்ய முடியும். நோய் தொற்றுவதுதான், ஒட்டுவதுதான் என்ற உங்கள் வாதம் உண்மையானால் முதல் மனிதனுக்கேற்பட்ட காய்ச்சல் அல்லது வேறு ஓர் நோய் வேறு எந்த மனிதனில் இருந்து தொற்றியிருக்கும்? ஒட்டியிருக்கும்? என்று நபிகேட்ட அதே கேள்வியை நான் கேட்டால் உங்களால் பதில் கூறமுடியாது. எனவே, உங்கள் கூற்று உண்மையென்றால் அது இடைபடை காரணத்தில் கட்டுண்டதாயும் நபியின் கூற்று அடிப்படைக் காரணத்தில் கட்டுண்டதாயும் இருப்பதாய் தென்படுகிறது. உங்கள் கண்டுபிடிப்பே சரியானதென்றால் ஒட்டல் தொற்றல் என்பவற்றை இல்லாமலழிக்கக் கூடிய சாதனை எதைச் செய்திருக்கிறீர்கள்? பெரும்பாலும் உங்கள் கண்டுபிடிப்புக்கள் (ஆக்கங்கள்) தீய பக்க விளைவுகளையே ஏற்படுத்துகின்றன. சூழல் மாசடைவதற்கு முக்கிய காரணம் உங்கள் ஆக்கங்களே!

1410 வருடங்களின் முன் கூறப்பட்ட வேதவசனங்களின், ஹதிஸுகளின் முன்னறிவிப்புக்கள் இன்றும் சிற்சில போது சிற்சில வகையில் வெளியாகிக் கொண்டிருப்பதை நாம் காணுகிறோம். நீங்கள் தற்போது கண்டறிந்துள்ள உண்மையை இனிமேல் வரக் கூடிய விஞ்ஞானிகள் பிழையாய்க் கணிக்கலாம். வரலாறு இதை எமக்கு நிரூபித்திருக்கிறது. 1410 வருடங்களின்முன் தரப்பட்ட சில குறுகிய விஷயங்களை மட்டும் இப்போது உண்மையென்று கண்டிருக்கிறீர்கள். அப்படியானால் அந்த வேதத்தின் கூற்று உண்மைதானென்று நீங்கள் கண்டறிய உங்களுக்கு இன்னும்

ஒரு நீண்டகாலம் தேவைப்படலாம். அந்த வேதநூலின் கூற்றுப்படி உங்களாய்வும் ஆக்கங்களில் மிகப்பெரும்பாலானவையும் குழந்தைகளின் விளையாட்டுக்கொப்பானவையென்று தான் கூறக் கூடியதாயிருக்கிறது. நான் குறிப்பிடும் குர்ஆன் என்ற வேதநூல் துணிகரமான ஓர் விஷயத்தைக் கூறிக்கொண்டிருக்கிறது.

***குர்ஆன் : 30 : 58***

***மனிதர்களுக்கு வேண்டிய உதாரணங்கள் யாவும் இந்தக் குர்ஆனில் நிச்சயமாக நாம் கூறியிருக்கிறோம். எந்த அத்தாட்சியை நீர் அவர்களிடம் கொண்டு வந்த போதிலும் நீரும் உம்மைச் சேர்ந்தோரும் பொய்யர்களேயன்றி வேறில்லையென்றே அந்த நிராகரிப்போர் கூறுவார்கள்.***

இவ்வாக்கியத்தின் படி மனிதர்களுக்கு இம்மை மறுமைகளுக்குரிய சகல விஷயங்களையும் (சாந்தியைத் தன்னிறைவைப் பெறக்கூடிய வழிகளையும்) குர்ஆன் விளக்கித் தருமென்பது தென்படுகிறது. உதாரணம் என்பதை முன்மாதிரி எனக்கொள்க. உண்மையைக் கண்டறிய விரும்பியிருந்தாலும் அவ்வுண்மையை மக்கள் உணரவிடாமல் மறைப்பவர்கள், மூடுபவர்கள், புரட்டுபவர்களான மக்கள் அவ்வுண்மையை மறுப்பார்களென்பதும் தெளிவாகிறது. வானத்தைக் கடப்பது அல்லது வானமண்டலத்தில் மனிதன் பிரயாணம் செய்வது எவ்வளவு கடினமானதென்பதைத் தற்கால விஞ்ஞானிகளான நீங்கள் கண்டறிந்திருக்கிறீர்கள். இதே விஷயத்தை 1410 வருடங்களின் முன் அந்த வேதநூல் எப்படி விளங்கியிருக்கிறதென்பதை ஓர்முறை சிந்தனை செய்து பாருங்கள்.

***குர்ஆன் : 55 : 35***

***(வானைக் கடக்க நீங்கள் சென்றால்) உங்கள் மீது அக்கினிச் சுவாலையும் காய்ந்த செம்பும் (பிரங்கிக் குண்டு போன்றதும்) எறியப்படும் அதை நீங்கள் தடுத்துக்கொள்ள முடியாது. (இந்த ஆயத்து பாமரமக்களை நோக்கியதாகும்)***

***குர்ஆன் : 55 : 33***

***மனு ஜின் கூட்டத்தார்களே! நீங்கள் வானங்கள் பூமியின் எல்லையைக் கடந்து சென்றுவிட உங்களால் முடியுமானால் அவ்வாறு சென்றுவிடுங்கள். ஆயினும் ஆற்றலுடனின்றி உங்களால் செல்ல முடியாது. (இந்த ஆயத்து விஞ்ஞானிகளான உங்களைப் போன்ற நடுத்தர மக்களை நோக்கியதாகும்)***



அன்றி வானங்களிலும் பூமியிலுமுள்ள யாவற்றையுமே அவன் தன்னுடைய அருளால் உங்களுக்குக் கட்டுப்பட வைத்திருக்கிறான். சிந்தித்து ஆராயும் ஜனங்களுக்கு இதில் படிப்பினைகள் இருக்கின்றன. (இந்த ஆயத்து மேன்மக்களை ஆரிபீன்களை நோக்கியதாகும்)

இவ்வகை ஆயத்துக்கள் அந்த வேதநூலில் பரவலாய்க் காணப்படுகின்றன. இவ்வகை வசனங்களின்படி அந்த வேதநூலை அடிப்படையாய் கொண்டு செயல்பட்டால் அறிவென்ற மாபெரும் வலிமையை மனிதனால் பெறமுடியுமென்பதும், மனிதனால் சர்வ உலகையும் ஆட்சியின்கீழ் கொண்டுவர முடியுமென்பதும், அதற்காக மனிதன் அயராது முறைப்படி சிந்தித்துச் செயல்பட வேண்டுமென்பதும் தென்படுகிறது. இந்த 21ம் நூற்றாண்டில் தான் சந்திர மண்டலத்தில் காலடி எடுத்து வைத்திருக்கிறீர்கள். இன்னும் சுமார் 30வருடங்களில் செவ்வாய்க்கிரகத்தில் கொடிநாட்டுவோம் என்று கூறுகிறீர்கள். உங்கள் கூற்றின்படி, சூரிய மண்டலத்திலுள்ள பிற கிரகங்களையும் நீங்கள் ஓரளவு சரியாய் அறிந்து ஆட்சிக்குக் கொண்டுவர மிக நீண்டகாலமும் கடின உழைப்பும் மிகப் பணச்செலவும் தேவையாகலாம் என்று தென்படுகிறது.

நாம் காணும் நட்சத்திரங்கள் எமது சூரியனைப் போன்ற தனி ஒளியுள்ளவையென்றும் அவையொவ்வொன்றுக்கும் பற்பல உபகோள்கள் இருக்கலாமென்றும் நாங்கள் பல கோடாகோடி நட்சத்திரங்களைத் தூரதரிசனிகள் மூலம் கண்டறிந்துள்ளோம் என்றும் கூறிக்கொண்டிருக்கிறீர்கள். விஞ்ஞானிகளான நீங்கள் அயரா முயற்சிசெய்து கண்டறிந்த நட்சத்திரங்களின் விபரங்களை, அவற்றின் எடை, பருமன், வேகம், சுழல்திசை போன்றவற்றை ஓர் நிமிடம் சிந்தனைக் கெடுத்தால் மனித மூளையே திணறிவிடும் போல் தென்படுகிறது. ஆயினும் நீங்கள் கண்டறிந்தவை, வேதத்தின் கூற்றுப்படி மிகமிகச் செற்பமே என்பதும் அவை 1ம் வானத்திலேயேயுள்ளன என்பதும் தென்படுகிறது. மற்றும் 2ம், 3ம் வானங்களில் என்ன என்ன உள்ளன என்பதை மனித அறிவு இதுகாலவரையும் எள்ளளவும் அறியவே இல்லை என்பது உறுதியாகிறது. வானம் என்பதொன்றில்லையென்று நீங்கள் கூறுவதானாலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை ஏனென்றால் நீங்கள் எதை எல்கையாய் அமைத்துக் கொண்டு வானத்தை அவதானிக்கிறீர்களோ அந்த

எல்லையே முதல்வானம் என்று ஒருவர் கூறினால் அதை உங்களால் மறுக்க முடியாது. அது மட்டுமல்லாமல் 1ம் வானத்துக்குட்பட்ட வற்றை நீங்கள் கண்டீர்களேயன்றி, வானத்தை இன்னும் நீங்கள் காணவில்லையென்றும் அவர் கூறலாம்.

***குர்ஆன் : 37 : 6***
***நிச்சயமாக நாம் (பூமிக்கு அண்மையில்) தாழ்வாக உள்ள வானத்தைச் சுடரிடும் நட்சத்திரங்களைக் கொண்டு அழகு படுத்தினோம்.***

இவ்வாக்கியத்தின்படி நீங்கள் கண்டறிந்த பல கோடாகோடி நட்சத்திரங்களும் பூமியுள்ள வானம் எதுவோ அதே வானத்தில்தான் (1ம் வானத்தில்தான்) இருக்கின்றனவென்பது தென்படுகிறது. நீங்கள் கண்டறிந்த இத்தனை நட்சத்திரங்களும் அவற்றின் உபகோள்களும் உங்களாட்சியின் கீழ் வரக்கூடியவைதானென்றால், அவ்வாட்சியைப் பெற உங்களால் முடியுமா? என்பதும் சந்தேகம்தான். ஆனால் அந்த வேதநூலை இறைவனிடமிருந்து பெற்றுக் கொண்டதாய் கூறுகிற எம்போன்ற மனிதரான முஹம்மது நபியென்பவர் சுமார் 15ம் நூற்றாண்டுகளின் முன்பே அறிவில்லாத பாமரமக்களிடையே பிறந்து வளர்ந்தவர். கல்வியறிவு வாசனை எள்ளளவும் இல்லாதவர். எழுதப்படிக்க அறியாதவர். அப்படியிருந்தும் 1ம் வானத்திலுள்ள நீங்கள் கண்டறிந்த கோடாகோடி நட்சத்திரங்களையும் கடந்து அதன் மேலுள்ள 6 வானங்களையும் மொத்தம் 7 வானங்களையும் கடந்து (பகுத்தறிவின் வட்டத்தையே கடந்து) இறைவனுடன் உரையாடியதாக குர்ஆனும் ஹதீஸுகளும் கூறிக்கொண்டிருப்பதை நான் வாசித்திருக்கிறேன். அம்மனிதரின் பிரயாண நேரம் சுமார் ஒன்றிரண்டு நிமிடங்களில் முற்றுப்பெற்றதாய்த் தெரிகிறது. இப் பிரயாணம் பௌதீக உடலோடுதான் நடைபெற்றதென்று ஒரு சிலரும். அது சூட்சும உடற்பிரயாணம் தான் என்று வேறுசிலரும், அது சூட்சும உடற்பிரயாணமுமல்ல பௌதீக உடற் பிரயாண முமல்ல அது ஓர் ஞானக்காட்சி (கஸ்புக் காட்சி) என்று வேறு சிலரும் கூறிக்கொண்டிருந்தாலும் நபி பிரயாணம் செய்தது உண்மைதானென்பதை எல்லோரும் ஏற்றிருக்கிறார்கள். இவ் விபரத்தை திடீரென மனித அறிவு ஒப்புக்கொள்ள முடியாதென்பது உண்மை. ஆயினும் இவ்விபரத்தைப் பொய்யென்றும் கழிக்க முடியாதிருக்கின்றது. ஏனென்றால்,



முஹம்மது நபியென்பவர் அவருடைய பிரயாணத்தின் போது முதல் முதல் பைத்துல் முகத்தீஸ் என்ற இடத்தை அடைந்திரு க்கிறார். அவ்விடத்துக்கு முகம்மதுநபி முன் எப்போதும் போனதே கிடையாது. அந்த நபியின் பிரயாணத்தை ஏற்றுக்கொள்ளாத, பைத்துல் முகத்தஸுக்குப் பல தடவை போய்வந்த ஒரு சில மக்கள், நபியின் கூற்று உண்மையா? பொய்யா? என்பதைக் கண்டறிவதற்காக பல விஷயங்களை நபியிடம் கேட்டிருக்கிறார்கள். அப்போது அந்த நபி நான் அவற்றை அவதானிக்கவில்லை என்றோ மறந்துவிட்டே னென்றோ கூறியபோது அவரை மக்கள் கிண்டல் செய்திருக் கிறார்கள். புதிதாக இஸ்லாத்தை தழுவியிருந்த பல மக்கள் இஸ்லாத்திலிருந்து விலகிவிட்டார்கள். அப்போது அந்த நபிக்கு பைத்துல் முகத்தீஸ் காட்டப்பட்டு, மக்களுடைய கேள்விகள் யாவுக்கும் சரியான பதில் கூறியிருக்கிறார்கள். அவருடைய பிரயாணம் உண்மைதானென்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இம்மனிதரின் பிரயாணத்துக்கு ஒருரூபாய் கூட ஒருநாள் கூடச் செலவானதில்லை. இம்மனிதரால் எமக்கு அறிமுகம் செய்யப்பட்ட வேத நூலின்படி ஒழுகி வெற்றிகண்ட ஒருசில மக்கள் வியப்புக்குரிய அனேக அபூர்வ சாதனைகளை செய்திருப்பதாக சரித்திர ஏடுகள் எமக்கறிவிக்கின்றன. நபியும் நபியின் தோழர்களில் சிலரும் இவ்வித சாதனைகளை செய்தது மட்டுமல்லாமல், அவர்களுக்கு முந்திய மக்களிலும் பலர் இவ்வித சாதனைகளைச் செய்தள்ளதாக நாமறிந் துள்ளோம். அப்படியானால் அந்த நபிமாரும் அவர்களுடைய தோழர்களும் கையாண்ட வழிகளை முன்மாதிரியாய் வைத்துக் கொண்டு ஆராய்வது பொருத்தமானதென்று நான் நினைக்கிறேன்.

**விஞ்ஞானி :** நீதிபதியவர்களே! தாங்கள் எங்களுக்கெடுத்துக் காட்டிய நபியுடைய செய்திகளை, அவரைப் பின்பற்றிய ஒருசில மக்கள்தான் எமக்கெடுத்துக் கூறியிருக்கிறார்கள். இவர்களுடைய கூற்றுக்களில் மிகப்பல ஒன்றுக்கொன்று முரணாயிருக்கின்றன. அவற்றைப் பூரணமான ஆதாரங்கள்தானென்று எங்களால் ஒப்புக் கொள்ள முடியாது. மேலும் பல கோடாகோடி மக்கள் வாழும் இவ்வுலகில், விரல்விட்டெண்ணக்கூடிய ஓரிருவர் மட்டும் இப்படிச் சாதனை செய்தார்களென்றால், இவ்வித சாதனைகளை மற்ற மக்க ளால் கையாள முடியாதென்பதே அதன் அர்த்தம். 99%மான மக்களால் கையாள முடியாத ஓர் கொள்கையைச், செயலை, நாங்கள் முன்மாதிரியாய்க் கொண்டியங்குவது அறிவீனமாகும்.

நாங்கள் உலக மக்கள் யாவருக்கும் பொருந்தக்கூடிய வகையில் தான் எங்கள் ஆய்வுகளை நடாத்த வேண்டியிருக்கிறது. அடுத்ததாக அபாரசாதனைகள்(அற்புதங்கள்) எங்களுக்கவசியமல்ல. அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவும் மாட்டோம். எவ்வுலகிலும் எப்போதும் காரணமில்லாத காரியம் இல்லவே இல்லையென்பதைப் பூரணமாய் அறிந்திருக்கிறோம். சிற்சில விடயங்களின் காரணங்களைக் கண்டறிய முடியாத மக்கள் அவ்விடயங்களை அற்புதமென்று நம்பி விடுகிறார்கள். இவ்வகையில் நோக்கினால் விஞ்ஞானிகளான நாங்கள் தான் அற்புதம் செய்யும் சித்து புருடர்களாய் இருக்கிறோம் என்பதை உலக மக்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். எம்மை விட்டும் பல்லாயிரம் மைல் தொலைவிலுள்ள ஒருவரின் (அல்லது பலரின்) பேச்சை உருவத்தைப் பார்க்கக்கூடிய டி.வி போன்ற சாதாரண கருவிகளே எங்கள் சாதனைகளுக்கு (அற்புதங்களுக்கு) சாட்சி பகர்ந்து கொண்டிருக்கின்றன.

இப்படியிருக்கும் போது இப்றாஹீம் நபிக்கு நெருப்புப் பூஞ்சோலையானது என்றும் நபி மி.்.றாஜ் போனார் என்றும் கூறுகிற கூற்றுக்களை எங்களால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஏதோ ஓர் நிகழ்ச்சி நடைபெறுவதானால் அதற்கோர் காரணமிருந்தே யாகுமென்ற விதிப்படி, மக்கள் அற்புதமாய் கணிப்பவையெல்லாம் உண்மையான அற்புதங்களோ அபாரசாதனைகளோ அல்ல. பாமர மக்கள் தான் அற்புதம் என்பதைக் கற்பனையாய் உருவாக்கியிருக்கி றார்கள். அந்த ஏமாற்று வித்தையில் நாங்கள் ஏமாறவும் மக்களை ஏமாற்றவும் விரும்பவில்லை.

**நீதிபதி :** விஞ்ஞானியாரே! மிகமிக நீண்டநேரம் பேசவேண்டிய விரிவான ஓர் விஷயத்தை, மிகமிகச் சுருக்கமாகக்கூறி விளக்கியி ருக்கிறீர்கள். உங்களை நான் பாராட்டுகிறேன். வேதநூல் மனித னுக்கு வேண்டிய யாவற்றிற்கும் நான் வழிகாட்டுவேனென்று கூறிக் கொண்டிருக்கிறது. உலகுக்கு இன்றும் என்றும் தேவையாய் இருப்பது சாந்தி சமாதானமே. இதை இலகுவாய் பெறக்கூடிய எல்லோராலும் கையாளக்கூடிய ஓர்வழி இருந்தே ஆகும் என்பதை நான் முன்பே கூறினேன். அவ்வழியை நான் விளக்குவேனென்று கூறிக்கொண்டிருக்கிற ஓர் வேதநூல்(புத்திக்கு) அறிவுக்கு முரணாய் இருக்கிறதென்று நீங்கள் கூறுகிறீர்கள். அப்படியானால் அந்த வேத நூலை ஆராய வேண்டிய முறைப்படி நீங்கள்



ஆராயவில்லையென்றே நான் கருதுகிறேன். குர்ஆனென்ற அந்த வேதநூலுக்கு உரிமை பாராட்டும் ஓர் மூ.்.மீன் எம்மிடையே இருந்து கொண்டிருக்கிறார். உங்களுக்கும் எனக்குமேற்பட்ட சந்தேகங்களை நீக்கி எமக்குத் தெளிவை ஏற்படுத்துவாரேயானால் அந்த வேதநூலை விஞ்ஞானிக ளான நீங்கள் முற்றாய் ஆராய்ந்து மனிதனின் சாந்திக்குரிய பாதை யைக் கண்டறிந்து அதை உலகுக்கு எத்திவைக்க வேண்டியது உங்களுக்குக் கட்டாய கடமை என்று கூறிவைக்க விரும்புகிறேன்.

**குறிப்பு :** இப்போது துவிதவாதியார் விசாரணைக்காக அழைக்கப் பட்டு நீதிபதி முன் நின்றுகொண்டிருக்கிறார்.

# நீதிபதியும் துவிதவாதியும்

**நீதிபதி :** துவிதவாதியாரே! உங்கள் கூட்டத்தினரைப் பற்றி எமக்கு அடிக்கடி பல முறைப்பாடுகள் கிடைக்கின்றன. உங்கள் கூட்டத்தினர் தாங்களே உண்மைவாதிகள் என்று கூறிக்கொண்டு செயல்படுவத னால் மனித குலத்துக்கு எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை நான் காணுகிறேன். எனவே, உங்கள் கொள்கை என்ன? என்பதை நான் முதலில் அறிய வேண்டியவனாயிருக்கிறேன். ஆதலால் உங்கள் கொள்கையையும் குறிக்கோளையும் என் முன் னிலையில் சுருக்கமாய்த் தெளிவாய் விளக்கித்தாருங்கள்.

**துவிதவாதி :** (துவிதவாதியென்பதில் துவிதவாத வேதங்கள் மதங்கள் யாவும் அடங்கும்)

நீதிபதியவர்களே! சர்வ உலகங்களையும் படைத்த இறை வன் ஒருவன் உண்டென்றும் நாங்கள் சிருட்டிகளே என்றும் நம்பி யிருக்கிறோம். அதாவது இறைவன் எங்களை விட்டும் வேறானவர் என்று நம்பியிருக்கிறோம். இதுதான் எங்கள் கொள்கை. எங்களிறை வன் எங்களுக்கு வேதங்களைத் தந்திருக்கிறான். அவ்வேதங்களை நாங்கள் விசுவாசித்து அவற்றின் நல்லுபதேசங்களின்படி செயல் பட்டால் முடிவில் தன்நிறைவை, சாந்தியை (ஜன்னத்தை)ப் பெறலாம் என்று நம்பியிருக்கிறோம். இதுவே எங்கள் குறிக்கோள்.

**நீதிபதி :** உங்கள் கொள்கையைக் குறிக்கோளை விளக்கக்கூடிய ஏதாவதோர் மூலமந்திரம், ஸ்லோகம் கலிமா, உங்களிடமுண்டா? (துவிதவாதியிடம் கொள்கையைக் குறிக்கோளை உணர்த்தும் மூல மந்திரம் இல்லாதிருப்பதால் வாயடைத்து நிற்கிறார். அப்போது துவிதவாத முஸ்லீம்களில் ஒருவர் எழுந்து நின்று நீதிபதிக்கு விடை கூறுகிறார்)

**துவிதவாத முஸ்லிம் :** நீதிபதியவர்களே! எம்மிடத்தில் கொள்கை யைக் குறிக்கோளை உணர்த்தக்கூடிய ஓர் மந்திரம் இருக்கிறது. அதுவே “லாஇலாஹ இல்லல்லாஹ் என்பது. வணக்கத்துக்குரிய



நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்பதே அதன் அர்த்தம். வணங்கும் சிருட்டிவேறு வணங்கப்படும் அல்லாஹ்வேறு என்பதே எங்கள் கொள்கை. எங்களுக்கென்று ஓர் வேதநூலுண்டு. அதுவே குர்ஆன் என்பது. அந்த வேதநூலின் உபதேசங்களை ஏற்று நடந்தால் இம்மையிலும் இறந்தபின் மறுமையிலும் தன்னிறை வைச் சாந்தியை, ஜன்னத்தென்ற சுவர்க்கத்தைப் பெறலாம் என்பதே எங்கள் குறிக்கோள். எங்கள் கொள்கையை நாங்கள் தௌஹீது என்று கூறுகிறோம். எங்கள் கொள்கையின் மிகமுக்கிய அம்சம் என்னவென்றால் இறைவனை விட்டும் வேறான சிருட்டிகளை அவனு க்கு ஒப்பாய் நிகராய் இணையாக்கக் கூடாது என்பதுவாகும். மேலும் இறைவனும் சிருட்டியும்ஒன்றே என்று கூறுவது எங்களிடத்தில் ஷிர்க் (இணை கற்பித்தல்) ஆக இருக்கிறது. மேலும் நாங்கள் சர்வ வல்லமையுமுடைய இறைவனையே வணங்குவோம். அவனிடமே உதவி தேடுவோம். அவனல்லாத சிருட்டியிடத்தில் எவ்வித உத வியும் தேடமாட்டோம். நாங்கள் எச்செயலைச் செய்வதானாலும் அல்லாஹ்வுக்காகவே செய்வோம்.

**நீதிபதி :** நல்லது. உம்முடைய இக்கூற்று உம்முடைய சொந்த அபிப்பிராயமா? அல்லது உம்முடைய வேதத்தின் கட்டளையா?

**துவிதவாத முஸ்லிம் :** எனது சொந்த அபிப்பிராயமல்ல எனது வேத்தின் கட்டளை.

**நீதிபதி :** உம்முடைய வேதநூலை வாசித்து விளங்கியறிந் திருக்கிறீரா?

**துவிதவாத முஸ்லீம் :** இல்லை, எங்களுடைய மார்க்க வழிகாட்டி களான மேதைகள்(மௌலவிகள்) எங்களுக்கு இப்படிவிளக்கம் தந்துள்ளார்கள். நீங்கள் குர்ஆனை வாசிக்கக்கூடாதென்றும் ஆராயக்கூடாதென்றும் அறபு பாஷையில் பாண்டித்தியம், பட்டம் இல்லாதோரின் விளக்கவுரைகளைக் கேட்கக் கூடாதென்றும் எங்களுடைய மௌலவி கள் எங்களுக்கு அறிவுரை வழங்கியிருப் பதால் நாங்கள் பெரும்பாலும் குர்ஆன், ஹதீஸுகளை வாசிப்பதே இல்லை. எனவே, மேலதிக விபரங்களைத் தாங்களறிய வேண்டு மானால் இதோ இருக்கிற மௌலவி அவர்களை விசாரணை செய்யுங்கள்.

# நீதிபதியும் மௌலவியும்

**நீதிபதி :** மௌலவி அவர்களே! வாருங்கள். துவிதவாத முஸ்லிம் கூறியபடி நீங்கள் அவருக்கு உபதேசம் செய்திருக்கிறீர்களா?

**மௌலவி :** ஆம் நான் மட்டுமல்ல எங்களிலுள்ள பெரும்பாலான மௌலவிகள் இப்படித்தான் உபதேசம் செய்தோம் செய்கிறோம்.

**நீதிபதி :** மௌலவி அவர்களே! நீங்கள் உங்களுடைய கொள்கை விளக்கத்தை எங்கே கற்றறிந்தீர்கள்? கொள்கையைக் கற்றுமுடிக்க எவ்வளவு காலம் செலவானது?

**மௌலவி :** ஓர் அறபுப் பல்கலைக்கழகத்தில் எனது கொள்கை விளக்கத்தைக் கற்றேன். ஆரம்பமுதல் முடிவுவரை சுமார் 10 வருடங்கள் செலவாகியிருக்கிறது.

**நீதிபதி :** நீங்கள் கற்ற கல்வியை ஆராய்ந்து தெளிவு பெற்றீர்களா? மனப்பாடமிட்டிருக்கிறீர்களா?

**மௌலவி :** நான் கற்றகல்வியை ஆராய வேண்டிய அவசியம் எனக்கில்லை. நான் கற்றநூற்களை எழுதிய மக்கள் மிகமிகப் பெரிய மேதைகள். அவர்களுடைய நூற்களைச் சந்தேகம் கொள்ளாமல் நம்பலாம். எனவே, நான் கற்றகல்வியை ஆராய வேண்டிய அவசியமே இல்லை.

**நீதிபதி :** நீங்கள் உங்கள் வேதநூலை வாசித்திருக்கிறீர்களா? ஆராய்ந்திருக்கிறீர்களா?

**மௌலவி :** வாசித்திருக்கிறேன். ஆனால் அதை ஆராய வேண்டிய அவசியம் எனக்கில்லை. ஆராய்ந்தறிந்த பெரியார்களின் நூற்களை நான் கற்றிருக்கும் போது ஆராய வேண்டியதில்லை. மாபெரும் மேதைகள் தான் எனக்கு மௌலவிப் பட்டம் வழங்கியிருக்கிறார்கள்.

**நீதிபதி :** மௌலவி அவர்களே! நீங்கள் கற்றநூற்களில் உம்முடைய வழிகாட்டி(இமாம்) யாரென்று கற்றிருக்கிறீர்கள்?



**மௌலவி :** வழிகாட்டி(இமாம்) குர்ஆன்தான். இந்தக் குர்ஆனை ஆராய்ந்து முடித்தவர்கள்தான் எனது நூற்களின் ஆசிரியர்களான தைமியா, அப்துல்வஹ்ஹாப்நஜ்தி போன்ற இமாம்கள். எனவே எனது நூலாசிரியர்களான இமாம்களை ஏற்றுக்கொண்டவர் குர்ஆன் என்ற இமாமையே ஏற்றுக்கொண்டவராகிறார்.

**நீதிபதி :** நீங்கள் உங்கள் வேதநூலைப் பூரணமாய் ஏற்றுக் கொண்டுள்ளேன் என்று உறுதியாய்க் கூறுவீர்களா? அந்த வேத நூலை நம்பலாமா?

**மௌலவி :** ஆம். குர்ஆனைப் பூரணமாய் நம்பலாம். நானும் குர் ஆனைப் பூரணமாய் நம்பியிருக்கிறேன் என்று உறுதியளிக்கிறேன். மேலும் வேதநூல் நிரப்பம் பெற்றிருப்பதால் அதை ஆராய வேண்டிய அவசியமில்லை என்றும் கூறுகிறேன்.

**நீதிபதி :** உங்களுடைய வேதநூலில் சுமார் 340இடங்களில் (குர்ஆனை) வேதநூலை ஆராயும்படி கூறப்பட்டிருக்கிதே! உங்களுடைய கூற்றை நோக்கினால் நீங்கள் வேதநூலை வாசிக்கவே இல்லையென்று தென்படுகிறது. மேலும் வேதநூல் முழுமை பெற்றிருப்பதால் ஆராய வேண்டியதில்லை என்று கூறுகிறீர்கள். அப்படியானால் வேதநூலை ஆராயும்படி கூறப்பட்ட 340 ஆயத்துக்களும் ரத்துச் செய்யப்பட்டவையென்று நீங்கள் நம்பிக்கொண்டீர்களென்பது உறுதியாகிறது. உங்களுடைய வேதநூலில் 5:3ம் வசனத்தின் இறுதிப் பகுதியில், நான் உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தை இன்றையத் தினம் பரிபூரணமாக்கி வைத்துவிட்டேன் என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. இந்த வேதவசனத்துக்குக் குர்ஆனை இனிமேல் ஆராய வேண்டியதில்லை என்று உங்கள் யூகப்படி நீங்கள் கருத்தெடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மார்க்கம் பூரணப்படுத்தப் பட்டுள்ளதென்ற வசனம் மார்க்கத்தை ஆராய வேண்டாமென்று கூறுவதாகப் பொருள் கொண்ட உங்கள் கூட்டத்தின் அறிவை எப்படி விமர்சிக்கலாம்? குர்ஆனுக்கு யூகத்தின்படி பொருள் கொள்ளக்கூடாதென்று கூறிக் கொண்டிருக்கிற நீங்களே உங்கள் கற்பனையான யூகப்படி பொருள் கொண்டால் உங்களைச் சித்தசுயாதீனமுடையவர்கள் என்று கூற முடியுமா?

“எவன் குர்ஆனுக்குத் தன்யூகப்படி பொருள் கூறுகிறானோ அவன் தன் இருப்பிடத்தை நரகத்தில் ஆக்கிக் கொள்ளவும்” என்று கூறப்படுகிற ஹதீஸின்படி நிச்சயமாக நீங்களும் நரகில்தான் உங்கள் தங்குமிடத்தை ஆக்கிக் கொண்டீர்களென்பது தென்படுகிறது. உள நோயாளிகளான உங்கள் கூட்டத்தினரின் கண்மூடித்தனமான பின்பற்றலையும் உங்கள் மூடத்தனமான பிரசாரங்களையும் உங்களுடைய லேபல்கள் வேஷங்களையும் நோக்கினால், இறுதி நாளையில் வருகிற தஜ்ஜாலைவிட வேறு சில தஜ்ஜால்களுக்கு நான் பயப்படுகிறேன். அவர்கள் மக்களை வழிகேட்டில் தள்ளிவிடுகிற வழிகாட்டிகள் என்று கூறும் ஹதீஸும் இவை போன்ற பிற ஹதீஸுகளும் குறிப்பிடும் தஜ்ஜால்கள் உங்கள் கூட்டத்தினரேயென்றுதான் கூறவேண்டியிருக்கிறது.

எங்களுடையவேதம் மிகமிகப் பரிசுத்தமானதென்று வாயால் கூறிக்கொள்கிறீர்கள், ஆனால் பரிசுத்தமான அந்த வேதநூலுக்கு, உங்கள் மூடத்தனத்தால், சுயநலநோக்கினால் மாசுகற்பிக்கிறீர்கள். அந்த வேதநூலைப் பின்பற்றும் ஓர் பெரிய சமூகத்தையே அவமானப் படுத்துகிறீர்கள். இறந்த மனிதனை உயிர்ப்பிக்குமாற்றல் இறைவனுக்கு மட்டுமே உண்டு. சரி இருக்கட்டும். உங்களுடைய கொள்கை ஏகத்துவக் கொள்கையென்றும் அதுவே தௌஹீது என்றும் மக்களிடையே கூறிக்கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய அந்தத் தௌஹீதென்ற ஏகத்துவக் கொள்கையை ஓரளவு தெளிவாய் விளக்கிக் காட்டுங்கள்.

**மௌலவி :** இறைவன் ஒருவனே என்பதை ஏற்றுக்கொள்வதே ஏகத்துவம், தௌஹீது என்பது, ஒரே இறைவனை ஏற்றுக்கொள்ளாதவர், இறைவனும் சிருட்டியும் ஒன்றேயென்பவர் ஏகத்துவம் என்ற தௌஹீதுக்கு மாற்றமாய் இணைகற்பித்தலென்னும் ஷிர்க்குடையவராவார். இவரை நாங்கள் முர்தத் என்று கூறுவோம்.

**நீதிபதி :** உங்களுடைய விளக்கத்தை நோக்கினால் நீங்கள் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றும் பின்பற்றல்வாதியேதான் என்பது தென்படுகிறது. உங்களுடையகொள்கைக்கிடப்பட்ட தௌஹீதென்ற அறபுச் சொல்லின் கருத்தையோ ஏகத்துவம் என்ற தமிழ்



வசனத்தின் கருத்தையோ நீங்கள் இதுகாலவரையிலும் அறிந்து கொள்ளவேயில்லையென்பது புலப்படுகிறது. ஏகத்துவம் என்றசொல் (ஏகத்தத்துவம்) ஏகமாய், வியாபகமாய் அதையின்றிப் பிறிதொன்று இல்லாததாயுள்ள சக்தி, அல்லது உண்மையென்ற பொருளுடையது. தௌஹீது என்ற அறபுச்சொல் “அவ்ஹ்த” என்ற சொல்லடியாய்ப் பிறந்த ஓர் சொல்லாகும். பலவாய் இருப்பதை ஏகமாய் (ஒன்றாய்)க் காணுதல், அறிதல் என்ற பொருளுடையது.

**மௌலவி :** அது அப்படியல்ல. பல கடவுள்கள் உண்டென்று நம்பியிருந்த மக்களிடையேதான். “லாஇலாஹ இல்லல்லாஹ்” என்ற தௌஹீதுக் கலிமா உபதேசிக்கப்பட்டிருக்கிறது. அந்த மக்கள் பலகடவுள்கள் உண்டென்று நம்பி ஒவ்வோர் கடவுளுக்கும் ஒவ்வோர் சிலையை உருவாக்கி வணங்கியவர்கள். அவர்களுடைய பல கடவுட்கொள்கையையும் வணக்க வழிபாடுகளையும் நீக்குவதற்காகவே கலிமா உபதேசிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இறைவன் ஒருவனே என்றறிவதும் அவனை வணங்குவதும்தான் ஏகமாக்கல், தௌஹீது செய்தல் என்பது.

**நீதிபதி :** மௌலவி அவர்களே! ஓரிறைக் கொள்கைக்கும் ஏகத்துவக் கொள்கைக்குமிடையிலுள்ள வேறுபாடு தெரியாமல் நீங்கள் திணறிக் கொண்டிருக்கிறீர்களௌன்பது தென்படுகிறது. உங்களுடைய இறைவனுக்கு(வாஜிபான) அவசியமாயிருக்க வேண்டிய (ஸிபத்து) பண்புகளில் ஒன்று: இறைவன் இடத்தில், திசையில், இலக்கத்தில் கட்டுண்ணாதவன் என்பது. இவ்விதியை உங்களைப் போன்ற உலமாக்கள்தான் எழுதி வைத்திருக்கிறீர்கள். வாயினாலும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படியானால் இறைவன் ஒருவனே என்று அவனை இலக்கத்தில் அடக்குவது அடிப்படை விதிக்கு (விசுவாசத்துக்கு) முரணல்லவா? மேலும் உங்களுடைய கலிமாவுக்கு நீங்கள் கூறும் பொருள், அல்லாஹ்வேறு சிருட்டிவேறு என்று விளக்குவதால் அல்லாஹ்வுடன் அவனல்லாத சிருட்டியுமுண்டென்று தென்படுகிறது. எனவே, கடவுளும் அவருடன் சிருட்டியுமுண்டென்றால் இது துவித சித்தாந்தமாகவே இருக்கிறது. இக் கொள்கையை ஏகத்துவம், தௌஹீது என்று எப்படி ஏற்றுக் கொள்வது? ஆகவே, எங்களுடைய கொள்கை ஏகத்துவம்தானென்று நீங்கள் வாயினால் கூறிக்கொண்டாலும் உண்மையை

நோக்கினால் இஸ்லாத்தின் ஏகத்துவக்கொள்கைக்கு நேர்முரணான ஓரிறைக்கொள்கையில் தான், நீங்களும் உங்களைப் போன்ற பிறமௌலவிகளும் தரிபட்டிருக்கிறீர்கள். பல கடவுள்கள் உண் டென்று நம்பி வணங்கும் கொள்கையை நீக்கவே கலிமா தரப்பட்டதென்று கூறினீர்கள். அப்படியானால் முதன்முதலில் கலிமா கொடுக்கப்பட்ட ஆதம்(அலை) என்ற மனிதர் அல்லாஹ்வுடன் வேறு கடவுள்களும் உண்டென்று நம்பியதாலும் வேறு கடவுள்களை வணங்கியதாலும் தான் கலிமா கொடுக்கப்பட்டதென்று நீங்கள் நம்பியிருக்கிறீர்கள் போலும். இது என்ன அறியாமை, விக்கிரக வணக்கம் உலகில் எப்போது ஆரம்பமானதென்பதைக் கூட நீங்கள் அறியாமலிருப்பது ஆச்சரியம்தான்.

நீங்கள் கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு நாயன் என்று ஒருமையில் பொருள் கூறுகிறீர்கள். பல கடவுள்களை நம்பி வணங்கிய மக்களுக்குத்தான் கலிமா தரப்பட்டதென்று நீங்கள் கூறுவது உண்மையானால் கலிமாவிலுள்ள இலாஹு என்ற ஒருமைச் சொல் ஆலிஹத் என்று பன்மையில் தரப்பட்டிருக்க வேண்டும். பல நாயன்கள் (பல கடவுள்கள்) இல்லை அல்லாஹ்வைத் தவிர என்றுதான் கலிமா கூறப்பட்டிருக்க வேண்டும். அப்படிக் கூறப்பட வில்லை. எனவே, நீங்களும் உங்கள் கூட்டத்தினரும் வெறும் கண்மூடித்தனமான பின்பற்றல்வாதிகளே என்பதை நிரூபணம் செய்து விட்டீர்கள்.

ஏகத்துவம் தான் தௌஹீது என்றால், துவிதம் என்பதே ஷிர்க்காக, இணை கற்பித்தலாய் இருக்கும் என்பதை நீங்களறியா மலிருப்பதும் ஆச்சரியம்தான். இதைவிட ஆச்சரியம் என்னவென்றால், இஸ்லாம் என்ற போர்வையில் முஸ்ரிக்கீன்களுடைய கொள்கையில் ஊறி வளர்ந்த உங்களுக்கு மௌலவிப்பட்டமும் சூட்டி அத்தாட்சிப் பத்திரமும் தந்து, மக்களிடையே மார்க்க விளக்கமளிக்கவும் உரிமை தந்திருக்கிறார்களே! இது ஆச்சரியமல்லவா!

**மௌலவி :** நீதிபதி அவர்களே! நான் ஒரு மார்க்கப் பெரியார்களிலு ள்ளவன். மக்கள் மத்தியில் என்னை அவமானப்படுத்துகிறீர்கள்.

**நீதிபதி :** இது நீதிமன்றம் எனது தகமையின் பட்டம் பகுத்தறிவு என்பது. நல்லவர், தீயவர், பெரியார், சிறியார், உண்மை, பொய்,



சரி, பிழை எல்லாவற்றையும் ஒன்றோடொன்றை ஒப்பிட்டு நோக்கி உண்மையைக் கண்டறிவதும் அதை உலகுக்கு எத்திவைப்பதும் என் கடமை. அவமானப்படுத்துவது எனது நோக்கமல்ல. விசார ணையின் போது உண்மை வெளிப்படலாம். உண்மை வெளியாகும் போது நிச்சயமாகப் பொய் அவமானமடைந்தேயாகும். இயற்கை பொய்க்குக் கொடுக்கும் தண்டனை அவமானம் தான். எனவே, நீதிபதியான என்னைக் கோபிப்பதில் அர்த்தமேயில்லை.

இறைவனுக்கு இணை கிடையாதென்று கூறுகிறீர்கள். இறைவனுக்கு இணை கற்பித்தல் மன்னிக்கப்படாத குற்றம் என்று உங்கள் வேதநூல் விளக்கம் தருகிறது. ஆதாரம் 4:48ம் ஆயத்து ஆகும். இணை, ஜோடி, ஒப்பு என்றால் என்ன? என்பதை நீங்களறிய வில்லை. நீருக்கு நெருப்பும், வெள்ளைக்குக் கறுப்பும், ஆணுக்குப் பெண்ணும் நேர்முரணாயிருப்பினும், ஒன்றுடன் இன்னொன்று அல்லது பல இருந்து கொண்டிருப்பதே இணை, துணை, சமம், நிகர், ஒப்பு என்பது, இறைவனுடன் அவனுக்கு முரணான, அவனல்லாத சிருட்டியும், உண்டென்றால் இறைவனுக்குச் சிருட்டியும், சிருட்டிக்கு இறைவனும் இணை, ஜோடி, சமம், நிகர், ஒப்பு என்றாகும். நீங்களும் உங்களைப் போன்றோரும் குருட்டுத்தனமான பின்பற்றல் முறையில் சென்று, மார்க்கத்தை வயிறு வளர்ப்பதற்கும், பாமர மக்களிடையே கௌரவம் பெறுவதற்கும் கேடயமாய் அமைத்துக் கொண்டிருக்கிறீர் களென்பது தென்படுகிறது. நீங்கள் தௌஹீதுக் கொள்கையை மக்களிடையே வெளிப்படுத்த வேண்டுமானால், அக்கொள்கைக்கு மாறான முஸ்ரீக்கின் கொள்கையைத் தெளிவாய் அறிந்திருக்க வேண்டியது மிகமிக அவசியமாகும்.

அடுத்ததாக உங்கள் வேதநூலை நம்பியிருக்கிறேனென்றும் நம்பலாம் என்றும் கூறினீர்கள். உங்கள் வேதநூலில் “ஸமது” “காலிக்” என்று இரு சொற்கள் இடம்பெறுகின்றன. இச் சொற்களின் சரியான அர்த்தத்தைக் கூறுங்கள் பார்ப்போம்.

**மௌலவி :** “ஸமது” என்றால் தேவையற்றவன் என்பது அர்த்தம். “காலிக்” என்றால் படைப்பவன், சிருட்டிப்பவன் என்பது அதன் அர்த்தம்.

**நீதிபதி :** நல்லது (கடவுள் தான்) அல்லாஹ்தான் சிருட்டிகளைப் படைத்தாரா?

**மௌலவி :** ஆம். அல்லாஹ்தான் சிருட்டிகளைப் படைத்தார்.

**நீதிபதி :** அப்படியானால் அவர் படைக்கவேண்டிய தேவையுடையவ ரென்று ஆகிறதே? படைக்க வேண்டிய தேவையுடையவரைத் தேவையற்ற "ஸமது" என்று எப்படிக்கூற முடியும்? (மௌலவி மௌனம் சாதிக்கிறார்)

**நீதிபதி :** உங்களுடைய வேதநூலில் "குன்பயக் கூன்" ஆகு என்பது தான் தாமதம் உடனே அது ஆகிவிடும் என்று கூறப்பட் டுள்ளது உண்மையா?

**மௌலவி :** ஆம்

**நீதிபதி :** வானம் பூமிகளை ஆறு நாட்களில் படைத்ததாக உங்க ளுடைய வேதநூல் கூறிக்கொண்டிருப்பதை நீங்கள் வாசித்ததுண்டா?

**மௌலவி :** ஆம்

**நீதிபதி :** ஆகு என்றவுடனே ஆகிவிடும் என்று கூறிய இறைவன் ஆறு நாட்களில் வானம் பூமிகளைப் படைத்தான் என்றால் இதை எப்படி நம்புவது?

**மௌலவி :** (மௌலவி மௌனம் சாதிக்கிறார்)

**நீதிபதி :** சூரியன் பூமி முதலாம் கோள்களின் இயக்கங்களைக் கொண்டு தான் நாம் நாளைக் கணிக்கிறோம். சூரியன் பூமி போன்ற கோள்களை உருவாக்குவதற்கு முன் ஆறுநாட்கள் எப்படி அமையும்? உங்கள் வேதநூலை நீங்கள் நம்பியுள்ளதாய்க் கூறினீர்களே! எப்படி நம்பினீர்கள்? நம்பலாம் என்று கூறினீர்களே! எப்படி நம்பலாம்? ஆரம்பகால மனிதன் அவனுடைய அனுமான அறிவைக் கொண்டு தன்னிலும் வேறான ஓர் இறைவன் வேறான ஓர் இடத்தில் உண்டென்று கற்பனை பண்ணியிருக்கலாம். ஆரம்ப கால மனித அறிவுக்கு அது சரியாயும் இருக்கலாம். ஆனால் பரிணாம வளர்ச்சியடைந்த புத்தி ஜீவிகள் வாழும் இந்த 21ம் நூற்றாண்டு மக்களுக்கு இவ்வித மருட்சிக் கற்பனைகள் எல்லாம் ஒத்துவராது. மௌலவி அவர்களே! உங்களுடைய அல்லாஹ் எங்கேயிருந்து கொண்டிருக்கிறான் என்பதை உங்களால் கூற முடியுமா?



**மௌலவி :** ஆம். அல்லாஹ் 7 வானங்களுக்கு மேல் "அர்ஸில்" இருந்து கொண்டிருக்கிறான்.

**நீதிபதி :** "அர்ஸ்" என்றால் என்ன?

**மௌலவி :** "அர்ஸ்" என்றால் ஆசனம் (சிம்மாசனம்) என்பதே அதன் அர்த்தம்.

**நீதிபதி :** அந்த ஆசனம் என்ன பொருட்களினால் ஆக்கப்பட்டது?

**மௌலவி :** இரத்தினம், மாணிக்கம் பேன்ற விலைமதிப்புடைய பொருட்களால் ஆக்கப்பட்டது.

**நீதிபதி :** வானம் பூமிகளைப் படைப்பதற்கு முன்பே மாணிக்கம், முத்து, பவளம் போன்ற பொருட்களை இறைவன் எங்கே எடுத்து அர்ஸைச் சிருட்டித்திருப்பான்?

**மௌலவி :** இறைவன் வல்லமையுடையவன். வானம் பூமிகளைப் படைப்பதற்கு முன் அவன் தன் சக்தியைக் கொண்டு இரத்தினம் போன்ற பொருட்களைப் படைத்திருப்பான். இல்லாமையைக் கொண்டு தான் எல்லாவற்றையும் உருவாக்கியிருப்பான்.

**நீதிபதி :** இல்லாமையென்பது என்றும் இல்லாததேதான் என்ற தத்துவ உண்மையை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?

**மௌலவி :** (மௌலவி மௌனம் சாதிக்கிறார்)

**நீதிபதி :** இறைவன் 7 வானத்துக்கு மேல் அர்ஸில் தான் இருக்கிறான் என்பதற்கு என்ன ஆதாரம் தருவீர்கள்?

**மௌலவி :**

***குர்ஆன் : 25 : 59***

***அவன் தான் வானங்களையும் பூமியையும் இவைகளுக்கிடையிலுள்ளவைகளை யும் ஆறு நாட்களில் சிருட்டித்தான். பின்னர் அவன் அர்ஸின் மீது தன் ஆட்சியை நிலைநிறுத்தினான். அவன் தான் றஹ்மான், இதைப்பற்றித் தெரிந்தோரைக் கேட்ட றிந்து கொள்ளும்.***

***குர்ஆன் : 67 : 16, 17***

***வானத்தில் இருப்பவன் உங்களை பூமியில் சொருகி விடமாட்டானென்று நீங்கள் அச்சமற்றிருக்கிறீர்களா? அந்நேரத்தில் பூமி அதிர்ந்து நடுங்கும். அல்லது வானத்தி லிருப்பவன் உங்கள் மீது கல்மாரியை வருஷிக்கமாட்டானென்று நீங்கள் அச்ச மற்றிருக்கிறீர்களா? அவ்வாறாயின் எச்சரிக்கை எவ்வாறிருக்கும் என்பதை நிச்சயமாக நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.***

இவ்வகை ஆயத்துக்களின்படி இறைவன் அர்ஸில்தான் இருக்கிறான் வானத்தில்தான் இருக்கிறான் என்று தென்படுகிறது.

**நீதிபதி :** மௌலவியவர்களே! நீங்கள் காட்டிய 25:59ம் இலக்க ஆயத்தில் அர்ஸில்தன் ஆட்சியை நிலைநாட்டினான் என்றுதான் கூறப்பட்டுள்ளது. அர்ஸில் இருக்கிறான் என்று கூறப்படவில்லை. நீங்கள் காட்டிய 67:16, 17ம் இலக்க ஆயத்துக்களில் வானத்திலி ருப்பவன் என்று கூறப்பட்டிருக்கிறது. ஒன்றுக்கொன்று முரண்பாடான ஆதாரங்களைக் காட்டி உங்களுடைய கற்பனை யூகத்தை உறுதிப் படுத்த முனைகிறீர்களென்பது புலனாகிறது. அவனே வானத்திலும் பூமியிலும் இலாஹாய் இருக்கிறான் என்று 43:84ம் வசனமும், நிச்சயமாக நான் சமீபத்திலிருக்கிறேன் என்னை அழைப்பவனுடைய அழைப்புக்கு விடை கூறுவேன். என்று 2:186ம் வசனமும், நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களோடிருக்கிறான் என்று 5:4ம் வசனமும், நாம் மனிதனுடைய பிராண நரம்பைவிட சமீபமாய் இருக்கி றோம் என்று 50:16ம் வசனமும் குர்ஆனில் இடம்பெறுவதை நீங்கள் வாசித்ததுண்டா?

**மௌலவி :** ஆம். வாசித்திருக்கிறேன். ஆனால் அவைகளின் அர்த்தம் வெவ்வேறாய் இருக்கிறது. சூரியன் இருந்த இடத்திலேயே இருக்க அதன் ஒளி வீட்டிற்குள் நுழைவது போல இறைவன் அர்ஸில் இருந்து கொண்டே அவனுடைய அறிவைக் கொண்டு எங்களுடனும் சமீபமாயும் இருக்கிறான். சூரிய ஒளி வீட்டிற்குள் நுழைந்துள்ளதென்றால் சூரியன் வீட்டிற்குள் வந்துவிட்டதென்பது பொருளல்ல.

**நீதிபதி :** ஐயோ! பாபம், உங்களுடைய மார்க்க விளக்கத்தைக் கேட்கும் போது பரிதாபப்பட வேண்டியிருக்கிறது. பாமர மனிதனிட த்திலுள்ள அறிவுகூட உங்களிடமில்லையே என்பதைக் கண்டு



நான் மனவருத்தமடைகிறேன். கண்டப் பொருளுக்கும் அகண்டப் பொருளுக்கும் வேறுபாடு தெரியாது திணறிக் கொண்டிருக்கிறீர்கள் என்பது தென்படுகிறது. அல்லாஹ் 7 வானங்களுக்கு மேல் "அர்ஸ்" என்ற ஆசனத்தில் ஓர் குறிப்பிட்ட இடத்தில்தான் இருக்கிறானெ ன்றால் அவன் கண்டப்பொருளான ஓர் சிருட்டியாய் இருக்கிறான் என்பதே அர்த்தம். எனவே நீங்கள் உங்கள் கற்பனையால் உருவாக்கிக் கொண்ட ஓர் சிருட்டியை (இலாஹுவை)த்தான் நீங்கள் அல்லாஹ் என்று நம்பி ஏமாந்து கொண்டிருப்பது மட்டுமல்லாமல், இதே அபிப்பிராயத்தை மக்களிடமும் கூறி மக்களையும் வழிகேட்டில் ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்பது புலனாகிறது. சுருக்கமாய்க் கூறினால் இஸ்லாம் மூடர்களின் மார்க்கமா? என்று அறிவுடைய மக்கள் கேட்கும் அளவுக்கு நீங்கள் செயல்படுவதனால் நீங்கள் நிச்சயமாக வழிகெடுக்கும் தஜ்ஜாலுடைய கூட்டத்தினரேதானென்று கூற வேண்டியிருக்கிறது. அப்துக்கு றப்பு நேர் முரணானவன் என்பதையும் (அப்து) சிருட்டி கண்டப்பொருள் சிருட்டிகர்த்தா (றப்பு) அகண்டப் பொருள் என்பதையும் இதுகாலவரையும் அறிந்து கொள்ளாத இஸ்லாத்தின் கொள்கை விளக்கமே தெரியாத உங்களை இஸ்லாத்திலுள்ள ஓர் மௌலவிதான் என்று கூற வெட்கமாயிருக்கிறது.

***குர்ஆன் : 26 : 213***

***நீர் அல்லாஹ்வுடன் வேறொரு (கற்பனை) இலாஹுவை அழைக்காதீர். அதனால் நீர் வேதனை செய்யப்படுவீர்.***

இந்த வேத வசனத்தின்படி, நீங்களும் உங்கள் கூட்டத் தினரும் உங்கள் கற்பனையால் உருவாக்கிக் கொண்ட ஓர் (இலாஹு) சிருட்டியையே அல்லாஹ்வாக நம்பியிருக்கிறீர்கள். நீங்கள் நிச்சயமாக வேதனைக்குள்ளாவீர்களென்பது உங்கள் வேதநூலின் தீர்ப்பாகும். வேதனைக்காளாவோர் நிச்சயமாகக் காபீர்கள், முஸ்ரீக்குகள் என்பதில் சந்தேகமே இல்லையென்பதும் உங்களுடைய வேதநூலின் தீர்ப்புத்தான். இஸ்லாத்தைப் புனித மான மதமென்றும் அறிவுக்குப் பொருத்தமானதென்றும் கூறிக் கொண்டு, அந்தப் புனிதமான மதத்தின் பெயரால் மக்களை எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்? வேதனை செய்யப்படும் நரகுக் குத்தான் அழைத்துச் செல்கிறீர்களென்றுதான் நான் நம்புகிறேன்.

*ராஜப்ழஷஷ்*

*கடபஜஹற்றசபயஷ ன்ஹ் றஹயகஷ டஊகஷ. மகஷந்கஹஜ் ழஷயஹஜஜஷஜபடஷ எஹகந்கடிமோயஷயஹஜ் மஜடஷ சDEMOஷஇக ,உஹஜ். ற்ஹ்ம்டபயஷ வஓஜஷஜ்றஷறந்சடிமோடஷதப மஜடஷ சDEMOஷஇகடிமோஹட மஹ்ஜஷஜ கபஉஹஜ். மடஹ்றசபடஷ (கழஷளபஜஷ) கசஷசபடஹடிமோபயஷறசஷ ந்எஹ் டஓபடிமோபடஷதபறஷ நறலஷல்கஷந்கஹடிமோபஊறஷற்கஷ. மடஹ்றசபடஷ சய கஹறஷறசஷ டஹடஜஷஜபடஷ றப்ஒஷ நறலஷல ளஎஷஜ்றஷறசஹடிமோபஊகஷ கஹஹ்றசஷ.*

அறிவிப்பவர் : அலி(றழி)

ஆதாரம் : மிஸ்காத்-பைஹக்கி

*ராஜப்ழஷஷ்*

*டDEMOறஷறஙிமோ்ஷறசபயஷ ரபதஎஷஜஜ் வஜ்? வடஷத் தூயஷ(ழயஷ) மடஹ்றசபலகஷ ந்றலஷலந்கஹஜ் மயஷயஹாஷஇடகஷ கதஷதபடிமோ மதபட் வடஷதஹஹ்றசஷ. வஎஷஜ மதபட் வடஷத் ஜபஊகஷகட்கஷ ந்றலஷற மயஷயஹாஷ ர்கஷாஹடாள் டஜம்யஹஇடகஷ கதஷதபடிமோ மதபட் வடஷத் ூதபடஹஹ்றசஷ. எஹஙிமோ்ஷறசஷ மகயஷ றஇச (டDEMOறஷறஙிமோ்ஷறஇச)கஷ கதஷதபறஷ ந்றலஷற்கஷந்கஹஜ் ஜஹஙிமோ்ஷ றசஷ மதபஇடகஷ கதஷதபறஷ ூத்டநஜடஷட? வடஷத் கப்DEMOஷல்கஷ டபடடஞ மயஷயஹாஷஇட மதபடஜ்லந்ட மதஷக டDEMOறஷ றக்கஷ கபஉந்டிமோஹரடகஷ நரடிமோஷறபதஜ். ம்டஹயஷ ,இதடஇடகஷ கதஷதபடிமோ மதபடப்டஜஷஜ்லந்ட வஎஷஜ டDEMOறஷறக்கஷ (மகய்கஷ) கபஉந்டிமோஹரடகஷ நறஹலஹஜ் வடஷத் ூதபடஹஹ்றசஷ.*

இந்த ஹதீஸின்படி இறைவனைப் பற்றி அறியவேண்டிய முறைப்படி அறியாத உங்களுடைய கூட்டத்தாரின் வணக்கங்கள் கூடப் பிரயோசனம்தராதென்பது தென்படுகிறது.

***குர்ஆன் : 4 : 48***

***நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை ஏற்படுத்துவதை மன்னிக்கவே மாட்டான். இதனைத் தவிர எதனையும் தான் நாடியோருக்கு மன்னிப்பான். எவர்கள் அல்லாஹ்வுக்கு இணை ஏற்படுத்துகிறார்களோ! நிச்சயமாக மிகப்பெரும் பாபத்தையே கற்பனை செய்கிறார்கள்.***

இது உங்களுடைய வேதநூலின் கூற்றுத்தான்.



உங்களுடைய வாதப் பிரதிவாதங்களை நடுநிலை நின்று ஆராய்ந்தால், உங்களுடைய கூட்டத்தினருக்கு இணை, ஷிர்க், ஏகத்துவம் என்ற சொற்களின் உண்மையான விளக்கங்கள் கூட இன்னும் புரியவில்லையென்றே கூறலாம். உங்களுடைய வேதநூலையோ, ஹதீஸ் கிரந்தங்களையோ நீங்கள் இதுவரை சிறிதும் ஆராயவே இல்லை என்பதும் பூரணமான உண்மைதான்.

***குர்ஆன் : 2 : 44***

***நீங்கள் வேதத்தை ஓதிக்கொண்டே உங்களை மறந்து விட்டு மனிதர்களை நன்மை செய்யும்படி ஏவுகின்றீர்களா? நீங்கள் அறிந்து கொள்ள வேண்டாமா?***

இன்னும் எத்தனையோ ஹதீஸுகளையும் குர்ஆன் வசனங்களையும் தரலாம். புஸ்த்தகப்பொதி சுமக்கும் கழுதைக்குத் தலையாய் இருப்பதைவிடப் போர்வீரனைச் சுமக்கும் குதிரைக்கு வாலாய் இருப்பது நல்லது.

***ஜனங்களில் மிகக்கெட்டவர் யார்? என்று கேட்க றசூல்(ஸல்) அவர்கள் அல்லாஹ்விடத்தில் மன்னிப்புக் கோரினார்கள், மீண்டும் அந்தக் கெட்டவர்கள் யார்? என்று கேட்க கெடுதியையுடைய (வழிகெட்ட) உலமாக்களென்று கூறியிருக்கிறார்கள்.*** இவை போன்ற இன்னும் பல ஹதீஸுகள் உங்கள் கிரந்தங்களில் இடம்பெறுவதை நீங்கள் இன்னும் வாசிக்கவே இல்லையென்பது தென்படுகிறது. இன்னும் ஓர் ஹதீஸில், ***இறுதி நாளையில் வருகிற தஜ்ஜாலைவிட வேறுசில தஜ்ஜால்களுக்கு நான் பயப்படுகிறேன் என்று றசூல்(ஸல்) கூற அவர்கள் யாரென்று (ஸஹாபாக்கள்)தோழர்கள் வினவிய போது வழிகேட்டில் ஜனங்களைத் தள்ளிவிடுகிற இமாம்கள் (வழிகாட்டிகள்) என்று கூறியிருக்கிறார்கள்.*** உங்களுடைய ஹதீஸுக் கிரந்தங்களை மீளாய்வு செய்தால் இவ்விதமான பல ஹதீஸுகளை உங்களால் காண முடியும். மௌலவி அவர்களே!

அறியாத விஷயத்தில் அறிந்தவனாய் நடிப்பது உங்களை நீங்களே அவமானத்துக்குள்ளாக்குவதாகவே அமையும். மௌலவி அவர்களே! உங்கள் வேதநூலில் உங்களுடைய அல்லாஹ்வுக்கு எத்தனை நாமங்கள் தரப்பட்டுள்ளன என்பதை உங்களால் கூற முடியுமா?

**மௌலவி :** ஆம். கூற முடியும். 99 திருநாமங்கள் தரப்பட்டுள்ளன.

**நீதிபதி :** அந்த நாமங்களில் "வாஷிஉன்" என்று ஓர் நாமம் தரப்பட்டுள்ளதா? தரப்பட்டிருந்தால் அதன் கருத்து என்ன?

**மௌலவி :** "வாஷிஉன்" என்ற திருநாமம் தரப்பட்டுள்ளது. அதன் அர்த்தம் வியாபகமானவன், விசாலமானவன் என்பதுதான்.

**நீதிபதி :** வியாபகமானது, விசாலமானது, கண்டப்படுத்தப்பட்ட (எல்லையுடைய அல்லது நீள அகலம் கனம் ஆகிய முப்பண்புள்ள) ஆசனத்தில் குறிப்பிட்ட ஓர் இடத்திலிருக்கிறதென்றால் இதை உங்களுடைய அறிவு ஏற்றுக்கொள்கிறதா? ஆசனத்தில் இருக்கும் ஓர் பொருள் ஆசனத்தினளவு அல்லது அதைவிட சிறியதாய்த்தானே இருக்கும். வியாபகமானது என்று கூறுகிறீர்கள். வியாபகமானதெ ன்றால் முப்பண்பில் கட்டுப்படாதது, எல்லையில்லாதது, எல்லை கணிக்க முடியாதது, வரைவிலக்கணங்களைக் கடந்தது என்பது தானே அர்த்தம். அப்படியிருக்க எல்லையற்ற அப்பொருள் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் இருந்து கொண்டிருக்கிறதென்றால் இது சித்த சுவாதீனமற்ற பித்தனின் பேச்சா? பகுத்தறிவுள்ள மனிதனின் பேச்சா? உங்களுடைய கூட்டத்தினர் பகுத்தறிவை எங்கே பறக்க விட்டு விட்டீர்கள்.

இரு பொருட்கள் அல்லது இரு சக்திகள் அல்லது இரு உண்மைகள் ஏககாலத்தில் ஏகமாய், இரண்டற்ற ஒன்றாய் இருக்க முடியாதென்பது வேதங்களுடையவும், விஞ்ஞான அறிவுடையவும், தத்துவ விளக்கங்களுடையவும் ஏகோபித்த தீர்ப்பாகும். இரு பொருட்கள் இருக்க வெவ்வேறிடம் அவசியம். ஒன்றிருக்குமிடத்தில் அதேவேளை இன்னொன்றிருக்க முடியாதென்றால் ஏகம் என்பதன் அர்த்தம்தான் என்ன? இல்லாதது இருப்பதாகாது, இருப்பது இல்லாத தாகாது என்ற தத்துவ உண்மையை நீங்கள் இன்னும் அறியவே இல்லைப்போல் தென்படுகிறது. நீங்கள் மார்க்கமென்ற போர்வையை (ஆட்டுத்தோலை)ப் போர்த்திக் கொண்டு வேதத்தை அதன் உண் மையை அழித்தொழிக்கவும், பாமரமக்களை மேலும் மேலும் மந்தை களாய் மாற்றவுமே முயல்கிறீர்கள் என்று நான் காணுகிறேன். உங்களை நீங்களே அறிஞர்கள் மார்க்க வழிகாட்டிகள் என்று நம்பிக் கொண்டிருப்பது மூடபுத்தியாகும். உங்களுடைய அறிவுக்கு 'வஹ்மு' சபலபுத்தி என்பது பெயரேயன்றி அறிவு என்பது பெயரல்ல.



ஏகவியாபகமான இறைவன் சிருட்டியில்லாத வேறோர் இடத்தில் (அர்ஸில்)தான் இருக்கிறானென்றால் நாம் அவனை ஏகவியாபகமானவன் என்று கொள்ள முடியாது. ஏனென்றால், ஓர் இடத்தில்தான் இறைவனுள்ளான் என்றால் இறைவனை இடத்தில் கட்டுப்படுத்திய குற்றம் உண்டாகிறது. இது இஸ்லாத்தின் அடிப்படைக்கு இறை இலட்சணங்களுக்கு முரணாகும். தவிர இறைவன் குறிப்பிட்ட இடத்தில் இருக்கிறானென்றால், அவன் இடத்தினால் மட்டுப்படுத்தப்பட்ட ஓர் சிருட்டியாய் இருப்பானே அன்றி இறைவனாய் இருக்க முடியாது. மௌலவி அவர்களே! நீங்களும் உங்கள் கூட்டத்தினரும் உங்கள் அறியாமையால் ஓர் கற்பனைக் கடவுளை உருவாக்கிக் கொண்டு செயல்படுகிறீர்கள் என்பதை நிரூபணம் செய்திருக்கிறீர்கள். நீங்களே மார்க்க விஷயத்தில் குழப்பமான அறிவைப் பெற்றுக் கொண்டது மட்டுமன்றிக், குறிக் கோள் கொள்கை தெரியாத பாமரமக்களையும் குழப்பத்துக் குள்ளாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். தீனுல் இஸ்லாத்தில் உரிமை கோரும் தகுதியோ மக்களைத் தீனுடைய பாதையில் செலுத்தும் தகுதியோ உங்களிடம் கிடைக்கவே கிடையாதென்பது நிரூபண மாகிறது.

**நீதிபதி :** மௌலவி அவர்களே! "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமாவின் உண்மையான அர்த்தம் என்ன?

**மௌலவி :** "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்பதன் உண்மையான அர்த்தம் "வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர" என்பதே.

**நீதிபதி :** நீங்கள் கூறுவதுதான் கலிமாவின் உண்மையான பொருள் என்பதை ஆராய்ந்து தெளிவு பெற்றிருக்கிறீரா? அல்லது முன்னோர் கூறியதைப் பின்பற்றல் முறையில் ஏற்றிருக்கிறீரா?

**மௌலவி :** முன்னோரின் சொல்லை ஏற்றுக் கொண்டதுடன் நானும் ஆராய்ந்து விளங்கியறிந்துள்ளேன்.

**நீதிபதி :** மௌலவி அவர்களே! உங்களுடைய அல்லாஹ், ஆணா, பெண்ணா, அலியா?

**மௌலவி :** அல்லாஹ் ஆணுமில்லை, பெண்ணுமில்லை, அலியு மில்லை. அல்லாஹ்வை ஆணாய்ப் பெண்ணாய், அலியாய்க் கொள்வது பெரும்பாபமும் ஷிர்க்குமாகும்.

**நீதிபதி :** மௌலவி அவர்களே! வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்தான் என்று கலிமாவுக்குப் பொருள் கூறினீர்கள். நாயன் என்றால் அல்லாஹ் ஆணாயிருக்கிறானென்பதுதானே பொருள், அல்லாஹ் ஆணுமில்லை, பெண்ணுமில்லை, அலியுமில்லையென்று கூறிய நீங்கள், கலிமாவில் அல்லாஹ்வை நாயன் என்று ஆண் பாலில் இப்போது கூறுகிறீர்களே! உங்கள் வாதப்படி நீங்கள் ஓர் முஸ்ரீக்கா? முஸ்லீமா?

**மௌலவி :** (மௌனம் சாதிக்கிறார்)

**நீதிபதி :** அல்லாஹ் நாயகன் என்றால் அவனுக்கு ஓர் நாயகியும் அவசியமாகும். அப்படியானால் இந்துக்கள் கடவுளைச் சிவனாகவும் அவர் மனைவியான நாயகியை சக்தியாகவும் கொண்டது போலவே நீங்களும் கற்பனை பண்ணுகிறீர்களென்றால் உங்க ளுக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம்? உங்களுடைய வேதநூலில் பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்றஹீம் என்று ஓர்வசன தென்படுகிறது. அதன் உண்மையான பொருளென்ன?

**மௌலவி :** அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனு மாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (ஓதுகிறேன்) இதுதான் அதன் பொருள்.

**நீதிபதி :** அளவற்ற அருளாளன் என்பதும் நிகரற்ற அன்புடையோன் என்பதும் ஆண்பால்பெயராய் அமைகின்றன. இதன்படி நோக்கி னாலும் அல்லாஹ்வை ஆண்பிள்ளையென்று தானே கூறுகிறீர்கள். எனவே வேதத்தைஉங்கள் வயிறுவளர்ப்புக்காக எடுத்துக் கொண்டீர் களேயன்றி, வேதத்தை எள்ளளவும் நீங்கள் ஆராய்ந்து தெளிவு படாத சபல புத்தியுடைய பின்பற்றல்வாதியென்பதை நிரூபணம் செய்திருக் கிறீர்கள். மௌலவி அவர்களே! கலிமத்துத்தையிபா உலகுக்கு அருளப்பட்ட நோக்கமென்ன?

**மௌலவி :** மனிதர்கள் பல விக்கிரகங்களை வணங்கினார்கள், அவை ஒவ்வொன்றும் தனித்தனிக் கடவுள்களே என்று நம்பினார்கள்.



அவற்றிடத்தில் உதவி தேடினார்கள். இவ்விதமான பிழைகளை நீக்கி, அல்லாஹ் ஒருவனே என்றும், அவனே வணக்கத்துக்குரிய நாயன் என்றும், மக்களுக்குணர்த்துவதற்காகத்தான் கலிமா தரப் பட்டிருக்கிறது.

**நீதிபதி :** கலிமா முதன்முதலில் யாருக்குக் கொடுக்கப்பட்டது?

**மௌலவி :** முதன்முதலில் ஆதம்(அலை) அவர்களுக்கு தான் கொடுக்கப்பட்டது.

**நீதிபதி :** அப்படியானால் ஆதம்(அலை) அவர்களும் விக்கிரக வணக்கம் செய்தார்களா? பல கடவுள்கள் உண்டென்று நம்பி னார்களா?

**மௌலவி :** இல்லை.

**நீதிபதி :** விக்கிரக வணக்கம் செய்யாத, பல கடவுள்கள் உண்டெ ன்று நம்பாத, ஒருவருக்கு, அல்லாஹ் ஒருவனேயென்றும் பல கடவுள்களை வணங்க வேண்டாமென்றும் கூறப்பட வேண்டுமா?

**மௌலவி :** (மௌனம் சாதிக்கிறார்)

**நீதிபதி :** மௌலவி அவர்களே! அர்ஸ் என்பது சிருட்டிக்கப்பட்டதா? சிருட்டிக்கப்படாததா?

**மௌலவி :** அர்ஸு மட்டுமல்ல குர்ஸிகூடச் சிருட்டிக்கப்பட்டது தான்.

**நீதிபதி :** அர்ஸு சிருட்டிக்கப்பட்டதென்றால் அதைச் சிருட்டிப்பதற்கு முன் உங்களுடைய அல்லாஹ் எங்கே இருந்து கொண்டு அர்ஸைச் சிருட்டித்திருப்பான்?

**மௌலவி :** (மௌனம் சாதிக்கிறார்)

**நீதிபதி :** மௌலவி அவர்களே! உங்கள் கூற்றுப்படி அர்ஷைச் சிருட்டிப்பதற்கு முன், அல்லாஹ் அர்ஸ் அல்லாத வேறோர் இடத் தில் இருந்து, அர்ஸைப் படைத்த பின்புதான். அர்ஸில் குடியேறியி ருப்பான் என்று தென்படுகிறது. அப்படியானால் அர்ஸைப் படைப்ப

தற்கு முன் அவன் இருந்துகொண்டிருந்த இடத்தில் தற்போது யாரகைக் குடியிருத்தி வைத்திருக்கிறான்? ***எல்லாம் அழிந்து விடும் அல்லாஹ் மட்டும் மிஞ்சுவான்*** என்று உங்கள் வேதம் கூறுவது உண்மை யானால் உங்களுடைய கற்பனை அல்லாஹ் எல்லாம் அழிந்தபின் பழைய வீட்டில் போய்ச் சேர்ந்து கொள்வானென்று நம்புகிறீர்களா? எல்லாம் அழிந்துவிடும் என்றால் அவனுடைய பழைய வீடும் அழிந்துவிடுமே! முடிவில் அர்ஸ் என்ற புது இடத்திலுமில்லாமல் அர்ஸுக்கு முன்னுள்ள பழைய இடத்திலுமில்லாமல் உம்முடைய கற்பனை அல்லாஹ் அனாதைகள்போல் குடியிருக்க ஓர் இடமில் லாமல் அலைந்து திரியவேண்டி ஏற்படுமே!

இவ்விதமான மருண்ட புத்தியுடைய மிருகங்களுக்கொப்பான உங்கள் கூட்டத்தினர், வேதத்தின் பெயரால் கௌரவம் தேட, பணம் தேட முற்பட்டிருக்கிறீர்களே!

***குர்ஆன் : 8 : 22***

***நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் மிருகங்களில் மிகக் கேவலமானவை (சத்தி யத்தை) அறிந்து கொள்ள முடியாத செவிடர்களும் ஊமையர்களும்தான்.***

இது உம்முடைய வேதத்திலுள்ள அறிவித்தல்தான். உங்க ளுடைய வேதநூலை ஆராய வேண்டியதில்லையென்று முன்பு கூறினீர்கள். அப்படியானால் இறைவசனத்தை உதாசீனம் செய்து விட்டு, உங்கள் இமாம்களான தைமியா, அப்துல் வஹ்ஹாப் நஜ்தி போன்ற இமாம்களையே இறைவனைவிட அறிவில் கூடியவர்களாய்க் கணித்திருக்கிறீர்களென்பது தென்படுகிறது.

***(வேதமான) இதைப் பற்றி அவர்களுக்கு யாதொரு ஞானமும் கிடையாது. (ஆதாரமற்ற வீண்) கற்பனைகளைத் தவிர அவர்கள் பின்பற்றுவதில்லை. கற்பனை உண்மைக்கு முரணான யாதொன்றையும் உறுதிப்படுத்தாது.*** என்று உங்கள் வேதநூலில் 53:28 ஆயத்துக் கூறிக் கொண்டிருப்பதை இனி மேலாவது நீங்கள் கவனத்திற்கெடுக்க வேண்டுமென்று நான் ஆலோசனை கூறுகிறேன். மேலும் உங்கள் வேதநூலில் இடம்பெறும் 23:86, 29:61, 29:63, 31:25, 43:9, 10:31, 39:3 போன்ற வேதவசனங்களின் படி ஒரே இறைவனை ஏற்று அந்த இறைவனை நெருங்கிச்சேர உதவியாய் விக்கிரக வணக்கம் செய்த மக்க ளைத்தானே முஸ்ரீக்குகள் என்று இறைவன் கூறுகிறான். விக்கிரகம் கடவுளின் தோற்றமேயென்று நம்பி வணங்குபவன் காபீராயும்



கடவுளல்லாதது தான் விக்கிரகம் என்று நம்பி வணங்குபவன் (முஸ்ரீக்) இணையேற்படுத்துபவனாயிருக்கிறான் என்றும் உங்கள் வேதநூலில் 2:221, 5:5, 9:30 போன்ற ஆயத்துக்கள் கூறிக்கொண்டி ருப்பதை நீங்கள் காணவில்லையா? இறைவன் ஒருவன்தான் என்பதை ஏற்றுக் கொண்டவன் மு.ஃ.மீன்தான் என்றால், இறைவன் ஒருவனே என்று ஏற்றுக்கொண்ட காபீர்கள் முஸ்ரீக்கீன்கள் யாவ ரையும் மு.ஃ.மீன்களென்றே கூறநேரிடுமே! குர்ஆன் 4:116 வசனம் (ஷிர்க்) இணைகற்பித்தல் மன்னிக்கப்பட முடியாத குற்றம் என்று விளக்கமளிக்கிறது. ஆதலால் ஷிர்க்கென்றால் என்ன? என்பதை விளங்கித் தெளிவுபெற வேண்டியது வழிகாட்டிகளான மௌலவி களுக்குக் கட்டாய கடமையாய் இருக்கிறது.

**மௌலவி :** நீதிபதி அவர்களே! நீங்கள் காட்டிய 23:86, 29:61 போன்ற ஆயத்துக்களின்படி அந்த முஸ்ரிக்கீன்கள் அல்லாஹ் ஒருவனே என்பதை ஏற்றுக் கொண்டிருந்தும் விக்கிரகங்களை வணங்கி உதவி தேடியிருக்கிறார்கள். அந்த விக்கிரகங்களைக் கடவுள்களாய்க் கொண்டிருக்கிறார்கள். முஸ்ரிக்கீன்கள் விக்கிரகங்க ளின் ஸபாஅத்தை(சிபாரிசை) ஆதரவு வைத்துச் செயல்பட்டிருப் பதைப் போல இன்றுள்ள முஸ்லிம்களிலும் மிகப்பெரும்பாலார் நபிமார்களில், வலிமார்களான சிருட்டிகளிடத்தில் (இறந்துபோன சிருட்டிகளிடத்திலும்) ஸபாஅத்தின் ஆதரவு வைக்கிறார்கள். அல்லாஹ் அல்லாதவைகளிடத்தில் ஸபாஅத்தின் ஆதரவு வைப்பது சுத்தமான(ஷிர்க்) இணையேற்படுத்துவதாய் இருக்கிறது.

கலிமாவிலுள்ள “இலாஹு” என்ற சொல்லுக்கு படைப்பவன், உணவளிப்பவன், பரிபாலிப்பவன் என்று அந்த முஸ்ரிக்கீன்கள் பொருள் கொள்ளவில்லை. ஒன்றை மனத்தால் நம்பி உறுதி கொள்வதற்கு “இ.ஃ.திகாத்” என்று கூறப்படும். “தௌஹீதுல் இபாதத்” என்பது நம்பிக்கையல்ல. வணக்கங்களை அல்லாஹ் வுக்காக செய்வதே “தௌஹீதுல் இபாதத்” என்பது.

**நீதிபதி :** உங்களுடைய வேதநூலுக்கும் தத்துவார்த்த உண்மை களுக்கும் அறிவுக்கும் முரணாய் உருவாக்கப்பட்ட ஒரு சில மதக் கரடிகளின் புரட்டல் வாதங்களையே நீங்கள் கண்மூடித்

தனமாய்ப் பின்பற்றுகிறீர்களென்பது தெளிவாகவே உறுதிப்படுகிறது. உங்களுடைய வஹ்ஹாபிஸவாதம், அரசியல் தலைமைப்பீடங்களில் நிலை கொள்ள முயன்ற ஒரு சிலரின் அதிகார பலத்தால் உருவாக்கப்பட்ட இஸ்லாத்துக்கு முரணான ஓர் தவறான வழியென்பதை ஏலவே பல மூ.ீமின்கள் நிரூபணம் செய்து காட்டியிருக்கிறார்கள். இபாதத் என்றால் என்ன? என்பதைக் கூட நீங்களே இன்னும் புரிந்து கொள்ளவில்லையென்பது தென்படுகிறது. தௌஹீது (ஏகத்துவம்) இபாதத், எகீன் போன்ற சொற்களின் உண்மை அர்த்தங்களை விளங்கித் தெளிய வேண்டியது உங்கள் கடமையாகும். மேலும் அல்லாஹ்வேறு நான்வேறு என்று நம்பியுள்ள மனிதன் அல்லாஹ் வின் கட்டளையை நிறைவேற்றலாமேயன்றி அல்லாஹ்வுக்காக அமல் செய்யமுடியாதென்பதை நீங்கள் ஊன்றி ஆராய வேண்டும். சிருட்டியிடம் சிருட்டி உதவி தேடக்கூடாதென்றும் அது ஷிர்க் கென்றும் நீங்கள் உபதேசம் செய்வதாக நான் அறிகிறேன். விக்கிரக வணக்கவாளி செய்யும் ஸுஜூது அல்லாஹ்வுக்குச் செய்யும் ஸுஜூதல்லவென்றும் நீங்கள் வாதிடுவதாயும் நான் அறிகிறேன்.

சிருட்டிகள் பிற சிருட்டிகளின் உதவியின்றி எங்கேயும் எப்போதும் வாழமுடியாதென்பதை நீங்கள் ஊன்றி உணர வேண்டும். சிருட்டியிடத்தில் உதவி தேடல் ஷிர்க்கென்று கூறுகிற நீங்கள் பிற சிருட்டிகளின் உதவியில்லாமல் வாழ்ந்திருக்கிறீர்களா? வாழ்கிறீர் களா? வாழ்வீர்களா? நபிமார் வலிமார்கள் கூட சிருட்டிகளின் உதவி யின்றி வாழ்ந்திருக்கிறார்களா? வாழ்வில் கடைப்பிடித்தொழுக முடியாத ஓர் கற்பனையை உருவாக்கிக் கொண்டு மக்களை மந்தை களாய் மாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். வேத வசனங்களையும் ஹதீஸுகளையும் உங்கள் கூட்டத்தினர் உங்களது யூகத்துக் கேற்ற படி விளங்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

அல்லாஹ் அல்லாதவற்றிடம் உதவிதேட வேண்டாம் என்று கூறும் வேதவசனங்களையும், அவற்றிற்கு மாறாய் வானம் பூமியி லுள்ள யாவரும் அல்லாஹ்விடமே உதவி தேடுகின்றனர் என்று விபரம் தரும் 55:29 போன்ற வேத வசனங்களையும் வானம் பூமியிலுள்ள யாவரும் அல்லாஹ்வுக்கே ஸுஜூது செய்கின்றனர் என்று விளக்கம் தருகிற 16:49 போன்ற வேதவசனங்களையும் நீங்கள் அலசி ஆராய வேண்டியது உங்கள் கடமையாகும்.



இஸ்லாத்தைப் பற்றி அதன் கொள்கை, குறிக்கோள்களைப் பற்றி எள்ளளவும் அறியாமலிருந்து கொண்டும் மக்களைக் குர்ஆனின் பக்கம் அழைக்கிறோம், நேர்வழி காட்டுகிறோம் என்று நீங்கள் கூறும் கூற்று பல கோடாகோடி மக்களை நரகுக்கோட்டிச் செல்வதாய் அமைந்து விடுகிறது. விஷமம் கொலையை விட கொடியதென்பதை நீங்கள் எப்போது உணரப் போகிறீர்கள். ஷிர்க் உள்ளத்திலேற்படுகிற ஓர் உளநோயாய் இருக்கிறது. இந்த நோய் செயலில் வெளியாகும் போது, விக்கிரகங்களுக்கு அல்லது சிருட்டிக்கு இறைவனின் பெயரைச் சூட்டுதல், வணங்குதல், ஸபாஅத்தின் ஆதரவு வைத்தல், குணம் கொடுக்குமென்று நம்புதல் போன்ற யாவும் ஷிர்க்காக அமைகின்றன. இதன் காரணம் சிருட்டி அல்லாஹ் அல்லாததே என்று நம்பிச் செயல்படுவதே என்றும் துவிதவாதத்தை நீக்கிக் கொண்டால் எச்செயலிலும் ஷிர்க் ஏற்படாதென்றும் மூ.ீமின்கள் பல நூற்களில் ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். இவ்வித நூற்களை மௌலவியவர்கள் இதுவரை வாசிக்கவே இல்லைபோல் தெரிகிறது. துவித உணர்வே (ஷிர்க்)இணை கற்பித்தல் என்பதை உங்கள் கூட்டத்தினர் இனிமேலாவது ஊன்றி உணர வேண்டுமென்று ஆலோசனை கூறுகிறேன். மேலும் முஸ்ரிக் கீன்கள் விக்கிரகங்களை கடவுளாக நம்பிச் செயல்பட்டதாகக் கூறினீர்கள். இக்கூற்று குர்ஆனுக்கு முரணான வெறும் பொய்யாய் இருக்கிறது. நீங்கள் விரும்பியபடியெல்லாம் மார்க்கத்தை புரட்டிப் பொய் கூறுவது இஸ்லாத்தை மொட்டையடிப்பதாகவே முடியும். முஸ்ரிக்கீன்கள் விக்கிரகங்களைக் கடவுள்களாய் நம்பினார்க ளென்பதற்கு என்ன ஆதாரம் தருவீர்கள்?

**மௌலவி :** (மௌனம் சாதிக்கிறார்)

**நீதிபதி :** (இந்த விக்கிரகங்களான) இவை அல்லாஹ்விடம் நெருங்கிச் சேர உதவியாயிருக்குமென்பதற்காகவேயன்றி நாங்கள் இவற்றை வணங்குவதில்லை என்றுதான் கூறியிருக்கிறார்கள். குர்ஆன் 39:3ம் ஆயத்து இதற்கு ஆதாரமாய் இருக்கிறது. அந்த முஸ்ரிக்கீன்கள் அந்த விக்கிரகங்களான இலாஹுகளைக் கடவுள்களாக நம்பியதாக குர்ஆனில் எவ்வித ஆதாரமும் கிடையாது.

உங்கள் வாதப்படி நீங்கள் குருட்டுத்தனமான பின்பற்றல் வாதிகளேயன்றி “ம.ீகூல்” “மன்கூல்” என்ற மூலப்பிரமாணங்களை

ஏற்றுக்கொண்டவர்களென்று கூறமுடியாமலிருக்கிறது. எனவே, உங்களை ஓர் முஸ்லீம், மூ.ஃமீன், மௌலவி என்று கொள்வது பொருந்தவே பொருந்தாது. அப்படிக் கூறுவது குர்ஆன் ஹதீஸ்க ளுக்கு முற்றும் முரணாகும். நீங்களும் உங்கள் கூட்டத்தினரும் இஸ்லாத்தை அவமானப்படுத்துகிறீர்கள் என்பது என் கருத்து. துவித வாதம் என்பது உண்மைக்கு மாறான, அறிவுக்குப் பொருந்தாத, மூலப்பிரமாணங்களுக்கு மறான, வாதமாகும். பேத புத்தியென்ற வஹ்மை நீக்கி உண்மையான தெளிந்த அறிவை வளர்ப்பதே வேதநூலின் கடமையாய் இருக்கிறது. நான் படைத்த கால்நடை களில் கேவலமானது சிந்திக்கத் தெரியாத மனிதன் என்று உமது வேதநூல் கூறிக்கொண்டிருக்கிறது. கடவுள் ஒருவருண்டென்பதும் சிருட்டிகள் அவனல்லாதவையென்பதும் உலக மக்களில் மிகப் பெரும்பாலார் கொண்டுள்ள அபிப்பிராயமாகும். இதே அபிப்பிராயத்தைக் கூறிவைக்க 124000 நபிமார்கள் அவசியமே இல்லை. இந்த அபிப்பிராயத்தை நபிமார் கூறியிருந்தால் அவர்களை எவருமே எதிர்த்திருக்கமாட்டார்கள். உங்களுடைய வேதம் இஸ்லாத்தையே இறைவன் ஏற்றுக் கொண்டுள்ளதாயும் நீங்கள் முஸ்லீம்களாக வல்லாமல் இறந்துவிட வேண்டாமென்றும் கூறிக் கொண்டிருக்கிறது. உலக மக்களெல்லாம் உலக மதங்க ளெல்லாம் இறைவன் ஒருவனே என்று ஏற்றுக் கொண்டிருக்கும் போது, நான் ஓர் முஸ்லீம் என்று கூறிக் கொள்கிற நீங்களும் இறைவன் ஒருவனே என்று ஏற்றுக் கொண்டிருந்தால் உங்களுடைய இஸ்லாத்துக்கும் பிற மதங்களுக்கும் கொள்கையளவில் என்ன பேதமிருக்கிறது? ஒரே இறைவனை ஏற்றுக் கொண்ட காபீர், முஸ்ரீக் போன்ற எல்லோரை யுமே முஸ்லீம்கள்தானென்று நாம் கூறநேரிடும்.

**மௌலவி :** இல்லை, இஸ்லாத்துக்கும் பிற மதங்களுக்கும் நிறைய வேறுபாடுண்டு. இஸ்லாத்தின் தொழுகை வேறு. பிறமதங்களின் (தொழுகை) வணக்கம் வேறு. மற்றும் செயல்களும் வெவ்வேறா கவே இருக்கின்றன.

**நீதிபதி :** கொள்கையை நிலைப்படுத்துவதற்காகவே செயல்கள் அமைகின்றன. கொள்கை சரியானால், அக்கெள்கையில் தரிபடு



வதற்குரிய வழிகள் பலவாயிருப்பினும் பாதகமேற்படப் பேவதில்லை. ஒருவழி கடினமானதாயும் இன்னோர் வழி இலகுவானதாயும் இருக்கலாம். அதிலொன்றும் தவறு கிடையாது. ஒருவன் பணக்கார னாய் வாழவிரும்பி வியாபாரம் செய்கிறான். இன்னொருவன் அதே நோக்கோடு விவசாயம் செய்கிறான். இதிலென்ன தவறு? லண்ட னுக்குச் செல்லவேண்டிய ஒருவன் நீர்க்கப்பலிலும் இன்னொருவன் ஆகாய விமானத்திலும் செல்கிறான். இதிலென்ன தவறு? நோக்கம் ஒன்றாயும் செயல்கள் வெவ்வேறாயும் இருக்கின்றன. இதைப்போல கடவுள் வேறு சிருட்டி வேறு என்று நம்பிய ஒரு மனிதன் கடவுளின் நெருக்கத்தை அன்பைப் பெற சிலை வணக்கத்தை உதவியாய் எடுத்துக் கொண்டிருக்கிறான். நீங்கள் அதே கடவுளை நெருங்க அவனுடைய அன்பைப்பெற தொழுகையை உதவியாய் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

உங்கள் இருவரின் செயல்களும் வெவ்வேறாய் இருப்பினும் கொள்கை, நோக்கம் ஒன்றாகவே இருக்கிறது. இப்படியிருக்கும் போதும் உங்களுடைய இஸ்லாமே சிறந்ததென்று எப்படிக் கூற முடியும்? பிறமதங்களுக்கும் இஸ்லாத்துக்கும் கொள்கை ஒன்றுதா னென்றால் இஸ்லாம் என்று ஒரு மார்க்கம் அவசியமல்லவே. இஸ்லாம் தன்நிகரற்ற முழுமைபெற்ற வேதம் என்பதும், தன்நிறை வைப் பெறக்கூடிய குறுகிய நேரான பாதையை விளக்குவது என்பதும் பிழையாய்விடுமே.

***குர்ஆன் : 3 : 85***
***இஸ்லாத்தையன்றி (வேறோர்) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக (அது) அவனிடமிருந்து அங்கீகரிக்கப்படமாட்டாது. மறுமையில் அவன் நஸ்டம டைந்தோரில் இருப்பான்.***

***குர்ஆன் : 48 : 13***
***எவன் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் (உண் மையாகவே) விசுவாசம் கொள்ளவில்லையோ அத்தகைய வகுப்பாருக்கு நாம் நிச்சயமாக நரகத்தையே சித்தப்படுத்தி வைத்திருக்கிறோம்.***

இவ்வகை ஆயத்துக்கள் உங்கள் வேதநூலில் உள்ளவை தான். இஸ்லாம் என்ற லேபலில் நீங்கள் கண்மூடித்தனமாய்க் காலத்தை கழிப்பதும் மக்களை வழிகெடுப்பதும் மிகப்பெரும் தவறாகும். உங்களுடைய அறிவீனத்தில் இருந்தும் நீங்கள் விடுபட்டு, உங்களுடைய வேதநூலைப் பல கோணங்களில் ஆராய்ந்து உண்மையை அனுபவத்தில் கண்டறிந்து அதன் பின் மக்களுக்கு உபதேசம் செய்வதே நன்மை பயக்கும் என்று நான் ஆலோசனை கூற விரும்புகிறேன். ஆயிரம் றகாஅத் வணங்கு வதைவிட ஒரு ஷாஅத் நேரச் சிந்தனை உன்னை உயர்த்தக்கூடும் என்று உங்கள் நபி கூறிய உபதேசத்தை நீங்கள் இனிமேலும் அலட்சியம் செய்து விடாதீர்கள்.

**நீதிபதி :** மௌலவியவர்களே! தொழுகை மூ.ஃ.மீன்களுடைய "மி.ஃ. றாஜ்" விண்ணுலக யாத்திரையென்று றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஓர் ஹதீஸ் தென்படுகிறது. அது உண்மையான ஹதீஸ் தானா?

**மௌலவி :** ஆம். உண்மையான ஹதீஸ்தான்.

**நீதிபதி :** நீங்கள் எத்தனை வருடங்களாக தொழுது கொண்டிருக்கி றீர்கள்?

**மௌலவி :** சுமார் 40வருடங்களாகத் தொழுது கொண்டிருக்கிறேன்.

**நீதிபதி :** 40வருடங்கள் தொழுகையிலீடுபட்ட நீங்கள் எத்தனை முறை மி.ஃ.றாஜ் விண்ணுலக யாத்திரை செய்திருக்கிறீர்கள்?

**மௌலவி :** (மௌனம் சாதிக்கிறார்)

**நீதிபதி :** மௌலவியவர்களே! தன் சொந்த அனுபவத்தில் உண் மையென்று காணாத ஓர் விடயத்தை நீங்கள் பாமர மக்களுக்கு உபதேசிக்கிறீர்களென்றால் அதன் அர்த்தம் என்ன? நபியினால் கூறப்பட்ட இந்த ஹதீஸை நீங்கள் உண்மையானதுதானென்று ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். அந்த ஹதீஸின்படி நீங்கள் விண்ணுலக



யாத்திரை செய்திருக்க வேண்டும். விண்ணுலக யாத்திரை நபிக்கு மாத்திரம் தானென்று உங்களால் கூறமுடியாது. அப்படிக் கூறினால் ஹதீஸ் பொய்யென்றாகும். அது மட்டுமல்ல நபியும் ஓர் மனிதரே தான் என்பதைக் குர்ஆன் 18:110, 62:1, 17:95 போன்ற வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. எனவே, ஹதீஸ் உண்மைதானென்றால் நீங்கள் மூ.ஃ.மீனல்ல என்பது உறுதியாகிறது. சுமார் 40வருடங்கள், நாளொன்றுக்கு ஐந்து(வக்து) நேரத்தொழுகையிலும் 17முறை வீதம் சுமார் 248, 200 பிரார்த்தனை அல்ஹம்து சூறா மூலம் கேட்டிருக் கிறீர்கள். உங்கள் பிரார்த்தனையில் ஸிறாத் என்ற நேர்வழியைத் தரும்படிதான் கேட்டீர்கள். உங்கள் பிரார்த்தனை ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தால் நேர்வழியைப் பெற்றிருப்பீர்கள். விண்ணுலக யாத்திரையும் சென்றிருப்பீர்கள். அப்படியானால் உங்கள் பிரார்த்த னையின் தொழுகையின் அர்த்தம் என்ன? உங்கள் கூட்டத்தினரும் உங்களைப் போன்ற எஹுது நஸாறாக் களிலுள்ள மௌலவிகளும் மதத்தின் பெயரால் மனிதகுலத்திற்குச் செய்த மனிதாபிமானமற்ற துரோகங்களை எண்ணிலடக்கிக் கூறமுடியாது. கலைக்குதவாத தான்தோன்றித்தனமான அறிவுக்குப் பொருந்தாத சட்டங்களை உருவாக்கிக் கொண்டு, நல்லறிஞர் களான பலரை மதம்மாறிய முர்த்தத், காபீர் என்றெல்லாம் மதத்தின் பெயரால் தீர்ப்புக்கட்டிக் கொன்றொழித்தீர்கள். யாராவது ஓர் அறிஞர், ஆராய்ச்சியாளர் ஏதாவது ஓர் விஞ்ஞானக் கண்டுபிடிப்பைக் கண்டறிந்து வெளிப்படுத்தினால், அல்லது மார்க்கத்தில் மூடர்களால் மறைக்கப்பட்டுள்ள ஓர் உண்மையை ஒருவர் கண்டறிந்து வெளிப்படுத்தினால் அதை மார்க்க விரோதமாய்க் காட்டி நாடு கடத்தியிருக்கிறீர்கள். சிறைக்கனுப்பியிருக்கிறீர்கள். முஸ்லிம் என்ற போர்வையில் வாழும் நீங்கள் மட்டுமல்லாமல் உங்கள் சகோதரர்களான யூதர்கள், கிறிஸ்தவர்களிலுள்ள மௌலவிகளும் உங்கள் செயலைத்தான் கையாண்டிருக்கிறார்கள். அவர்களிட மிருந்து கொப்பியடிக்கப்பட்ட ஐயாமுல் ஜாஹிலிய்யாக் காலச் சட்டங்களைத்தான் நீங்களும் கையாண்டு கொண்டிருக்கிறீர்கள். பூமி சூரியனைச் சுற்றிவருகிறதென்று கூறியதற்காக "ஜியர்டானோ புருனோ" என்ற விஞ்ஞானி மதம்மாறிய முர்த்தத் என்று பட்டம் சூட்டப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டார். அதன்பின் வந்த கலிலியோ

கலிலி என்ற விஞ்ஞானி தொலைநோக்கிக் கண்ணாடியை கண்டுபிடித்து பல வியப்புக்குரிய சாதனைகளை நிலைநாட்டிய போது கத்தோலிக்க திருச்சபையினால் மதம் மாறியவர்(முர்த்தத்) என்று தீர்ப்புச் சொல்லப்பட்டு சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார்.

உள்ளது ஒரேயோர் இரண்டற்ற ஏகமான மூலப்பொருளே (வாஜிபுல்வுஜூதே) என்று கூறிய பிளேட்டோ என்பவர் உயிருடன் கண்ணிரண்டும் பிடுங்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். மதம் மாறிய முர்த்தத்தாய்க் கருதப்பட்டார். இன்னும் எத்தனையோ செய்திகளை ஆதாரம்தரலாம். மனித அறிவு வளர்ச்சியடைந்த போதெல்லாம் மதத்தைக் கேடயமாய்க் கொண்டு வயிறு வளர்த்த, கண்ணியம் தேடிய உங்களைப் போன்ற மௌலவிகள்தான் முட்டுக்கட்டையாய் இருந்திருக்கிறார்கள். மூ.ஃ.மீன்கள் கூறுவதுபோல் கூறுவதானால் மனிதர்களை வழிகெடுக்கிற கன்னாஸ் என்ற ஷைத்தான்கள், அல்லது வழிகெடுக்கிற தஜ்ஜாலின் கூட்டத்தினர் உங்கள் கூட்டத்.தினரே என்றுதான் கூற வேண்டியிருக்கிறது. காடுகள் அழிந்து கொண்டிருக்கின்றனவெனினும் நகர்ப்புறங்களில் மிருகங்கள் பெருகிக்கொண்டே இருக்கின்றனவென்று காந்தியடிகள் கூறிய வசனத்தின் உண்மையை உங்கள் கூட்டத்தினர் இனி மேலாவது உணரவேண்டியது அவசியம்.

நீங்களும் உங்கள் கூட்டத்தினரும் சாந்தியைத் தன்னிறை வைப் பெறுவதற்காகவே முயற்சி செய்கிறீர்களென்பது உண்மை. ஆனால் சாந்தி பணத்திலும் பெயர் புகழிலும் தங்கியிருப்பதாய் நம்பிச் செயல்படுகிறீர்கள். உங்களின் கல்விக் கூடங்களில் (மத்ர சாக்களில்) ஒரு முகப்படுத்தப்பட்ட பாடத்திட்டமில்லை. நீங்கள் ஒவ்வோர் கூட்டத்தினரும் எந்த எந்த நூற்களில் எவ்வெப்பாடங் களை கற்றிருக்கிறீர்களோ அவை மட்டுமே உண்மையென்றும் அவற்றிற்கு மாறான மற்றெல்லா நூற்களுமே பிழையானவையெ ன்றும் முடிவுக்கு வந்துவிடுகிறீர்கள். நீங்கள் நூற்கேள்வியறிவென்ற திரையில் மாட்டிக் கொள்கிறீர்கள். அதாவது உங்கள் உள்ளத்தில் (அறிவில்) ஓர் திரை அமைந்து விடுகிறது. உங்கள் பகுத்தறிவு வஹ்மு என்ற பேத புத்தியாய் மாறிவிடுகிறது. அந்த வஹ்மு என்ற பேதபுத்தி, தான் ஓர் திரையில் மாட்டிக்கொண்டேன் என்பதைக்



கூட அறிந்து கொள்வதில்லை. உங்களிலுள்ள ஓர் பிரிவார் மார்பில் தான் தக்பீர் கட்டவேண்டுமென்கிறீர்கள். ஒரு சாரார் தொழுகையில் அல்ஹம்து சூறாவுக்கு முன் பிஸ்மி ஓதக்கூடாது என்றும் தொழுகையை முடித்தால் துஆ ஓதக்கூடாது என்றும் கபுறு ஸியாரத் செய்யக் கூடாது என்றும் தல்கீன், கத்தம் ஓதக்கூடாது என்றும் அல்லாஹ் அல்லாதவற்றிடத்தில் உதவி தேடவே கூடாது என்றும் (இன்னும் பல விஷயங்களைத் தரலாம்) இப்படி நீங்கள் கூறினால் உங்களிலுள்ள இன்னோர் பிரிவார் அவை எல்லாவற்றையுமே செய்யலாம் என்கிறீர்கள். அதாவது நீங்கள் எதை ஷிர்க்கென்று கூறினீர்களோ அதுவே ஏகத்துவம்(தௌஹீது) என்று உங்களின் மறு கூட்டம் கூறுகிறது. தீன் என்றால் என்ன? அமலென்றால் என்ன? என்ற விபரங்கள் கூட உங்களறிவுக்கு இதுவரை கிடைக்க வேயில்லை.

உங்கள் கூட்டத்தின் இவ்வித வாதப்பிரதிவாதங்களைக் கேட்கும் மனிதன் மார்க்க விஷயத்தில் மயக்கமடைகிறான். முடிவில் இஸ்லாமே நமக்கு வேண்டாமென்ற முடிவுக்கு வருகிறான். சமூகத் தில் தன்மானத்துடன் வாழவேண்டுமென்பதற்காக முஸ்லீ மாய் நடிக்கிறான். இப்போது உங்களை நீங்களே ஓரளவு சிந்தனை செய்து பாருங்கள். உங்கள் மனச்சாட்சி உங்களை மௌலவிகளாய் மக்களுக்கு வழிகாட்டும் தகுதியுடையவர்களாய் நம்புகிறதா? சரி இருக்கட்டும். நீங்கள் தொழுகையின் போது அழுதழுது, இறைவனே! உனது நல்லடியார்கள் சென்ற நேரான பாதையை எங்களுக்குக் காட்டுவாயாக என்று பிரார்த்தனை செய்கிறீர்கள். ஒரு நாளைக்கு ஐந்து முறைவீதம் இப்பிரார்த்தனையைக் கேட்கிறீர்கள். 50, 60 வருடங்களாக இப்பிரார்த்தனையைச் செய்து கொண்டிருப்போரும் உங்களில் உண்டு. நீங்கள் நேர்பாதையைக் கண்டறிந்து சாந்தி யைத் தன்னிறைவைப் பெற்றதுண்டா? உங்கள் வேதநூலில் 29:45ம் ஆயத்து, தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும் காப்பாற்றும் என்று கூறிக்கொண்டிருக்கிறது. அக்கூற்று உண்மை யானால் உங்களில் எவருமே மானக்கேடான காரியங்களில் சிக்கியிருக்க மாட்டீர்கள். ஆனால் பொய், விபச்சாரம், மதுபாவனை, வட்டி, கொலை, களவு போன்ற மானக்கேடான காரியங்களி லிருந்தும் காப்பாற்றப்பட்ட தொழுகையாளர்கள் உங்கள் கூட்டங் களில் எத்தனை பேர் இருக்கிறீர்களென்பதை உங்கள் மனச்சாட்சி

யிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். மானக்கேடு என்பதன் அர்த்தம் அறிவீனம் என்பதே.

மார்க்கமென்ற ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு ஓநாய்களாய் வாழாமல், பகுத்தறிவுள்ள மனிதனாய் வாழ்வதோடு மற்றும் மனிதர்களையும் வாழவிடுவதே நல்லதென்று நான் கூறி வைக்கிறேன். வேதங்களை ஆராய வேண்டாமென்று கூறித் தடை விதிப்பது மனிதகுலத்திற்குச் செய்யும் மாபெரும் துரோகம் என்பதை மீண்டும் கூற விரும்புகிறேன்.

***குர்ஆன் : 2 : 256***

***மார்க்கத்தில் நிர்ப்பந்தம் (பலாத்காரம்) இல்லை. (ஏனென்றால்) வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகிவிட்டது. ஆகவே, எவன் ஷைத்தானை நிராகரித்துவிட்டு அல்லாஹ்வை விசுவாசிக்கிறானோ அவன் நிச்சயமாக அறுபடாத பலமானதொரு கயிற்றைப் பிடித்துக் கொண்டான். அல்லாஹ் செவியுறுவோனும் அறிவோனுமாக இருக்கிறான்.***

***குர்ஆன் : 54 : 17***

***(மனிதர்கள் சிந்தித்து ஆராய்ந்து) நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு இ(ந்த)த் திருக்குர்ஆனை நிச்சயமாக நாம் மிக்க எளிதாக்கியிருக்கிறோம். ஆகவே, (இதைக் கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவோர் உண்டா?***

இவையெல்லாம் உங்கள் வேதநூலின் வசனங்கள்தானே!

மௌலவி அவர்களே! நீங்கள் உங்கள் நபியை உண்மை யாகவே விசுவாசம் கொண்டிருக்கிறீர்களா?

**மௌலவி :** ஆம், பூரணமாய் விசுவாசம் கொண்டிருக்கிறேன்.

**நீதிபதி :** ஒருசில ஆய்வாளர்கள் உங்கள் நபியைப் பற்றிச் சிற்சில சந்தேகங்களை மக்களுக்கு உருவாக்கியிருக்கிறார்கள். அவ்வித சந்தேகங்களை நீக்கித் தெளிவுபடுத்துவது உங்கள் கடமையா கிறது. உங்களுடைய நபி “மிஃராஜ்” என்ற விண்ணுலக யாத்திரை செய்தார்களென்பது உண்மையா?



**மௌலவி :** ஆம். நிச்சயமான உண்மைதான்.

**நீதிபதி :** உங்களுடைய நபி “மிஃராஜ்” சென்றபோது பைத்துல் முகத்தீஸ் பள்ளியில் முன் நபிமார்களுடன் கூடித்தெழுகை நடாத் தினார்களென்பது உண்மையா?

**மௌலவி :** ஆம். நிச்சயமான உண்மைதான்.

**நீதிபதி :** உங்களுடைய நபி இறைவனிடமிருந்துதான் தொழு கையைப் பெற்றுக்கொண்டு வந்தார்களா?

**மௌலவி :** ஆம். முதலில் 50வக்து (நேர)த் தொழுகையை இறைவன் அவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான். அதைப் பெற்றுக்கொண்டு வரும்போது இன்னுமோர் நபியின் ஆலோச னைப்படி மீண்டும் இறைவனிடம் சென்று 50வக்தைக் குறைத்துத் தரும்படி கேட்டு, படிப்படியாகக் குறைத்து முடிவில் 5வக்து (நேர)த் தொழுகையையே கொண்டு வந்திருக்கிறார்கள்.

**நீதிபதி :** நீங்கள் கூறுவது உண்மைதானென்றால், இறைவனைச் சந்திப்பதற்கு முன் பைத்துல் முகத்தீஸ் ஆலயத்தில் நபிமார்களும் உங்கள் நபியும் ஒன்றுகூடித் தொழுததொழுகை எது?

**மௌலவி :** (மௌனம் சாதிக்கிறார்)

**நீதிபதி :** உங்களுடைய நபி இறைவனிடம் பெற்ற 50நேரத் தொழு கையை இன்னோர் நபியின் ஆலோசனையின் பேரில் குறைத்துக் கொண்டுவர முயன்றாரென்றால், இறையறிவை விட ஆலோசனை சொன்ன நபியின் அறிவை அவர் சரியாய்க் கண்டிருக்கிறார் என்று ஆகிறது. 50நேர அன்பளிப்பை 5 நேரமாய்க் குறைத்துக் கேட்பவர் அன்பளிப்பின் பெறுமதி தெரியாதவரென்று கூற நேரிடுகிறதே! நபியை ஒப்புக்கொண்டேனென்று கூறினீர்களே! இக்கேள்விக்கு என்ன விடை தருவீர்கள்?

**மௌலவி :** அஸ்த..பிறுல்லாஹல் அளீம். நீதிபதியவர்களே! இப்படி யெல்லாம் சந்தேகப்படுவது பாபமாய் இருக்கிறது.

**நீதிபதி :** மனிதனுக்கேற்படக் கூடிய நியாயமான சந்தேகங்களுக்கு விடை தரமுடியாத நீங்கள் உங்களை மார்க்க வழிகாட்டிகளென்று கூறிக்கொண்டு செயல்படுவது முஸ்லீம் சமூகத்துக்கு அவமான மாகும்.

*ராஜப்ழஷஷ்*

*மதபட்இலடிமோ நகலஷஹஜஷஜபடஷ ஜபதட்ந்றஹயஷ ந்றசஷடபடிமோஹடிமோஷ ,ஊகஷகஜடஹயஷ மதபஇடறஷந்றலஷல்றஷ றதஷத்றஷநறஹசஷடப்ஹ ற ச ஹ ற !*

*ராஜப்ழஷஷ்*

*(றடஃமேஃஷறசபயஷ) னஊ ஒலஷலகஷ டபசஃமேஃஷறபறஷ நறஹசஷசறஷஒலஹஜ நரடிமோஷஜபறஇசகஷந்கர்றபத னடஷநடஹஊடட்இலடிமோ நரடிமோஷஜபங்கஷ மடஹ்றச்றஷற் மகஜஷஜகஹடிமோஷ க்பஎஷஜ்டபல்றபதஜ்.*

இவ்வித ஹதீஸ்களை மௌலவியவர்கள் இதுவரை வாசிக்கவே இல்லைபோல் தென்படுகிறது. நீங்கள் அறியாத வற்றை அறிந்தவர்களிடம் கேட்டுப்படிக்கும் படிதான் உங்கள் வேதம் கூறிக்கொண்டிருக்கிறது. சந்தேகங்களிலிருந்தும் தெளிவு பெறுவதற்காக ஒருவர் ஓர் நியாயமான கேள்வியைக் கேட்கும் போது அது பாபம் என்று கூறித் தௌபாச்செய்கிறீர்களே! இவ்வித கல்வியைத்தானா நீங்கள் மத்ரசா சென்று கற்றீர்கள்?

*ராஜப்ழஷஷ்*

*டDEMOறஷறஃமேஃஷறசபயஷ ரபதஎஷஜஜ்வஜ்? வடஷத்ந்றலஷற மயஷயஹாஷ இடகஷ கதஷதபடிமோ மதபட் வடஷத் தூயஷ(ழயஷ) ஒதபடஹஹ்றசஷ. வஎஷஜ மதபட் வடஷத் ஜபஊகஷகட்கஷந்றலஷற மயஷயஹாஷ ர்கஷாஹ டாள்ஜஷஜம்யஹஇடகஷ கதஷதபடிமோ மதபட் வடஷதஹஹ்றசஷ. எஹஃமேஃஷறசஷ மகஇயகஷ கதஷதபறஷ ந்றலஷற்கஷ ந்கஹஜ் ஜஹஃமேஃஷறசஷ மதபஇடகஷ கதஷதபறஷ ஒத்டநஜடஷட? வடஷத் கப்DEMOஷல்கஷ டபடட மயஷயஹாஷஇட மதபடஜ்லந்ட மதஷகடDEMOறஷறக்கஷ கபஉந்டிமோஹரடகஷ நரடிமோஷறபதஜ். ம்டஹயஷ ,இதடஇடகஷ கதஷதபடிமோ*



*மதபடப் டஜஷஜ்லந்ட வஎஷஜ டDEMOறஷறக்கஷ கபஉந்டிமோஹரடகஷ நரடிமோஷடிமோஹநஜடஷத் ஒதபடஹஹ்றசஷ. ,எஷஜ ராஜப்இழ க்டஷக்கஷ ஒதபந்டடஷ.*

இதைப் போன்ற இன்னும் பல ஹதீஸுகள் உங்கள் கிரந்த ங்களில் இடம்பெறுகின்றன. வேதத்தைப்பற்றி, இறைவனைப்பற்றி, நபியைப்பற்றி, அவருடைய நல்லுபதேசங்களைப்பற்றிச் சொற்ப அறிவுகூட இல்லாத உங்கள் கூட்டம் அமல்களை மட்டும் வற்பு றுத்துகிறீர்களே! உங்கள் உண்மையான நோக்கம்தான் என்ன? உங்களை நீங்கள் மார்க்க வழிகாட்டிகளாய்க் காட்டிக் கொள்வது வெட்கம்.

ஆதலால் இனிமேலாவது உங்கள் வேதநூலை ஹதீஸை வாசித்துப் பல கோணங்களில் சிந்தனை செய்து விளங்கித் தெளிவுபடும் படியும் அதன்பின் மக்களுக்கு விளக்கிக் காட்டும் படியும் நான் உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். தவறான நோக்குடைய (கொள்கையுடைய) செயல்கள் (அமல்கள்) இம்மை யிலும் மறுமையிலும் பிரயோசனம் செய்யா என்பதை நீங்கள் ஊன்றி உணரவேண்டும். தவறான, பிழையான நோக்குடைய செயல்களே தண்டனைக்கு வித்தாக அமைகின்றன. இரவல் மூளையுடன் வாழ்வதைவிட சொந்த மூளையுடன் வாழ்வதே நல்லது. நான் இன்னும் பலரை விசாரணை செய்ய இருப்பதால் உங்கள் விஷயத்தை இவ்வளவோடு முடிக்கிறேன். இந்த நீதிமன்ற விசாரணையை மௌலவியவர்கள் பூரணகவனத்துடன் நோக்கும்படி கேட்கிறேன்.

(இப்போது விசாரணைக்காக அழைக்கப்பட்ட விசிட்டாத்வைதியார் நீதிபதி முன்நிலையில் நின்று கொண்டிருக்கிறார்)

# நீதிபதியும் விசிட்டாத்வைதியும்

**நீதிபதி :** விசிட்டாத்வைதியார் அவர்களே! உங்களுடைய கொள்கை விளக்கத்தை இங்கே விளக்கிக் காட்டுங்கள்.

**விசிட்டாத்வைதியார் :** நீதிபதியவர்களே! பரப்பிரம்மமாகிய கடவுள் ஒருவருண்டு. அவரை நாங்கள் பரமாத்துமா என்றும் அவரால் படைக்கப்பட்ட ஜீவனை(மனிதனை) ஜீவாத்துமா என்றும் கூறுவோம். இல்லாதிருந்த சிருட்டிகளை அவரே தன்வல்லமையினால் உரு வாக்கி அவற்றில் அவர் வாசம் செய்கிறார். உருவாக்கப்பட்டவை அழிந்தொழிபவையாயும், உருவாக்கியவர் அழிந்தொழியாதவராயும் இருக்கிறார். பிரம்மத்தைத் தவிர எதுவுமில்லையென்று கூறுவோரும் எங்களிலுண்டு. தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பாரென்று கூறுவோரும் எங்களிலுண்டு. எனினும் பெரும்பாலும் எங்களுடைய வியாக்கியானங்களில் வேறுபாடுகள் தென்படினும் பரப்பிரமத்தைத் தவிர அதனுடன் எதுவுமே இல்லையென்பதுதான் எங்கள் கொள்கை யின் அடிப்படை. ஆயினும் அந்தப் பிரம்மத்துடன் நானுமிருக்கிறேன் என்ற தன்னுணர்வை (அகங்காரத்தை) நீக்க முடியாதவர்களாய் இருக்கிறோம். அகங்காரத்தை நீக்குவதற்காகவே சிற்சில உளப் பயிற்சி, உடற்பயிற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். சிருட்டி களான நாங்கள் குறையறிவுடையோராய் இருப்பதால் செயலில் துவிதவாதிகளாயும் கொள்கையில் அத்வைதிகளாகவும் இருக் கிறோம். எங்களுடைய குறிக்கோள் பிரம்மத்துடன் இரண்டறக் கலந்து சமாதி நிலையையடைவதே.

**நீதிபதி :** நீங்கள் அறிவுக்கும் அறிவீனத்துக்குமிடையில் போராடிக் கொண்டிருக்கும் போராளிகளாய் இருக்கிறீர்கள். எனினும் மயக்க புத்தியுடையோராய் இருக்கிறீர்களென்பது தென்படுகிறது. நீங்கள் உங்களுடைய ரிக், யஜுர், சாமு அதர்வணம் என்ற வேதக் கிரந்தங்களை மேலோட்டமாய் வாசித்து விளங்கியிருக்கிறீர் களேயன்றி அவற்றால் உணர்த்தப்படும் பூரண உண்மையை, அடிப்படையை விளங்கிக் கொள்ளாதவர்களாய் இருக்கிறீர்கள்.



மேலும், உங்களுடைய சிற்சில உடல் உளப்பயிற்சிகள் அறிவுக்கும், குறிக்கோளுக்கும் முரணாயிருக்கின்றன. உண்மையான வேதங்கள் விசிட்டாத் வைதத்தையே ஆரம்பமாய்க் கொண்டுள்ளன என்பது உண்மை. ஆயினும் உங்களுடைய அனுகுமுறைப் பயிற்சிகள் எல்லோராலும் எல்லாக் காலங்களிலும் கையாள முடியாதவையாய் இருக்கின்றன. இவ்விதப் பயிற்சிகளில் ஈடுபாடு கொள்ளும் உங்களில் பலர் கஞ்சா போன்ற போதைப் பொருட்களுக்கு அடிமையாகிக் கற்பனையுலகில் வாழ்பவர்களாயிருக்கிறார்கள். இயற்கைக்கு முரணான பிரம்மச் சாரியத்தைக் கடைப்பிடிப்பவர்களும் அதில் தவறு செய்து அவமானப்பட்டவர்களும் உங்களிலுண்டு. எங்கும் நிறைந்தவனே கடவுள் என்று கூறுகிறீர்கள். தூணிலும் துரும்பிலும் இருக்கிற இறைவனை உங்களுடன் இருக்கும் இறைவனின் (பிரம்மத்தின்) ஐக்கியத்தைப் பெறப் பிரம்மச்சாரியமோ, காட்டு வாழ்க்கையோ, மதுபோதை வஸ்துக்களோ அவசியமல்ல என்பது என் கருத்து. ஆதலால் உங்களுடைய கொள்கையையும் அனுகுமுறைப் பயிற்சிகளையும் மீளாய்வு செய்து எல்லோராலும், எக்காலத்திலும் கையாளக்கூடிய இயற்கைக்கு முரணில்லாத, இலகுவான ஓர் வழியைத் தெரிவு செய்து செயல்பட வேண்டியது உங்களுக்கு கட்டாய கடமையாயிருக்கிறது. உங்களுடைய விஷயத்தை இவ்வளவோடு முடித்துக் கொள்கிறேன். நீதிமன்ற விசாரணையை முடிவு வரையிலும் அவதானிக்கும்படி ஆலோசனை கூறுகிறேன்.

(இப்போது அத்வைதியார் அழைக்கப்பட்டு நீதிபதி முன்நிலையில் நின்றுகொண்டிருக்கிறார்)

# நீதிபதியும் அத்வைதியும்

**நீதிபதி :** அத்வைதியார் அவர்களே! உங்களுடைய கொள்கை, செயல் விளக்கங்களை இங்கே விளக்கிக் காட்டுங்கள்.

**அத்வைதி :** நீதிபதியவர்களே! எங்களுடைய கொள்கைக்கென்று ஓர் தனி மந்திரம் (ஸ்லோகம்) இல்லை. ஆயினும், எங்களிடம் ஒவ்வோர் நோக்குக்கும் ஒவ்வோர் வகையான ஸ்லோகம் இருக்கிறது. அவற்றில் "ஓம் தத்துவமசி" என்றோர் மந்திரம் இருக்கிறது. இதை எங்களில் ஒரு சாரார் பிரணவம் என்று கூறு கிறோம். அதன் பொருள் நான் இரண்டற்ற ஒன்று என்று சிலரும், அதுவே நீ என்பதே அதன் பொருள் என்று வேறு சிலரும் கூறு கிறோம். பரமாத்துமாவும் ஜீவாத்துமாவும் ஒன்றேயென்பது தான் எங்கள் மையக் கருத்து. இக்கருத்தை அடிப்படையாய்க் கொண்டே எங்களை நாங்கள் அத்வைதிகள் என்று கூறுகிறோம். எங்களுடைய கொள்கை விளக்கத்தில் பல பிரிவுகள் இருக்கின்றன.

அவை:-

**1வது:** சங்கராச்சாரியாரால் தோற்றுவிக்கப்பட்ட கொள்கையை கேவலாத்வைதம் என்றும்,

**2வது:** இராமனுச்சாரியாரால் விளக்கப்பட்ட கொள்கையை விசிட்டாத் வைதம் என்றும்,

**3வது:** நிம்பாக்கர் என்பவரால் விளக்கப்பட்ட கொள்கையைப் பேதா பேதாத்துவைதமென்றும்,

**4வது:** வல்லபச்சாரியாரால் விளக்கப்பட்ட கொள்கையை சுத்த அத்வைதமென்றும்,



**5வது:** சிறீகாந்தா என்பவரால் விளக்கப்பட்ட கொள்கையை சிவாத்துவைதம் என்றும்,

**6வது:** சிறீசைதன்யர் என்பவரால் விளக்கப்பட்ட கொள்கையை அசிந்தைய பேதாபேதம் என்றும்,

**7வது:** மதவாச்சாரியார் என்பவரால் விளக்கப்பட்ட கொள்கையை துவிதம் அல்லது துவைதம் என்றும் கூறுகிறோம். இக்கொள்கை களில் எதை எதை எவரெவர் எடுத்துக் கொண்டோமோ அவையே சரியானவையென்று நம்பிச் செயல்படுகிறோம். எங்களுடைய குறிக்கோள் பிரம்மத்துடன் சங்கமமாவதுதான்.

எங்களில் சிலர் மறுபிறவியை ஏற்றிருக்கிறோம். சிலர் அதை மறுக்கிறோம். பிரமம் தூணிலும் துரும்பிலுமுண்டு என்று நாங்கள் நம்புகிறோம். பிரமம் வியாபகமும் ஒடுக்கமும் கொண்டது. ஒடுங்கியிருந்து வியாபகமாகும் போது அது பிரபஞ்சம் என்று பெயர்பெறுகிறது. பிரபஞ்சம் அழியும்போது பிரம்மம் முன்போல் ஒடுங்கி விடுகிறது. ஓர்முறை வியாபகமாகி ஒடுங்குவதை நாங்கள் ஓர் யுகம் என்று கூறுகிறோம். இதில் வெவ்வேறு அபிப்பிராயமுயை வர்களும் எங்களிலுண்டு. இதன் சாரம் என்னவென்றால், பிரம்மம் என்பது ஒவ்வோர் சிருட்டியாயும் அவதாரம் செய்திருக்கிறதென்பதே. பரமாத்துமாவும் ஜீவாத்துமாவும் ஒன்றேயென்போரும் வெவ்வேறு என்போரும் எங்களிலுண்டு. மனிதர் இறந்தபின் அவரவர் கிரிகை களுக்கேற்ப பற்பல பிறவிகளை எடுத்து முடிவில் பிரம்மமாகவே ஆகிவிடுகிறார்கள். மனிதன் பிரம்மமாய் இருக்கும் நிலைமையே முக்தியென்று கூறுகிறோம். இந்த முக்தியைப் பெறுவதற்காக நாங்கள் கையாளும் யோகமுறைகள், அனுஷ்டானங்கள் பல வகையானவை, எங்கள் கொள்கைகள் செயல்களுக்கெல்லாம், இருக், யஜுர், சாமு, அதர்வணம் போன்ற வேதங்கள், உபநிடத ங்கள் தான் ஆதாரங்களாய் இருக்கின்றன. எங்களுடைய வழிகாட்டிகள் சித்து புருடர்களான ரிஷிமார்களே.

**நீதிபதி :** அத்வைதியார் அவர்களே! உங்கள் கூட்டத்திலுள்ள பெரும்பாலாரின் கருத்துப்படி பிரம்மம் செயல்படுவதாய் (ஒடுங்கு வதாய், விரிவடைவதாய்) இருக்கிறதென்பது தென்படுகிறது. செயல்படும் பொருளுக்கு நோக்கிருக்க வேண்டும். நோக்கை நிறைவேற்றவே செயல்படுகிறதென்றால், அப்பொருள் தேவையு டையது. நிரப்பமில்லாததொன்றாகும். செயல்படும் பொருளைத் தாக்கும் இன்னொன்று அதனுடனில்லாவிட்டால் செயல் என்பதோ இயக்கமென்பதோ இருக்காது. உங்கள் வாதப்படி, செயல்படும் பிரம்மத்துடன் இன்னும் ஒன்றோ பலவோ இருந்தேயாக வேண்டும். அப்படியானால் உங்கள் வாதம் துவிதவாதமாய் அமையுமேயன்றி அத்வைதவாதமாயமையாது அல்லவா?

**அத்வைதி :** கடவுள் நோக்குடையவர், செயலில் ஈடுபடுபவர் என்ற வாதங்கள் அத்வைதத்தில் தரிபாடடையாத ஆரம்ப அறிவு டைய மக்களுடைய வாதங்களாகும். ஒன்றையொன்று தாக்காத வரையில் செயல் நிகழாதென்ற தத்துவம் சிருட்டி உலகைப் பொறுத்ததாயும், பிரம்மம் இத்தத்துவத்தைக் கடந்ததாயும் இருக் கிறது. ஓர் செயல் வெளியாவதற்கு மூன்று விதிகள் தென்படு கின்றன அவை.

**1வது:** காரணம் கெட்டழிந்து காரியம் உண்டாவது விதை கெட்டழிந்து மரமாவதைப் போல,

**2வது:** காரணம் கெட்டழியாமல் விகாரப்பட்டுக் காரியம் உண்டாவது. மண் கெட்டழியாமல் விகாரப்பட்டு, பானையாய், குடமாய் ஆவது போல, இவ்விரு விதிகளும் பிறவற்றின் தாக்க த்தினால் தான் ஏற்படுகின்றன. ஆதலால் இவ்விரு விதிகளும் சிருட்டி உலகைப் பொறுத்தவையாகும்.

**3வது:** காரணம் கெட்டழியாமலும், விகாரப்படாமலும் இருந்தபடியே இருக்கக் காரியம் (செயல்) உண்டாவது. இதன்படி தான் பிரம்மம் இருந்தபடியே இருந்து கொண்டு அதன் மாயாதத்துவ வலிமை யினால் இல்லாமையைக் கொண்டே பிரபஞ்சத்தை உருவாக்கி யிருக்கிறார். செயல்படுகிறார்.

**நீதிபதி :** சந்தோஷம். சிருட்டிக்குச் சிருட்டிகர்த்தா நேர் முரண் என்ற விதிப்படி இக்கூற்றை நாம் ஏற்கலாம். எனினும் இக்கூற்று



உண்மைதானென்றால், பிரம்மமே அவதாரம் செய்கிறதென்று கூறமுடியாது. அவதாரம் என்பது காலத்தினாலும் இடத்தினாலும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகும். மட்டுப்படுத்தப்பட்ட ஒன்று சிருட்டியாய் த்தானிருக்கும். சிருட்டியோ தேவையின்றி நோக்கையும் செய லையும் பெறாது. நோக்கும் செயலும் உடையது பூரணமானதாய், தேவையற்றதாய் இராது, மேலும் தோற்றமின்றிச் செயல் வெளி யாகாதென்ற விதிப்படி, நாய், பன்றி, மலஜலம் போன்ற அசூசிப் பொருட்களாயும் பிரம்மமே அவதாரம் செய்து செயலில் ஈடுபடுகிற தென்றால் இதை எப்படி ஒப்புக்கொள்வது? கடவுள் இல்லாமையைக் கொண்டு தமது மாயாதத்துவத்தினால் பிரபஞ்சத்தை உருவாக் கினார் என்று கூறினீர்கள். இதையும் என்னால் ஏற்கமுடியாது. ஏனெனில், இல்லாத ஒன்று இருப்பதாகவும், இருப்பதொன்று இல்லாததாகவும் அமையாது. இது ஓர் தத்துவ உண்மை. பிரபஞ்சம் உள்ளதென்பது உண்மையானால் அது தோன்ற முன்பும் ஏதோ ஓர் நிலைமையில் இருந்துதானிருக்கும். பிரபஞ்சம் இல்லாத தென்றால் அது இருப்பதாகக் காட்சியளிக்காது.

உங்களில் மிகப் பலர் உலகை (பிரபஞ்சத்தை) மாய்கை யென்று கூறுகிறீர்கள். இவ்வுலகிலிருந்து நாம் யோகப் பயிற்சி களைக் கையாண்டால், தியானத்திலீடுபட்டால் நானே பிரம்மம் என்பதை உணர முடியுமென்று கூறுகிறீர்கள். உலகே மாய்கை யென்றால் அதில் வாழும் நீங்களும் மாய்கைதானே! அறிவி லேற்படும் மருட்சியே மாய்கையென்றால், நீங்கள் வெறும் மாய்கையையே பிரமமென்று நம்பியிருக்கிறீர்கள் போல் தென்படு கிறது. யாவும் மாய்கையென்னும்போது உங்கள் யோகப்பயிற்சிகள், தியானங்கள், உண்மையான தன்னிறைவை நிறைநிலையைப் பெற எப்படி உதவமுடியும்?

பிரம்மம் ஒடுக்கமும் வியாபகமும் உடையதென்று கூறினீர் கள். இதைப் பகுத்தறிவாகிய என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால், ஒடுக்கத்துக்கும் வியாபகத்துக்கும் இடம் தேவை யாகும். இடமுண்டென்றால் இடத்திலுள்ள யாவும் உள்ளவையே யென்றாகும். பிரமம் ஒடுங்கும் நிலையைப் பெறும்போது, வியாபகத்தின் போதிருந்த இடம், ஒடுங்கிய பிரம்மத்தை விட

வேறாய் இருக்குமல்லவா? அப்படியானால் பிரம்மம் மட்டுமே உண்டென்று எப்படிக் கூறமுடியும்? பிரம்மத்துடன் அதுவல்லாத இடமும் உண்டென்றால் அத்வைதம் என்பது பொய்யாயும் துவிதம் என்பது உண்மையாயும் அமையுமே! எனவே, உங்களை அத்வை திகள், வேதாந்திகள் என்று எப்படிக் கூறமுடியும்?

உள்ளது பரமாத்துமா (கடவுள்) மட்டுமே என்றும் அது ஆதியந்தமற்றதென்றும் வினையும் வினைப்பயனும் இல்லாத தென்றும், அதுவே உண்மையில் நான் என்றும் உங்களில் சிலர் தெளிவாக விளங்கியிருந்தும் மறுபிறவியை உங்களில் பலர் ஒப்புக் கொண்டிருப்பது அத்வைதக் கொள்கைக்கு அவமானமாகும். சிருட்டியான ஓர் தனிமனிதனுக்கு ஓர் ஆத்துமா இல்லையானால் மீண்டும் மறுபிறவியை எடுத்துக் கொள்வது எது? வினைப்பயனை அனுபவிப்பது எது? அது பரமாத்துமாதானென்றால், அது செயலி லீடுபட வேண்டிய அவசியமே இல்லை. ஜீவாத்துமாதானென்றால் பரமாத்துமாவுடன் அதுவல்லாத ஜீவாத்துமாவும் உண்டென்ற துவிதவாதம்தான் உறுதியாகும்.

சர்வம் பிரம்மம் என்று கூறினீர்கள். உங்கள் கூற்று உண்மை யென்றால் நான் என்றுணரும் தன்னுணர்வுள்ள ஆத்துமா ஒன்றேயொன்றுதான் இருக்க முடியும். அதன் ஒவ்வோர் பொறியே ஜீவாத்துமா என்று நீங்கள் கூறினால் அதை ஏற்க முடியாது. ஏனென்றால் ஆத்துமா பிரிபடக் கூடிய ஒன்றல்ல. பொறிபொறியாய் அல்லது அணுவணுவாய்ப் பிரிபடக் கூடியதுதானென்றால் நீங்கள் கூறுகிற பிரம்மம் ஓர் சமஷ்ட்டிப் பொருளாகவே இருக்கும். சமஷ்டி பொருள் பிரபஞ்சமென்ற மாய்கையாகவே இருக்கும். நீங்கள் அத்வைதம் சம்பந்தமாய்க் கூறியுள்ள விபரங்கள் அறிவுக்குப் பொருத்தமாய் அமையவில்லை. அதனால் தான் உங்களில் பற்பல கொள்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன.

முதல் மனிதன் பிரமத்தின் அவதாரமே என்றால் அந்த ஒரேயோர் பொருள் இத்தனை கோடாகோடி சிருட்டிகளாக ஏக காலத்தில் தனித்தனி ஆத்துமாவாக எப்படி அமையும்? ஆரம்ப மனிதன் இறந்த பிறகுதான் உங்கள் வாதப்படி மறுபிறவியைப் பெறுகிறானென்றால் ஆரம்ப மனிதன் உயிரோடிருந்து பெற்ற



பிள்ளைகள் ஆரம்ப மனிதனுக்கு முன்னிருந்து இறந்தவர்களென்று கூறுவது பொருந்துமா? ஆரம்ப மனிதன் என்பது அர்த்தமற்றதாகி விடுமே. எனவே, உங்களுடைய வாதப்பிரதிவாதங்களை நோக்கி னால், உங்களில் மிகப்பெரும்பாலார் அனுபவஸ்தர்களல்ல வென்பது, தென்படுகிறது. சுருக்கமாய்க் கூறினால், நீங்கள் பரிணாம தத்துவத்தையே வோறோர் சாயம் பூசி விளக்குகிறீர்களென்று கூறவேண்டியுள்ளது. பிரம்மமே மனிதனாய் அவதாரம் செய்துள்ள தென்றால், முடிவில் அல்லது ஆரம்பத்தில் மனிதனே பிரம்மமாய் இருந்திருப்பான். இதை உங்கள் அறிவு ஏற்றுக் கொள்ளுமா?

கடவுள் (பிரம்மம்) சர்வ வல்லமையுமுடையதென்றும் அதுவே தூணிலும் துரும்பிலுமிருக்கிறதென்றும் நீங்கள் கூறலாம். இவ்வாதம் ஏற்புடையதல்ல. தூணிலும் துரும்பிலும் இருக்கிறான் என்றால் தூணும், துரும்பும் கடவுளும் வெவ்வேறானவை யென்றுதானே பெறப்படுகிறது. இது துவிதவாதமேயன்றி அத்வைத மாகாது. இவ்வித நம்பிக்கைகளை மூ∴மீன்கள் “ஹுலுல் இத்திஹாத்” என்று விளக்கியிருக்கிறார்கள். ஊடேநுழைதல், கலத்தல், விடுதியிடல் போன்ற செயல்கள் இறை இலட்சணத்துக்குப் பொருத்தமானவையல்ல. இவ்வகை விவாதங்கள் விவர்த்த காரண காரிய விதிக்கு முரணாய் அமைகின்றன. காரணமில்லாத ஓர் காரியத்தைச் சிருட்டியுலகில் எங்கேயும் எப்போதும் எவராலும் பார்க்க அறிய முடியாது. இது பிரபஞ்சத்தின் இயல்பு. பிரம்மம் இருப்பது எங்கே? பிரபஞ்சம்தானென்றால் நீங்கள் பிரபஞ்சத்தை மாய்கையென்று கூறுவது பொருந்தாதே! பிரபஞ்சமே மாய்கை யென்றால் பிரபஞ்சமாய்க் காட்சியளிக்கும் பிரம்மமும் மாய்கைதா னென்று கூறுவது பிழையாகாதே! பிரம்மம்வேறு மாய்கைவேறு என்றால் பிரம்மம் மட்டுமே உண்டென்பது தவறாகுமல்லவா? வியாபகமான ஒன்றைப் பிரபஞ்சத்தில் மட்டுப்படுத்தினால், அதை வியாபகமானதென்று கூற முடியாது. உள்ளுதலைக் கடந்த கடவுள் என்றும் கூறமுடியாது.

காரணமும் உபகாரணமும் காரியமும் பிரம்மமான கடவுளே தானென்றால் அதுவும் ஒத்துவராது. ஏன்? இடத்தால் காலத்தால், ஒவ்வோர் பொருளும் வெவ்வேறானது, என்பது உண்மையானால், பிரம்மம் என்று கூறுவது ஓர் சமட்டிப் பொருள் என்றுதான் கொள்ள நேரிடும். பிரபஞ்சம் எல்லையுடையதானால் அதை இடமாய்க்

கொண்ட கடவுளும் எல்லையுடையவரே என்றுதான் கொள்ள நேரிடும். பிரபஞ்சம் முப்பரிமாணமும், இடம், திசை, காலம் போன்ற கட்டுப்பாடுகளுமுடையது. இக்கட்டுப்பாடுகளில் தான் கடவுள் இருக்கிறாரென்றால் அத்வைதம் என்பது அர்த்தமற்ற வெறும் ஸ்லோகமாக மாறிவிடும். கடவுள் வியாபகமானவரென்றால் அதை ஏற்கலாம். ஆனால் வியாபகமான ஒன்று காலத்திலோ, இடத்திலோ, மற்றும் வரைவிலக்கணங்களிலோ கட்டுப்படுத்த முடியாததாகவே இருக்கும். சிருட்டிக்கு வரைவிலக்கணமுண்டு. இது அறிவின் தீர்ப்பு. சிருட்டிக்குச் சிருட்டிகர்த்தா நேர்முரணானவர். அத்வைதிகளான உங்களுடைய விமர்சனங்கள் உங்கள் கொள்கைக்கு முரணாகவே தென்படுகின்றன. பிரம்மம் அறிவுக்கெட்டாததென்று கூறுகிறீர்கள். அறிவுக்கெட்டாத ஒன்றை அறிவுக்கெட்டும் சிருட்டியில் மட்டுப்படுத் துவது தவறென்றே நான் கருதுகிறேன். உள்ளது ஒரேயோர் ஏகமான பொருள்தானென்றால் அது இயக்கமுடையதென்று கூறமுடியாது. அவதாரம் செய்வதாகவும் ஒப்புக்கொள்ள முடியாது. ஒரு பொருள் இன்னோர் பொருளுடன் மோதாதவரையில் மூன்றாவது பொருள் உருவாகாது. இது சிருட்டியுலக நியதி. கடவுள் இந்த நியதிக்கு அப்பாற்பட்டவர் என்பதை நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள். எனினும் உங்கள் வாதம் இதற்கு முரணாய் அமைகிறது.

அத்வைதம் என்ற சொல்லுக்கு இரண்டில்லாதது என்று பொருள் கொண்டிருக்கிறோம். இரண்டில்லாதது என்றால், இலக்கத்தில் கட்டுண்ணாத ஏகம் என்பதே அதன் அர்த்தம். அப்படியானால் அதையன்றிப் பிறிதொன்றில்லாத, தாக்கத்திற்குள்ளாகாத பிரம்மமே அவதாரம் செய்கிறதென்றால் இதை எப்படி ஒப்புக்கொள்வது? இவ்வித தவறான கற்பனைகள், அத்வைதமென்ற புனிதமான ஓர் கொள்கையை மாசுபடுத்துகின்றன. மேலும் அவதாரம் உண்மைதானென்று கொண்டால் மாய்கையென்ற சொல்லும் அர்த்தமற்றதாய் அமையும். அவதாரம் மறுபிறவி போன்ற வாதங்கள் அத்வைத கொள்கையைப் பூரணமாய் விளங்கிக் கொள்ளாத போலிகளின் மருட்சிவாதங்களாய் இருக்கின்றன என்பது புலனாகிறது.

சிருட்டியுலகு(பிரபஞ்சம்) காரணகாரியப் பொருத்தத்தை எப்போதும் மீறவே மீறாது. பிரம்மம் சிருட்டியாயும், சிருட்டி பிரம்மமாயும் மாறுகிறதென்றால் இது பரிணாமவாதமேயன்றி வேதத்தின்



வாதமாயிராது. பிரம்மமே அவதாரம் செய்கிறதென்றால், அவதாரத்தின் பின் முன்பிருந்த இடத்தை, நிலைமையை விட்டு வெளியேறி விட்டதென்றாகும். தாக்கத்துக்குள்ளாகும் பிரம்மம், அவதாரம் செய்யும் பிரம்மம் கற்பனையால் உருவாக்கப்பட்ட தாயிருக்குமேயன்றி உண்மையான பிரம்மமாய் இருக்க முடியாது. அத்வைதிகள் என்ற லேபலில் வாழும் பெரும்பாலார் கூறும் விபரங்கள் அத்வைதக் கொள்கையை உடைத்துவிடுகின்றன. துவித, திரித்துவவாதங்களையே உறுதிப்படுத்துகின்றன. உங்கள் வாதங்களுக்கு நீங்கள் காட்டும் ஆதாரங்கள் உபநிடதங்களே. இந்த உபநிடதங்களில் பல ஒன்றுக்கொன்று முரணாயும் தென்படுகின்றன. அவை பெரும்பாலும் பக்தியையே வலியுறுத்துகின்றன. அத்வைதக் கொள்கையோடு பத்தியை ஒப்பிட்டு நேக்கினால் அது பாமர மக்களுக்காக உருவாக்கப்பட்ட ஓர் கற்பனையூகமே என்பது தென்படுகிறது. அத்வைதமென்ற வேதாந்தத்தைப் பற்றித் துணிகரமான பல உண்மைகளை எடுத்துக் கூறிய பல இந்துக்கள் உபநிடதங்களில் இடைச்செருகல்கள் உண்டென்பதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். எனவே, உங்களுடைய உபநிடதங்களோ, அனுபவமற்ற அறிஞர்களின் போதனைகளோ உண்மைக்கு வழிகாட்டா என்றே நான் நம்புகிறேன். மனிதன் தன்னுணர்வுடன் உலகில் ஓர் குறிப்பிட்ட காலம் வாழவேண்டியவனாய் இருக்கிறான். இந்த உலக வாழ்வை உதறி எறிந்துவிட்டு எல்லோருமே காட்டுக்குப் போய் சன்னியாசிகளாய் வாழ முடியாது. அப்படியானால் உலகில் இருந்துகொண்டே உடலுக்காகவும் உயிருக்காகவும் வாழக்கூடிய வழிவகைகளை விளக்கக்கூடிய வேதம் எதுவோ அதைத்தான் நாம் பின்பற்றலாம். உபநிடதங்களோ மற்றும் இந்து மக்களின் ஞான விபரங்களடங்கிய நூற்களோ உலக வாழ்வுக் குரிய, மனிதனுக்கு வேண்டிய சகல துறைகளிலும் வழிகாட்டிக் கொண்டிருப்பதாய்த் தெரியவில்லை.

முக்காலம், மூவிடம் என்ற நீக்குவதற்கரிய திரைகளில் மாட்டிக் கொண்ட சாதாரண அறிவைக் கொண்டே நீங்கள் அத்வைதக் கொள்கையை விமர்சிக்க முற்பட்டு, நீங்களும் குழம்பிப்பிறரையும் குழப்பிக் கொண்டிருக்கிறீர்களென்றே நான் நம்புகிறேன். அத்வைதக் கொள்கைக்கும் உங்களுடைய கண் மூடித்தனமான வியாக்கியானங்களுக்கும் தொடர்பிருப்பதாய்த் தெரியவில்லை. தோன்றல், நிலைபெறல், ஒடுங்குதல் ஆகிய

மூன்று நிலைகளுக்கும் காரணம் எதுவோ அக்காரணத்துக்கு "தஜ்ஜலன்" என்ற ஓர் சொல் உங்களுடைய சாந்தோக்கிய உபநிடதத்தில் பாவிக்கப்பட்டிருக் கிறது. பிரம்மத்தில்

**1வது:** சப்பிரபஞ்சநிலை (பிரபஞ்சத்தோடு கூடிப்பிரபஞ்சமெல்லாம் வியாபகமாய் இருக்கும் நிலை) என்றும்

**2வது:** நிஸ்பிரபஞ்சநிலை (பிரபஞ்சத்தைக் கடந்திருக்கும் நிலை) என்றும் இருவகை விவாதங்கள் உங்களுடைய உபநிடதங்களில் காணப்படுகின்றன. இந்த உபநிடதங்களில் பாவிக்கப்பட்டுள்ள "தஜ்ஜலன்" என்ற சொல் "தஜல்லி" என்ற அறபுச் சொல்லின் பொருளையே உணர்த்துவதாய்க் கூறமுடியாது. இவ்விபரத்தை எம்முடனிருக்கும் மூ.ஃமீன் அவர்களிடம் பின்னால் விசாரித்தறிவோம். பிரபஞ்சம் வரையிலும் பிரம்மம் உள்ளதென்றால் பிரபஞ்சத்துக் கப்பால் பிரம்மம் இல்லையென்றாகும். பிரபஞ்சம் தான் பிரம்மம் என்று கொள்ள நேரிடும். பிரபஞ்சம் முப்பரிமாணங்களை உடையது என்றால் அதற்கு ஓர் எல்கை இருக்கவே செய்யும்.

பிரபஞ்சத்தைக் கடந்ததே பிரம்மம் என்றால் பிரபஞ்சத்தில் பிரம்மம் இல்லையென்றாகும். பிரபஞ்சத்திலும் அதைக் கடந்தும் பிரம்மம் இருக்கிறதென்றால் அதுவும் ஒத்துவராது. ஏன்? பிரபஞ்சத் தைக் கடந்த பிரம்மத்தில் பிரபஞ்சமிருக்கிறதென்றால் அது உள்ள இடத்தில் பிரம்மம் இல்லையென்றாகும். இரு பொருட்கள் ஏக காலத்தில் ஒன்றாயிராதென்ற தத்துவப்படி பிரம்மம் வேறாயும் பிரபஞ்சம் வேறாயும்தான் இருக்கும். அப்படியானால் மாய்கை என்பதன் அர்த்தம் என்ன? அத்வைதம் என்பதன் அர்த்தம்தான் என்ன? பிரபஞ்சமுள்ள இடத்தில் கடவுளும், கடவுளுள்ள இடத்தில் பிரபஞ்சமும் இல்லையென்றால் இது துவிதவாதமேயன்றி அத்வைத வாதமாகாது. பிரபஞ்சம் மாய்கை என்றால் அது வெறும் தோற்றப் பாடேயன்றிப் பொருளாய் இருக்காது. பிரம்மம் பிரபஞ்சத்துடன் ஒன்றாய், உடனாய், வேறாய், இருக்கிறதென்ற மூன்று நிலை களையும் தனித்தனியாய்க் கணிப்போரும் உங்களிலுண்டு. பிரபஞ்சம் பிரம்மத்திடமிருந்து தோன்றி, மீண்டும் பிரம்மத்துடன் இணைந்து விடுவதாய்க் கூறுவோரும் உங்களிலுண்டு. இவ் வாதத்தைப் பிரம்ம பரிணாமவாதம் என்றுதான் கூறலாமேயன்றி அத்வைதமென்று கூறமுடியாது. இன்னும் பிரபஞ்சம் கனவைப்



போல் தோன்றி மறையும் காட்சியேயென்று கூறுவோரும் உங்களி லுண்டு. இவ்வகையினர் தங்களை பிரம்ம விவர்த்தவாதிகள் என்று கூறுகிறார்கள். இன்னும் எவ்வளவோ கூறலாம். இவ்விதமாய் ஒன்றுக்கொன்று முரணான பல அபிப்பிராயங்கள் உங்களிடம் இருப்பதற்கு காரணம் உங்களுடைய கொள்கை மந்திரம் உறுதி யான, சரியான ஆதாரங்களுடன் நிரூபணம் செய்யப்படாமையே யென்று நான் காணுகிறேன். நாம் சரியான உண்மையைக் கண்டறிய வேண்டியதானால் பிழையான, பொய்யான வழி எது என்பதையும் கண்டறிய வேண்டியது அவசியத்திலுமவசியமாகும். உங்களுடைய ஆதார நூற்களை ஆராய்ந்த போது அவை மிகப் பழைமை வாய்ந்தவையாயும் இடைச்செருகல்கள் புகுத்தப் பட்டவையாயும், எக்கால மனித சமூகத்துக்கும் வேண்டிய எல்லா விபரங்களும் தரப்படாதவையாயும் (முழுமை பெறாதவையாயும்) தென்படுகின்றன. அவற்றில் ஒருசில ஒரு காலத்திலுள்ள ஒரு சிலருக்குப் பொருத்தமானவையாயிருந்திருக்கலாம். ஆனால் எக் காலத்திலுமுள்ள எல்லா மக்களுக்கும் சாந்திக்குரிய வழியை அவற்றைக் கொண்டு பெறலாமென்று கூறமுடியாது. உங்களுடைய ஆதார நூற்கள் ஓர் குறுகிய வட்டத்துக்குட்பட்டவையே.

எனினும் நீங்கள் பற்பல கொள்கை விளக்கங்களிலூறிச் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் உங்களை ஓர் விஷயத்தில் நான் பாராட்ட வேண்டியவனாயிருக்கிறேன். சரியானதோ, பிழை யானதோ எதையும் மூடி மறைக்காமல் இருட்டடிப்புச் செய்யாமல் எல்லா ஆவணங்களையும் நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஒருசில முட்டாள் சமூகங்கள் அவர்களுக்கு மாறான, அவர்க ளறியாத பல விஷயங்களை இருட்டடிப்புச் செய்து மூடி மறைத்து எரித்தழித்து விட்டது போல் நீங்கள் நடந்து கொள்ளவில்லை. மேலும் முட்டாள் சமூகங்கள் தான்தோன்றித்தனமான காட்டு மிராண்டிச் சட்டங்களை மதத்தின் பெயரால் இயற்றிக் கொண்டு உண்மையைக் கூறிய மக்களை கொன்றொழித்தது போல, தீயி லிட்டெரித்தது போல, தேசப் பிரஷ்டம் செய்தது போல உங்கள் கூட்டத்தினர் செய்யவில்லை. நீங்கள் இன்னும் மனித சுபாவத்தோடு வாழ்ந்து கொண்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய விஷயம்தான். உங்களுடைய ஆக்கங்கள்(ஆவணங்கள்) உண்மையைக் கண்டறிய விரும்புகிற அறிவுத் தாகமுடைய மக்களுக்கு உதவி செய்யலாம்.

சரியும் பிழையும் இருந்தால்தான் மனித அறிவு தொழிற்படவும் உண்மையைக் கண்டறியவும் முடியும். இவ்வகையில் நீங்கள் அரும்தொண்டாற்றியிருக்கிறீர்களென்று கூறவிரும்புகிறேன்.

நாம் முன்பு விசாரணை செய்த குழுவினரை விட அறிவுத் துறையில் நீங்கள் உயர்ந்த நிலையிலிருந்தும் உங்களுடைய அத்வைதக் கொள்கையை அறிவு ரீதியாய் ஆராய்ந்து உண் மையை உணராமல் போய்க்கொண்டிருப்பதைக் கண்டு நான் வருத்த.மடைகிறேன். உங்களிலுள்ள ஓர் கூட்டம் இயற்கையை மீறி மிருகங்கள் போல் ஆணும் பெண்ணும் நிர்வாண நிலையில் இருந்து தியானிப்பதே முக்திக்கு வழியென்று கூறிக்கொண்டு செயலிலும் ஈடுபடுகிறார்களென்றால் இது அத்வைதம் என்ற பரிசுத்தமான சொல்லை அவமானம் செய்வதாக அமைகிறதல்லவா? அத்வைதம் என்ற லேபலில் சுவாமிஜி என்ற பெயரைச் சூட்டிக் கொண்டு விபச்சாரத்தில், கொலையில் ஈடுபாடு கொண்ட போலிச் சுவாமி களின் திருவிளையாடல்கள் அடிக்கடி தினசரிப் பத்திரி கைகளில் வெளியாவதை நாம் வாசிக்கிறோம். இவ்வித அடாவடித் தனங்களைக் கண்டபிறகும் அல்லது கேள்விப்பட்ட பிறகும் இந்த வேடதாரிகளான ஷைத்தான்களை மக்கள் தெய்வங்களாக கணிக்கிறார்களென்றால், மக்களை மதத்தின் பெயரால், ஷைத்தான் சுவாமிகள் எவ்வளவு தூரம் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்க ளென்பதை எம்மால் கணிக்க முடியும். காட்டுமிராண்டிகளான சிம்பன்ஸிக் கூட்டம் அல்லது பன்றிக் கூட்டம் தங்கள் குறிக்கோளைப் பெறுவதற்காக அத்வைதம், வேதாந்தம், ஞானம் என்ற சொற்களை லேபலாய்ப் போட்டுக் கொள்வதும், மக்களை அறிவிலிகளாய் மாற்றுவதும் வன்மையாய்க் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மனித இனம் தனித்தனிக் கூட்டமாய் வாழமுடியாது. ஆப்பிரிக்கா விலுள்ள ஓர் எறும்புச் சமுதாயம் ஏதோ ஓர் கொள்கையில் வாழ்ந்து வெற்றி பெறலாம். அதே போல அவுஸ்திரேலியாவிலுள்ள ஓர் எறும்புச் சமுதாயமும் வேறோர் கொள்கையில் வாழ்ந்து வெற்றி பெறலாம். இவ்விரு கூட்டங்களுக்குமிடையில் எவ்வித தொடர்பும் அவசியமல்ல. ஆனால் ஆபிரிக்க மனிதனும் அவுஸ்தி ரேலிய மனிதனும் ஒவ்வோர் கொள்கையில் வாழ்ந்து சாந்தியை வெற்றியைப் பெறமுடியாது. ஒரு நாட்டின்(உலகத்) தேவைகள் இன்னோர் நாட்டுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. சுருக்கமாய்க் கூறினால், உலக மக்கள் யாவரும் ஒரே குடும்பத்தினர் என்ற



மனோபக்குவம் ஒவ்வோர் மனிதனுக்கும் ஏற்படாத வரையில், உலகின் எப்பாகத்திலும் எப்போதும் சாந்தி சமாதானத்தைத் தன்னிறைவைப் பெறமுடியாது என்பது எனது அபிப்பிராயமாகும்.

அத்வைதமென்ற ஸ்லோகத்தைச் சுமந்து கொண்ட நீங்கள் இந்த 21ம் நூற்றாண்டில் கூட ஜாதி பேதம் காட்டிக் கொண்டிருக் கிறீர்கள். ஒரே தாய் தந்தைக்குப் பிறந்த பிள்ளைகள் ஒன்றை விட மற்றொன்று உயர்ஜாதியாய் இருக்க முடியாது. யாவும் கடவுளின் தோற்றப்பபாடேயென்று கொள்ளும் (கூறும்) அத்வைதி, உயர்ஜாதி, கீழ்ஜாதி கணிக்கிறாரென்றால் இவரை நாம் ஓர் முழு மூடராகத்தான் கணிக்க முடியும். ஒருவனை மேல் ஜாதியாகவும் இன்னொருவனைக் கீழ்ஜாதியாகவும் கணிப்பது அத்வைதக் கொள்கைக்கு முற்றும் முரணான செயலாகும். யாவும் பிரம்மத்தின் வெளிப்பாடேயென்று வாதிடும் நீங்கள் மனித இனத்தில் உயர்ஜாதி, கீழ்ஜாதி கணிப்பது நியாயமாகுமா? அப்படி நீங்கள் கணிப்பதானால், முக்காலங்களிலும், மூவிடங்களிலும் கட்டுண்ட பாமர மனிதனைவிட நீங்கள் அறிவில் மிகைத்தவர்கள் என்று எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

உங்களுடைய மறுபிறவிக் கொள்கையை முற்றாய் அவ தானித்தால், நீங்கள் சாந்தியைத் தேடிச் சாந்தியின்மையென்ற பாதையில் சென்றுகொண்டிருப்பதாகவே தென்படுகிறது. துன்பத் துக்கஞ்சிய மனிதன் இன்பத்தைத் தேடினான். ஆனால், அவன் தன் அறியாமையால், இன்பம் கிடைக்குமென்ற வெறும் கற்பனை யினால், மேலும் மேலும் துன்பத்தையே தேடிக்கொள்கிறானெ ன்றால் இவன் சாந்தியை எப்போது பெறுவான்? சித்து வேலைகளில், திறமை பெற்றுக்கொண்டால் நாம் முக்தியடைந்து விட்டோம், வெற்றியடைந்து விட்டோம் என்று நம்புபவர்களும் உங்களிலுண்டு. உலகே மாய்கையென்று கூறுகிற நீங்கள் செய்கிற சித்து வேலை களும் மாய்கைதான் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். நான் உங்களுக்கு ஓர் நல்லுபதேசம் கூறிவைக்க விரும்புகிறேன்.

இன்றுள்ள உலக மக்களில் 99%மான மக்கள் அவர்களுடைய வாழ்க்கை அனுபவத்துக்கு முரணான ஓர் நிகழ்ச்சியை காணும் போது, அல்லது அறியும்போது அதை அற்புதம், சித்து, கறாமாத் என்று நம்பிவிடுகிறார்கள். அவ்வித நிகழ்ச்சியை நடாத்துவோரை இறை ஐக்கியத்தைப் பெற்ற நல்லடியார்களாக, ரிஷிகளாக, தொண்டர்களாக, ஞானவான்களாக, முனிவர்களாக, சூபிகளாக, அவ்லியாக்களாக நம்பிவிடுகிறார்கள். இதற்குரிய காரணம் என்னவென்றால் அற்புதம் என்பதன் உண்மை அறிவில் பிடிபடாமைதான். காரணமில்லாத காரியம் சிருட்டியுலகில் கிடைக்கவே கிடையாதென்பதை ஆராய்ந்து தெளிவுபெற வேண்டும். பற்பல வகையான நூற்களைப் பாடமிட்டுக் கொண்ட ஒருவர், ஆச்சரியப்படக் கூடிய சில வேலைகளையும் செய்து காட்டி அழகாகவும் பேசினால் அவர் ஓர் அவதாரபுருடர்தானென்று மனிதன் நம்பிவிடுகிறான். இந்த நம்பிக்கை போலி நம்பிக்கையாகும். உண்மையைத் தன்சொந்த அனுபவத்தில் கண்டறிவதே உண்மையான நம்பிக்கையாயிருக்கிறது. மனிதனை மதங்களின் பெயரால் ஏய்த்துப் பிழைக்கும் மக்கள் உலகின் நாலா பாகங்களிலுமுண்டு. சித்து, அற்புதம் செய்பவர்கள் தான் சாந்தி பெற்றவர்களானால் மெஜிக் நிபுணர் களெல்லாம் சாந்தி பெற்றவர்களாவார்கள். இவை அற்புதங்களல்ல. எனவே, அற்புத நிகழ்ச்சிகளைக் கொண்டு சாந்தியைப் பெறலாம் என்று நம்புவது அறியாமையாகும்.

குறிப்பிட்ட ஒருசில மனிதர்களைத்தவிர ஏறக்குறைய எல்லா மக்களுமே உள நோயாளிகளாகவே தென்படுகிறார்கள். இவ்வுள நோய் பற்பல வகையாய் இருப்பினும் அவற்றின் ஊற்றுக் கண் குருட்டு நம்பிக்கையாகவே இருக்கிறது. இந்த நம்பிக்கை மனிதனை விட்டும் நீங்கி, மனிதன் தன்நிறைவைச் சாந்தியைப் பெறுவதானால், அம்மனிதன் எடுத்துக்கொள்ளும் ஒவ்வோர் விஷயத்தையும் ஆராய்ந்து தெளிவு பெற்றொழுக வேண்டியவனாகிறான். இனிமேலும் நீங்கள் காலதாமதம் செய்யாமல், உங்கள் கொள்கைகள் செயல்களைக் கட்சிப் பற்றில்லாமல் மீளாய்வு செய்து உண்மையைக் கண்டறிந்து, செயல்படுத்துவது நல்லதென்று கூறிவைக்கிறேன். பழமை வாய்ந்ததொன்று சரியானதுதானென்று முடிவு கட்டுவது தவறாகும்.



உலகமக்கள் யாவரும் சாந்தியைத் தேடி ஓடிக்கொண்டிருக்கும் போது பலநூறு வருடங்களின் பின் அல்லது பல்லாயிரம் வருடங்களின் பின் விரல் விட்டெண்ணக் கூடிய ஓரிரு நபர்கள் பெற்றுக்கொண்ட சாந்திபாதை உலக மக்களுக்குப் பொருந்தாது. துறவறம் சாந்திக்கு வழிகாட்ட மாட்டாது. ஏக காலத்தில் ஏறக்குறைய எல்லோரும் சாந்தியைப் பெறக்கூடிய ஓர்வழி உண்டென்றால், நாம் அவ்வழியைக் கண்டறிந்து செயல்பட வேண்டியது உலக மக்கள் யாவருக்கும் பொதுவான ஓர் கடமையாகும். உங்களுடைய பயிற்சி முறைகளை ஆராய்ந்தால், தியானத்தின் போது, பிரபஞ்சத்தை (உடலை) மறந்து இறைவனை மட்டும் தரிபடுத்தவேண்டிய நீங்கள் உடலையே (பிரபஞ்சத்தையே) மீண்டும் மீண்டும் தரிபடுத்துவதாய்த் தென்படுகிறது. இது அத்வைதக் கொள்கைக்கு முற்றும் மாறுபட்ட செயலாகும். ஆதலால் நீங்கள் உங்கள் கொள்கையைக் குறிக்கோளை, செயல்விளக்கங்களைக் கட்சிப் பற்றற்ற சுய சிந்தனையுடன் மீளாய்வு செய்வது அவசியமென்று கூறுகிறேன். நான் உங்களுடைய கொள்கையில் பிழை காணவில்லை என்பதையும், அக்கொள்கையை நீங்கள் விளக்கும் முறை, அமுல்படுத்தும் முறை பிழையென்று காணுகிறேனென்பதையும் கூறிவைக்க விரும்புகிறேன். இப்போது மூ.ஃமீன் அவர்களை விசாரணை செய்ய விரும்புகிறேன்.

(மூ.ஃமீன் விசாரணைக்காக எழுந்து நிற்கிறார்)

# நீதிபதியும் மூ∴மீனும்

**நீதிபதி :** மூ∴மீன் அவர்களே! எனது கேள்விகளுக்குத் தயவு செய்து பதில் தாருங்கள். முதலில் மூ∴மீன் என்ற சொல்லின் பொருளை விளக்கித் தாருங்கள்.

**மூ∴மீன் :** நீதிபதியவர்களே! மூ∴மீன் என்ற சொல்லுக்கு தமிழ் மொழியில் விசுவாசி, நம்பிக்கை கொண்டவர் என்பதே அர்த்தம். ஆயினும், தன்சொந்த அனுபவத்தில், நானே உண்மைப் பொருள் என்பதை உணர்ந்து கொண்டிருப்பது எதுவோ அதன் பெயர்தான் மூ∴மீன் என்பது.

**நீதிபதி :** அப்படியானால் உங்களபிப்பிராயப்படி அப்பெயர் யாருக் குரியது?

**மூ∴மீன் :** கடவுள், பிரம்மம், கோட் என்றெல்லாம் பலரால் பல பாஷைகளினால் முன்னோக்கிக் கூறப்படுகிற அல்லாஹ்வுக்கே மூ∴மீன் என்ற பெயர் உரித்தானது.

**நீதிபதி :** அப்படியானால் (மூ∴மீன்கள் யாவரும்) மூ∴மீனென்ற பெயருடையவர்கள் யாவரும் கடவுள்தானென்று கூறுகிறீர்களா?

**மூ∴மீன் :** இல்லை. அப்படிக் கூறுவது இணை கற்பித்தலென்ற மாபெரும் குற்றமாகும். இப்படிக் கூறுவது எங்கள் கொள்கைக்கு நேர் விரோதமாகும். மூ∴மீன் என்ற இறைவனுடைய நாமம் மனிதர்களுக்கு இரவலாய்ப் பாவிக்கப்படுகிறது.

**நீதிபதி :** அப்படி ஏன் இரவலாய்ப் பாவிக்கப்பட வேண்டும்?

**மூ∴மீன் :** இவ்விபரத்தைப் பூரணமாய் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆற்றல் தங்களுக்கமைவதானால் இதற்கு முன் சிற்சில விபரங் களை உங்கள் கவனத்திற்கு தரவேண்டியிருக்கிறது. இதை



மனிதனுடைய சாதாரண அறிவு விளங்கிக் கொள்வது கடினம் என்பதற்காகவே சுமார் 124,000 நபிமார்களும் வேதங்களும் யுத்தங்களும் அவசியமாயின. ஆதலால் நான் தங்களுக்கு ஆரம்பத்திலிருந்தே (கொள்கையை அடிப்படையாய்க் கொண்டே) விளக்கம்தர விரும்புகிறேன்.

**நீதிபதி :** என்னை மழுப்பிவிட நீங்கள் முயல வேண்டாம். என்பெயர் பகுத்தறிவு. நல்லது இருக்கட்டும். மூ∴மீன் என்ற பெயர் அல்லாஹ்வு க்குடையது தானென்பதற்கு உங்களால் ஆதாரம் காட்ட முடியுமா? எந்த ஆதாரத்தைக் காட்டுவீர்கள்?

**மூ∴மீன் :** ஆம். ஆதாரம் தர முடியும். நீங்கள் எந்த ஆதாரத்தை ஏற்றுக் கொள்வீர்கள்?

**நீதிபதி :** உங்களுடைய குர்ஆனை ஆதாரம் காட்டினால் போது மானது. ஏனென்றால் சிற்சில விஷயங்களில் நான் குர்ஆனை நம்பவேண்டியவனாயிருக்கிறேன். ஆயினும் சிற்சில விஷயங்களில் அந்தக் குர்ஆனில் முரண்பாடுகளும் தென்படுகின்றன. அவற்றையும் இங்கு நீங்கள் விளக்கித் தரவேண்டியிருக்கிறது. அவற்றைப் படிப்படியாய் நாம் ஆராய்வோம். முதலில் இறைவனின் பெயரே மூ∴மீன் என்பதற்கு ஆதாரம் தாருங்கள்.

**மூ∴மீன் :** குர்ஆன் 59:23ம் ஆயத்தில் மூ∴மீன் என்ற நாமம் அல்லாஹ்வுக்குப் பாவிக்கப்பட்டிருக்கிறது. குர்ஆனில் சுமார் 70க்கும் அதிகமான இடங்களில் மூ∴மீன் என்ற நாமம் மனிதர்களை நோக்கிப் பாவிக்கப்பட்டிருக்கிறது. 2:153 போன்ற பல ஆயத்துக்கள் ஆதாரங் களாய் இருக்கின்றன.

**நீதிபதி :** நல்லது. இப்போது உங்கள் கொள்கை, குறிக்கோள் களைப் பற்றி சரியான விளக்கம் தாருங்கள்.

**மூ∴மீன் :** எங்களுக்கென்று ஓர் கொள்கையுண்டு. அக் கொள்கையை "தௌஹீது" ஏகத்துவம் என்று கூறுகிறோம். எங்களுடைய குறிக்கோள், பூரண சுதந்திரத்துடன், சாந்தியுடன் தேவையற்ற நிலையில் இம்மையிலும் மறுமையிலும் தரிபாட டைவதே. எங்கள் கொள்கை யைத் தெளிவாய் விபரம் தரக்கூடிய

மூல மந்திரம் (ஸ்லோகம்) எங்களிடமுண்டு. “லாஇலாஹ இல்லல்லாஹ்” என்பதே அந்த மூலமந்திரம். இதை நாங்கள் கலிமத்துத்தையிபா (மணம் கமழும் கலிமா) என்று கூறுகிறோம். இக்கலிமாவை முறைப்படி ஒருவர் விளங்கியறிந்து அதற்கேற்றபடி செயற்பட்டால் இம்மையிலும் மறுமையிலும் அம்மனிதர் சாந்தியை, தன்நிறைவைப் பெற்றுக் கொள்வார் என்பது உண்மை.

**நீதிபதி :** உங்கள் கூற்று உங்களின் யூகமா? அல்லது வேதத்தின் விளக்கமா?

**மூ:மின் :** கலிமாவைக் கையேற்றுக் கொண்ட மனிதன் இம்மை மறுமையில் சாந்தியைப் பெறுவான் என்பது வேதத்தின் கூற்று மட்டுமல்ல மூ.ஃமின்களின் சொந்த அனுபவமாயும் இருக்கிறது. சிந்திக்கும் ஆற்றலுடைய மனிதனின் யூகத்துக்கும் இவ்விஷயம் சரியாகவே தென்படலாம்.

**நீதிபதி :** நல்லது. மணக்கும் கலிமா என்று கூறினீர்களே! அது என்ன மணம்?

**மூ:மின் :** மனிதனுக்கென்று சொந்தமான பல தெய்வீகக் குணங்க ளையே மணம் என்று கூறுகிறோம். கலிமாவை முறைப்படி விளங்கியறிந்து செயல்படும் மனிதன் ஓர் குறுகிய காலத்துக்குள் தன்னுடைய இயல்பான விசேட குணங்களைப் பெற்றுக்கொள்வா னென்பது அனுபவ உண்மையாகும்.

**நீதிபதி :** உங்களுடைய கலிமா என்ற மூல மந்திரத்தின் உண்மை யான பொருள் என்ன? என்பதை விளக்கிக் காட்டுங்கள்.

**மூ:மின் :** “லா” என்றால் இல்லை என்பது பொருள். இல்லையென்ற இச்சொல் எப்பாஷையில் கூறப்பட்டாலும் அது ஓர் எதிர்மறைச் சொல்லாகவே அமையும். இச்சொல் சிருட்டிகள் கட்டுண்டிருக்கிற, முக்காலம், மூவிடம், உயர்திணை, அஃறிணை போன்ற 13 அம்ச ங்களையும் இல்லையென்று மறுக்குமேயன்றி, இப்பதின்மூன்று அம்சங்களிலும் கட்டுண்ணாமல் இருக்கிற இறைவனை (கடவுளை) மறுக்காது. இல்லையென்ற சொல், எது இல்லையென்ற கேள்விக்கு இலாஹு இல்லையென்று பதில் தருகிறது. அதாவது “லாஇலாஹ”



என்றால் சிருட்டி இல்லை என்று கூறுகிறது. “இல்லல்லாஹ்” என்ற வசனம் அல்லாஹ்வைத் தவிர என்று கூறுகிறது. “லாஇலாஹ இல்லல்லாஹ்” என்றால் அல்லாஹ்வைத் தவிரச் சிருட்டி இல்லை என்பதே அதன் உண்மைப் பொருளாகும். இதைப் பற்றிய மேலதிக விபரங்கள் அவசியமானால், “ஈமானின் உண்மையை நீ அறிவாயா?” என்ற நூலிலும் “ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன்” என்ற நூலிலும் நான் கலிமாவைப் பற்றி விளக்கியுள்ள விபரங்களை தாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கூறிவைக்க விரும்புகிறேன்.

**நீதிபதி :** உங்கள் கலிமாவின்படி சிருட்டிகள் யாவும் கடவுள்கள் தானென்று கூறுகிறீர்களா?

**மூ:மின் :** நீதிபதியவர்களே! நான் தங்களுடைய வினாக்களுக்கு விளக்கமாய்ப் பதில் கூறுவதானால் எனக்கோர் விஷேட உரிமை அவசியமாகிறது. உலக நீதிமன்றங்களில் பெரும்பாலும் கேள் விகளுக்கு ஆம் இல்லையென்று பதில் கூறுவதுதான் வழமை. இந்த வழமைப்படி நான் பதில் கூற முடியாதவனாயிருக்கிறேன். ஏனென்றால் நான் விளக்கித்தரப்போகிற ஏகத்துவக் கொள்கையின் விபரம் மனித அறிவில் திடீரென நுழைய முடியாத ஓர் விஷயமாய் இருக்கிறது. நான் தங்களுடைய கேள்விகளுக்கு விபரமாய் விடைதர வேண்டியிருப்பதால் என் பேச்சுக்கு வேண்டிய அளவு நேர அவகாசம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**நீதிபதி :** சரி பேசுங்கள்.

**மூ:மின் :** அல்லாஹ்வைத் தவிர சிருட்டி இல்லையென்னும் போது எல்லாச் சிருட்டிகளும் அல்லாஹ்தான் என்று நாம் திடீரென நம்பி விடுகிறோம். “இலாஹு” என்ற சொல் சிருட்டி என்று ஒருமையில் தரப்பட்டிருக்கிறதேயன்றி “ஆலிஹத்” என்று பன்மையில் தரப் படவில்லை. ஆகவே கலிமாவின் நுண்விபரப்படி, அல்லாஹ் வைத் தவிர சிருட்டி இல்லையென்று கொள்ள வேண்டுமேயன்றி சிருட் டிகளில்லையென்று பன்மையில் கொள்ளக் கூடாது. (கடவுள்) அல்லாஹ் என்பவர் “வாஜிபுல் உஜுது” என்ற மூலாதாரப் பொரு ளாயும் சிருட்டியென்பது “மும்கினுல் உஜுது” என்ற (பொரு

ளல்லாத, பொருளை விட்டும் வேறுமல்லாத) ஆதேயமாயும் இருக்கிறது. இந்த ஆதேயமான சிருட்டிகளை ஆதாரமான மூலப் பொருளைப் போன்ற மூலப்பொருட்களேயென்று மனிதன் நம்பி ஏமாந்து விடுகிறான். ஆதேயம் என்பது தோன்றிமறையும் வெறும் தோற்றப் பாடேயன்றி ஆதாரமான மூலப்பொருளல்ல. அத்தோற்றப்பாடு ஆதாரத்தை விட்டும் தனியான ஓர் பொருளேயல்ல. அல்லாஹ் என்ற மூலப்பொருளுடன் அவனல்லாத தனிப் பொருளான சிருட்டிகளுமுண்டென்று நம்பும் நம்பிக்கையே ‘பாதில்’’ பொய் என்று கூறுகிறோம். ஷிர்க் இணை என்பது இதுவே. கடவுளும் சிருட்டியும் ஒன்றேயென்பவனும் வெவ்வேறு என்பவனும் ஷிர்க்குடையவனே. இந்தப் பொய்யான நம்பிக்கைதான் ஏற்பட்ட ஏற்பட்டிருக்கிற, ஏற்படப் போகிற அத்தனை தீமைகள் கொடுரங்கள், யாவுக்கும் மூலமாய் முழுமுதற் காரணமாய் அமைந்திருக்கிறது. இக்கொள்கையை மனிதன் நீக்கிக் கொண்டால் நிச்சயமாக மனிதன் சாந்தியைப் பெற்றுக்கொள்வானென்பதில் சந்தேகமே இல்லை. கடவுளைப் பற்றிய பூரண உண்மை மனித அறிவு வட்டத்தில் கட்டுப்படாது. கடவுளின் நாமங்களே சிருட்டியென்ற தோற்றப் பாட்டிலும் பண்பு என்ற குணப்பாட்டிலும் தோன்றி மறைகின்றன. நாமங்களின் தோற்றத்தை (கருத்தை)ப் பொருளாய்க் காண்கிறோம். புலனறிவில் கட்டுண்ட மயக்கினால்(ஹுசூரினால்) சிருட்டியுலகான பிரபஞ்சத்தை உண்மைப் பொருளாய் மனிதன் கணிக்கிறான். இம்மனிதனிடத்தில் தன் கற்பனையால் உருவாக்கிக் கொண்ட கடவுள் எங்கேயோ ஓர் இடத்தில் இருக்கிறாரென்ற நம்பிக்கை உருவாகிவிடுகிறது. இந்த நம்பிக்கை கடவுளைப் பற்றிய அவருடைய தண்டனையைப் பற்றிய அச்சத்தை நீக்கிவிடுகிறது. அம்மனிதன் தன் இஷ்டம் போல் வாழ முற்படுகிறான். முடிவில் ஆசைக்கு அடிமையாகி விடுகிறான். உலகில் ஏற்பட்ட ஏற்பட்டிருக்கிற ஏற்படப்போகிற சகல நன்மை தீமைகளுக்கும் காரணம் ஆசைதான். இவ்வாசையை முறைப்படி பயன்படுத்தினால், இம்மையிலும் மறுமையிலும் மனிதனால் சாந்தி சமாதானத்தைப் பெறமுடியும். அவ்வாசையை முறைப்படி பயன் படுத்தாவிடில் இம்மையிலும் மறுமையிலும் நிச்சயமாக நஷ்டமடைந்தே ஆகவேண்டும்.

ஆசையை முறையாய் பயன்படுத்தி சாந்தியைப் பெறுவது எப்படி? என்பதை மனிதன் அறிந்து கொள்வதானால் நிச்சயமாக அம்மனிதனுக்கு ஓர் ஆசிரியரும் முழுமைபெற்ற ஓர் சட்ட நூலும்



அவசியம். சாந்திக்கு வழிகாட்டக் கூடிய சட்டநுட்பங்கள் யாவும் பூரணமாய் ஒருங்கேயமையப் பெற்ற சட்டநூல்தான் குர்ஆன் என்ற வேதநூலாய் இருக்கிறது. இவ்வேதநூல் குறிப்பிடும் வழி வகைகளை விளக்கிக் காட்டிச் செயலிலும் அவற்றை அமுல் படுத்திக் காட்டிய ஆசிரியர்தான் முஹம்மது(ஸல்) என்பவர்.

குர்ஆன் என்ற வேதநூல் ஆசையை முறைப்படி பயன் படுத்தி வெற்றிபெற வேண்டிய வழிகளை விளக்குவது மட்டு மல்லாமல், அவ்வழிவகைகளில் தவறிழைப்போர் தண்டிக்கப் படுவார்களென்றும் எச்சரிக்கை விடுக்கிறது. இவ்வகையில் பாமர மனிதனை நீதியான சட்ட அடிப்படையில் வாழப்பழக்குகிறது. சிந்தனையாளர்களுக்கு, ஆசையிலிருந்தும் விடுபடக்கூடிய உபாயம் என்ன? என்பதை விளக்குகிறது. ஆசையென்பது வெறும் மருட்சி யென்றும் அவ்வாசை நீங்காத வரையிலும் சாந்தி, பூரண சுதந்திரம் கிடைக்கவே கிடைக்கா தென்று ஞானவான்களுக்கும் உபதேசம் செய்கிறது. சுருக்கமாய்க் கூறினால் பாமர மனிதனை அறிஞனாகவும், அறிஞனை ஆரிபாகவும் குர்ஆன் வளர்த்துக் கொண்டிருக்கிறதென்று கூறலாம். முழுமை பெற்ற ஓர் ஆரிபிடத்தில் இருப்பது ஏகமான அல்லாஹ் மட்டுமேயென்ற நம்பிக்கை உருவாகி விடுகிறது. ஆசைப்படுபவனும் ஆசைப்படும் பொருளும் ஆசையும் அவரிடத்தில் இல்லையென்றாவதால் அவரிடத்திலுள்ள ஊண் உறக்கம் போன்ற இயற்றன்மைகளைத் தவிர வேறெவ்வித தீய பண்புகளும் வெளியாகாது. இந்த இறுதி எல்கைதான் ஏகத்து வத்தின் பூரண உண்மையாய் இருக்கிறது.

நாம் சுருக்கமாய்க் கூறியபடி, பாமர மனிதன் ஆசையை முறைப்படி கையாளவும், சிந்தனையாளன் ஆசையின் உண்மையை உணர்ந்து தன்னைத்தானே அடக்கியாளும் திறமையைப் பெறவும், தெளிவு பெற்ற ஆரிபு ஆசையற்ற, பூரண சுதந்திரமுள்ள ஓர் நிலையில் தரிபாடடையவும் வழிகாட்டுவது குர்ஆன் என்ற வேத நூல் மட்டுமே. இந்த வேதநூல், கலிமா என்ற சுலோகத்தினால் உணர்த்தப்படும் ஏகத்துவ உண்மையில் பாமரன், அறிஞன், ஆரிபு ஆகிய மூவகுப்பாரும் தரிபாடடைவதற்குரிய வழிவகைகளை விளக்குவதால், முழுமைபெற்ற ஓர் வேதநூல் (வழிகாட்டி - இமாம்) நானே என்றும் கூறிக்கொண்டிருக்கிறது. இக்கூற்று உண்மைதா னென்பதற்கு அனேக ஆதாரங்களையும் தந்து உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

**நீதிபதி :** மிக விரிவான ஓர் விஷயத்தை மிகச் சுருக்கமாய்க் கூறி விளக்கியமைக்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். ஆயினும் உங்களுடைய கூற்றின்படி நோக்கினால் ஒரு பெரிய சந்தேகம் தோன்றுகிறது. எல்லோரும் ஆசையற்றவர்களாய் வாழ்ந்தால் உலகில் எந்தவிதமான செயல்களுமே நடைபெறா தல்லவா?

**மூஃமீன் :** அது தவறான கற்பனை யூகமாகும். பிறக்கிற குழந்தை, வளர்ந்து ஆசையை முறைப்படி பயன்படுத்தும் நிலையைப் பெறுவதற்குரிய ஆரம்பக்கல்வி ஊட்டப்படுவதாலும், சிந்தனையாள னுக்கு அவசியமான கல்வி சட்ட அடிப்படையில் ஊட்டப்படுவதாலும் உலகின் எப்பாகத்திலும் எவ்வித செயல்களுமே தடைப்படாது. ஆனால் தீய அடிப்படையிலுள்ள தீய செயல்கள் தடைப்படலா மென்பது நிச்சயமான உண்மைதான்.

**நீதிபதி :** உள்ளது ஏகம் என்பதை அறிந்து கொண்டால் ஆசை பிறக்காது என்று கூறுகிறீர்களா?

**மூஃமீன் :** அறிந்து கொண்டால் ஆசை பிறக்காதென்பது கருத்தல்ல. ஆசையைத் தனக்கும் பிறருக்கும் பயன்படக்கூடிய வகையில் பயன்படுத்தலாம் என்பதே அர்த்தம். ஆசையிலிருந்து முற்றாய் விடுபட்டு இயல்பூக்கங்களோடு மட்டும் வாழ்வதானால் அறிவு மட்டும் போதாது. அவ்வறிவே அனுபவமாயும் அமையவேண்டும். இவ்வகை யினரே பூரண (அப்து) அடிமைகளென்பவர்கள். பாமர மனிதனுக்கும், சிந்தனையாளனுக்கும் ஆசையைக் கட்டுப்படுத்தும் வழிகள் தான் வேதத்தின் 2/3 பகுதியாய் அமைந்திருக்கிறது. இவ்விரு கூட்டத் தினரும் ஆசையை முறைப்படி பயன்படுத்துவதால் உலகில் எவ்வித கஷ்ட நஷ்டங்களும் ஏற்படாது. உலகம் சாந்தியை இலகுவாகவே பெற்றுக்கொள்ளும்.

**நீதிபதி :** ஆசையற்ற ஓர் நிலைமை மனிதனுக்குண்டென்றால், சிருட்டி பொய்யானதென்று அம்மனிதன் ஓர் போது நம்புகிறானா?

**மூஃமீன் :** ஆசையிலிருந்தும் விடுபட்ட மனிதனிடத்தில் பொய்யெ ன்பது ஒன்று இல்லவே இல்லை. உண்மையென்ற சொல்லை இம்மனிதர் உள்ளது, இருப்பது, என்ற பொருளில் கொண்டிருக்கிறார்.



பொய்யென்ற சொல்லுக்கு எதிர்ச் சொல்லாய் உண்மையென்ற சொல்லை இம்மனிதர் பாவிப்பதில்லை. சிருட்டியென்பது வெறும் தோற்றப்பாடேயன்றிக் கடவுளைப்போல் கடவுளல்லாத மூலப் பொருளல்ல என்பதே உண்மையாகும். சிருட்டி கடவுளை விட்டும் வேறானதென்று நம்புவது பொய்யாயும் (பாதிலாயும்) சிருட்டி அழிவில்லாததென்று நம்புவது (ஹுரூர்) மயக்காகவும் இருக்கிறது. (சிருட்டியின் உண்மை நாம் அனுபவிக்கும் பிரபஞ்சம் மட்டுமே என்று நம்புவது மயக்காகும்) இல்லாதது இருப்பதாகாது. இருப்பது இல்லாததாகாது என்ற விதிப்படி உலகு பொய்யானதென்று கூற முடியாது. பூரண உண்மையானதென்றும் கூற முடியாது. இதைத் தான் (ஹுரூர்) மயக்கு, மாய்கை என்று கூறுகிறோம்.

**நீதிபதி :** பிரபஞ்சம் உண்மையென்றால், உண்மைப் பொருள் கடவுளேதானென்றால், பிரபஞ்சம்தான் கடவுள் என்று கூற நேரிடு கிறது. பிரபஞ்சம் பொய்யென்றால் பிரபஞ்சத்திலுள்ள நானும் பொய் தான் என்று கூறநேரிடுகிறது. இதை அறிவு எப்படி ஏற்கமுடியும்? இருந்து கொண்டிருக்கிற, சொந்த அனுபவத்தில் உணர்ந்து கொண்டிருக்கிற நான் என்னை இல்லையென்று எப்படி ஏற்றுக் கொள்வது? அத்வைத வேதாந்திகள் கூறுவது போல, கடவுளே அவதாரம் செய்து பிரபஞ்சமாய் வெளியானார் என்றுதான் நீங்களும் கூறுவது போல தென்படுகிறது.

**மூஃமீன் :** என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். உங்களுடைய சந்தேகத்துக்கு நான் ஏலவே விடை கூறிவிட்டேன். குணியான மூலப்பொருளை விட்டுக் குணமும், குணத்தை விட்டுக் குணியும் ஒருபோதும் பிரியாது, வேறுபடாது. குணம் தோற்றப்பாடுகளின் வாயிலாய்த் தோன்றுவதாயும் குணி தோன்றாததாயும் இருக்கிறது. தோன்றுவது பிரபஞ்சமென்றால், அப்பிரபஞ்சத்தில் தோன்றாமல் மறைந்தது போல் இருப்பது குணியாய் இருக்கிறது. தோற்றாத குணியைக் கடவுளாயும் தோற்றும் சூறத்தைப் பிரபஞ்சமாயும் கொண்டிருக்கிறோம். மோதிரம் என்ற தோற்றப்பாடு தங்கமுமல்ல. தங்கத்தை விட்டு வேறானதுமல்ல. தங்கம் குணியாயும் அதன் நாமத்தின் தோற்றப்பாடு மோதிரம் என்ற சூறத்தாயும் இருக்கிறது. மோதிரமும் தங்கமும் வெவ்வேறானவையல்ல. இரண்டும் ஒன்றா னவையுமல்ல. உள்ள மூலப்பொருள் தங்கம் மட்டுமே. இரண்டும் ஒன்றேயென்பதற்கு இருபொருட்கள் வேண்டும். எனவேதான்

மோதிரத்தைத் தங்கம் சூழ்ந்திருக்கிறதென்று கூறுகிறோம். இவ்வித சூழ்தலைக் குறிப்பிடுவதற்காகவே "முஹீத்" என்ற சொல்லைக் குர்ஆன் பாவித்திருக்கிறது. இறைவனுக்கு எல்கை இல்லா திருப்பதால், அவனுடைய தோற்றப்பாடான பிரபஞ்சத்துக்கும் எல்கை கிடையாதென்பது எங்கள் வாதம். இவ்வகையில் இந்து அத்வை திகளுக்கும் எங்களுக்குமிடையில் சிறு அபிப்பிராயபேதமுண்டு.

இவ்விஷயத்தைத் தாங்கள் சரியாய் அறிந்து கொள்வ தானால் முதலில் மூ.ஃ.மீன்களான எங்களுக்கும் அத்வைத வேதாந்தி களுக்குமிடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஓரளவு தெளிவு படுத்த வேண்டியது அவசியமாகிறது.

## மூ;மீன்களுக்கும் அத்வைதிகளுக்குமுள்ள ஒற்றுமை

**1வது:** உள்ள மூலப்பொருள், வரைவிலக்கணங்களைக் கடந்த ஏகமானது. இப்பொருள் இலக்கத்தில் இடத்தில் கட்டுண்ணாது.

**2வது:** அந்த மூலப்பொருளுடன் அதுவல்லாத எதுவும் எப்போதும் எங்கேயும் கிடைக்கவே கிடையாது. இந்த மூலப்பொருளை அத்வை திகள் பிரம்மம் என்றும் நாங்கள் "வுஜூது" (அல்லாஹ்) என்றும் கூறுகிறோம்.

**3வது:** அந்த மூலப்பொருள் அழிவற்று நிலையாய் இருந்து கொண்டி ருக்கும் சக்தியாய் (அறிவாய்) இருக்கிறது.

மேலே காட்டிய பொதுவான இம்மூன்று விடயங்களிலும் அத்வைதிகளான இந்துக்களும் மூ.ஃ.மீன்களாகிய நாங்களும் ஒன்றுபட்டிருக்கிறோம். இவ்விடயம் தற்கால இந்து அத்வைதிகளின் கண்டுபிடிப்போ, தற்கால மூ.ஃ.மீன்களின் கண்டுபிடிப்போ அல்ல. உலக மக்கள் யாவருக்கும் பொதுவாக, இறைவனால் நபிமார்கள் மூலமாய் அறிவிக்கப்பட்ட அத்வைதம், ஏகத்துவம், தௌஹீது என்றெல்லாம் கூறப்படுகிற இக்கொள்கை, "ம.ஃ.கூல்" (யுக்தி) "மன்கூல்" (ஸ்ருதி) என்ற மூலப்பிரமாணங்களால் உறுதிப்படுத் தப்பட்டதாகும். முதல் மனிதரிலிருந்து இறுதி மனிதன் வரையுள்ள



யாவரும் ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக் கொண்டு செயல் பட்டால்தான் சாந்தியை, தன்னிறைவை, நிறைநிலையைப் பெறமுடியு மென்று கண்ட இறைவன் 124,000 நபிமார்களைக் கொண்டு இக்கொள்கையை உலகுக்கு அருளியிருக்கிறான். பற்பலபாஷை களைக் கொண்டிருந்த நபிமார்களிடையே இக் கொள்கை மந்திரம் பற்பல பாஷைகளில் வெளியாகியிருக்கலாம்.

## மூ;மீன்களுக்கும் அத்வைதிகளுக்குமுள்ள வேற்றுமை

**1வது:** கடவுளே சிருட்டியாய் அவதாரம் செய்கிறார்.

**2வது:** மனிதனாய் அவதாரம் செய்த கடவுள் பற்பல பிறவிகளை எடுத்து முடிவில் தன் சொந்தநிலையை அடைகிறார்.

**3வது:** கடவுள் விழித்திருக்கும் போது சிருட்டிகள் வெளியாகின்றன. உறங்கும் போது சிருட்டிகள் அழிந்து பிரளயம் ஏற்படுகிறது.

**4வது:** மனிதன் வினைப்பயனைப் பெறுவதற்காக பல பிறவிகளை உலகில் பெற்றுக் கொள்கிறான். மனிதன் புற்பூண்டாய் கால்நடை யாய்ப் பிறப்பதுமுண்டு. (இதை மறுக்கும் அத்வைதிகளும் சிலருண்டு)

**5வது:** துறவறத்தைக் கடைப்பிடிக்காமல் சாந்தியை, தன்னிறைவை நிறைநிலையைப் பெறமுடியாது.

இவை போன்ற இன்னும் பல விடயங்களைத் தரலாம். இவ்வித வாதங்களை மூ.ஃ.மீன்களாகிய நாங்கள் மறுக்கிறோம். கடவுளைக் குணி (வாஜிபுல் உஜூது) என்றும் பிரபஞ்சத்தைக் குணம் (மும்கினுல் உஜூது) என்றும் கொண்டிருக்கிறோம். நபிமார் களால் அறிவிக்கப்பட்ட அத்வைதம், ஏகத்துவம், தௌஹீதென் றெல்லாம் கூறப்படுகிற இக்கொள்கையை, நபிமார், வலிமார் களில்லாத காலங்களில் வாழ்ந்த சிலர், விளக்கப்பிசகினாலும், அனுபவமின்மையினாலும், வயிறு வளர்க்கும் நோக்கத்தினாலும்

அவரவர் யூகப்படி பற்பல இடைச்செருகல்களைப் புகுத்திப் பாழ் படுத்தி விட்டிருக்கிறார்கள். நபிமார்களில் சிலருக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட "சுஹ்புகள்" தான் அவ்வக்கால மனிதர்களின் யூகப்படி புரட்டப்பட்டு இன்று உபநிடதங்களாய்க் காட்சியளிக்கின்றன. இந்துக்களிலுள்ள பலர் உபநிடதங்களில் இடைச்செருகலுண்டு என்ற இவ்வுண்மையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். முஸ்லீம்க ளென்று கூறிக்கொள்கிற துவித சித்தாந்திகளும் புரட்டல் வேலை யில் தான் இன்றும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வித முஸ்லிம்களென்ற லேபலில் வாழும் பல பட்டதாரிகள் கூட ஏகத்துவக் கொள்கையை தௌஹீதை உள்ளாலுள்ளபடி கூறும் போது காதாரக்கேட்டு விட்டால், சிங்கத்தைக் கண்டு மரண பயத்தினால் வெருண் டோடுகிற காட்டுக் கழுதைகள் போலவே தென்படுகிறார்கள். இன்றுள்ள (எஹுதுக்கள், நஸாறாக்கள்) இஸ்ரவேலர்கள் கிறிஸ்தவர்களிடையேயுள்ள பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று கூறப்படுகிற நூற்களும் மனித குலத்துக்குச் சாந்தியின் தன்நிறைவின் பாதையைக் காட்டக் கூடியவையாய் இல்லை. இவையெல்லாவற்றிலும் மனித யூகத்தினால் உருவான இடைச்சொருகல்கள் இருந்து கொண்டேயிருக்கின்றன. அவதாரம், மறுபிறவி போன்ற புரட்டல்களுடன், அத்வைதிகளான இந்துக்கள் கையாளும் யோகப்பயிற்சிகள் மிகக் கடினமானவையாயும் அபாயம் நிறைந்தவையாயும், எக்காலத்திலும் எல்லா மக்களாலும் கையாள முடியாதவையாயும் இருக்கின்றன. இவையெல்லாம் மனித யுக்தியினால் உருவாக்கப்பட்டவைகள் தான். மூ.்.மீன்களாகிய நாங்கள் தீவினை தரக்கூடிய எந்தவித பயிற்சிகளையும் கையாள்வ தில்லை. மேலும் எங்களுடைய அணுகுமுறைப் பயிற்சிகள் எல்லாக் காலங்களிலுமுள்ள எல்லா மக்களும் கையாளக்கூடிய இலகுவான பயிற்சிகளாயிருக்கின்றன. இல்லறத்திலேயே துறவறமுண்டென்பது எங்கள் வாதம்.

**நீதிபதி :** குணியை விட்டுக் குணமும், குணத்தை விட்டுக் குணியும் பிரியாது, வேறுபடாதென்றால், குணமான சிருட்டியைக் கடவுள் தானென்று கொள்வதிலும் அதை வணங்குவதிலும் என்ன தவறி ருக்கிறது?



**மூ.்.மீன் :** நிச்சயமாகத் தவறிருக்கிறது. இடத்தினால், கண்டப் படுத்தப்பட்ட ஓர் சிருட்டியை வணக்கத்துக்குரியதாய் எடுத்துக் கொண்டால் வணங்கினால் அதுவல்லாத பிறபொருட்களெல்லாம், கடவுளல்லாதவை என்றாகும். எல்லாமே கடவுள்தானென்று கொண்டால் எல்லாச் சிருட்டிகளையுமே வணங்க வேண்டி ஏற்படும். இது மனிதனால் சாதிக்கக்கூடிய ஓர் விடயமல்ல. வணக்கம் என்பது பக்தியை நோக்கியது. அத்வைதமென்ற ஏகத்துவம் வேறு பக்தியினாலுருவாகும் வணக்கம் வேறு. பக்தி என்பதும் ஓர் மயக்கு த்தான். வரைவிலக்கணங்களைக் கடந்து நிற்கும். கடவுளைக் குற்றம் குறைவுள்ள நிறைவுபெறாத சிருட்டிப் பொருட்களில் மட்டுப்படுத்த முனைவது அறிவுக்கே விரோதமாகும். அது மட்டு மல்லாமல், ஓர் சிருட்டியின் தோற்றப்பாட்டைக் கடவுளாய் எடுத்துக் கொண்ட மனிதனுக்குத் தெய்வீக காட்சிகள் வெளியாவதற்குப் பதிலாகக் கற்பனையான வெறும் பொய்க் காட்சிகள்தான் வெளி யாகும். ஆதலால் குறிப்பிட்ட ஓர் சிருட்டிக்குக் கடவுள் என்று பெயர் சூட்டுவதும், அதை வணங்குவதும், அதனிடம் ஸபாஅத்தின் ஆதரவு தேடுவதும் குற்றமாகும். இவ்வித செயல்கள் ஆத்மீகத் துறை முன்னேற்றத்துக்குத் தடையாய் அமைகின்றன.

மூ.்.மீன்களுடைய கலிமாவிலுள்ள "இலாஹு" என்ற சொல் ஒருமையில் தரப்பட்டிருப்பதால் சர்வ பிரபஞ்சமும் இறைவனின் தோற்றப்பாடுதான் என்று கொள்வது ஏகத்துவம் என்ற தௌஹீ தாகவும் (அத்வைதமாகவும்) குறிப்பிட்ட ஓர் பொருளை மட்டும் கடவுளாய்க் கொள்வது "குப்ரு" ஆகவும், பிரபஞ்சம் கடவுளை விட்டும் வேறானதென்று கொள்வது இணைகற்பித்தலென்ற ஷிர்க் காகவும் இருக்கிறது. "குப்ரு" என்றால் உண்மையை மறைத்தல் என்பதாகும். இது மன்னிக்கப்படக்கூடிய குற்றம்தானெனினும் ஆத்மீ கத்துறைக்குத் தடையானதுதான். "ஷிர்க்" என்பது மன்னிக்கப் படமுடியாத பெரும் குற்றமாயிருக்கிறது. மன்னிக்கப்படமுடியா தென்பதன் அர்த்தம், இக்கொள்கையிலுள்ள மனிதன் இறுதிவரை சாந்தியை, தன்னிறைவை, நிறைநிலையைப் பெற முடியாதென்பதே, நிரந்த நரகம் என்பதன் சாரமும் இதுவே.

மனிதனே தன் கையினால் உருவாக்கிக் கொண்ட, தன்னு ணர்வற்ற, நாமதை வணங்குகிறோமென்பதைக் கூட அறிந்து கொள்ள முடியாத, தம்தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ளச்

சக்தியில்லாத, ஓர் விக்கிரகமான சிருட்டியை சிருட்டிகளிளெல்லாம் மிகமிக உயர்பதவியுடைய தெய்வீகப் பிரதிநிதியான மனிதன் தலைசாய்த்து வணங்குகிறானென்றால், அதிலும் வணங்கப்படும் சிருட்டி கடவுளல்லாததே என்று நம்பி வணங்குகிறானென்றால் இச்செயல் மனித இனத்துக்கு ஓர் வெட்கக்கேடாகும். புத்தி ஜீவிகளென்று தம்மைக் கூறிக்கொள்கிற இந்த 21ம் நூற்றாண்டு மனிதர்களே விக்கிரக வணக்கத்தில் ஈடுபாடு கொள்கிறார்க ளென்றால் புத்தி ஜீவிகளென்பதன் பொருள்தானென்ன? கடவுளின் நினைவை உருவாக்கவே உருவவழிபாடென்று யாராவது கூறினால் அது அறிவீனத்தினாலுருவாகும் விதண்டாவாதமாகும்.

குருட்டுத்தனமான பின்பற்றல், பழக்கவழக்கங்கள் எம்மை உண்மையின்பால் சேர்க்காதென்பதை நாம் ஊன்றி உணர வேண்டும். மூடத்தனமான பின்பற்றலால் உருவாகும் பக்தி, மதவெறி, இனவெறியைத்தான் உருவாக்கும் - உலக சரித்திரம் இதை எமக்கு உணர்த்துகிறது. விக்கிரக வணக்கம் தவறான தென்பதையும் சிருட்டிகளெல்லாம் வணங்கத் தகுதியற்றவை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சிருட்டிப் பொருட்களை எவ்வகையில் நாம் பயன்படுத்த வேண்டும் என்பதை குர்ஆன் மட்டும்தான் அறிவுக்கேற்றபடி விளக்கம் தந்து கொண்டி ருக்கிறது. இதற்கோர் உதாரணம் கூறவிரும்புகிறேன்.

நாம் ஓர் மரத்தைப் பார்த்து இது மாமரம் என்று கூறு கிறோம். மரம் என்று நாம் கண்ட, கூறிய பொருள், இலை, கிளை, பூ, பிஞ்சு, காய், பழம், பட்டை, வேர் போன்ற பல அங்கங்களைக் கொண்டதாய் இருக்கிறது. அங்கங்கள் பலவாயி ருப்பினும் மரம் என்ற சொல்லின் அர்த்தத்தை (கருத்தை)த் தான் நாம் பொருளாய்க் காணுகிறோம். மாமரத்தின் இலை கீழே விழுந்து விட்டால் மரம் விழுந்து விட்டதென்று நாம் கூறுவ தில்லை. பழம் விழுந்து விட்டாலும் மரம் விழுந்து விட்டதாய் நாம் கூறுவதில்லை. கூறவும் மாட்டோம். விழுந்த இலையைக் குப்பையில் வீசுகிறோம். பழத்தை உண்ணுகிறோம். மரத்தின் இலை, கிளை, பூ, காய், பழம், போன்றவற்றை (மரத்தின் அங்கங்களை) எவ்வெவ்வகையில் பயன்படுத்த வேண்டுமென்பதை நாமறிந்திருக்கிறோம். இதே போல உலகமென்ற மரத்தையும் (அதன் அங்கங்களை) அவசியமான முறைப்படிதான் நாம்



பயன்படுத்த வேண்டும். இலையைப் பார்த்து மரம் என்று கூறாதது போல நாயைப் பார்த்தும் இது கடவுள்தானென்று கூறக்கூடாது. மரம் என்ற சொல்லின் பொருளை நாம் ஓர் குறிப்பிட்ட தோற்றத்தில் பார்க்கிறோம். ஆனால் பிரபஞ்சம் என்ற சொல்லின் பொருளை முழுமையாய் நாம் பார்ப்பதில்லை. நாம் காண்பது எமது புலன்களின் சக்திக்குட்பட்ட அளவுதான். ஆதலால் பிரபஞ்சமே தோற்றப்பாடு மட்டுமே கடவுள் என்று கொள்வதும் அதன் பொருட்களை வணங்குவதும் பொருந்தாது. பிரபஞ்சம் என்பது கற்பனையாய்த் தோன்றி மறையும் வெறும் மாய்கையாய் (ஹுருராய்) இருக்கிறது. இந்த மாயதத்துவத்துக்குரியவன் எவனோ அவனைத் தான் நாம் வணங்க வேண்டும்.

மக்களால் பெரியார்களாய் கணிக்கப்படுகிற ஒரு சில இந்து அத்வைதிகள், நானென்றுணரும் ஆத்துமா அழிவில்லாதது, நிலையானது என்றும் உடல் எனது வெறும் தோற்றப்பாடேயென்றும், ஆத்துமாவே நான் என்றும் வெளிப்படையாகவே கூறியுள்ளார்கள். அதாவது மூ ஃமீன்கள் கூறுகிற ஏகத்துவமென்ற தௌஹீதை அந்த இந்து அத்வைதிகள் பூரணமாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவ்வித உண்மைக்கு, மறுபிறவி, விக்கிரக வணக்கம், அவதாரம் போன்ற விபரங்கள் நேர்விரோதமாய் அமைகின்றன. இவ்வகை விபரங்களில் மூழ்கியுள்ள பெரும்பாலார் உறுதியான தெய்வீக ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகத் தெரிய வில்லை. பற்பல காலங்களில் வாழ்ந்த பற்பல மக்கள் அவரவர் சிந்தனைக்கும் அனுபவத்துக்கும் அமைவாய்ச் சிற்சில விடயங்களை பாடல்களாகவும் வசனநடையாகவும் கூறியிருக்கிறார்கள். இவை களைத் தொகுத்து எடுத்துக் கொண்ட சிலர் அவைதான் வேத சுருதிகளென்று நம்பிச் செயல்படுகிறார்கள். ஆனால் அவ்வகை யினரிடையே உண்மையான உறுதியான ஆதாரங்களுடைய வேதநூல் இருப்பதாகத் தென்படவில்லை. உலகில் மிகமிகப் பழமை வாய்ந்ததும் சரியானதும் எங்கள் மதமேயென்று மார்பு தட்டுவோரும் எம்மிடையேயுண்டு. இவ்வகை வாதங்கள் வெறும் அறியாமையைத் தான் தெளிவுபடுத்துகின்றன.

மனித குலத்திற்கு எக்காலத்திலும் தேவையாகும் சாந்தி, சமாதானம், தன்னிறைவு, நிறைநிலை, சுதந்திரம் ஒரேயோர் வகையானதுதான். ஆதலால் உலக ஆரம்பத்திலிருந்து இறுதி

வரையிலும் வாழவேண்டிய அத்தனை மனிதர்களுக்கும் வேண்டிய சாந்தி, சமாதானத்தை, தன்னிறைவை, நிறைநிலையை, சுதந்தி ரத்தைப் பெறக்கூடிய வழியைக் காட்டக்கூடிய வேதம், மதம், கொள்கை ஒன்றேயொன்றுதான் இருக்க முடியும். அந்த ஒரேயோர் கொள்கையும் வேதமும்தான் மக்களின் தேவைக்கேற்றபடி பாகம் பாகமாய் அல்லது கொஞ்சம் கொஞ்சமாய் அருளப்பட்டிருக்கிறது. "சுஹ்புகள்" "தௌறாத், சபூர், இன்ஜீல்" முதலாம் வேதங்கள் யாவும் இதிலடங்கும். இந்துக்கள் உரிமைபாராட்டும் உபநிடதங் களில் உள்ள உண்மையான விடயங்கள் "ஸுஹபு"களிலுள்ள வையே. கொள்கை, அல்லது மார்க்கம், மதம், தீன் என்பது உலகமக்கள் யாவருக்கும் ஒன்றேயொன்றுதான். மார்க்கம் என்ற கொள்கையில் தரிபாடடைவதற்குரிய உபாயங்கள், அனுகுமுறைப் பயிற்சிகள் (அமல்கள்)தான் காலாகாலம் மாற்றித் திருத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இறுதியாய் அருளப்பட்ட புர்கான் என்ற வேதம் முன்சென்றுபோன வேதங்களில் மக்களால் மறைக்கப்பட்ட, திரிபுபடுத்தப்பட்ட விடயங்களைச் சீர்படுத்தி, எக்காலத்திலுமுள்ள எல்லா மக்களுக்கும் பொருந்தக்கூடிய வகையில் பூரணமான, உறுதியான ஆதாரங்களுடன் தரப்பட்டிருக்கிறது.

***குர்ஆன் : 98 : 3 , 4***

***அதில் (குர்ஆனில்) நிலையான சட்டங்களே வரையப்பட்டுள்ளன. வேதத்தை உடையவர்கள் தங்களிடம் தெளிவான சான்று வந்த பின்னர் மாறு செய்கின்றனர்.***

எமது வேதமே பூர்வீகமானது, அது மட்டுமே உண்மை யானது என்று ஒருசில இந்துக்கள் உபநிடதங்களைப் பற்றிக் கூறுவது தவறாகும். விக்கிரக வணக்கத்தை இந்துக்களிலுள்ள பல பெரியார்கள் பூரணமாய் மறுத்திருக்கிறார்கள். எனினும் அவர்களில் சிலர் துறவறம் மதசம்பந்தமான ஓர் விடயமாகக் கருதுகிறார்கள். மறுபிறவி, அவதாரம், விக்கிரக வணக்கம், துறவறம் போன்றவை மக்களால் உருவாக்கப்பட்டவையேயன்றி வேதத்தினால் தரப்பட்டவையல்ல.



***குர்ஆன் : 57 : 27***

***(பிரம்மச்சாரியத்தை) துறவியாவதை நாம் கடமையாக விதிக்கவில்லை. எனினும் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடையவிரும்பி அவர்களே அதை உண்டுபண்ணிக்கொண்டார்கள். அவ்வாறிருந்தும் அவர்கள் அதனை அனுசரிக்க வேண்டிய முறைப்படி அனுசரிக்கவில்லை.***

***குர்ஆன் : 5 : 103***

***பஹீறா, ஸாயிபா, ஹாம் இவைகளெல்லாம் அல்லாஹ் ஏற்படுத்தியவையல்ல. எனினும் நிராகரிப்போர் தாம் (அவைகள் அல்லாஹ் ஏற்படுத்தியவையென்று) அல்லாஹ்வின் மீது பொய் கூறுகின்றனர்.***

இவ்வகை வேதவசனங்களைக் கொண்டு பூர்வீக வேதங் கள், சுஹ்புகளிலுள்ள இடைச்செருகல்களை எடுத்துக் காட்டிக் கொண் டிருப்பது குர்ஆன் என்ற வேதநூல் மட்டும்தான். விக்கிரக வணக்கம் மனித யுக்தியினால் உருவாக்கப்பட்ட செயலேயன்றி வேதத்தினால் தரப்பட்டதல்ல.

**நீதிபதி :** ஆதம்(அலை) என்ற முதல் மனிதரான ஓர் சிருட்டியை "சுஜூது" (சிரவணக்கம்) செய்யும்படி மலக்குகளுக்கு இறைவன் கட்டளையிட்டதாகவும் இப்லீஸைத் தவிர மற்றெல்லா மலக்குகளும் ஆதம் என்பவருக்குச் சிரவணக்கம் செய்ததாகவும், இப்லீஸ் மட்டும் ஆதம்(அலை) என்ற சிருட்டிக்கு சிரவணக்கம் செய்யவில்லை என்ப தாகவும் உங்களுடைய குர்ஆன் கூறிக்கொண்டிருக்கிறது. அப்படி யானால் சிருட்டியான ஆதத்துக்கு "சுஜூது" சிரவணக்கம் செய்யாத இப்லீஸ் மட்டும்தான் மூ∴மீன் என்று நாம் கூறவேண்டியேற் படுகிறது. மேலும் சிருட்டிக்குச் சிருட்டி சிரவணக்கம் செய்வது ஆகுமென்று தானே இறைவன் மலக்குகளை ஆதத்துக்குச் சுஜூது செய்யும்படி ஏவியிருக்கிறான். இதைப்பற்றி என்ன கூறப்போகிறீர்கள்?

**மூ∴மீன் :** இவ்விடயம் ஓர் ஞானவிபரமாய் இருக்கிறது. இவ்விடயம் நாம் வாழும் பௌதீக உலக விடயமல்ல. மிகக் குறுகலாய் அவசியத்தினளவு இதை விளக்க விரும்புகிறேன். ஆதம்(அலை) என்ற இறைகலீபாவான மனிதருக்கிருந்த தத்துவங்களின் பெயர்தான் மலக்குகள் என்பது. ஆதம் என்ற தோற்றப்பாட்டைக் கொண்டிருந்த இறைவன் தனக்கே தன் தத்துவங்களான

மலக்குகளை முற்றிலும் கீழ்ப்படியுமாறு ஏவினான் என்பதே அதன் சாரம். சுஜுது என்பதற்குச் சிரவணக்கமென்று பொருள் கொள்வது தவறு. துவித உணர்வற்றிருந்த மலக்குகள் ஆதம் என்ற தோற்றப்பாட்டில் காட்சியளித்த இறைவனுக்குத்தான் சுஜுது செய்திருக்கிறார்கள். இப்லீஸ் துவித உணர்வுடையவனாய் இருந்தமையால், தன்னிலும் வேறுபட்டிருந்த, மனித உருவில் தோன்றிய சிருட்டிக்குச் சுஜுது செய்ய மறுத்திருக் கிறான். இப்லீஸ் என்பவன் ஆதம் என்ற தோற்றப்பாட்டைத் தன்னைப் போன்ற, தன்னிலும் குறைவுடைய ஓர் உண்மைப்பொருள் என்றே நம்பினான். இதற்குக் காரணம் அவன் துவித உணர்வோடிருந்தமைதான். துவித உணர்வோடுள்ள மனிதன், தன்னிலும் வேறுபட்ட உயிரற்ற கல், பொன் போன்றவற்றால் ஆக்கப்பட்ட விக்கிரகத்தை வணங்கு கிறானென்றால் இவன் இப்லீஸை விடவும் கேவலமானவன் என்பது உண்மை. இவ்வகையில் இப்லீஸ் திறமைசாலிதான்.

ஆதம் என்ற மனிதர் தனது பிரதிநிதியாய் (கலீபாவாய்) இருந்து ஆட்சி அதிகாரங்களை நடாத்துவதற்காக இறைவனால் படைக்கப்பட்டவர். பிரதிநிதியாய் இருப்பவர் நிறைநிலை (முழுமை அல்லது கமாலியத்து) உடையவராய் இருக்க வேண்டியது அவசியம். இந்த நிறைநிலையைப் பெறுவதற்குப் பிரபஞ்ச விவகார ங்கள் யாவற்றிலும் அனுபவம் பெறவேண்டியதாய் இருந்தது. பிரபஞ்ச உலகின் அனுபவத்தைப் பெறுவதானால் அவருக்கு ஓர் எதிரிடைத் தத்துவம் அவசியமாகும். எதிரிடை இல்லையானால் அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பகுத்தறிவு தொழிற்படாது. பகுத்தறிவை முறையாய்ப் பயன்படுத்திப் பிரபஞ்ச அனுபவத்தைப் பெறுவதற்காகவே ஓர் எதிரிடைத் தத்துவத்தை இறைவன் நியமித் திருக்கிறான். இந்த எதிரிடைத் தத்துவத்தின் பெயர்தான் இப்லீஸ் என்பது. இந்த இப்லீஸ் பகுத்தறியும் ஆற்றலுடையவனாயும் வெளிப்புலன்களில் கட்டுண்ட மயக்குடையவனாகவும் இருந்தமை யால் ஆதம் என்ற வெறும் தோற்றப்பாட்டைப் பொருளாய் நம்பினான். ஆதம் மண்ணினால் உருவாக்கப்பட்டவர், நான் நெருப்பினால் உருவாக்கப்பட்டவன். நான் என்னிலும் (இளக்கமான) கீழான தன்மையுடைய மனிதருக்கு சுஜுது செய்யமாட்டேன் என்று கூறி னான். இந்த இப்லீஸும் மலக்குகளும் ஆதம் என்ற தோற்றப்பாட்டில் காட்சியளித்த இறைவனின் தத்துவங்களே என்று முன்பு கூறினேன். இவ்விடயம் இறைவனின் இரண்டாவது நிலைமையான



சூட்சும உலகை நோக்கியதாகும். அதாவது ஆதம்(அலை) அவர்களுக்கு மலக்குகள் செய்த சுஜுது பௌதீக உலக (சுஜுது) சிர வணக்கம் போன்றதல்ல. சுஜுது என்பதற்குச் சிரவணக்கம் என்று பொருள் கொள்வது பக்திமான்களான பாமர மக்களின் வழக்கமாய் இருக்கிறது. ஆனால் சுஜுது என்பதற்கு முற்றிலும் சரணடைதல், மறுப்பின்றிக் கீழ்ப்படிதல் என்பதே உண்மையான அர்த்தமாகும்.

சிரவணக்கம் வேறு சுஜுது வேறு, வானத்திலுள்ளவை பூமியிலுள்ளவை யாவும் அல்லாஹ்வையே சுஜுது செய்கிறார்க ளென்று குர்ஆன் 16:49ம் வசனம் கூறிக் கொண்டிருக்கிறது. இந்த சுஜுது மனிதர்கள் செய்யும் சிரவணக்கம் தான் என்று கொள்ள முடியாது. ஆதத்துக்கு மலக்குகள் சுஜுது செய்தார் களென்றால் மனிதன் விக்கிரக வணக்கம் செய்வது போல் அல்லது முஸ்லீம்கள் தொழுகையில் செய்யும் சிரவணக்கம் போல் என்று விளங்கிக் கொள்வது தவறாகும். ஒருசில முன்னோர், யூசுப்(அலை) போன்றோர் தாய் தந்தையருக்குச் சுஜுது செய்து கௌரவித்ததாக குர்ஆன் 12:100ம் இலக்க ஆயத்துக் கூறிக் கொண்டிருக்கிறது. இவ்வகைச் சுஜுதின் நோக்கம் மரியாதை செய்து கௌரவப் படுத்துவது மட்டுமே. இவ்வகை சுஜுது மன்னிக்கப்பட வேண்டியதாய் இருந்தமையாற்றான் இவ்வகை சுஜுதில் ஈடுபாடு கொண்ட மக்களை இறைவன் முஸ்ரிக்கீன்கள் (இணை ஏற்படுத்துவோர்) என்று கூறாமல் விட்டிருக்கிறான். மனிதனை மனிதன் கனம்பண்ணச் செய்யும் சுஜுதுக்கும் விக்கிரக வணக்க சுஜுதுக்கும் நிறைய வேறுபாடுண்டு. விக்கிரகத்துக்குச் செய்யும் சுஜுது சரியானதுதானென்றிருந்தால், மலக்குகள் சூட்சும உலகில் செய்த சுஜுதை வணக்கம் (ஸலாத்) தொழுகையென்றே இறைவன் கூறியிருப்பான். அப்படிக் கூறப்பட வில்லை. இன்னும் ஓர் விடயம் என்னவென்றால் ஓர்(சூறத்தை) தோற்றப்பாட்டை இறைவனாய் நம்பி சுஜுது செய்வதற்கும், இறைவ னல்லாததென்று நம்பிச் சுஜுது செய்வதற்குமிடையில் நிறைய வேறுபாடுண்டு.

உயிரற்ற, இயக்கமில்லாத கல், பொன், வெள்ளி முதலாம் பொருட்களால் கற்பனையாய் உருவாக்கப்பட்டவற்றை வணங்குவது, சுஜுது செய்வது ஆத்மீக முன்னேற்றத்துக்குத் தடையாய் அமைந்தி ருக்கிறது.

**நீதிபதி :** ஆதம்(அலை) அவர்களுக்கு சுஜூது செய்யும்படி மலக்குகளுக்குத்தான் இறைவன் கட்டளையிட்டிருக்கிறான். இந்த ஏவலை மறுத்த இப்லீஸ் மலக்குகளிலுள்ளவன்தானென்றால் அவன் இறைகட்டளைக்கு மாறுசெய்த குற்றவாளிதான் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளலாம். அவன் மலக்குகளில் உள்ளவனல்ல என்றால் நாம் அவனைக் குற்றவாளியாய்க் கணிக்க முடியாது. இதைப்பற்றி என்ன கூறுவீர்கள்?

**மு:மீன் :** குர்ஆன் 15ம் அத்தியாயம் 29ம் வசனத்திலிருந்து 43ம் வசனம் முடியும்வரையிலும் வாசித்துக் கொண்டால் இவ்விடயத்தை இலகுவாய்ப் புரிந்து கொள்ளலாம். இப்லீஸ் என்பவன் ஜெபதபங் களால் மிகைப்பட்டிருந்தமையால் அவனை மலக்குகளின் பட்டியலில் இறைவன் சேர்ந்திருந்தானென்றும், அதனாற்றான் மலக்குகளுடன் அவனும் கட்டளை இடப்பட்டானென்றும் சில வியாக்கியானிகள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வகைக் கூற்றுகள் அனுபவத்தில் உண்மையை அறிந்து கொள்ளாத மக்களின் கற்பனைகளாய் இருக்கின்றன. மலக்குகள் என்பது இறைவனுடைய தத்துவங்களின் பெயர்தானென்பதை முன்பே நான் கூறியுள்ளேன். ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன் என்ற நூலில் இதை உறுதியான ஆதாரங்களுடன் விளக்கியுள்ளேன். இப்லீஸ் என்பது இறைவனின் ஓர் தத்துவத்தின் பெயர்தான். எமதுள்ளத்தில் தீய எண்ணங்களை உருவாக்கும் தத்துவத்தின் பெயர்தான் இப்லீஸ் என்பது. ஒவ்வோர் தத்துவமும் ஒவ்வோர் பெயரோடு ஒவ்வோர் வேலைக்காக நியமிக்கப்பட்டி ருக்கிறது. இப்லீஸ் என்பவனும் மலக்குகளைப் போல ஓர் வேலைக்காக நியமிக்கப்பட்டிருக்கிறான். சுருக்கமாய்க் கூறினால் உள்ளம் என்ற அரசாங்கத்தில் இப்லீஸ் என்பவன் எதிர்க்கட்சித் தலைவனாய் இருக்கிறானென்று கூறலாம். உள்ளமென்ற அரசா ங்கத்தின் பெலவீனத்தை எடுத்துக்காட்டி, அவ்வரசாங்கத்தின் தவறுகளுக்கு அவ்வரசாங்கத்தையே சாட்சியாக்கி வைப்பதுதான் இப்லீஸின் வேலை. இந்த வேலையும் அதற்குரிய அதிகாரமும் எழுப்பப்படும் நாள் (மறுமை நாள்) வரையிலும் தான் இப்லீஸுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. குர்ஆன் 15:35, 36, 37ம் வசனங்கள் இதற்கு ஆதாரமாகும். எம்மை மயக்கத்தில் வீழ்த்தி எம் மனோ உறுதியின் தகைமையை



எமக்கெடுத்துக் காட்டும் ஓர் பரிசோதகன் தான் இப்லீஸ் என்ற தத்துவம். வெளிநோக்கில் பார்க்கும் போது அவன் எமக்கு ஜன்மவிரோதி போல் தென்பட்டாலும் உண்மை அப்படியல்ல. அறிவு குறைந்த பாமரமக்களுக்குத்தான் அவன் விரோதியாய்க் காட்சியளிக்கிறான். ஆனால், அறிஞர்களிடத்தில் அவன் ஓர் பரிசோதகனாக காட்சியளிக்கிறான். எமது உள்ளத்தின், அறிவின் பெலவீனத்தையும், எமது உள்ளமென்ற அரசாங்கத்தின் அதிகாரதுஸ்பிரயோகத்தையும் எடுத்துக்காட்டி எம்மை நேர்பாதையில் செலுத்தும் நோக்கமாக இறைவன் அந்த இப்லீஸை ஓர் உத்தியோகத்தில் நியமித்திருக்கிறான். இது இறைவனின் பேரன்பு தான். எம்மை எவ்விடயத்திலும் நிர்ப்பந்திக்கும் அதிகாரம் அவனுக்குக் கொடுக்கப்படவில்லை. அவனுடைய ஏமாற்றுவித்தைகளை நம்பி ஏமாற்றமடைவது எமது பலவீனமே.

இவ்விடயத்தில் இன்னும் சிறிது கூறலாம். இறைவனுடைய விடயத்தில் எதிரிடையாய்ச் செயல்படும் ஆற்றல் எந்த ஓர் சிருட்டிக்கும் கிடைக்கவே கிடையாது. எனவே, ஷைத்தான் தன் சக்தியைக் கொண்டே எம்மை வழிகெடுக்கிறானென்று நம்புவது தவறாகும். இறைநாட்டப்படிதான் அவன் செயல்படுகிறான். அப்படியானால் அவனை இறைவன் ஏன் சபிக்க வேண்டும் என்றோர் கேள்வி பிறக்கலாம். சபித்தல், வழிகேட்டிலாக்குதல் (லலாலத்) என்பதும் வழிகாட்டல் (ஹிதாயத்) என்பதும் இறைவனின் இரண்டாவது நிலைமையைப் பொறுத்த ஓர் விஷயம். இறைவனின் கோபத்தினாலும் இரக்கத்தினாலும் தான் வழிகேடும் வழிகாட்டலும் நடைபெறுவதாய்ப் பாமர மனிதன் நம்புகிறான். இதை நுட்பமாய் நோக்கினால் பல ஞான உண்மைகள் மறைந்திருக்கின்றன. மிகச் சுருக்கமாய்க் கூறினால் இறைவன் தன் அடியார்கள் மீது கொண்ட கிருபையினால் தான் ஷைத்தானைப் படைத்து அவனுக்கென்று ஓர் வேலையையும் கற்பித்து அவனை லஹ்னத்தும் செய்திருக்கிறானென்று கூறலாம். இறைவனுடைய கிருபை என்பது அவனுடைய இயற்பண்பேயல்லாது, நாம் இன்னொன்றோடு கொள்ளும் கிருபையைப் போலல்ல என்பதை முன்பே கூறியுள்ளேன். லஹ்னத் என்பதும் எமதறிவில் இறைவனின் கோபம் போல் தென்படுவது மருட்சியாகும். அதுவும் உண்மையில் இறைவனின் பண்புகளில் ஒன்றாகும்.

**நீதிபதி :** நீங்கள் கூறுவதுதான் உண்மையென்றால். மலக்குகள் ஒளியினாலும் இப்லீஸ் நெருப்பினாலும் படைக்கப்பட்டவன் என்று கூறுவது பொருந்தாதே! இதைப்பற்றி என்ன கூறுவீர்கள்?

**மு.:மின் :** இது ஓர் ஞான இரகசியமாயும் எல்லா மக்களாலும் திடீரென விளங்கிக் கொள்ள முடியாத விடயமாயும் இருக்கிறது. நாம் எடுத்துக்கொண்ட விடயத்துக்கு இவ்விபரம் அவசியமுமல்ல. ஆயினும் சிந்தனையாளர்களை ஓரளவேனும் திருப்திப்படுத்த வேண்டியது அவசியமாகையால் சிறிது கூறுகிறேன். இப்லீஸ் நெருப்பினாலும் மலக்குகள் ஒளியினாலும் படைக்கப்பட்டவர்களென்ற விடயம் பாமரமனித அறிவுக்கு உருவகப்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. "நார்" என்ற நெருப்பை விட்டு "நூர்" என்ற ஒளியும், ஒளியை விட்டு நெருப்பும் வெவ்வேறானவையுமல்ல. முன் பின்னானவையுமல்ல. நெருப்பென்றும் ஒளியென்றும் பெயர்கூறி பிரித்துக் காட்டியிருப்பதால், அவை இடத்தினால் தோற்றப்பாட்டினால் குண சுபாவத்தினால், வேறுபட்டிருந்தன என்பதும் அவை சிருட்டிகளே என்பதும் புலனாகிறது. ஆகவே இவ்விபரம் இறைவனின் "றுபூபியத்" என்ற இரண்டாவது(மர்த்தபா) நிலையின் விபரமே என்பதும் புலனாகிறது. இந்த இரண்டாவது நிலைமையை மனித அறிவுக்கு ஏற்றபடி நெருப்பென்றும் ஒளியென்றும் உருவகப்படுத்திக் கூறப்பட்டிருக்கிறது. நெருப்பு ஓர் குறிப்பிட்ட இடத்தைக் கொண்டதாயும், முப்பண்புகளில் கட்டுப்படுவதாயும் அதன் ஒளி முப்பண்புகளில் கட்டுண்ணாத வியாபகமானதாயும் இருக்கிறது. நெருப்பினால் உருவாக்கப்பட்டவன் இப்லீஸ் என்றால் விகாரப்படுத்தும் சுபாவம் கொண்டவன் என்பதும் ஓர் குறிப்பிட்ட கட்டுப்பாட்டில் எல்கையில் கட்டுப்பட்டவன் என்பதும் அதன் அர்த்தம், ஒளி இதற்கு முரணாயிருக்கிறது. நெருப்பையும் ஒளியையும் வெவ்வேறாய்க் கொண்டுதான் இம்முடிவுக்கு வந்தோம்.

நெருப்பும் ஒளியும் வேறுபாடில்லாத ஏகமே என்று கொண்டால் அந்த நிலைக்கு "நூர்" என்பது பெயர். முன் கூறிய "நூர்" என்ற ஒளியின் தன்மை வேறு. இப்போது கூறிய "நூர்" என்ற ஒளியின் தன்மை வேறு. ஏனென்றால் பின்கூறிய "நூர்" என்பதனால் ஆக்கப்பட்டதே முன்கூறிய "நூர்" ஆகவும் "நார்" ஆகவும் இருக்கிறது. எனவே, இறைவன் தன் அறிவு என்ற நூறைக் கொண்டே



மலக்குகளின் ஒளியையும் ஷைத்தானின் நெருப்பையும் உருவாக்கினான் என்பது புலனாகிறது. இறைவனின் அறிவே நூர் என்றும் அது இறைவனின் பண்பேயென்றும் பகுத்து நோக்குவதால் நூர் வேறு, நூறுக்குரிய (அல்லாஹ்) வுஜுூது அல்லது மூலப்பொருள் வேறு என்று மனிதன் மயக்கமடைகிறான். இந்த மயக்குத்தான் பிரபஞ்சத்தை மூலப்பொருளாய்க் காண்கிறது. இதை வாரிதாத் ஷைத்தான் என்று கூறுகின்றோம். இதேபோலகுணமும் குணியும் வேறுபடாதென்ற விதிப்படி நோக்கினால் நூர் என்ற அறிவுதான் அல்லாஹ் என்பதும் அல்லாஹ்தான் நூர் என்பதும் உறுதியாகிறது. எனவே, இறைவனுடைய நூர் என்பதே சிருட்டியையும் சிருட்டி கர்த்தாவையும் பிரிப்பதாயும் ஒன்றுபடுத்துவதாயும் அமைந்திருக்கிறது. பிரித்துக் காணும் நிலைமை சிருட்டியை நோக்கியதாயும் ஒன்றித்து ஏகமாய்க் காணும் நிலைமை அல்லாஹ்வை நோக்கியதாயும் இருக்கிறது.

பிரித்துக் காணும் நிலைமைக்கு அதிகாரியாய் இருக்கும் தத்துவதம் தான் இப்லீஸ், ஷைத்தான் என்பது. ஒன்றிணைத்து ஏகமாய்க் காணும் நிலைமைக்கு அதிகாரியாய் இருக்கும் தத்துவம் தான் ஜிப்ரீல் என்பது. இதை வாரிதாத் மலக்கானி என்று கூறுகிறோம். இவ்விருவரும் (ஸூறத்தை) தோற்றப்பாட்டையும் நாமத்தையும் பெறுவதற்குமுன் இறையறிவான நூர் என்ற பண்பில் வேறுபாடற்று ஏகமாய் இருந்தவர்கள். இதை முன் பின்னாய்க் கூறுவதெல்லாம் நாம் காலத்தைப் பிரித்துக் கொண்டிருப்பதனால் தான். உண்மையில் முன்பின் என்பது கிடையாது. ஆகவே, ஷைத்தானுடையவும் மலக்குகளுடையவும் விடயம் சிருட்டியுலகை இயக்கும் இடைபடை காரணங்களிலுள்ளதாயும் ஏகத்துவம் முழு முதற்காரணத்தை நோக்கியதாகவும் இருக்கிறது. இவ்வளவு விபரமும் சிந்தனையாளர்களுக்குப் போதுமானதென்று நம்புகிறேன்.

**நீதிபதி :** வினைக்குத் தகுந்த பலாபலனைப் பெறுவதற்காக உலகிலேயே பல பிறவிகளை மனிதன் பெற்றுக்கொள்கிறானென்று இந்து அத்வைதிகளில் சிலர் கூறுவதை மூ.்.மின்கள் மறுப்பது ஏன்?

**மு.:மின் :** ஓர் விடயத்தில் சரி, பிழை, காண்பதற்கு இரண்டு பிரமாணங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றை ம.்.கூல்(யுக்தி) என்றும், மற்றொன்றை மன்கூல்(ஸ்ருதி) என்றும் கூறுவோம். இவ்விரு பிரமாணங்களுக்கும் முரணாயமையும் விடயங்கள்

பிழையானவை யாயும் மனித அறிவிலேற்பட்ட மருட்சியினா லுருவானவையாயும் தான் இருக்கும். மறுபிறவி, அவதாரம், இன்னோர் பொருளில் விடுதியிடல் போன்ற வாதங்கள் நாம் கூறிய ம.்.கூல்(யுக்தி) "மன்கூல்" (ஸ்ருதி) ஆகிய இரு மூலப்பிரமாணங் களுக்கும் முரணாயிருக்கின்றன. மறுபிறவிக் கொள்கை, பரிணாமக் கொள்கை போன்றவை, காலத்திலும், இடத்திலும், புலனாட்சியிலும் கட்டுண்ட பாமர மனிதரின் அறிவுக்குச் சரிபோல் தென்படலாம். மனிதன் காலத்தையும் இடத்தையும் வகுத்துக் கொண்டதனால் ஓர் பெரிய மயக்கில் மாட்டிக் கொண்டிருக்கிறான். நிகழ்காலமேயன்றி இறந்த காலமும் எதிர்காலமும் கிடைக்கவே கிடையாது. இதேபோல் உள்ளது தன்மை மட்டுமேயன்றி முன்னிலை படர்க்கை என்பவையும் கிடைக்கவே கிடையாது. காலத்திலும் இடத்திலும் கட்டுண்ட மயக்க புத்தி, அவதாரம் மறுபிறவி போன்ற விஷயங்களை கற்பனையாய் உருவாக்கிக் கொள்கிறது. கடவுள் அவதாரம் செய்வதோ மனிதன் மறுபிறவியைப் பெற்று உலகில் வாழ்வதோ கிடையாது. வினைப் பயனைப் பெற உலகில் மறுபிறவி உண்டாகிறதென்ற இந்துக்களின் ஜன்மபாவக் கொள்கையையும், நாமெல்லாம் பாபிகளாய்ப் பிறந்திருப் பதனால் எங்களுடைய பாபங்களை நீக்கவே இயேசு சிலுவையில் மரணித்தார் என்ற கிறிஸ்தவர்களின் கொள்கையையும் குர்ஆன் வன்மையாய் மறுத்துக் கொண்டிருக்கிறது. மேலும் பிறக்கிற ஒவ்வோர் குழந்தையும் பரிசுத்தமான குழந்தையாகவே பிறக்கிற தென்று குர்ஆன் ஹதீஸுகள் வலியுறுத்துகின்றன. மறுபிறவி உண்டென்றால் வினைப்பயனை அனுபவிக்கவே குழந்தை பிறக்கிற தென்றால் எல்லாக் குழந்தையும் நல்ல குழந்தையாகவே பிறக்கிற தென்று கூறமுடியாது. இது அறிவுக்கே பொருந்தாத வாதமாகும். இயற்கையை மீறாமல், எல்லா நிறங்களையும் ஏற்றுக் கொள்ளும் வெள்ளைப் பேப்பரைப் போல், அல்லது எல்லா உருவங்களையும் ஏற்றுக் கொள்ளும் மெழுகைப் போல் தான் பிறக்கும் குழந்தையின் உள்ளம்அமைந்திருக்கிறது. அக்குழந்தையை நல்லவனாக்குவதும் தீயவனாக்குவதும் தாய் தந்தை சூழல் போன்ற காரணிகளேயன்றி முற்பிறவியில் செய்த வினைப்பயன்கள் காரணிகளல்ல. மறுபிறவிக் கொள்கை மனித யுக்தியினால் உருவாக்கப்பட்ட தவறான கொள்கை யாகும்.



கடவுள் மட்டுமே உண்டென்றால், அவரைத் தாக்கும் வேற்றுப் பொருள் அல்லது சக்தி கிடையாதென்றால், அவர் என்றும் இருந்த நிலையில்தான் இருந்து கொண்டிருப்பார் என்பதை மறுக்க முடியாது.

கடவுள் இருந்தபடியே இருந்து கொண்டு, அவருடைய அறிவில் அவரே சகலமுமாய்க் காட்சியளிக்கிறார் என்றும், அக் காட்சியில் கற்பனையாயுள்ள சிருட்டியே மயக்கில் (மாய்கையில்) கட்டுண்டிருக்கிறதென்றும் காலம் என்றுமுள்ள நிகழ்காலமே என்றும் கொண்டால் அதாவது காலம் இடம், என்ற திரைகளிலிருந்தும் விடுபட்டால் மறுபிறவி, அவதாரம், பொருள் முதல்வாதம் கருத்து முதல்வாதம், பரிணாமம் போன்ற கொள்கைகளெதுவுமே தலை காட்ட முடியாது. இவ்வித வாதங்கள் எல்லாம் மருட்சியினால் ஏற்பட்டவையாகும். இவ்வித மருட்சியின் பெயர்தான் "ஹுருர்" மாய்கை என்பது.

**நீதிபதி :** மறுபிறவியென்பது உண்மையா? பொய்யா என்பதைக் கண்டறிவதற்காக ஆராயும் சில ஆய்வாளர்கள்; சில மக்கள் தாங்கள் மறுபிறவியை பெற்றிருக்கிறோம் என்று கூறுவதாயும் அவர்களின் கூற்றில் சில உண்மைகள் இருப்பதாயும் கூறிக் கொண்டிருக்கிறார்களே இதைப்பற்றி என்ன கூறுவீர்கள்?

**மு.்மின் :** இந்த ஆராய்வாளர்கள் யாவரும் காலம், இடம், புலன், அனுபவம் ஆகிய முத்திரைகளில் சிக்குண்டவர்களாய் இருந்து கொண்டுதான் தங்கள் ஆய்வுகளை நடாத்துகிறார்கள். இவர்களின் ஆராய்வில் உண்மை பிடிபடவே முடியாது. ஒலி, ஒளி அலைகளைப் பரப்பும் நிலையங்கள் தங்கள், ஒலி, ஒளி அலைகளை விண்ணில் பரப்புகின்றன. இவ்வலைகளை ஒன்றுபடுத்தி தோற்றங்களையும், பேச்சுகளையும் எமக்கு நேரடியாய் எடுத்துக்காட்டக் கூடிய றேடியோ, டெலிவிஷன் போன்ற கருவிகள் எம்மிடையேயுண்டு. எல்லா இடங்களிலிருந்தும் பரப்பப்படுகின்ற ஒலி ஒளி அலைகள் எல்லாவற் றையும் ஒரே நேரத்தில் ஒரே கருவியில் எம்மால் பெறமுடியாது. கொழும்பிலிருந்து பரப்பப்படும் ஒலி ஒளி அலைகளை மட்டும் பெறுவதனால் அதற்கு ஓர் அலகும் லண்டனிலிருந்து பரப்பப்படும்

ஒலி ஒளி அலைகளைப் பெறுவதனால் அதற்கு வேறோர் அலகும் கொண்டிருக்கிறோம். இதைப் போல, பிரபஞ்சம் எப்போது உண்டோ அப்போதிருந்து பிரபஞ்சம் அழியும் காலம் வரையிலுமுள்ள சகல ஒலி, ஒளி அலைகளும் இருநிலையங்களில் பதிவு செய்யப்பட்டுக் கொண்டும் அதே கணம் பிரபஞ்சம் யாவும் பரப்பப்பட்டுக் கொண்டு மிருக்கிறது. நாம் கூறிய இவ்விரு நிலையங்களையும் ஒன்றிணைத்து நாம் இயற்கை என்று கொள்வோம். இந்த இயற்கை என்பது பிரபஞ்சத்தின் சர்வ செயல்களையும் தோற்றங்களையும் அணுவும் தவறாமல் பதிவுசெய்து கொண்டேயிருக்கிறது. விண்ணிலுள்ள ஒலி ஒளி அலைகளை எமது றேடியோ டெலிவிஷன்கள் எமக்கு எடுத்துத் தருவது போல இயற்கையில் பதிந்துள்ள ஒலி ஒளி அலைகளை எமதுள்ளம் என்ற கருவியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மால் முடியும். இவ்வகை உள்ளமுடையோர்தான் தீர்க்க தரிசனங்களைக் கூறிய நல்லடியார்கள். இவர்களுடைய உள்ளமென்ற கருவிக்கு பலப்பல (பட்டன்கள்) இருக்கின்றன. இவற்றைத் தனித்தனியாயும் ஒன்றாயும் பாவிக்க அவர்களால் முடியும்.

பிறக்கிற குழந்தை நல்ல குழந்தையாய்ப் பிறந்தாலும் இயற்கையின், சூழலின் எண்ண அலைகளின் தாக்கத்தினால் அக்குழந்தையின் உள்ளம் காலக்கிரமத்தில் உளநோயைப் பெற்றுக் கொள்கிறது. இவ்வுள்ளத்தின் புலன்கள் (பட்டன்கள்) தம் இயற்றன் மையை விட்டும் மாறுபாடடைந்து விடுகின்றன. சில புலன்கள் கூடிய சக்தியையும் சில புலன்கள் குறைந்த சக்தியையும் பெறு கின்றன. இவ்வித கோளாறுடைய ஓர் குழந்தை அல்லது ஓர் மனிதன் 100 வருடங்களுக்கு முன் அல்லது பல வருடங்களுக்கு முன்னர் நான் இன்னார் வயிற்றில் இன்ன இடத்தில் இப்படிப் பிறந்தேன், இப்படி வாழ்ந்தேன், இப்படி இறந்தேன் என்று கூறக்கூடும். இவர்கள் கூறுகிற பலவருடங்களுக்கு முந்திய (முற்பிறவி) மனி தனின் சகல விடயங்களும் இயற்கை பதிவு செய்துள்ளதாக நான் முன்பு கூறினேன். அம்மனிதனின் எண்ண அலைகள் பிரபஞ்சம் உள்ளவரையிலும் இருந்துகொண்டே இருக்கிறது என்றும் கூறினேன். அந்த முற்பிறவி மனிதனின் ஒலி, ஒளி அலைகளை எடுத்துக் கொள்ளக்கூடிய மனோபக்குவமுடைய உள்ளம் (மனிதன்) அந்த முற்பிறவி மனிதன் நானே என்று கூறுவான். அதாவது இம்மனிதனின் உள்ளம் ஓர் கண்ணாடிபோல் இருக்கிறது. அதில் எந்த ஒலி, ஒளி அலைகள் தென்படுகின்றனவோ அந்த ஒலி, ஒளி அலைகளுக்



குரியவன் நானே என்று நம்புகிறது. இதில் உண்மையும் தென் படலாம். கற்பனையான பொய்யும் தென்படலாம். உண்மை நல்லடியார்களுக்கு மட்டுமே தென்படும். இவர்கள் ஓர் குறிப்பிட்ட தோற்றம் மட்டுமே என்னுடையதென்று கொள்ளமாட்டார்கள். ஆரம் பம் முதல் முடிவு வரையுள்ள தோற்றப்பாடு யாவும் தன்னுடையதே யென்று தான் உணர்வார்கள். இவ்வுணர்வையே இறையுணர்வு என்றும் "தஜல்லி" என்றும் கூறுகிறோம். இவர்கள் காலத்தின் வேறுபாடற்ற நிலையில் தான் இவ்வுணர்வைப் பெறுகிறார்கள். ஆதலால் இவர்களிடத்தில் முன்பின் என்பதும் மறுபிறவி அவதாரம் என்பதும் ஏற்படாது. ஆனால் சாதாரண மனிதன் முன் இறந்துபோன தனிப்பட்ட ஒருவரின் மறுபிறவியே நான் என்று கொள்வதனால் இவர் காலத்திலும் ஏதோ ஓர் உளநோயிலும் சிக்கியுள்ளாரென்பது தான் உண்மை. எண்ண அலைகளின் தாக்கமே இந்த உள நோய்க்கு மூலகாரணமாய் அமைந்திருக்கிறது.

இவ்வித நிகட்சிகள் இரசாயன உயிர்ச் சத்துக்களின் குறைவினாலும் ஏற்படலாம். மூளையின் நுண்அமைப்புக் கோளாறு களினாலும் ஏற்படலாம். குருட்டுத்தனமான நம்பிக்கையினாலும் ஏற்படலாம். பசி, தாகம், போன்றவை மிகைபடுவதாலும் ஏற்படலாம். உண்மையை நோக்கினால் இது ஓர் உளநோயாகவே இருக்கிறது. நல்லடியார்கள் இந்த உளநோயிலிருந்தும் விடுபட்டவர்கள். இவர் களிலெவரும் மறுபிறவியை ஊர்ஜிதப்படுத்தியது கிடையாது. இவ்விடயத்தை உண்மையான ஏகத்துவ அடிப்படையில் விளக்குவ தானால் மிக நீண்ட நேரம் தேவையாகலாம். எத்தனையோ கோடா கோடி மக்கள் எண்ணிலடக்க முடியாத மக்கள் இறந்திருக் கிறார்கள். பிறந்து கொண்டேயிருக்கிறார்கள். இவர்களில் ஒன்றி ரண்டு பேர்களு க்கேயன்றி முற்பிறவியின் நினைவு (ஞாபகம்) வராமலிருப்பது ஏன்? என்பதை நாம் ஊன்றி உணரவேண்டும். மறுபிறவிக் கொள்கை ஓர் உளநோயாய் இருக்கிறது. அது உண்மையல்ல. ஒவ்வோர் மனிதனும் மறுபிறவியைப் பெறுகிறா னென்றால் ஆரம்ப மனிதன் என்ற சொல் அர்த்தமற்றதாகிவிடும்.

**நீதிபதி :** கடவுள் இல்லாமையைக் கொண்டே பிரபஞ்சத்தைச் சிருட்டித்தாரென்று இந்து அத்வைதிகளில் சிலரும் துவித வாத மௌலவிகளிற் சிலரும் கூறிக் கொண்டிருக்கிறார்களே! இதைப்பற்றி மூ.ஃ.மீன்களின் அபிப்பிராயம் என்ன?

**மூ.:மின் :** இல்லாமையென்பதொன்று எப்போதும் எங்கேயும் இல்லவே இல்லையென்ற தத்துவ உண்மையை அறியாதோர் இல்லாமையைக் கொண்டே பிரபஞ்சம் சிருட்டிக்கப்பட்டதென்று கூறுகிறார்கள். இல்லாமையில் இருந்து என்ற வேத வசனத்துக்கு இல்லாமையைக் கொண்டு என்று பொருள் கொண்டிருப்பதே இவ்வாதத்துக்கு அடிப்படையாய் இருக்கிறது. மனித அறிவுக்குத் தென்படாமல் இல்லாமையென்ற நிலையில், தோற்றமும் நாமமும் அற்றிருந்த நிலைமையில் இருந்தே சிருட்டியை வெளிப்படுத்தினான் என்பதே வேதவசனங்களின் கருத்தாக இருக்கிறது. மனிதன் தனது கற்பனையில் இல்லாமையுண்டென்று நம்பினாலும் இல்லாமையென்பது இல்லவே இல்லை.

***குர்ஆன் : 76 : 1 , 2***

***ஒவ்வோர் மனிதனுக்கும் (அவன் தோன்றுவதற்கு) முன் ஓர் காலம் செல்லவில்லையா? அதில் அவன் இன்னபொருள் என்றும் கூறுவதற்கில்லாத நிலையில் இருந்தான். கலந்த இந்திரியத் துளியைக் கொண்டு நாம் தான் மனிதனை நிச்சயமாகச் சிருட்டித் தோம். அவனைச் சோதிக்கும் பொருட்டு (அவனை அவனுக்குக் கெடுத்துக் காட்டிச் சாட்சியாக்கும் பொருட்டு) அவனைச் செவியுடையோனாகவும் பார்வையுடையோனாகவும் ஆக்கினோம்.***

இவ்வகை ஆயத்துக்கள் பல உண்டு. இவற்றிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டிய பல உண்மைகள் தென்படுகின்றன. மனிதன் முக்காலங்களையும் மூவிடங்களையும் வகுத்துக் கொண்டவனாய் இருக்கிறான். மனிதன் பிறப்பதற்கு முன் தோற்றமும் பெயரும் அற்றிருந்த ஓர் நிலைமையில் இருந்தே தற்போதிருக்கும் நிலைமையில் தோற்றத்தையும் நாமத்தையும் பெறுகிறான். ஆகவே, முக்காலங்களில் சிக்குண்ட எமக்கு இல்லாமையைக் கொண்டே உருவாக்கினான் என்பதுபோல் தென்படுகிறது. இல்லாதது இருப்பதாகாது என்ற தத்துவ உண்மை எம் அறிவில் பிடிபடாமையே இதற்குக்காரணமாய் இருக்கிறது. முக்காலங்கள், மூவிடங்கள் என்ற திரைகளில் இருந்தும் எப்போது நாம் விடுபடுகிறோமோ அப்போது தான் ஏகமாயுள்ள கடவுளேயன்றி எதுவுமே கிடையாதென்ற உண்மையில் உறுதிபெற எம்மால் முடியும். இல்லாமை என்பதொன்று இல்லாததாகையாற்றான் கடவுள் “ஸமது” தேவையற்றவர் என்ற பெயரைப்பெறுகிறார் என்பதை நாம் ஊன்றி உணரவேண்டும்.



**நீதிபதி :** அவ்லியாக்கள், சூபியாக்கள் என்றெல்லாம் கூறப்படுகிற மக்கள் யாவரும் குர்ஆனை ஏற்றுக் கொண்ட மூ.:மின்கள், சாந்தி பெற்ற நல்லடியார்தான் என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா?

**மூ.:மின் :** ஆம். நிச்சயமாக ஏற்றுக் கொள்கிறேன்.

**நீதிபதி :** அந்த நல்லடியார்கள் சாந்தியை, தன்னிறைவைப் பெறுவதற்காக, ஊண், உறக்கம் குறைந்தவர்களாய் மலைகளிலும் குகைகளிலும், காடுகளிலும் வாழ்ந்து பல இன்னல்கள் மத்தியிலும் பல வருடங்கள் ஜெபதபம் செய்துதான் வெற்றியடைந்தார்களென்று நான் பல நூற்களில் வாசித்துள்ளேன். இவ்விடயம் உண்மைதானா?

**மூ.:மின் :** ஆம். நிச்சயமான உண்மைதான்.

**நீதிபதி :** பத்து, இருபது வருடங்கள், மிகமிகக் கஷ்டப்பட்டுத் தான் அந்த நல்லடியார்கள் தன்னிறைவைப் பெற்றார்களென்றால், மனைவி மக்களை இழந்து தனிமையில் காட்டில், குகையில் வாழ்ந்துதான் தன்னிறைவைப் பெற்றார்களென்றால், இவர்களைப் பின்பற்றி உலகமக்கள் எல்லோராலும் வாழமுடியாதல்லவா? அப்படியானால் இந்த நல்லடியார்களின் கொள்கையும் செயல்களும் தான் உலக மக்களைச் சாந்தி சமாதானத்தில் தரிபடுத்தும் என்பதை எப்படி ஏற்றுக்கொள்வது? குர்ஆனின் கொள்கை விளக்கம் உலக மக்கள் யாவருக்கும் சாந்திக்குரிய வழியைக் காட்டும் என்று நீங்கள் கூறுவதை ஏற்க முடியாமலிருக்கிறதே?

**மூ.:மின் :** உலக மக்கள் யாவருக்கும் குர்ஆன் சாந்திக்குரிய வழியைக் காட்டும் என்பதில் சந்தேகமில்லை. நீதிபதியாகிய நீங்கள் குர்ஆனை எடைபோட எடுத்துக் கொண்ட அடிப்படை சூபிகளின் வாழ்க்கை வரலாறுதான். இந்த அடிப்படையில் குர்ஆனை நோக்குவது தவறு என்பதை முதலில் கூறிவிடுகிறேன். அடுத்ததாகச் சூபிகளுடைய வாழ்க்கை வரலாறுகளை ஓர் கணம் நோக்குவோம். றசூல்(ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின் சுமார் முப்பது வருடங்கள் தீனுல் இஸ்லாத்தின் மூலக் கொள்கையான ஏகத்துவம் இருந்திருக்கிறது. அதன் பின் இஸ்லாமியர்கள் பல கட்சிகளாய்ப் பிரிந்து பலவிதமான யூகங்களைக் கையாண்டு, ஒவ்வோர் கூட்டத்தினரும் தத்தம் கட்சியே சரியானதென்று நம்பி

வாழ்ந்திருக்கிறார்கள். மிகக் குறுகலாய்க் கூறினால் இஸ்லாமிய மக்கள் தௌஹீதென்ற ஏகத்துவத்தை(ஷிர்க்) இணை கற்பித்த லென்றும் ஷிர்க்கைத் தௌஹீதென்றும் விளங்கிக் கொண்டிருந்த காலங்களில்தான் பெரும்பாலும் சூபிகள், அவ்லியாக்கள் என்றெல் லாம் கூறப்படுகிற நல்லடியார்கள் தோன்றியிருக்கிறார்கள். இன்றும் ஏறக்குறைய இந்த நிலைதான் இஸ்லாமிய மக்களிடையே இருந்து கொண்டிருக்கிறது. இவ்வகைச் சூபிகள் இறை வழிகாட்டலால் உண்மையைப் பெற்றுக் கொண்டாலும் அவ்வுண்மையில் ஊறி வாழ்க்கையை நடாத்த வழிகாணாமல் தான் காட்டுக்கு மேட்டுக் கெல்லாம் போனார்கள். இவர்களுடைய உற்றார் உறவினர், கிராம மக்கள், சமூகம் எல்லாம் அந்த நல்லடியார்களின் குறிக்கோளுக்குப் பெரும்பாலும் முரணாகவே இருந்திருக்கிறது. இந்த நல்லடியார் களின் கொள்கை அம்பலமான போது பலர் கொலை செய்யப் பட்டார்கள். நாடு கடத்தப்பட்டார்கள், மார்க்க விரோதிகளாய்க் கணிக்கப்பட்டார்கள். எனவே தான் பெரும்பாலார் ஒதுங்கி வாழ முற்பட்டிருக்கிறார்கள். மேலும் சமூக மத்தியில், தங்களின் கொள்கை விளக்கம் வெளியா னால் அளப்பரிய இன்னல்களை அடைய வேண்டி ஏற்படுமேயென்ற அச்சம்தான் ஒதுங்கி வாழக் காரணமாய் அமைந்திருக்கிறது. இவை போன்ற இன்னும் பல காரணங்களைக் கூறலாம். சூபிகளின் வாழ்வுதான் குர்ஆனில் விபரிக்கப்பட்ட வாழ்க்கை முறையென்று கொள்வது தவறாகும். சமூகமக்கள் கொள்கையை ஒப்புக் கொண்டவர்களாய் இருந்திருந்தால் பெரும் பாலும் சூபிகள் சமூகத்தை விட்டும் ஒதுங்கிவாழ முற்பட்டிருக்க மாட்டார்கள்.

ரசூல்(ஸல்) அவர்களுடைய தோழர்கள் ஏறக்குறைய எல்லோருமே சூபிகளாக, அவ்லியாக்களாகத்தான் இருந்திரு க்கிறார்கள். இவர்களில் பலர் மறுமையில் ஏற்பட இருக்கும் தண்டனைகளைக் கேள்விப்பட்டு அச்சமடைந்து ஒதுங்கிவாழ முற்பட்ட போதெல்லாம் ரசூல்(ஸல்) அவர்களால் அறிவுறுத்தப் பட்டுச் சமூகத்தை விட்டொதுங்காமல் வாழ்ந்து வெற்றி பெற்றிருக் கிறார்கள். இன்பதுன்பங்களில் சமநிலை காணும் மனோபக் குவத்தைப் பெற்றிருக்கிறார்கள். சமூகத்திலுள்ள மூடப் பழக்கவழக் கங்கள், தவறான கொள்கைகள், தவறான செயல்களை எதிர்த்துப் போராடி வெற்றியும் பெற்றார்கள். இம்மக்களில் பலர் ஆரம்ப காலத்தில் அச்சமடைந்து ஒதுங்கிவாழ முற்பட்டபோதெல்லாம் தௌஹீதின் பூரண உண்மை அறிவில் பிடிபடாமைதான்.



ரசூல்(ஸல்) அவர்களுடைய தெளிவான வழிகாட்டலில் உறுதியாய் வாழ்வை அமைத்துக் கொண்டதனால் அச்சம் தீர்ந்த நல்லடியார்களாக மாற்றமடைந்திருக்கிறார்கள். இவர்களில் எவரும் மனைவி மக்களை உதறித்தள்ளிவிட்டு காட்டில் குகைகளில் வாழ்ந்தவர்களல்ல. பெரும்பாலான சூபிகள் வழிகாட்டற் பிழையினால் ஒதுங்கிவாழ முற்பட்டிருக்கிறார்கள். எனவே, தௌஹீதை ஏற்றுக் கொண்டால் காட்டில், தனிமையில், பிச்சைக்காரனாய் வாழ நேரிடும் என்றெல்லாம் நம்புவது அறியாமையாகும். குர்ஆனும் அதன் கொள்கை செயல் விளக்கங்களும் (ஆகிறாவில்) மறுமையில் சாந்திபெற மட்டும் தரப்பட்டவையல்ல. உலக வாழ்விலும் சாந்தி சமாதானத்துக்குத் தன்னிறைவுக்கு வழிகாட்டுவதற்காகவே குர்ஆனும் கொள்கையும் தரப்பட்டிருக்கிறது. தங்களுள்ளத்தைத் தாங்களே அடக்கியாளும் திறமையில்லாத மக்கள் காட்டில் தனிமையில் வாழ்ந்தார்களென்றால் இது குர்ஆனுடையவும் கொள்கையுடையவும் குற்றமேயல்ல.

**நீதிபதி :** ரசூலின் மறைவுக்குப் பின் சுமார் 30வருடங்கள் தான் தீனுல் இஸ்லாத்தின் கொள்கை இருந்ததென்றும் அதன் பின் பொய் தலைதூக்கிவிட்டதென்றும் கூறினீர்கள். இதற்கு ஆதாரங்க ளுண்டா?

**மு:மீன் :** ஆம். ஆதாரங்களுண்டு. என்னால் எழுதப்பட்ட ஈமானின் உண்மையை நீ அறிவாயா என்ற நூலிலும் திருக்குர்ஆன் தீர்ப்பு 2ம் பாகத்திலும் பல ஆதாரங்களைக் காட்டி நிருபணம் செய் துள்ளேன்.

ஒருசில ஆதாரங்களை மட்டும் இங்கே தருகிறேன்.

*ராஜப்ழஷ ஷ்*

*ரஹயஜிமேஷ்றசபயஷ எயஷய ரஹயகஷ வடஷ ரஹயக்கஷ கபடஷ வடஷ ரஹயஜஷஜபதஷற் மல்ஜஷஜடஹ்றசபடஷ ரஹயக்கஷகபதற் மடஹ்றஇச மல்ஜஷஜடஹ்றசபடஷ ரஹயக்கஷ ம்ற்கஷ. மஜடஷகபடஷ நகஹடிமோஷ கஉடபடபல்கஷ வடஷத் துயஷ(ழயஷ) மடஹ்றசஷ ீதபடஹஹ்றசஷ.*

*அறிவிப்பவர் : உமர்(ரலி)*

*ஆதாரம் : திர்மிதி*

*ாஜப்ழஷ ஷ்*

*வடஷ ரஹைஜஷஜடஹபடஷ றபயஹகஜஷ க்கஷகஜ் ம்DEMOஷல்றசஷ ,ஊறஷ ற்கஷ மஜடஷ கபடஷ மஉர்ஹபஇகடிமோஹறபடபல்கஷ வடஷத் துயஷ(ழயஷ) மடஹ்றசஷ ூதபடஹஹ்றசஷ.*

*அறிவிப்பவர் : ஸபீனா (றலி)*

*ஆதாரம் : அபூதாவூத், திர்மிதி*

*ாஜப்ழஷ ஷ்*

*,எஷஜ கஹஹ்றஷைகஷ 12 றய்கஹறஷைசஷ றஹயகஷ டஇஉடிமோயஷ கஇறஜை ஜ்கஷ ம்தஷதயஷ டஹடிமோஷஎஷஜஜஹறட்கஷ ,ஊறஷற்கஷ. மடஹ்றசஷ மஇடடஊகஷ ற்இதஸபறசஹற ,ஊகஷகஹஹ்றசஷ. மஜடஷகபடஷ டபஸகக்கஷ ற்ஒகஷகக்கஷ வ்தஷகலஷல்டபல்கஷ வடஷத் துயஷ(ழயஷ) மடஹ்றசஷ ூதபடஹஹ்றசஷ.*

*அறிவிப்பவர் : ஜாபிர் இப்னு ஸமூரா(றலி)*

*ஆதாரம் : புஹாரி, முஸ்லீம், அபூதாவூத், திர்மிதி*

இன்னும் பல ஆதாரங்களைத் தரலாம். விரும்பவோர் எமது முதல் நூற்களை வாசித்துத் தெளிவு பெறுக.

**நீதிபதி :** இந்தப் பிரபஞ்சத்தை அல்லாஹ்தான் படைத்தாரா?

**மு:மீன் :** ஆம். அல்லாஹ்தான் படைத்தார். ஆனால் சிருட்டியான மனிதன் சிருட்டிப் பொருட்களைப் படைப்பது போலல்ல. படைத்தல், காத்தல், அழித்தல் என்பவை முக்காலத்திலும் மூவிடங்களிலும் கட்டுண்டு வாழும் மக்களுக்குரிய விடயமாயிருக்கிறது.

**நீதிபதி :** கடவுள் எப்படி வேண்டுமானாலும் படைக்கட்டும் படைத்தார், படைக்கிறார் என்னும் போது அவர் தேவையுடைய ஓர் தொழிலாளியென்று ஏற்படுகிறது. தேவையுடைய ஓர் தொழிலாளி தேவையற்ற, நிரப்பம் பெற்ற கடவுளாய் எப்படி இருக்க முடியும்?

**மு:மீன் :** தங்களுடைய கேள்விக்கு சகோதரர் அத்வைதியார் அவர்களே முன்பு விடை தந்துவிட்டார்கள். இறைவன் படைக்கிறான் என்றால் சிருட்டி சிருட்டியைப் படைப்பது போலல்ல என்று நானும் முன்பு கூறினேன். படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களும் விவர்த்த காரணகாரியப் பொருத்தத்தைச் சேர்ந்தவை. இறைவன் விகாரப்படாமலும் கெட்டழியாமலும் என்றும் இருந்தபடியே



இருந்து கொண்டுதான் படைத்தல், காத்தல், அழித்தலென்ற முத்தொழில்களையும் கையாளுகிறான். இந்த முத்தொழில்களும் உண்டென்று கொள்வது, முக்காலங்களை வகுத்துக் கொண்ட மனிதனின் மருட்சியாய் இருக்கிறது. நிகழ்காலம் மட்டுமே உண்டென்று கொண்டால் வேறுபட்ட முத்தொழில்கள் அமையா. கடவுள் தேவையற்றவர் என்னும் போது அவர் இயங்குகிறாரா? இல்லையா? என்பதை மனிதனின் சாதாரண அறிவினால் அறிய முடியாது. படைத்தல், காத்தல், அழித்தல் என்பவை காலத்தை வகுத்துக் கொண்ட மக்களிடத்தில் உண்மைதான். அழித்தலே படைத்தலென்றும் படைத்தலே அழித்தலென்றும் பெயர் பெறுகிறது. இரு சொற்களும் ஒரேவிடயத்தையே இருவகையாய் விளக்குகின்றன. நிகழ்காலம் மட்டுமே உண்டென்று கொண்ட அறிஞர்களிடத்தில் விஷயம் வேறுவகையாய் இருக்கிறது. மிகமிக நுட்பமாய் ஆராய்ந்தாலேயன்றி இவ்வுண்மை திடீரென அறிவில் அமையாது. இதை விளக்குவதைவிட விளக்காமல் விட்டுவிடுவதிலேயே பெரும்பாலான மக்களுக்கு நன்மையுண்டு. இவ்விடயம் அனுபவத்தில் கண்டறிய வேண்டிய ஒன்றாகும்.

கடவுள் (படைக்கிறார்) இயக்குகிறாரென்றால் அவரும் இயங்குகிறார் என்று நம்புகிறோம். இந்தநம்பிக்கை எமது வாழ்க்கை அனுபவத்தை அடிப்படையாய்க் கொண்ட அனுமானமாகும். சிருட்டி தன் வாழ்க்கை அனுபவ அடிப்படையில் நின்று கொண்டு இறைவனின் செயலை எடைபோட முற்படுவது தவறாகும். இதை ஓர் உதாரணம் மூலம் ஓரளவு விளக்கலாம்.

நாம் உறங்கும் போது பற்பலவகையான நல்ல, தீய கனவுகளைக் காணுகிறோம். அனுபவத்தில் கண்டறிந்த பொருட்களையும், அனுபவத்தில் கண்டறியாத பல பொருட்களையும் கனவில் காணுகிறோம். கனவின் போது இவற்றை எம் அறிவில்தான் காணுகிறோம். இவற்றை யாரும் சிருட்டித்ததாக நாம் காண்பதில்லை. இவற்றை யாரும் இயக்குவதாயும் காண்பதில்லை. இல்லாதது இருப்பதாகாது என்ற விதிப்படி, நாம் கனவில் கண்ட நல்ல தீய பொருட்கள் யாவும் எம் அறிவில் கனவைக் காண்பதற்கு முன்பே தரிபட்டிருந்தவைதான். கனவு கலைந்த பின்பு நாம் அந்தக் கனவுலகச் சிருட்டிகளைக் காண்பதில்லை. ஆகவே கனவின் போது தோன்றி இருந்து, விழிப்பின் போது மறைந்துவிடும் சிருட்டிகள் யாவும் எம் அறிவிலேயே தரிபட்டிருந்தன என்பதை நாம் ஊன்றி

உணர வேண்டும். இந்தக் கனவு நிகட்சியில் படைத்தல், காத்தல், அழித்தலென்ற காலத்தால் முன் பின்னான செயல்கள் ஏன் தென் படுகின்றன? எமது வாழ்க்கை அனுபவம் என்ற ஓர் திரை எமதறிவை மூடிக் கொண்டிருப்பதனால் தென்படுகின்றன. வாழ்க்கை அனுபவ அறிவு காலத்தைப் பிரித்துக் கொண்டதனால், ஒவ்வோர் நிகழ்சி யையும் முன்பின்னாகவே காணுகிறது. இந்த அறிவு காலத்தைப் பகுக்காமல் நிகழ்காலம் மட்டுமே உண்டென்று உறுதிப்பட்டிருந்தால், தோன்றல், இருத்தல், மறைதல் என்பவை ஒரே விஷயம்தான் என்பதை உணர்ந்து கொள்ளும்.

இப்படி உண்மையை உணர்ந்து உறுதிப்பட்ட அறிவினால் "ஹுரூர்" மாய்கையென்பதன் உண்மையைப் பூரணமாய் உணர்ந்து கொள்ள முடியும். நாம் கனவில் அனுபவம் பெறும் விடயங்களில் எமது வெளிப்புலன்கள் தொழிற்படுவதில்லை. வெளிஉலகில் எமது புலன்களைக் கொண்டு எப்படி அனுபவத்தைப் பெறுகிறோமோ அதைப் போலவே எமது சூட்சும புலன்களைக் கொண்டு சூட்சும உலகான கனவைப் பெறுகிறோம். விழிப்புலகுக்கும் கனவுலகுக்கும் சிற்சில வேறுபாடுகள் உயர்வுதாழ்வுகள் இருப்பினும் இவ்விரு நிலைகளும் வெறும்(ஹுரூர்) மாய்கையேதான். இவ்வித மயக்கு களில் சிக்காமல் நான் என்னும் தன்னுணர்வு எப்போது தனிமை பெறுமோ அப்போதுதான், படைத்தல், காத்தல், அழித்தல் என்ற சொற்கள் மயக்குடைய மனிதருக்காகப் பாவிக்கப்பட்டுள்ளன என்பது தென்படும். கடவுளை அறிய வேண்டிய முறைப்படி அறியலாமே யன்றி அவரை முற்றாய் அறிய எம்மால் முடியாது. அறிய வேண்டிய முறைப்படி அறிவதற்காகவே கடவுள் படைத்தல், காத்தல், அழித்த லென்ற முத்தொழில்களைச் செய்வதாய் வேதங்கள் விபரிக்கின்றன. இவ்விபரங்கள் கடவுள் தேவையுடையவர் என்பதை வலியுறுத்தா. அறிவுக்கெட்டாத விடயத்தை மனிதன் பூரணமாய் ஒப்புக்கொள்ளவே மாட்டான். எனவேதான் மனித அறிவுக்கும் அனுபவத்துக்கும் அமையக்கூடிய வகையில் வேதங்கள் இறைவனைப் பற்றிய விபரங்களை உருவகப்படுத்தி விபரிக்கின்றன. இவ்விடயத்தில் இன்னும் சிறிது கூற விரும்புகிறேன்.

இயக்குவதும் இயங்குவதும் அறிவில் அமைவதானால் இரு பொருட்கள் அவசியமாகும். இயங்கும் பொருட்கள் இல்லை யானால் இயக்கமுண்டா? இல்லையா? என்பதைக்கூட அறிய முடியாது. மூ∴மீன்களுடைய கலிமாவினால் உணர்த்தப்படும்



உண்மை அல்லாஹ்வையன்றி அவருடன் வேறு எதுவுமே இல்லையென்பது தான். இதன்படி உள்ளது இரண்டில்லாத ஏகமே தானென்றால் அதனிடத்தில் இயங்குதல் இயக்குதல் என்றவினை கள் இருக்க முடியாது. ஆனால் அறிவிடத்தில் சிருட்டிகளின் இயக்கம் இருப்பதாய்த் தென்படுகிறது. சிருட்டி தன்னியக்க மற்றிருப்பதால் அதை இயக்கும் ஓர் சக்தி இருந்தே ஆகுமென்று அறிவு தீர்ப்புக் கட்டுகிறது. இயங்கும் பொருளைச் சிருட்டியாயும் இயக்கும் பொருளைக் கடவுளாயும் அவ்வறிவு நம்புகிறது. இயக்குவ தென்பதும் இயங்குதல் தான் என்று அறிவு கூறுகிறது. இவ்வகை அறிவுள்ள மனிதருக்காகத் தான் கடவுள் படைக்கிறார், பாதுகாக் கிறார், அழிக்கிறார் என்று கூறப்படுகிறது. இவ்விபரம் பாமர மனிதருக்கும் நடுத்தர அறிவுடை யோருக்குமுரியதாகும். அறிஞர் களில் உயர் பதவியுடையோரின் விபரம் இங்கு நமக்கவசியமில்லை.

மூ∴மீன்களுடைய கலிமா இவ்விபரத்தை மிக நாசூக்காய் விளக்கிக் கொண்டிருக்கிறது. "லாஇலாஹ" என்பதைக் கொண்டு சர்வ பிரபஞ்சமான சிருட்டியுலகை (தன் உடலையும்) எப்போது மறந்து விடுகிறோமோ அப்போதே "ஹுரூர்" என்ற மாய்கை அழிந்து விடும். பகுத்து அறியும் பகுத்தறிவும் அழிந்துவிடும். அதாவது பகுத்தறிவென்ற வட்டத்தைக்கடந்த நூர்உருவாகிவிடும். மாய்கை யில் இருந்து விடுபட்ட ஆத்துமா (றூஹு) அதேகணம் தன்னைத் தானே உணர்ந்து கொள்ளும். லாஇலாஹ என்பதைக் கொண்டு தன்னால் அழிக்கப்பட்ட சர்வபிரபஞ்சமும் தன்னில் தரிபட்டிருந்ததே என்பதையும், தன்னுடைய கற்பனையால் உருவாக்கிக் கொண்ட நாமங்களின் வெறும் தோற்றப்பாடே பிரபஞ்சமென்பதையும் அந்த ஆத்துமா உணர்ந்து கொள்ளும். அதாவது பகுத்தறிவு இறந்துவிட்ட அதே வேளை "இல்லல்லாஹ்" என்பதைக் கொண்டு நூர் என்ற உண்மையான அறிவு உதயமாகிவிடுகிறது. இந்த அறிவிடத்தில் அழிந்ததும் அழியாமலிருப்பதும் தன்னுடைய எண்ண அலைகளால் உருவான மாயாதத்துவமே என்பது உறுதியாகிவிடும். இந்த அறிவிடத்தில் படைத்தல், காத்தல், அழித்தல், அவதாரம், மறுபிறவி போன்ற சொற்கள் கருத்தற்றவையாய் அமையும். அதாவது நிலையாய் இருந்து கொண்டிருக்கிற எனக்கு நான் ஏற்படுத்திக் கொண்ட நாமங்களின் (தோற்றத்தை) கருத்தையே பிரபஞ்சமாய்க்

காணுகிறே னென்று அந்த ஆத்துமா உணர்ந்து கொள்ளும். இதுவே இறைவனின் "தஜல்லி" (இறையுணர்வு) என்று கூறப்படுகிறது. மனிதன் தேடிக் கொண்டிருந்த சாந்தி, சமாதானம், தன்நிறைவு, நிறைநிலை, சுதந்திரம்பெறும் இடம் இதுவே.

இவ்விடயத்தை மனித அறிவுக்கேற்றபடி இலகுவாய் விளக்கிக்காட்டுவதே வேதநூலின் கடமையாய் இருக்கிறது. 124,000 நபிமார்களும் "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற மூலமந்திரத்தைக் கூறி அதன் பக்கம் மக்களை அழைத்ததெல்லாம் சாந்தியின், தன்னிறைவின், நிறைநிலையின், உண்மையான பூரண சுதந்திரத்தின் பாதையைக் காட்டிக் கொடுப்பதற்காகத்தான், படைத்தல், காத்தல், அழித்தல் என்பவை காலத்தை வகுத்துக் கொண்ட மக்களின் மருட்சியாய் இருக்கிறது.

(லாஹிர்) வெளிப்பாடாய்த் தோன்றுபவனும் (பாதின்) மறைந்தது போல் இருப்பவனும் சர்வ வல்லமையுடையவனும், இணையில்லாத அல்லாஹ் மட்டுமே என்பதை உணர்ந்து கொண்டால், ஆசை, தேவை, பற்று எல்லாமே ஒழிந்துவிடும். ஆசைப்பட அன்புகொள்ள, விரோதம் பாராட்ட என்னையன்றி எதுவுமே கிடையாதென்று கண்ட ஆத்துமா எதை ஆசைப்படும்? எதை அன்பு கொள்ளும்? எதை விரோதம் பாராட்டும்? இதற்கு ஓர் உதாரணம் எடுத்துக் கொள்வோம்.

என்னுடலையும் உயிரையும் வெவ்வேறு என்றில்லாமல் ஏகமான ஒன்றாகவே நம்பியிருக்கிறேன். என்னுடலை அழகாய், வலிமையுடையதாய், நோயற்றதாய், வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடலை அழித்துவிட எவர் முற்பட்டாலும் நான் அதை விரும்பமாட்டேன். இது ஏன்? உடலோடு நான் கொண்டுள்ள பற்று, ஆசை, அன்புதான் காரணம். இந்தப் பற்று எனக்கு ஏன் ஏற்பட்டது? என்னுடைய உடல் என்போன்ற ஓர் உண்மைப் பொருள் என்றும் நானே உடல் என்றும் என்னையறியாமலே நான் நம்பியிருப்பதனால் தான் ஏற்படுகிறது. என்னுடல் நிழலைப் போன்ற அல்லது கண்ணாடியில் தென்படுகிற வெறும் தோற்றப்பாடே யென்றும், அது தோன்றி மறையும் வெறும் கற்பனையேயென்றும், நான் எவ்வித கட்டுப்பாடுமற்ற ஆத்துமாவாக இருக்கிறேனென்றும்



உணரும் போது என்னுடலைப் பற்றிய எவ்வித பற்றும் வெறுப்பும் எனக்கேற்படாது. என்னையும் என்னுடலையும் ஒன்றை விட்டொன்றை வேறாய்க் கணிப்பதனாலேயே பற்று ஆசை ஏற்படுகிறது. உடலுக்காகவே பெரும்பாலார் வாழ்வதன்காரணம் இதுதான். உடலுக்காக மட்டுமே வாழ்வு என்றால் கால்நடைகளுக்கும் எமக்கும் எவ்வித பேதமுமே இல்லை. இதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. இதே போல உடலை விடுத்து உயிருக்காக மட்டும் வாழ்வதையும் இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

தோன்றி மறைவதானாலும், கற்பனையானதானாலும் என்னுடல் என்னுடையதேயென்று நான் நம்புவதும் உண்மையானால் நான் எனக்காகவும் என்னுடலுக்காகவும் வாழவேண்டும். இது சாதிக்கக்கூடிய ஒன்றுதானா? ஆம் நிச்சயமாகச் சாதிக்கக்கூடிய ஒன்றுதான். மனிதன் எவ்வளவு சிறந்த அறிவாளியாக இருந்தாலும் துவித உணர்விலிருந்து திடீரென விடுபட முடியாதவன் என்பதை அறிந்துள்ள இறைவன், உடலுக்கும் உயிருக்கும் சாந்திதரக் கூடிய வழிவகைகளை விளக்குவதற்காகவே ஓர் நிரப்பமான வேதத்தை அருளியிருக்கிறான்.

உடலுக்காக வாழும் உபாயங்களை விளக்கும் கல்வியை (ஷரீயத்) "அதாலத்" நீதி நிர்வாகம் என்றும் உயிருக்காக வாழும் உபாயத்தை விளக்கும் கல்வியை ஏகத்துவம், தௌஹீது, அத்வைதம் என்றும் கூறுகிறோம். இவ்விரு கல்விகளும் ஒருங்கே அமையப் பெற்ற ஓர் வேதநூல் குர்ஆன் மட்டுமே. இந்த நூல் எல்லாஇன மக்களும் எக்காலத்திலும்கைக்கொண்டு வாழக்கூடிய ஓர் இலகுவான வழியை, அறிவு ஏற்றுக்கொள்ளக் கூடிய பூரணமான ஆதாரங்களுடன் விளக்கிக் கொண்டிருக்கிறது. குர்ஆனுடைய (சுருதிகள்) ஆயத்துக்கள். அவதாரம், மறுபிறவி, ஜென்ம பாவக் கொள்கை போன்ற விடயங்களை வன்மையாகக் கண்டித்துக் கொண்டிருக் கின்றன.

**நீதிபதி :** அப்படியானால் அவதாரம், மறுபிறவி போன்ற விடயங்களை விளக்கமளிக்கும் உபநிடதம், பகவத்கீதை போன்ற நூற்களெல்லாம் மனித யுக்தியினால் உருவாக்கப்பட்டவையென்று கூறுகிறீர்களா?

**மூ:மீன் :** இல்லை. உபநிடதங்களையும் பகவத்கீதை போன்ற நூற்களையும் நடுநிலை நின்று ஆராயும் போது, அவையாவும் நபிமார்களால் உபதேசிக்கப்பட்ட தௌஹீதென்ற ஏகத்துவக் கொள்கையைத்தான் கூறிக்கொண்டிருக்கின்றன. ஆயினும் அவற்றில் மனித யூகங்களும் இடையிடையே கலப்படம் செய்யப்பட்டுள்ளன என்பதே என்வாதம். இது மனிதர்களின் தவறேயன்றி ஏகத்துவ மென்ற அத்வைதக் கொள்கையின் தவறல்ல. கண்ணபிரான், புத்தர் மற்றும் ரிஷிகள் போன்றோர் அவ்வக்காலத்து நபிமார்களாய் இருந்திருக்கலாம். இந்த மக்களின் கொள்கை விளக்கங்கள் பெரும்பாலும் அவர்கள் உயிரோடிருந்த போது எழுதப்பட்டவையல்ல. நபிமார் வராத எந்த ஓர் ஊரும் (சமூகமும்) இருந்ததில்லையென்று குர்ஆன் கூறிக்கொண்டிருக்கிறது. மேலும் நபிமார்களுக்கு அவரவர் பாஷையிலேயே "சுஹ்பு"கள் (கட்டளைகள்) வேதங்கள் அருளப்பட்டதாகவும் குர்ஆன் விபரம் தந்துகொண்டிருக்கிறது. இதன்படி கண்ணபிரான், புத்தர் போன்றோரின் உபதேசங்களையும் வாழ்க்கை வரலாறுகளையும் ஒப்பிட்டு நோக்கினால் அவர்கள் நபிமார்களாய் இருக்கலாம் என்பதும், அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் சிற்சில ஞான தத்துவங்களை அடிப்படையாய்க் கொண்டு உருவகப் படுத்திக் கூறப்பட்டுள்ளன என்பதும் தென்படுகிறது. வேதங்களின் அடிப்படையை யாரும் குறைகூறுவதற்கில்லை. வேதங்களின் கொள்கை, செயல்விளக்கங்கள், பெரும்பாலும் இருட்டடிப்புச் செய்யப் பட்டுள்ளன என்பதே எனது கருத்து. உதாரணமாக.

புத்தர் சிலை வணக்கத்தை வன்மையாய்க் கண்டித்திருக் கிறார். சிலை வணக்கம் செய்யக்கூடாதென்றே கூறினார். ஆனால் இன்று புத்தரைப் பின்பற்றும் பெரும்பாலார் புத்தரையே சிலையாக வடித்து அந்தச் சிலைக்கே சிரவணக்கம் செலுத்துகிறார்கள். அவர்களில் சிலை வணக்கத்தை மறுப்போரும் சிலருண்டு. பௌத்த மதம் இன்று "ஹீனயானம்" "மஹாயானம்" என்று இரு பிரிவு களாய்க் காட்சியளிக்கிறது. இயேசு ˉ̈ஈஸா(அலை) அவர்கள் உருவவழிபாட்டை, சிலை வணக்கத்தை வன்மையாய்க் கண்டித் தார்கள். ஆனால் இன்று இயேசுவைப் பின்பற்றும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இயேசுவைக் கடவுளாயும் கடவுளின் குமாரராயும்



கற்பனை பண்ணிச் சிலைகளை உருவாக்கி அச்சிலைகளையே வணங்குகிறார்கள். சிலுவையைச் சுமந்து கொண்டால் (கழுத்தில் சிலுவையைச் சுமந்து கொண்டால்) நாம் ஜென்மபாவத்திலிருந்தும் விடுதலை பெற்று பரிசுத்தவான்களாகலாமென்று நம்பிச் செயல் படுகிறார்கள். இன்னும் எவ்வளவோ கூறலாம். முன்சென்றுபோன நல்லடியார்களான நபிமார்கள், இறை முன்னிலையில் மக்கள் யாவரும் சமமானவர்களேயென்றும் அவரவர் கிரிகைக்கும் விசுவாசத்துக்குமேற்றபடியே உயர்வு தாழ்வு கணிக்கப்படுகிற தென்றும் கூறினார்கள். ஆனால் அந்த நல்லடியார்களை பின்பற்று கின்றோமென்று கூறிக்கொள்கிற மக்களின் (விசேடமாய் இந்துக் களின்) நடையுடை, வணக்க வழிபாடுகளில், சமத்துவத்தை, சகோத ரத்துவத்தைக் காணவே இல்லை. பூர்வீக வேதங்களைப் பின்பற்றும் எஹுது, நஸாறாக்களின் சொல், செயல், கருத்துக்களிலும், இறை முன்னிலையில் அரசனும் ஆண்டியும் சமமேயென்ற கோட்பாடு தென்படவேயில்லை. சுருக்கமாய்க் கூறினால் வழி காட்டிகளான நல்லடியார்களின் சொல், செயல் கருத்துக்களுக்கு முரணாகவே மனித இனம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் என்ன? நல்லடியார்களின் சொல், செயல், கருத்துக்களில் இடைச்செருகல்கள் புகுத்தப்பட்டமைதான் காரணம், சிந்தனையின்றிச் செயல்படுவது இரண்டாவது காரணம்.

இவ்வகையில் நோக்கினால் இன்றுள்ள மக்கள் சமூகங் களில் இஸ்லாமிய சமூகம் மட்டுமே ஓரளவு உயிருடையதாய் இருப்பது தென்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இன்றுள்ள வேதங் களில் உலகுக்குப் பொருத்தமானது குர்ஆன் மட்டுமே என்பதும் தெளிவாகிறது. அது மட்டுமல்லாமல் நல்லடியார்களான நபிமார் களிலும், சொல், செயல், கருத்துக்களைப் புரட்ட முடியாதபடி, இடைச்செருகல்களை நுழைக்க முடியாதபடி, மனப்பாடமிட்டும் எழுதி யும் அமுல்படுத்தியும் வெற்றி பெற்ற பெருமை மகான் முஹம்மது நபி அவர்களுக்கு மட்டுமே என்பதும் புலனாகிறது. உலக முஸ்லீம்கள் யாவரும் இஸ்லாம் 5 காரியங்களில் தரிபடுத்தப் பட்டதென்பதை ஏகமனதாய் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவற்றில் முதலாவதாகக் கொள்கையும் இரண்டாவதாக (அமல்)

செயல்களும் இடம்பெறுகின்றன. இன்றுள்ள முஸ்லிம்களில் பெரும்பாலும் கொள்கையில் தான் வேறுபாடு தென்படுகிறதேயன்றிச் செயல் (அமல்)களில் பெரும்பாலும் வேறுபாடில்லை. கொள்கையில் வேறு பாடிருப்பதனால் முஸ்லீம்கள் பலகூட்டங்களாக பிரிவுபட்டிருக் கிறார்கள். ஆயினும் முஸ்லீம்களின் செயல்களில் சமத்துவம், சகோதரத்துவம், இன்றும் பேணப்பட்டுக் கொண்டேயிருக்கின்ற தென்பதை மறுக்க முடியாது. தொழுகையின் போது, அல்லது வேறோர் மதக்கடமையில் ஈடுபடும் போது அரசனும் அவனுடைய அடிமையும் சமத்துவமாய்ச் சகோதரர்களாய்த்தான் நடந்து கொள்கி றார்கள். அதாவது சமத்துவத்தைச் சகோதரத்துவத்தை இன்றும் செயல் மூலம் உலகுக்குணர்த்திக் கொண்டிருப்பது இஸ்லாம் மட்டுமே. உலகிலுள்ள வேறு எம்மதத்துக்கும் இந்தப் பெருமையும் வலிமையும் கிடைக்கவே கிடையாது.

ஏறக்குறைய எல்லா மதங்களிலும், தொழுகை(வணக்கம்) நோன்பு (உண்ணாவிரதம்) “ஸக்காத்” (ஈகை அல்லது தர்மம் செய்தல்) இறையில்லம் சென்றடைதல்(ஹஜ்ஜு) போன்ற கடமைகள் இருக்கவே செய்கின்றன. ஆயினும் இஸ்லாத்தின் செயல்களில் (அமல்களில்) சமத்துவம், சகோதரத்துவம், தரிபடுத்தப்பட்டிருப்பது போல் வேறு எம்மதச்செயல்களிலும் தரிபடுத்தப்படவேயில்லை. இவை ஒவ்வொன்றையும் தனித்தனியே விபரிப்பதானால் மிக நீண்ட நேரம் அவசியமாகும். சுருக்கமாய்க் கூறினால் ஆத்மார்த்த விடயம் சாந்தி, தன்னிறைவு ஓர் புறமிருக்க, உலக விவகாரங்களிலாவது சமத்துவம், சகோதரத்துவம் நிலைபெற வேண்டுமானால் இஸ்லாத் தின் செயல்களை(அமல்களை)க் கைக்கொண்டொழுகுவதைத் தவிர வேறு வழி இல்லவே இல்லை. இஸ்லாத்தின் செயல்கள் உலகை மட்டும் நோக்காகக் கொண்டவையல்ல. அவை ஆத்மீக உலகை நோக்கியும்தான் தரப்பட்டுள்ளன. முஸ்லீம்கள் கொள்கையை விளங் கிச்செயல்படாமையால் ஆத்மீகப் பலனை இழந்து நின்றாலும் கூட, அவர்களுடைய செயல்முறைகள் உலக சமத்துவத்துக்குச் சகோதர த்துவத்துக்கு வழிகாட்டுகின்றன என்பது நூறுவீதமும் உண்மையே.

இஸ்லாத்தின் கடமைகளுக்கெல்லாம் விசுவாசம் ஷர்த்தாக இருக்கிறது. விசுவாசமில்லாத அல்லது விசுவாசத்தை உறுதிப்படுத்



தாத (அமல்கள்) செயல்கள் உயிரற்றவையாய், மறுமையில் பிரயோ சனம் தரமுடியாதவையாய் சாந்தி பாதையில் அழைத்துச்செல்ல முடியாதவையாய் அமைந்து விடுகின்றன. கொள்கையை விளக்கி அதில் தரிபாடடையும் நோக்குடன் செயல்படாவிடில் அச்செயல்கள் உயிரற்றவை என்பது உண்மையேயாயினும் உலக விவகாரங்களில் அச்செயல்கள் மனிதனைச் சமத்துவத்தின் பால், சகோதரத்துவத் தின்பால், அழைத்துச் செல்கின்றன என்பது சிந்தனையாளர்களுக்கு மறைந்த விடயமல்ல.

இவ்விடயத்தில் நான் கூறக்கூடிய உண்மை என்னவென் றால், உலக மதங்களெல்லாம் ஒரேயோர் கொள்கையை அடிப்படை யாய்க் கொண்டே அமைந்திருக்கின்றன என்பதே. அந்த அடிப்படைக் கொள்கையை வாழ்வில் கடைப்பிடித்தொழுகும் முறையில் (ஷரீஅத்தில்) தான் மதங்களுக்கிடையே வேறுபாடு தென்படுகிறது. ஒரே கொள்கையை அமுல்படுத்தும் முறை காலாகாலம் வேறுபட்டிரு க்கிறது. மக்களின் அறிவுத் தகைமைக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு மேற்றபடி இறைவனே செயல் விளக்கங்களைக் காலாகாலம் மாற்றிக் கொடுத்து, இறுதியாக எல்லா மக்களுக்கும் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய வகையில் தரப்பட்டிருக்கிற ஒரேயோர் வேதநூல் குர்ஆன் மட்டும்தான். எனவேதான் இஸ்லாம் என்பது பூரணப்படுத்தப் பட்ட வாழ்க்கைத் திட்டமாக அமைந்திருக்கிறதென்று கூறுகிறோம். ஆயினும் இஸ்லாத்தின் கொள்கை விளக்கம் மட்டுமல்லாமல் சிற்சில செயல்விளக்கங்களும் கூட அறிவு குறைந்தவர்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்டும் திரிபுபடுத்தப்பட்டுமிருப்பதால் இன்றுள்ள பெரும்பான்மையான மக்கள் குர்ஆனைக் கொண்டு உண்மையை அறிய முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள்.

வேதங்களை நடுநிலை நின்று ஆராய்ந்தால் எல்லா வேதங்களும் மனிதனைத் தீயவனாய் வாழாமல் நல்லவனாய் வாழவைக்கவே முயன்று கொண்டிருந்தன என்பதை நாம் காண லாம். மனிதனை மனிதனாய் வாழவைக்கும் முயற்சியை வேதங்கள் கையாண்டிருப்பதனால்தான் இன்று உலகில் மனித சமுதாயம் இருந்துகொண்டிருக்கிறது. இல்லையேல் மனித இனம் தன்னைத் தானே அழித்தொழித்திருக்கும். வேதங்களின்

உண்மையான நோக்கைப் புரிந்துகொள்ளாமல் தத்தமது இஷ்டம் போல வியாக்கி யானங்களைக் கற்பித்து, வேதங்களின் நோக்கைத் திசைதிருப்பி, வெறும் சம்பிரதாய பழக்கவழக்கங்களையே மதமாக்கிக் கொண்ட போலிகள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவர்களே.

***குர்ஆன் : 22 : 40***
***இவர்கள் நியாயமின்றித் தங்கள் வீடுகளிலிருந்து துரத்தப் பட்டார்கள். எங்கள் இறைவன் ஏகனான அல்லாஹ்தானென்று கூறியதுதான் இவர்கள் செய்த குற்றம். மனிதர்களில் சிலரைக் கொண்டு சிலரை அல்லாஹ் தடுக்காதிருந்தால் அல்லாஹ்வுடைய திருநாமம் அதிகமாய் ஸ்தோத்திரம்(திக்ர்) செய்யப்படும் கிறிஸ்தவர்களின் ஆலயங்களும் அவர்களுடைய மடங்களும், யூதர்களுடைய ஆலயங்களும் (முஸ்லிம்களின்) "மஸ்ஜித்" (பள்ளிவாசல்களும்) அழிக்கப்பட்டேயிருக்கும்.***

இந்த வேதவசனத்தின் மூலம் சில உண்மைகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. வேதங்களுடைய உண்மையான நோக்கு, கொள்கையில் தரிபாடடைவதற்காக தியானம்(திக்ர்) செய்ய வேண்டும் என்பதே. எனவேதான் தியானம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட கோயில்கள், மடங்கள், பள்ளிவாசல்கள் யாவற்றையும் காப்பாற்றுவான் வேண்டி இறைவன் முயன்று கொண்டிருக்கிறான் என்பது புலனாகிறது. மேலும் தியானத்தின் (திக்ரின்) நோக்கம் ஒன்றாக இருப்பதால் வேதங்களின் உண்மையான குறிக்கோளும் நோக்கமும் ஒன்றேயென்பது புலனாகிறது. ஆகவே, இவ்வுண்மையை உதாசீனம் செய்துவிட்டு மூடத்தனமான மதப்பற்று இனப்பற்றில் மூழ்குவது மனிதர்களின் தவறேயன்றி வேதங்களின் தவறேயல்ல. மனித இனத்தின் தவறுகளுக்கெல்லாம் முக்கியகாரணம் கொள்கை விளக்கத்தைக் குறிக்கோளைப் புரிந்து கொள்ளாமையே. இரண்டாவது காரணம் ஆசையை அளவுக்கதிகமாய்க் கட்டுப்பாடில்லாமல் வளர்த்துக் கொள்வதாக அமைந்திருக்கிறது. இவ்விருவிடயங்களிலும் மனிதன் தவறாமல் செயல்படுவதற்கு வழிகாட்டக்கூடிய, பூரணமான உறுதியான ஆதாரங்களோடு நிரப்பமடைந்துள்ள ஒரேயோர் வேதநூல், தற்சமயம் குர்ஆன் மட்டுமே இருந்து கொண்டிருக்கிறது. ஆதலால் அறிவுள்ள மக்கள் ஒரு சிலர் ஒன்று



கூடியோ அல்லது மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகவோ குர்ஆன் என்ற வேதநூலை முறைப்படி ஆராய்ந்து, சாந்தியடையக் கூடிய வழியை அந்த நூல் காட்டுமா? என்பதைக் கண்டறிந்து உலகுக்கும் அவ்வுண்மையை எத்திவைத்தால், மிகக்குறுகிய காலத்துக்குள் மக்களால் சாந்தியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது எனது நம்பிக்கை.

**நீதிபதி :** சந்தோஷம், உங்கள் வாதத்தை நுட்பமாய் நோக்கினால் சில உண்மைகள் தெளிவுபடுகின்றன. ஆசையை அவசியத்தினளவு கட்டுப்படுத்தித் தேவைகளையும் அவசியத்தினளவு சுருக்கிக் கொண்டால் ஓரளவேனும் சாந்தியைப் பெறலாமென்பது உண்மை தான். தேவைகளை அவசியத்தினளவு சுருக்கிக் கொள்வதானால் ஆசையைக் கட்டுப்பாட்டிற்குள் நிறுத்த வேண்டுமென்பதும் உண்மை தான். எனினும் ஆசையைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு மனிதனைப் பண்படுத்தலாமா? என்பது சந்தேகமாய் இருக்கிறது?

**மூஃமின் :** தங்களுக்கேற்பட்ட சந்தேகம் வீண் சந்தேகமேயன்றி நியாயமான சந்தேகம் என்று கூறமுடியாது. ***ஓர் குழந்தையின் சுவர்க்கம் தாயின் பாதத்தின் கீழ் உள்ளதென்று ஓர் ஹதீஸ் காணப்படுகிறது. பிறக்கும் குழந்தைகளெல்லாம் நல்ல குழந்தைகளாகவே பிறக்கின்றன என்றும் அவற்றின் தாய் தந்தையர் சூழல் போன்றவை அவர்களை எஹூதுவாக, நஸாறாவாக, மஜூஸியாக மாற்றிவிடுகின்றன*** என்றும் இன்னும் ஓர் ஹதீஸ் காணப்படுகிறது. சூழல் மனிதனை மாற்றியமைக்கும் என்பது எம் அனுபவத்தில் கண்டறிந்த உண்மையாகும். அப்படியானால் எமது சூழலை, சூழ்நிலையை மாற்றியமைக்கும் போது நாம் உண்மையைத் தரிபடுத்தலாம் என்பதில் சந்தேகப்பட வேண்டியதே இல்லை. அறிவிலுள்ள மருட்சி எப்போது நீக்கப்படுமோ அப்போதே உண்மை தானாகவே தரிபட்டுவிடும்.

எமது பாடசாலைகளில் எத்தனையோ இனமானகல்விகளை (கலைகளை) கற்பிக்கிறோம். இன்றுள்ள இக்கல்விகளின் பக்கவிளைவுகள்தான் உலகம் இன்னலடைந்து கொண்டும் சாந்தியைத் தேடிக் கொண்டிருப்பதற்கும் மூலகாரணமாய் அமைந்திருக்கிறது. இவ்வித கல்விகளை மனித குலத்திற்குச் சாந்திதரக்கூடிய

வகையில் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டியது அவசியமாயிருக்கிறது. பாடசாலைகளில் ஆரம்பத்திலிருந்தே வாழ்வின் குறிக்கோளையும், வாழும் முறைகளையும், அதனால் ஏற்படக்கூடிய நன்மை தீமைக ளையும் விளக்கி (அமல்) கடமைகளுக்குரிய உடல் உளப்பயிற்சிக ளையும் ஊட்டிவந்தால் சுமார் 10 வருடங்களுக்குள் அம்மாணவர்கள் அறிவு தெளிவு பெற்றவர்களாக, நல்லொழுக்கமுடையவர்களாக, தம்மைத்தாமே அடக்கியாளும் திறமையுடையவர்களாக அமை யலாம். இதே வழியை ஏககாலத்தில் உலகெல்லாம் கையாளத் தொடங்கினால் மிகக் குறுகிய காலத்துக்குள் உலக மக்கள் சாந்தி சமாதானத்தைப் பெற்றுக்கொள்வார்களென்பது நிச்சயம். ஆனால் கட்சிப்பற்றில்லாமல் நடுநிலையாய் நின்று ஆராயக்கூடிய அறிஞர்கள் ஒன்றுகூடி, மனிதனுக்கு உண்மையான நிலையான சாந்தியை நல்கக்கூடிய கொள்கை எது? அக்கொள்கையோடு மனிதன் உலக வாழ்வை அமைத்துக் கொண்டு வெற்றி பெறக்கூடிய இலகுவான வழியை விளக்கிக் கொண்டிருக்கிற வேதம் எது? என்பதைக் கண்டறிந்து, கண்டறிந்த உண்மையை உலக மக்கள் யாவருக்கும் எத்திவைக்க வேண்டியது இக்கால சூழ்நிலையில் மிகமிக அவசியமாகும்.

இதைவிட மனித யூகங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கொள்கைகள், சட்டங்களை, அடிப்படையாய் வைத்துக்கொண்டு மனித இனம் சாந்தியை, சமாதானத்தை, தன்நிறைவை எதிர் பார்க்கிற தென்றால் அது முடவன் கொப்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையா கவே அமையலாம். எனவே பிரம்மச்சாரியம், மச்சம் மாமிசம் உண்ணாமை, தீண்டாமை போன்ற சம்பிரதாய வழக்கங் களை மட்டும் மார்க்கமாக எடுத்துக் கொள்வது அர்த்தமற்ற செயலாகும். சாந்தி சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஓர் நேர்வழி உண்டென்று அறிந்த பின்பும் அவ்வழியை உதாசீனம் செய்துவிட்டு பாரம்பரிய பழக்கவழக்கங்களை, சம்பிரதாயங்களை மார்க்கமாய் எடுத்துக் கொள்வது அறிவுடைமையாகாது. ஓர் குழந்தை பிறந்தவுடன் 40வயது மனிதனுடைய நிலையைப் பெறமுடியாது. குழந்தையைப் படிப்படியாய் வளர்த்துத்தான் அந்நிலையைப் பெறச் செய்ய வேண்டும். இதேபோல பாமரமனிதனுடைய அறிவை முறைப் படி நெறிப்படுத்தி வளர்ச்சியடையச் செய்யாமல், மனித அறிவுக்குத் தடைபோடுகிற, வீணான கற்பனைகளை நம்பச்செய்கிற புராணங் கள், கற்பனை யூகங்கள் நிறைந்த இதிகாசங்கள், கலப்பட வேத



நூற்கள் மனிதனின் வாழ்வுக்கு வழிகாட்டச் சாந்தியைச் சமாதா னத்தை, தன்னிறைவை நிறைநிலையைத் தரமுடியாதவை யென்பதை நாம் ஒவ்வொருவரும் ஊன்றி உணரவேண்டும். ஆசையை பலாத்காரத்தினால் மட்டுப்படுத்துவதனால் மட்டும் சாந்தி கிடைக்கப்போவதில்லை. ஆசைக்கு ஆணிவேராய் அமைந்திருப்பது துவித உணர்வேயாகும். துவித உணர்வு புலன்களில் கட்டுண்ட அறிவின் மயக்கே என்பதையும் ஆசைப்படுவதற்குரிய, என்னை விட்டும் வேறான வேற்றுப்பொருள் இல்லவே இல்லையென்பதையும் மனிதனுக்கு அறிவுபூர்வமாய் ஆதாரங்களுடன் விளக்கிக் காட்டுவதே வேதநூலின் முதற்கடமையாய் இருக்கிறது. இவ்வித அறிவைப் பெற்றுக்கொண்ட மனிதன் உலகில் வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்வது என்பதை விளக்கமளித்து அதற்குரிய சட்ட ஒழுங்குகளையும் தெளிவுபடுத்த வேண்டியது வேதநூலின் இரண்டாவது கடமையாய் இருக்கிறது. இவ்வித விபரங்கள் யாவும் முழுமையாய் இடம் பெற்றுள்ள ஒரேயோர் வேதநூல் குர்ஆன் மட்டுமே.

**நீதிபதி :** உங்கள் வாதம் ஆழமாய்ச் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். உலக மக்களெல்லோருக்குமே குர்ஆன் சாந்திக்கு வழியைக் காட்டும் என்று கூறினீர்கள். குர்ஆன் ஏகத்துவத்தையே உறுதிப் படுத்தும் என்றும் கூறினீர்கள். ஆனால் குர்ஆனில் துவித வாதத்தை நிரூபணம் செய்யும் பல வசனங்கள் தென்படுகின்றன. மேலும் குர்ஆனில் ஒன்றுக்கொன்று நேர் முரணாய் பல ஆயத்துக்களும் தென்படுகின்றன. இப்படி முன்னுக்குப் பின் முரணாய் அமைந்துள்ள ஓர் வேதநூல் மனிதனுக்குச் சாந்திக்குரிய வழியைக் காட்டும் என்று எப்படி நம்புவது?

**மு்ஃமின் :** குர்ஆனில் துவிதவாதமும் ஒன்றுக்கொன்று முரணான வசனங்களும் இருப்பதாய்த் தென்படுவது "வஹ்மு" என்ற சபல புத்திக்குத்தான். குர்ஆனில் துவிதவாதமோ ஒன்றுக்கொன்று முரணான வசனங்களோ கிடைக்கவே கிடையாது. எமது முதல் நூலான ஈமானின் உண்மையை நீ அறிவாயா? என்ற நூலிலும் ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன் என்ற நூலிலும் ஒன்றுக்கொன்று முரண்போல் தென்படுகிற பல வசனங்களை எடுத்துக் காட்டி

அவை முரணானவையல்ல என்பதை ஆதாரங்களோடு நிரூபித்துக் காட்டி யுள்ளேன். இப்போது அவற்றின் சாரத்தை மட்டும் இங்கே கூற விரும்புகிறேன்.

இன்றுள்ள வஹ்ஹாபிஸ மௌலவிகளில் பலர் அல்லாஹ் வேறு தான், சிருட்டி வேறுதானென்றும் அதற்குக் குர்ஆனில் ஆதார முண்டென்றும் கூறுகிறார்கள். அதாவது குர்ஆன் துவிதவாதத்தை உறுதி செய்வதாக நம்புகிறார்கள். இவர்கள் தரும் ஆதாரங்களில் ஒன்று என்னவென்றால் "சூறத்துல் பாத்திஹா"வில் 4ம் வசனத்தில், உன்னையே வணங்குகிறோம், உன்னிடமே உதவி தேடுகிறோம். என்ற வசனம்தான். இவ்வித மௌலவிகளின் பரிதாப நிலையைக் கண்டு மனம்வருந்த வேண்டியதாயும் இவர்களுடைய பட்டம் பதவிகளைப் பற்றி வெட்கப்பட வேண்டியதாயும் இருக்கிறது நீதிபதியவர்களே!

***குர்ஆன் : 1 : 4***
***"உன்னையே வணங்குகிறோம் உன்னிடமே உதவி தேடுகிறோம்"***

இவ்வசனங்களில் அல்லாஹ்வும் மனிதனும் வெவ்வேறு என்று கூறப்பட்டிருக்கிறதா? இரண்டும் ஒன்றுதானென்று கூறப்பட்டிருக் கிறதா? இவ்வசனத்தில் ஒன்று என்றோ வேறு என்றோ கூறப்படவே யில்லை. வணங்குபவன் மனிதன், வணங்கப்படுபவன், உதவி தேடப்படுபவன் இறைவன் என்று தான் வசனம் விளக்கம் தருகிறது. ஆனால் வஹ்ஹாபிஸ மௌலவிமார், வணங்குபவனும் வணங்கப் படுபவனும் ஒன்றாயிருக்க முடியாதேயென்று யூகித்து அல்லாஹ் வேறுதான் சிருட்டி வேறுதான் என்று கூறுகிறார்கள். இது அவர்களின் யுக்தியேயன்றிக் குர்ஆன் வசனத்தின் பொருளல்ல. தன் யூகப்படி குர்ஆனுக்குப் பொருள் கூறுபவன் நரகத்தை இருப்பிடமாக்கிக் கொண்டானென்றால் இம் மௌலவிமார்கள் இருப்பிடத்தை எங்கே தேடிக்கொண்டிருக்கிறார்களென்பது எமதறிவுக்குப் புலனாகிறது. அல்ஹம்து ஸூறாவை ஆதாரமாய் எவரும் எடுத்துக் கொள்வதி ல்லை. இது ஓர் வழமை. அப்படி எடுத்துக் கொண்டாலும் கூட மௌலவிமார்களின் கூற்று வெறும் அறியாமையாகும்.



இவ்விஷயத்தைக் குர்ஆனிலுள்ள இன்னும் சில வசனங் களோடு ஒப்பிட்டு நோக்குவோம்.

1. அவர்கள் தங்கள் நப்ஸுகளின் பேரில் கொடுமை செய் கிறார்கள்.

2. எனினும் அவர்கள் தங்கள் நப்ஸுகளுக்கு கொடுமை செய்பவர்களாக இருக்கிறார்கள்.

இவ்விதமான பல வசனங்கள் குர்ஆன் ஹதீஸுகளில் இடம் பெறுகின்றன. இவ்வகை வசனங்களின்படி கொடுமை செய்யப்படுகிற நப்ஸும், கொடுமை செய்பவனும் வெவ்வேறா? ஒன்றா? நப்ஸு தான் நான், நான்தான் நப்ஸு, எனவே, இவ்வகை வசனங்கள் எல்லாம் ஒன்று என்று விளக்குவதற்காகவோ, வேறு என்று விளக்கு வதற்காகவோ தரப்பட்டவையல்ல. அல்லாஹ்வையேயன்றி எதுவுமே இல்லையென்று விளக்குவதற்காக உறுதியான பல வசனங்கள் குர்ஆன் ஹதீஸுகளில் தரப்பட்டுள்ளன. இவ்வசனங்களுக்கு முரணாய் எந்த ஒரு வசனமும் குர்ஆன் ஹதீஸுகளில் கிடைக்கவே கிடையாது. எனினும் சிருட்டி அல்லாஹ் அல்லாதது என்று கூறுவதுபோல துவிதவாதத்தை உறுதிப்படுத்துவது போல வேறு சில வேதவசனங்கள் தென்படுகின்றன. இப்படிக் கூறும் வசனங்களை விளங்கிக் கொள்ளத் தெளிந்த அறிவில்லாத புத்தகம் சுமந்த கழுதைகள் போன்ற மௌலவிகளிற் சிலர் இவ்வகை வசனங்கள் அல்லாஹ் வேறு சிருட்டி வேறு என்று விளக்குவதாக யூகிக்கி றார்கள். இது அவர்களுடைய அறியாமையாகும்.

***குர்ஆன் : 39 : 64***
***நீர் கூறும் ஓ மூடர்களே! அல்லாஹ்வுக்கு வேறாய் இருப்பதையா என்னை வணங்கச் சொல்கிறீர்கள்.***

இவ்வகை ஆயத்துக்களைப் போல் குர்ஆனில் அல்லாஹ் வேறு சிருட்டி வேறு என்று காட்டுவது போல் தென்படுகிற ஆயத் துக்களையும் நாம் எடுத்துக் கொள்வோம். "மின்தூனி" (என்னின் வேறு) "மின்தூனில்லாஹி" (அல்லாஹ்வின் வேறு) "மின்தூனிஹி"

(அவனின் வேறு) போன்ற வசனங்கள் இடம்பெறும் ஆயத்துக்க ளையும் எடுத்துக் கொள்வோம். இவ்வகையான ஆயத்துக்களை நோக்கினால், இவை அல்லாஹ் வேறு சிருட்டி வேறு என்று நம்பியிருந்த மக்களை நோக்கி அவர்களுடைய நம்பிக்கை பிழை யானதென்பதை எடுத்துக் காட்டித் துவிதத்தை மறுத்து தௌஹீதை உறுதிப்படுத்துவதற்காகவே தரப்பட்டிருக்கின்றன. எமது முதல் நூற்களில் இவ்வகை ஆயத்துக்களில் சிலவற்றின் உண்மையை எடுத்து விளக்கியிருக்கிறேன். அல்லாஹ்வேறு சிருட்டிவேறு என்று விளக்கம் தருகிற எவ்வித ஆயத்துக்களுமே குர்ஆன் ஹதீஸுகளில் கிடைக்கவே கிடையாது.

முஸ்ரீக்குகள் அல்லாஹ் வேறு, வணங்கப்படுகிற இலாஹு வான சிருட்டி வேறு என்று நம்பியிருந்தவர்கள். இவர்கள் றசூல்(ஸல்) அவர்களை நோக்கி எங்களுடைய இலாஹுகளுக்கு நீரும் வணக் கம் செலுத்தினால் தான் உம்முடைய பேச்சை நாங்கள் ஏற்போம் என்று கூறினார்கள். அவர்களுக்கு விடையளிக்கும் முகமாகத்தான், அல்லாஹ் அல்லாததென்று நீங்கள் நம்பியிருக்கிறீர்களே! அதையா என்னை வணங்கச் சொல்கிறீர்கள்? என்பதே ஆயத்தின் உண்மை யான அர்த்தமாய் இருக்கிறது. இவ்வாயத்தில் உங்கள் எண்ண த்தில் அல்லாஹ் அல்லாததென்று நம்பியுள்ள நம்பிக்கை தவறான தென்பதை அவர்களுடைய பாஷை வழமையை அடிப்படையாய்க் கொண்டு விளக்கமளிப்பதே ஆயத்தின் நோக்கமாய் இருக்கிறது. அதாவது தௌஹீதை உறுதிப்படுத்துவது ஆயத்தின் நோக்கமே யன்றித் துவிதவாதத்தை உறுதிப்படுத்துவதல்ல. றசூல்(ஸல்) அவர்கள் எக்கொள்கையை உலகுக்கு அறிமுகம் செய்தார்களோ அக்கொள்கையை நிரூபணம் செய்வதே குர்ஆன் ஆயத்துக்களின் நோக்கம் என்பதை நாம் நம்பவேண்டும். இவ்வுண்மையான நம்பிக்கையோடு குர்ஆனை நோக்கினால் தௌஹீதென்ற ஏகத் துவக் கொள்கைக்கு மாறான ஓர் சிறு வசனம்கூடக் குர்ஆனில் கிடைக்கவே கிடையாதென்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

**நீதிபதி :** மு.ஃமீன் அவர்களே! குர்ஆன் 8:17ம் ஆயத்து ***நீர் மண்ணை எறிந்தபோது அதை நீர் எறியவில்லை. என்கினும் அல்லாஹ்தான் எறிந்தான்*** என்று கூறுகிறது. இதைப்போல் இன்னும் பல ஆயத்துக்கள்



அல்லாஹ்வே வெட்டினான். அல்லாஹ்வே செய்தான் என்று விளக்குகின்றன. வெட்டியது, எறிந்ததெல்லாம் நம்போன்ற மனிதர்களான சிருட்டி களேதான் என்று நாம் அறிகிறோம். அப்படியானால் அவ்வகை ஆயத்துக்களின் உண்மை என்ன? என்பதை ஓரளவு விளக்கி வையுங்கள்.

**மு.ஃமீன் :** இவ்வகையான பல ஆயத்துக்கள் குர்ஆனில் இடம் பெறுகின்றன. இவை கலிமாவை உறுதிப்படுத்தும் தலீல்களாய் (ஆதாரங்களாய்)த் தரப்பட்டுள்ளன. இறைவன்வேறு சிருட்டி அவனை விட்டும் வேறானதென்று நம்புகிற ஷிர்க்கென்ற இணை கற்பித்தலை நீக்குவதற்காகவே இவ்வகை வசனங்கள் தரப்பட்டுள்ளன. இவ்வகை வசனங்கள் ஒரே கருத்துடைய “முஹ்கமு”, வசனங்களாய் இருக்கின்றன. இவற்றை விளங்கிக் கொள்வதில், பெரும்பட்டம் பதவியுடையவர்களிலும் கூட மிகப்பலர் தவறு செய்திருக்கிறார்கள். எப்படியென்றால்,

இவ்வகை ஆயத்துக்களிலும் இவ்வகை ஹதீஸுகளிலும் கூறப்பட்ட எறிதல், வெட்டல், சத்தியம் செய்தல் போன்ற விடய ங்களை அல்லாஹ்வே செய்தான் என்பது ஹகீகத்தான அந்தரங் கத்தை நோக்குவதாய் இருப்பதாலும், எல்லாச் செயல்களின் வினை முதலும் அல்லாஹ்வாயிருப்பதாலும் இவைகளை அடியான் (அப்து) செய்தான் என்று கூறுவது உபசார வழக்கமாயிருக்கிறதென்றும் சிலர் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் அடியானைக் கனப்படுத்துவதற்காகவே இவ்வகை வசனங்கள் குர்ஆன் ஹதீஸு களில் பாவிக்கப்பட்டுள்ளன என்று கூறி ஏகத்துவத்தின் (தௌஹீ தின்) உண்மையை மூடிமறைக்கிறார்கள். இவ்விதமான மருட்சி வாதங்கள் வியாக்கியானங்கள் யாவும் உசூலுடையகாயிதாக் களுக்கு, அடிப்படை மூலச்சட்டங்களுக்கு முரணாய் அமைகின்றன. எப்படியென்றால்,

செயல்களின் உண்மையான வினைமுதல் அச்செயல்களை எவன் செய்தானோ அவனேதான் என்று உறுதிப்படுத்தப்பட்டி

ருக்கிறது. இச்சையின்றி (விரும்பாமல்) அச்செயல்களைச் செய்தவன் உபசார வழக்கினால் மாத்திரம் அவன் வினைமுதலாய் இருக்கிறான். உண்மையில் அவன் வினைமுதலேயல்ல. இவ் விஷயம் உஸுலுடைய காயிதாவில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையைக் கொண்டு அனேகமான பிக்ஹுடைய மஸ்அலாக்கள் (மார்க்கத் தீர்ப்புகள்) பிரிந்திருக்கின்றன. உதாரணமாக,

கொலை, களவு, முதலாம் குற்றங்களில் ஒருவன் தன் இச்சையின்றிச் செய்து அல்லது செய்பவர்களுடன் கூடிச் செய்திருப்பானேயானால் அக்குற்றங்களுக்குரிய தண்டனை அவனை விட்டும் நீங்கிவிடும். இவ்விபரம் பிக்ஹுடைய சட்டங்களில் அறிவுடையவர்களுக்குத் தெரிந்த ஓர் விஷயம்தான். அப்படித் தெரிந்திருந்தும் உண்மையைப் புரட்டுகிறார்களென்றால் இது ஆச்சரியப்படவேண்டிய ஓர் விடயம்தான். அப்படியானால் இவ்வித குழப்பவாதிகளுக்கு பிக்ஹுடைய அறிவில்கூடத் தெளிவில்லையென்றே கூறலாம்.

***குர்ஆன் : 6 : 162***
***நீர் கூறும் நிச்சயமாக என்னுடைய தொழுகையும் என்னுடைய வணக்கங்களும் என் சீவியமும் என் மரணமும் உலகத்தாரைச் சிருட்டித்துப் போஷித்துப் பரிபக்குவப்படுத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை.***

இவ்வாயத்தின்படி முஹம்மது(ஸல்) என்ற சூறத்தில் இருந்து வெளியான சர்வசெயல்களுக்கும் முழுமுதற் காரணமாயிருந்தவன் அல்லாஹ்தானென்பதும் உபசார வழக்கினால் மட்டும் (றசூல்) முஹம்மது(ஸல்) அவர்கள் வினை முதலாயிருந்தார்களென்பதும் தென்படுகிறது. எனவே, முஹம்மது(ஸல்) அவர்களால் எறியப்பட்ட மண்ணை அல்லாஹ்தான் எறிந்தான்என்பது பூரண உண்மை. முஹம்மது(ஸல்) என்ற சூறத்திலிருந்து வெளியான செயல் அல்லாஹ்வுடையதுதானென்றால் சர்வசிருட்டிகளிலிருந்தும் வெளியாகும் சர்வசெயல்களும் அல்லாஹ்வின் செயலேதானென்பதை நாம் ஏன் மறுக்க வேண்டும்? நல்லசெயல், தீயசெயல் கணிப்பது வேறோர் விஷயம். சுருக்கமாய்க் கூறினால் இவ்வகை ஆயத்துக்களெல்லாம் கலிமாவினால் உணர்த்தப்படும் ஏகத்துவக் கொள்கையை உறுதிப்படுத்தவே தரப்பட்டிருக்கின்றன. இன்னும் மேலதிக விபரம் அவசிய



மானால் ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன் என்ற நூலில் இவ்வகை ஆயத்துக்களை எடுத்துக்காட்டிப் பூரண விளக்கம் தந்திருக்கிறேன். அங்கு கண்டுதெளிக. ஜடம், சூட்சுமம் என்பவற்றின் உண்மையைப் புரிந்து கொள்ளாத முக்காலங்களையும் மூவிடங்களையும் திரையாய்க் கொண்ட பாமர மக்கள் இவ்வகை ஆயத்துக்களில் தங்கள் யூகங்களைக் கையாளுகிறார்கள் அவ்வளவுதான்.

**நீதிபதி :** அப்படியானால் இவ்வகை மௌலவிகள் அவர்களுடைய மத்ரஸாக்களில் எதைக்கற்கிறார்கள்?

**மு:மின் :** இன்றுள்ள அறபு மத்ரஸாக்களில் பெரும்பாலும் தீனுடைய (மார்க்கத்துடைய) விளக்கங்கள் கொள்கை விளக்கங்கள் கற்றுக் கொடுப்பதே இல்லை. மதரஸாக்களில் (அமல்களுடைய) செயல்களுடைய விபரங்களும் அவற்றைக் கையாளும் முறைகளும்தான் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இக்கல்வியும் ஒருமுகப்படுத்தப்பட்ட கல்வியாய் இல்லை. ஒருவர் தல்கீன், துஆ ஓதலாமென்றால் மற்றவர் அப்படி ஓதக்கூடாது அது பித்அத் என்று கூறுகிறார். ஒன்று இரண்டல்ல, பல நூற்றுக்கணக்கான விஷயங்களில் அபிப்பிராய பேதங்கள் தென்படுகின்றன. இவ்வகை அமாவாசை மௌலவிகள் ஒருவருக்கொருவர் முரணாய்க் கூறும் விஷயங்களைக் கவனத்தில் கொண்ட மக்கள் வேதத்தில் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்து விடுகிறார்கள். மனம்போல் வாழமுற்படுகிறார்கள். முஸ்லிம்களின் சமூகமக்கள் பெரும்பாலும் இப்படித்தான் தென்படுகிறார்கள். சுருக்கமாய்க் கூறினால் இன்றுள்ள பெரும்பாலான மௌலவிகள் தாங்களே குழம்பிக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல் உலக மக்களையும் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

*ராஜப்ழஷஷ்*
*கடபஜஹ்றச்றஷற் ன்ஹ்றஹயகஷடஊகஷ. மகஷந்கஹஜ் ,ழஷயஹஜஜஷஜபடஷ எஹகந்கடிமோயஷயஹஜ் மஜடஷ ரஜஷஜபடிமோகஷ (சடிமோபஹ்ஞ சDEMOஷஇக) ,உஹஜ். ர்ஹ்ம்டபயஷ வஓஜஷஜ்றஷறந்சடிமோயஷயஹஜ் மஜடஷ சDEMOஷ இகடிமோஹட மஹ்ஜஷஜகபஉஹஜ். மடஹ்றசபடஷ கசஷசபடஹரயஷறசபயஷ (கழஷளபஜஜஷறசபயஷ) றலஇக எஇலநகதஷத்றஷநறஹDEMOஷபஊஎஷஜஹ ய்கஷ ந்எஹ்டஓபடிமோபடஷதபறஷ நறலஷல்கஷந்கஹடிமோபஊறஷற்கஷ மடஹ்றசபடஷ*

*சயகஹறஷறசஷ டஹடஜஷஜபடஷ றப்ஷ கபறறஷநறலஷல ளஎஷஜ்றஷறசஹடிமோப ஊகஷகஹஹ்றசஷ. வடஷத் த˚யஷ(ழயஷ) மடஹ்றசஷ ˚தபடஹஹ்றசஷ.*

*அறிவிப்பவர் : அலி(றலி)*

*ஆதாரம் : பைஹக்கிமிஸ்காத்*

இதைப் போன்ற இன்னும் பல ஹதீஸ்கள், இக்கால இஸ்லாமிய சமூகத்தையும் அவர்களுடைய உலமாக்களையும் பள்ளி வாசல் நிருவாகங்களையும் பற்றித் தெளிவாய்க் கூறி முன்னறிவிப்புச் செய்திருக்கின்றன.

இன்றுள்ள மிகப்பெரும்பாலான மௌலவிகள் சுயநல நோக்கினாலும், அறியாமையினாலும், வஹ்ஹாபிஸ வாதங்களை கண்மூடித்தனமாய் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அமல் விளக்கங்களை அரைகுறையாக படித்துக் கொண்டு அதுவே மார்க்க விளக்கமென்று நம்புகிறார்கள். தீன், மார்க்கம் என்பது கலிமாவினால் உணர்த்தப்படும் ஏகத்துவக் கொள்கையே என்பதையும் அக்கொள்கையில் வெற்றியடைவதற்குதவியான உடற் பயிற்சி உளப்பயிற்சிகளே அமல்கள் என்பதையும் இந்த மௌலவி மார்கள் விளங்கிக்கொள்ளவில்லை. சிந்திக்கும் ஆற்றலில்லாத வஹ்ஹாபிஸ மௌலவிகள் மிகக் குறுகிய காலத்துக்குள் இஸ்லாத்தை மொட்டையடித்து விடுவார்கள்போல் தென்படுகிறது. இக்கூட்டத்தின் வழிகாட்டலில் சென்றுகொண்டிருக்கும் மக்கள், ஜன்னத்தை நோக்கி நடைபோடுகிறோமென்று நம்பிக்கொண்டு ஜஹன்னத்தை நோக்கி நடைபோடுகிறார்களென்று கூறலாம். இணையேற்படுத்துதல் (ஷிர்க்) என்றால் என்ன? என்பதை அறிந்து கொள்ளாத இன்றுள்ள பெரும்பான்மையான மௌலவிகள், றசூல் (ஸல்) அவர்கள் செய்யாத எல்லாச் செயல்களுமே பித்அத்துத்தான் என்றுகூட வெளிப்படையாகவே பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். இவ்வகை மௌலவிகள் பித்அத் என்றால் என்ன? என்பதைத் தெளிவாய் அறிந்துகொள்ள வேண்டுமானால் சுவனம் செல்லும் சுன்னத்வல் ஜமாஅத்தினரைக் கண்டறிவதெப்படி? என்ற தலைப்பில் என்னால் எழுதி வெளியிடப்பட்ட நூலில் 12ம் பக்கத்திலிருந்து வாசித்து விளங்கிக் கொள்ளும்படி நான் அவர்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். மருட்சியுடைய மக்களால் விளக்கப்பட்ட வியாக்கி யானங்கள் குர்ஆன் வசனங்களை ஒன்றுக்கொன்று முரண்போல் காட்டிக் கொண்டிருக்கின்றன. சபலபுத்தி நீங்கிய தெளிவான



அறிவைக் கொண்டாராய்ந்தால் குர்ஆனில் ஒன்றுக்கொன்று முரணான எந்த ஓர் வசனமும் கிடையாதென்பதைக் காணலாம்.

**நீதிபதி :** இஸ்லாம் வாளின் வலிமையால் திணிக்கப்பட்ட ஓர் மார்க்கம் என்று ஒரு சிலர் கூறியிருக்கிறார்களே! இதைப்பற்றி உங்களுடைய கருத்தென்ன?

**மு:.மீன் :** இஸ்லாத்தின் உண்மையான விபரங்களைப் புரிந்து கொள்ளாத சிலர் இப்படிக் கூறியிருக்கலாம். நாம் அவர்களை மன்னிப்போம். அவர்களுக்கு உண்மையை உணர்த்துவோம். முஹம்மது(ஸல்) என்ற றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஓர் ஹதீஸை முதலில் நோக்குவோம்.

*ாஜப்ழஷஷ்*

*கறஷறசஷ மயஷயஹாஷஜடபஉ ,யஹா˚ ,யஷஇய(யஹ,யஹா ,யஷயயஷயஹாஷ) வடஷத்கஷஞ ஜபலஷலகஹற க்ாகஷகஜ்(ழயஷ) மடஹ்றசஷ மயஷயஹாஷட்இலடிமோ ஜ்ழ்ஜஹ் (க்ாகஷகஜ்ஹ்த˚ய் யஷயஹாஷ) வடஷத்கஷ ரஹலஷரப˚தபஞ நஜஹஓஇறஇடிமோறஷ றஇலகஷகப பஜஷநஜஹஓறப ழறஹஜஷஜ்கஷ நறஹல்ஜஷஜ்டஉஹஜ டஇஉடிமோபயஷ மடஹ்றச்லடஷ (ளபாஹஜ்) ஜஹ்க ங்ஜஷஜகஷ நரடிமோஷங்கஹத் ,இதடடஷ வடறஷற் ம்இDEMOடிமோபலஷல்சஷசஹடஷ. ,டஷடபஜகஷ மடஹ்றசஷ நரடிமோஷஜ் டஊடஹஹ்றசஹடஹயஷ மடஹ்றச்இலடிமோ சடிமோபஇஉங்கஷ நகஹஊலஷறஇசங்கஷ வடஷஇட டபலஷல்கஷ றஹஜஷஜ்றஷ நறஹDEMOஷலடஹ்றசஹடஹஹ்றசஷ. ,ழஷயஹஜஷஜபடஷ றலஇகறஇசஜஷ ஜடபஉ மடஹ்றச்இலடிமோ றDEMOறஷற் மயஷயஹாஷடபலகபஊறஷறபத நஜடஷத் த˚யஷ(ழயஷ) மடஹ்றசஷ ˚தபடஹஹ்றசஷ.*

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னுஉமர்(றலி)*

*ஆதாரம் : புகாரி, முஸ்லிம்.*

***குர்ஆன் : 9 : 73***

***நபியே காபிர்களுடனும் நயவஞ்சகர்களுடனும் நீர் யுத்தம் செய்வீராக, அவர்களைக் கண்டிப்பாக நடாத்தும். அவர்கள் தங்குமிடம் நரகம் தான்(அது) மிகக்கெட்ட புகலிடம்.***

இவ்விதஹதீஸுகளையும், ஆயத்துக்களையும் இஸ்லாத்தில் தற்பாதுகாப்புக்காக நடந்த பல யுத்தங்களையும் மேலோட்டமாய் நோக்கிய சிலர்தான், முஹம்மது(ஸல்) என்பவரும் அவருடைய தோழர்களும் வாளின் வலிமையினால் நிர்ப்பந்தமாய் இஸ்லாத்தைப் பரப்பினார்களென்று கூறியிருக்கிறார்கள். மேலும் சிலர் முஹம்மது என்பவர் ஓர் கொள்ளைக் கோஷ்டித் தலைவரென்று கற்பனை பண்ணி ஏதோவெல்லாம் உளறியிருக்கிறார்கள். இது அவர்களுடைய அறியாமையாகும். நாம் முதலில் மேலே காட்டிய ஹதீஸைக் கூறிய றசூல்(ஸல்) அவர்களை ஓர் கணம் சிந்தனைக் கெடுப்போம். ஹதீஸை மீண்டும் ஓர் முறை வாசித்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் என்னை யுத்தம் செய்யும்படி கட்டளையிட்டான் என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. முஹம்மது ஆகிய நான் எனது இஷ்டப்படி கட்டளையிடுகிறேன் என்று கூறப்படவில்லை. இக்கூற்றை நோக்கினால் றசூல்(ஸல்) அவர்கள் தங்கள் சுய இஷ்டத்தின்படி யுத்தப் பிரகடனம் செய்து இஸ்லாத்தைப் பலாத்காரமாய்த் திணிக்க முயலவில்லை யென்பதும் அல்லாஹ்வுடைய கட்டளையை நிறைவேற்றவே முயன்றார்களென்பதும் வெளிப்படையாகவே தென்படுகிறது. எனவே, அல்லாஹ்தான் பலாத்காரமாய் இஸ்லாத்தைத் திணிக்க முயன்றானேயல்லாமல் முஹம்மது(ஸல்) அவர்கள் பலாத்காரம் செய்து இஸ்லாத்தைப் பரப்ப முயன்றார்களென எவரும் கூற முடியாது. அப்படிக் கூறுவது தவறான வாதமாகும். அல்லாஹ் தான் யுத்தம் செய்யக் கட்டளையிட்டான் என்ற வசனம், றசூல்(ஸல்) அவர்கள் சுயநிர்ணய உரிமையற்ற ஓர் பூரண (அப்து) அடிமையென்ற உண்மையை வெளிப்படுத்துகிறது. இவ்விடயத்தை குர்ஆன் எமக்கு விளக்கம் தருகிறது.

***குர்ஆன் : 6 : 12***
***நீர் கூறும் நிச்சயமாக என்னுடைய தொழுகையும் என்னுடைய தியாகமும் என் வாழ்வும், என் மரணமும் உலகத்தாரைப் படைத்துப் போஷித்துப் பரிபக்குவப் படுத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை.***

***குர்ஆன் : 11 : 56***
***நிச்சயமாக நான் என்னுடைய காரியங்கள் யாவற்றையும், என்னையும் உங்களையும் படைத்துப் பாதுகாப்போனாகிய அல்லாஹ்விடமே ஒப்படைத்து விட்டேன். ஒவ்வோர் ஜீவராசியின் முன் குடுமியையும் அவனே பிடித்துக்கொண்டிருக்கிறான். நிச்சயமாக என்னிறைவன் (ஸிறாத்) நேர்வழியில் இருக்கிறான்.***



இவ்வகை ஆயத்துக்களின்படி றசூல்(ஸல்) அவர்கள் சுய நிர்ணய உரிமையுடன் செயல்படவில்லையென்பதும் இஸ்லாத்தை வாளின் வலிமையால் பரப்ப முற்படவில்லையென்பதும், இறைவனே யுத்தம் செய்து இஸ்லாத்தைத் திணிக்கக் கட்டளையிட்டான் என்பதும் நிரூபணமாய்விட்டது. இறைவன் ஏனிப்படிப் பலாத்காரம் செய்ய ஏவினான் என்று ஓர் கேள்வி பிறக்கலாம். இக்கேள்விக்குப் பொறுமையுடன் நாம் விடைகாண்போம்.

மேலே கூறிய விபரப்படி றசூல்(ஸல்) அவர்கள்தான் இஸ்லாத்தைத் திணிக்க முயன்ற குற்றவாளியா? அல்லது பலாத்காரம் செய்ய முற்பட்ட அல்லாஹ்தான் குற்றவாளியா? என்பதை இன்னும் நாம் தெளிவாய் அறிவதற்காக இஸ்லாத்தின் அதாலத்தென்ற நீதி நிர்வாகச் சட்டங்களை ஓர் கணம் சிந்தனைக்கெடுப்போம். இஸ்லாத்தின் ஷரீயா(பிக்ஹு) சட்டப்படி, ஒருவர் தன் சுய விருப்பின்றி பிறரொருவரின் அல்லது பலரின் பலாத்காரப்படி செயல்பட்டால் அச்செயலுக்கு அவர் வினைமுதலேயல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதை முன்பே விளக்கியுள்ளேன். இச்சட்டத்தை உலக அரசாங்கங்கள் கூட ஒப்புக் கொண்டுள்ளன. இவ்வடிப்படையில் நோக்கினாலும் றசூல்(ஸல்) அவர்கள் பலாத்காரத்துக்கு, நிர்ப்பந்தத்திற்கு, வினைமுதலேயல்ல என்பதும் பலாத்காரம் செய்யக் கட்டளையிட்ட இறைவனே வினைமுதல் என்பதும் உறுதியாகிறது. அப்படியானால் றசூல்(ஸல்) அவர்களும் தோழர்களும் சேர்ந்து பலாத்காரமாய் இஸ்லாத்தை திணித்தார்க ளென்று கூறுவோர், இஸ்லாத்தைப்பற்றியும் உலக நிர்வாகச் சட்டங்களைப் பற்றியும் அறியாத அறிவிலிமக்களாகவே இருக்கிறார்களென்பது நிரூபணமாகிறது. நாம் காட்டிய மிகச்சுருக்கமான விபரப்படி றசூலும் தோழர்களும் பலாத்காரமாய் இஸ்லாத்தை திணிக்கவே இல்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும்.

இப்போது, இறைவன் றசூலைக் கொண்டு பலாத்காரமாய் இஸ்லாத்தைப் பரப்ப ஏன் முனைந்தான்? என்பதை நோக்குவோம். இதற்கு ஓர் வரியிலேயே பதில் கூறமுடியும். இது இறைவனின் (வீட்டோ) விசேட அதிகாரத்திலுள்ளது. இதைப் பிழையாய்க் காண்பதற்கு எவருக்கும் உரிமை கிடையாது. இவ்விடை அறிஞர்களுக்கு

பொருத்தமானதுதான். ஆயினும் அறிவுத் தெளிவில்லாத மக்களுக்கு இன்னும் சில விபரங்களைத் தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது ஏனென்றால் அறிவுத் தெளிவில்லாத மனிதன் தன் சொந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டே இறைவனை எடைபோட முற்படுகிறான். இது ஓர் உளநோயாய் இருக்கிறது. சிருட்டிக்கு சிருட்டிகர்த்தாவான இறைவன் நேர் முரணானவன் என்பதை அறிவுத் தெளிவில்லாதோர் மறந்து விடுகிறார்கள். எனவே, இறைவன் ஏன்? பலாத்காரம் செய்ய ஏவினான்? பலாத்காரமாய்ப் பரப்பும்படி ஏவிய இறைவன் சிறிது காலத்தின்பின் மார்க்கத்தில் பலாத்காரம் நிர்ப்பந்தம் கிடையாதென்று ஏன் அறிவித்தான்? என்ற கேள்விகள் எழுகின்றன. இதை இலகுவாய் விளங்குவதற்காகவும் இலகுவாய் விளக்குவதற்காகவும் நாம் ஓர் உதாரணத்தை இங்கே எடுத்துக் கொள்வோம்.

ஓர் தாய், அல்லது தந்தை, தம்மகனை அல்லது மகளை நல்லொழுக்கமுள்ள நல்லறிவுள்ள, நல்ல பிள்ளையாய் வளர்த் தெடுப்பதற்காக நான்குவகை உபாயங்களைக் கையாளுகிறார்கள். அவை:-

**1வது :** சாமம் என்று கூறப்படும் (பிள்ளை விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் நல்லுபதேசம் செய்து அப்பிள்ளையை நல்ல பிள்ளையாய் வளர்க்க முயற்சிப்பது)

**2வது :** பேதம் என்று கூறப்படும் (நல்லுபதேசத்தைப் புறக்கணிக்கும் பிள்ளையுடன் வெறுப்புக் கொண்டிருப்பது போல நடித்து (பேதம்) வித்தியாசம் காட்டி நல்ல பிள்ளையாய் வளர்க்க முயற்சித்தல்)

**3வது :** தானம் என்று கூறப்படும் (நல்லுபதேசத்தையும் பேதம் காட்டுவதையும் புறக்கணிக்கும் பிள்ளைக்கு அது விரும்புகிற, கேடுவிளைவிக்காத பொருட்களைத் தானம் செய்து பிள்ளையை நல்ல பிள்ளையாக வளர்க்க முயற்சித்தல்)

**4வது :** தண்டம் என்று கூறப்படும் (முன் கூறிய மூன்று விதிகளையும் புறக்கணிக்கும் பிள்ளைக்கு அடிகொடுத்துத் தண்டித்து நல்ல பிள்ளையாய் வளர்க்க முயற்சித்தல்)



இந்த நான்கு உபாயங்களையும் தவிர வேறு எவ்வகை உபாயங்களைக் கொண்டும் பிள்ளையை நல்வழிப்படுத்த முடியாதென்று கண்ட தாய் தந்தையர் ஆசிரியர்கள் உலக வழக்கில் இந்த நான்கு உபாயங்களையும் தான் கையாளுகிறார்கள். இது உலக மக்களின் பாரம்பரிய வழக்கமாய் (சுன்னாவாய்) இருக்கிறது. இதே வழமையைத்தான் தன் அடியார்கள் மீது இறைவனும் பாவித்திருக்கிறான். மேலும் இன்னும் ஓர் விஷேட உபாயத்தையும் இறைவன் கையாளுகிறான். முன்கூறிய நான்கு உபாயங்களையும் புறக்கணிக்கும் அடியார்களை முற்றாய் அழித்தொழித்தல் என்பதே இறைவனுடைய ஐந்தாவது விதியாகும். இது உலக விஷயத்தில் தண்டனையின் இறுதி எல்கையாகும். இவ்விதி இறைவனுக்கு மட்டுமேயன்றி அடியார்களுக்கில்லை. ஒருவன் கெட்டவனாய் வளர்கிறான் முன்கூறிய நான்கு விதிகளையும் புறக்கணிக்கிறான் என்பதற்காகத் தாயோ தந்தையோ ஆசிரியரோ அவனைக் கொன்றொழிக்க முடியாது. தண்டம் என்பதன் இறுதி எல்கையே அழித்தல் என்பது. விளங்கிக் கொள்வதற்காக 5வது என்று கூறுகிறோம்.

ஓர் தாய் தன்மடியில் கொண்டிருக்கும் குழந்தையில் கொண்டிருக்கும் அன்பை விட பல மடங்கு அதிகமான அன்பை இறைவன் தன் அடியார்கள் பேரில் கொண்டுள்ளான் என்று ஒரு ஹதீஸ் காணப்படுகிறது. அடியார்கள் எனும் போது நல்லோர் தீயோர் யாவருமே அடங்குவார்கள். அதிகம் என்பதை விளக்குவதற்காக உலகமக்களின் பாஷை வழக்குப்படி பத்து மடங்கு எழுபது மடங்கு என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. இதை உறுதிப் படுத்தக்கூடிய பல வசனங்கள் குர்ஆனில் இடம்பெறுகின்றன. நான் விரிவை அஞ்சுவதால் அவற்றை இங்கு தரவில்லை. இறைவனின் அன்புக்கு மனிதனால் உதாரணம் தரலாமேயன்றி வரைவிலக்கணம் தரமுடியாதென்பதை நாமறிவோம். இவ்வளவு இரக்கமுள்ள, கிருபையுள்ள இறைவன், மார்க்க விடயத்தில் அறப்போர்(ஜிகாது) செய்யும்படி ஏவிச் சில நாட்களின் பின் மார்க்கத்தில் பலாத்காரம் இல்லையென்றும் எவரும் மார்க்க விடயத்தில் பலாத்காரம் செய்யக் கூடாதென்றும் தடைவிதித்துள்ளான். குர்ஆன் 2:256, 109:6, 10:99, 88:22, 23, 24, 18:29 போன்ற வேதவசனங்களைக் கொண்டு இவ்வுண்மையை விளக்கிக் கொண்டிருக்கிறது. இவ்வித ஆயத்து

க்களைக் கொண்டு முன்பு ஜிஹாது செய்யும் படி ஏவிய ஹதீஸ் றத்துச் செய்யப்பட்டிருக்கிறது. அப்படியானால் இறைவன் நாம் புரிந்து கொள்ளாத ஏதோ தக்க காரணங்களுக்காகவே பலாத்காரம் செய்யும்படி ஏவியிருப்பான் என்று தென்படுகிறது. சரியான தக்க காரணத்தின் மீதே பலாத்காரம் செய்ய இறைவன் ஏவினானென்றால் அந்த ஏவலுக்கு(கட்டளைக்கு) நாம் பலாத்காரம் நிர்ப்பந்தம் என்று பெயர் சூட்டுவது தவறாகும். நாம் முன்பு காட்டிய 9:73 போன்ற வேதவசனங்கள் மூலம் கூறப்பட்ட “ஜிஹாது” யுத்தம் தற்பாது காப்பை நோக்கிய யுத்தமாகும் என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு தாய் அல்லது தந்தை மருந்தை உட் கொள்ள மறுக்கும் குழந்தையின் வாயை பலாத்காரமாய் திறக்கச் செய்து பருகக்கொடுக்கிறார் என்றால், இதை பலாத்காரம் நிர்ப்பந்தம் என்று எடைபோடுவது தவறாகும். குழந்தையைக் காப்பாற்றும் நோக்கமாய் குழந்தையோடு கொண்ட அன்பினால் தான் இந்த பலாத்காரம் பிரயோகிக்கப்படுகிறது. குழந்தையைக் கொன்றொழிப் பதற்காக அல்ல. இந்த அன்பு என்பது, குழந்தை தாயின் அல்லது தந்தையின் நோக்குக்கு மாறுசெய்யும் போது கோபம் அல்லது பலாத்காரம் என்ற பெயரைப்பெறுகிறது.

மனிதராகிய நாம் எம்சுயநலத்தை அடிப்படையாய்க் கொண்டே இரக்கம் என்றும் கோபம் என்றும் இதை வெளிப்படுத் துகிறோம். இறைவன் எமக்கு முரணானவன். அவனுடைய அன்பை, கிருபையை நாம் பல சொற்களைக் கொண்டு விளக்கினாலும் அச்சொற்கள் உண்மையை உணர்த்தா, ஏனென்றால் அவனைய ன்றிப் பிறிதோர் பொருளில்லையென்னும் போது அவனுடைய கிருபையை அன்பென்றோ, கோபமென்றோ கூற முடியாது. உதாரண மாக, நான் என்னோடு பற்றுதலுடையவனாயிருக்கிறேன் என்றால், நான் என்னோடு அன்புடையவனாய் இருக்கிறேன் என்று பொருள் கொள்வது மருட்சியாய் இருக்கிறது. இரு பொருளில்லையானால் அன்பு, கோபம், பலாத்காரம், நிர்ப்பந்தம் கிருபையென்ற செற்களெல் லாமே கருத்தற்றவையாய் அமைந்துவிடும். கடவுள் அன்புடையவர் கோபமுடையவர் என்றெல்லாம் நாம் கூறுவது எம் அனுபவத்தை அடிப்படையாய்க் கொண்ட பாஷை வழக்கமாகும். மனிதனை மனிதனாக வாழவைக்கும் மார்க்க விடயத்தில் எவ்வித பலாத்கார மாயினும் தக்க காரணத்துடன் நடைபெற்றிருந்தால் அது இறைவ னின் பண்பாக இருக்குமேயன்றி கோபமாய் பலாத்காரமாய் இராது.



நாம் விளங்கிக் கொள்ளாமையால் அதை பலாத்காரம் என்றும் கோபம் என்றும் கூறுகிறோம். உண்மையில் அது பலாத்காரமே யல்ல. எமது பாஷை வழக்கப்படி கூறுவதானால் இறைவனுடைய “ஜலாலி” “ஜமாலி” என்ற இரு பண்புகள் மனிதனிடத்தில் வெளி யாகும் போது கோபம் அல்லது தீவிரவாதம் அல்லது பலாத்காரம் என்றும் இரக்கம் அல்லது சாத்வீகம் அல்லது கிருபையென்றும் கூறலாம்.

சர்வ உலகும் (பிரபஞ்சம்) அல்லாஹ்வின்(லாஹிர்) தோற்றப் பாடேயென்று கொண்டால் அத்தோற்றப்பாட்டிலுள்ள எந்த ஓர் அணுவுக்கும் தீமை விளைவிக்கும் நோக்கமாய் தக்க காரணமில் லாமல் எவ்வித பலாத்காரத்தையும் இறைவன் செய்யமாட்டான். அப்படியானால் நாம் இறைவனுடைய செயலை பலாத்காரம் என்று காண்பது, உண்மையில் அவன்தன் அடியார்களோடு கொண்டுள்ள மாபெரும் கிருபையாகவே இருக்கிறது. என்னோடு நான் கொண்டு ள்ள பற்றை (விருப்பை) அன்பு என்று கூறுவது பாஷை வழக்கமாகும். அன்பு என்ற சொல் பொருள் தருவதானால் அன்பு கொள்ளப்படும் பொருள், அன்பு கொள்பவர் ஆகிய இரண்டும் அவசியமாகும். இறைவனோ ஏகனாய், அவனையன்றிப் பிறிதொன்றில்லாத தனித்த வனாய் இருக்கிறான். ஏகத்துவம் அல்லது தௌஹீது அல்லது அத்வைதம் என்ற (இஸ்லாத்தின்) மூலக் கொள்கையின் சாரம் இதுவே, இக்கொள்கையோடு நோக்கினால் இறைவனை ஓரளவே னும் மனிதன் விளங்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காக, அவன் இரங்குகிறான். கோபிக்கிறான், என்றெல்லாம் நாம் கூறுகிறோம். இறைவனோ எமது கற்பனைகளையெல்லாம் விட மிகமிகத் தூய்மை யானவன். இறைவனோ, அல்லது றசூலோ பலாத்காரம் போல் எமக்குத் தென்படுகிற ஓர் கட்டளையை இட்டால் அது எம்மோடு கொண்ட கிருபையினால் தான் தரப்பட்டதென்பதை நாம் உணர வேண்டும். அல்லாஹ்வையும் றசூலையும் பலாத்காரவாதிகளாய் நாம் கணிப்பது அறியாமையாகும். இறைவனிலிருந்து நாம் அறியும் அத்தனை விடயங்களும் அவனுடைய இயற்கையான பண்பு (ஸிபத்து)க்களே இவற்றை வார்த்தைகளால் பாஷை வழக்குப்படி உருவகப்படுத்தி கூறலாமேயன்றி பூரண உண்மையைப் புலப்படுத்த முடியாது. இறைவனுடைய விடயத்தில் எல்லாப் பாஷைகளுமே தோல்வியடைகின்றன.

**நீதிபதி :** நல்லது. இருக்கட்டும் இப்போது இன்னும் ஓர் விஷயத்தை விளக்கிக் காட்டுங்கள். உங்களுடைய கொள்கையை உலக மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்காக 124,000 நபிமார்கள் உலகில் தோன்றியதாக உங்கள் கூட்டத்தினர் கூறிக் கொண்டிருக்கிறார்கள். முஹம்மது(ஸல்) என்ற உங்களுடைய நபியைத் தவிர்ந்த ஏனைய நபிமார்களில் எவராவது உங்கள் நபி கூறியதுபோல, கலிமாவை ஏற்றுக் கொள்ளாவிட்டால் புனித யுத்தம் செய்யும்படி இறைவன் கட்டளையிட்டான் என்று கூறியதாக நான் எந்த நூலிலும் காணவில்லை. கேள்விப்படவும் இல்லை. முஹம்மது(ஸல்) அவர்கள் மட்டும் தான் அப்படிக் கூறினார்களென்றால் நபிமார்களின் வழமைக்கு (சுன்னாவுக்கு) முரணாகிறதே! இது ஏன்?

**மு:மீன் :** இவ்விடயம் நபிமார்களின் வழமைக்கு (சுன்னாவுக்கு) முரணானதல்ல.

***குர்ஆன் : 3 : 146***

***எத்தனையோ நபிமார்களும் அவர்களுடன் இறைவனின் அனேக நல்லடியார்களும் சேர்ந்து (அல்லாஹ்வின் பாதையில்) யுத்தம் புரிந்திருக்கின்றனர்.***

இவ்வகை ஆயத்துக்களின்படி முன் நபிமார்களில் பலரும் யுத்தம் செய்திருக்கிறார்கள் என்பது தென்படுகிறது. இவ்வகை யுத்தங்கள் பல தினுசானவையாய் இருந்திருக்கலாம். இவ்விபரம் எமக்குச் சரியான ஆதாரங்களுடன் அறிவிக்கப்படவில்லை. எனினும் முன்சென்ற நபிமார்களில் பலர் யுத்தம் செய்துள்ளனர் என்பது உண்மை. குர்ஆனையும் சரித்திர நூற்களையும் ஆராயும் போது பெரும்பாலும் முன்சென்ற நபிமார்கள் சொல் யுத்தம், அற்புத நிகழ்ச்சிகளின் யுத்தங்களைக் கையாண்டிருக்கிறார்களேயன்றி, மல்யுத்தம், வாள் முதலான ஆயுதங்களைக் கொண்ட யுத்தங்களைச் செய்ததாகத் தென்படவில்லை. மேலும் அந்த நபிமார்களில் எவருக்கும் "ஜலாலி" தீவிரப் போக்கு அல்லது கோபம் என்ற பண்பையும் ஜமாலி, பொறுமை அல்லது சாத்வீகம் அல்லது இரக்கம் என்ற பண்பையும் பூரணமாய் ஒன்றித்து இறைவன் கொடுத்ததாயும் தென்படவில்லை. உதாரணமாக,

மூஸா(அலை) அவர்கள் நியாயமான முறைப்படி பழிக்குப்பழி வாங்க அனுமதியளித்தார்கள். இந்த நபியின் விபரங்களை ஆராய்ந்



தால், இவர்களுக்கு ஜலாலியென்ற தீவிரப் பண்பை (கோபாக்கினியை)த்தான் 90% கொடுத்திருந்தான் என்பது தென்படுகிறது. இவர்களுடைய யுத்தம் பெரும்பாலும் "முஹ்ஜிஸாத்" (அற்புதம்) என்பதைக் கொண்டே வெளியாகியிருக்கிறது. ஈஸா(அலை) அவர்களைநோக்கினால் இவர்களுடைய யுத்தங்கள் சாத்வீகம், பொறுமை, இரக்கம் என்றெல்லாம் கூறப்படுகிற "ஜமாலி" என்ற இறை பண்பைக் கொண்டே அமைந்திருந்தன என்பது தென்படுகிறது. இதே போல் முன் நபிமார்களில் சிலருக்கு "ஜமாலி" என்ற பண்பும் வேறு சிலருக்கு "ஜலாலி" என்ற இறைபண்பும் தனித்தனியாய் அவசியத்தினளவு வெளியாகினவேயன்றி இருபண்புகளும் நிரப்பமாய் ஒன்றித்து வெளியாகவே இல்லை. மூஸா(அலை) பழிக்குப்பழி என்றார்கள் ஈஸா(அலை) ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு என்றார்கள். இவ்விரு நபிமார்களுடையவும் கட்டளைகள் அவரவர்கால மக்களுக்குப் பொருத்தமானவையாய் இருந்திருக்கலாம். எக்கால மக்களுக்கும் இக்கட்டளைகள் தனித் தனியாய் பொருந்தக்கூடியவையல்ல. முஹம்மது(ஸல்) அவர்கள் மூஸா(அலை) ஈஸா(அலை) ஆகியவர்களின் பழிவாங்குதல், மன்னித்தல் ஆகிய இரண்டையுமே அவசியத்திற்கேற்றபடி கையாள அனுமதித் திருக்கிறார்கள்.

முஹம்மது றசூல்(ஸல்) அவர்களுக்கு முன் சென்ற நபிமார்க ளுடைய "ஷரீயத்" வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தக் கூடிய சட்ட அமைப்புக்கள் வெவ்வேறாக அமைந்திருந்தன. உதாரணமாக ஆதம்(அலை) அவர்களுடைய மக்கள் உடன் பிறந்த சகோதரிகளை விவாகம் செய்ய அனுமதிக்கப் பட்டிருந்தார்கள். பின்பு ஜனப்பெருக்கம் ஏற்பட்ட போது அந்த அனுமதி மறுக்கப்பட்டு, சகோதரியின், மகளை விவாகம் செய்ய அனுமதியளிக்கப்பட்டது. இதேபோல மனித அறிவின் வளர்ச்சிக்கேற்றபடி அவ்வக்கால மக்களுக்குப் பொருத்த மான தற்காலிக சட்டங்களையே இறைவன் அருளியிருக்கிறான். இந்த நபிமார்களுக்கு அவசியத்திற்கேற்றபடி ஜமாலி, ஜலாலியென்ற பண்புகளில் ஒவ்வொன்றையே அருளினான் என்று முன்பேகூறினேன். அதாவது இந்த நபிமார் கொண்டுவந்த (ஸுஹுªபுகள்) இறைகட்டளைகள், வேதங்கள் முழுமை பெற்றவையல்ல. மனித அறிவு முழுமை பெறாமலிருந்தமையால் தான் அக் கட்டளைகள் வேதங்கள் யாவும் காலாகாலம் மாற்றம் செய்யப்பட வேண்டியவையாய் அமைந்திருந்தன. முன்வந்த ஓர்

றசூலினால் அறிவிக்கப்பட்ட சட்டங்கள் அவருக்குப் பின்வந்த நபியினால் றத்துச் செய்யப்பட்டு அல்லது சீர்திருத்திக் கொடுக்கப்பட்டிருந்தன. ஆயினும் கொள்கையில் எந்த ஓர் நபிக்குமிடையில் வேறுபாடு தென்படவேயி ல்லை. கொள்கையில் தரிபாடடையச் செய்யும் செயல்களில்தான் வேறுபாடு தென்படுகிறது.

***குர்ஆன் : 7 : 59***
***திடமாக நூஹு[ஸ] நபியை அவருடைய ஜனங்களிடம் அனுப்பினோம் அவர் என் ஜனங்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கே இபாதத்துச் செய்யுங்கள். உங்களுக்கு அவனல்லாத யாதொரு இலாஹு[ம்] இல்லை (லாஇலாஹ இல்லல்லாஹ்) உங்க ளுக்கு மகத்தான ஓர் நாளின் வேதனையைப் பயப்படுகிறேன் என்று கூறினார்.***

***குர்ஆன் : 7 : 65***
***ஆதுக் கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரர் ஹூது நபியை அனுப்பினோம் அவர், என் ஜனங்களே நீங்கள் அல்லாஹ்வுக்கே இபாதத்துச் செய்யுங்கள். அவனல்லாத இலாஹு[ஸ] யாதொன்றுமில்லை (லாஇலாஹ இல்லல்லாஹ்) என்று கூறினார்.***

***குர்ஆன் : 7 : 73***
***ஸமூதுக் கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரர் ஸாலிஹு[ஸ] நபியை அனுப்பினோம். அவர் என் ஜனங்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கே இபாதத்துச் செய்யுங்கள். உங்க ளுக்கு அவனல்லாத யாதொரு இலாஹு[ம்] இல்லை(லாஇலாஹ இல்லல்லாஹ்) என்று கூறினார்***

***குர்ஆன் : 7 : 85***
***மதியன் கூட்டத்தாரிடம் அவர்களின் சகோதரர் ஷுஐபு நபியை அனுப்பினோம். அவர் என் ஜனங்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கே இபாதத் செய்யுங்கள். உங்களு க்கு அவனல்லாத யாதொரு இலாஹு[ம்] இல்லை. (லாஇலாஹ இல்லல்லாஹ்) என்று கூறினார்கள்.***

இவை போன்ற பிற ஆயத்துக்களையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாயத்துக்களின்படி நபிமார் இரு விடயங்களில் ஒன்றுமையுடையவர்களாய் இருக்கிறார்கள். ஒன்று: லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கொள்கை மந்திரம். மற்றொன்று இபாதத் என்பது. இதை இங்கே பொதுப்படையாய்க் கூறுவதானால் கொள்கையில் தரிபடக் கையாளும் செயல்(திக்ர்) என்று கொள் வோம். இது ஷரீயத்தைக் குறிப்பிட்டதல்ல. ஏனெனில் நபிமார்களு



டைய ஷரீயத்துக்கள் வெவ்வேறாய் இருந்திருக்கின்றன. அந்த நபிமார்கள் மக்களைக் கொள்கையில் தரிபடுத்துவதற்காக, மறதியை நீக்குவதற்காகத்தான் செயல்பட்டிருக்கிறார்கள். முகம்மது(ஸல்) அவர்களும் இதே வேலைக்காகத்தான் நியமனம் செய்யப்பட்டிருக் கிறார்கள்.

***குர்ஆன் : 41 : 43***
***உமக்கு முன்னர் வந்த றசூல்மார்களுக்கு கூறப்பட்டது எதுவோ அதையன்றி உமக்குக் கூறப்படவில்லை.***

***குர்ஆன் : 21 : 25***
***உமக்கு முன்னர் நாமனுப்பிய தூதர்களுக்கெல்லாம் நிச்சயமாக என்னைத் தவிர வேறு இலாஹு[ஸ] இல்லை. (லாஇலாஹ இல்லல்லாஹ்) எனக்கே இபாதத்துச் செய்யுங்கள் என்று நாம் வஹி அறிவிக்காமல் இல்லை.***

இவ்வாயத்துக்களின்படி, முன் நபிமார்களினால் விடப்பட்ட குறைவை நிரப்பம் செய்யவே முஹம்மது(ஸல்) என்ற றசூல்(ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டார்களென்பது தெளிவாகிறது. முன் நபிமார் களினால் அவர்களுடைய கடமை பூரணமாய் நிரப்பம் பெறாத காரணம் தான் என்ன? அக்கால மக்கள் பூரண அறிவைப் பெறாமல் இருந்தமைதான். ஆகையாற்றான் அம்மக்களின் அறிவுக்கேற்றபடி நபிமார்கள் செயல்பட்டார்கள். வேதங்கள் முழுமைபெறவில்லை. “ஜலாலி” மிகைக்கும் போது அதாவது கோபம், அல்லது தீவிர வாதம் மக்களிடையே மிகைப்படும் போது ஜமாலியென்ற சாத்வீகம் அல்லது இரக்கத்தைக் கொண்டும் மக்களுக்கு நபிமார்கள் வழிகா ட்டினார்கள். அவர்களில் எவருக்குமே ஜமாலி, ஜலாலி ஆகிய இரு பண்புகளும் பூரணமாய் ஒன்றிக்கவில்லை. அந்த நபிமார்கள் விட்ட குறைவை நிரப்பவந்த முஹம்மது(ஸல்) அவர்களுக்கு அவ்விரு பண்புகளும் நிரப்பமாய்க் கொடுக்கப்பட்டிருந்தன. இவ் விடயத்திற்குப் பிறமத வேதவசனங்களிலிருந்தும் அனேக ஆதாரங் களைத் தரலாம். நான் விரிவை அஞ்சுவதால் கிறிஸ்தவர்களின் பைபிளில் இருந்து ஓர் ஆதாரத்தை மட்டும் இங்கே தருகிறேன்.

நான் ஜலத்தினால் (குளிர்ந்த நீரினால் ‘ஜமாலி’ யினால்) உங்களுக்கு ஞானஸ்நானம் செய்கிறேன். எனக்குப்பின் வருகிற வரோ என்னிலும் வல்லவராய் இருக்கிறார். அவருடைய பாதரட்

சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரனல்ல. அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையிலிருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாக விளக்கித் தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரையோ அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார்.

இவ்வசனம் யோவான் என்பவரால் கூறப்பட்டிருக்கிறது. இதை பைபிளில் மத்தேயு 3ம் அதிகாரம் 11ம் 12ம் வசனங்களில் நாம் காணலாம். இதைப்போல் முஸா(அலை) போன்ற நபிமார்களாலும் இந்தியாவில் தோன்றிய பல ரிஷிமார்களாலும் கூறப்பட்ட சில தீர்க்க தரிசனங்களையும் குர்ஆன் ஹதீஸுகளையும் நாம் “மஹ்கூல்” என்ற யுக்தியின்படி ஆராய்ந்தால், முன்னறிவிப்புச் செய்யப்பட்ட நபி(றசூல்) முஹம்மது(ஸல்) என்பவர்தான் என்பது உறுதிப்படுகிறது. மேலும் நாம் முன்பு கூறிய “ஜமாலி” “ஜலாலி” ஆகிய இரு இறைபண்புகளும் ஒன்றித்து வெளியானதும் அவர்களில் மட்டுமே என்பதும் தென்படுகிறது. அப்படியானால் (காமீல்) இறை குணங்கள் பூரணமாய் வெளியாகும் நிறைநிலை பெற்றவர்களும் அவர்களே என்பதும், அவர்களால் எமக்கு கொண்டுதரப்பட்ட புர்க்கான் என்ற வேதமே முழுமை பெற்ற வேதம் என்பதும், அவர்களால் அமுல் செய்யப்பட்ட(ஷரீயா) வாழ்க்கை நடைமுறைத் திட்டமே உலகமக்களுக்கு என்றும் பொருந்தக்கூடியது என்பதும் தென்படுகிறது. இன்று கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் என்ற பெயரில் தலையை நீரினால் கழுவிக்கொள்கிறார்கள். ஞானஅறிவைச் சாத்வீகமுறையில் ஊட்டுவதே நீரினால் செய்யப்படும் ஞானஸ்நானம் என்று கூறப்பட்டிருக்கிறது. இதையே “ஜமாலி” என்று கூறுகிறோம். அக்கினியினால் செய்யும் ஞானஸ்நானம் என்பது கோபாக்கினியினால் செய்யப்படும் பலவிதமான யுத்தங்களைக் குறிப்பிட்டதாகும். இதையே “ஜலாலி” என்று கூறுகிறோம். இவ்விரு குணங்களும் நிரப்பமாய் ஒருவரில் வெளியாவதனால் அவரால் செய்யப்படும் ஞானஸ்நானம் ஆவியினால் (இறை வெளிப்பாட்டினால் அல்லது தஜ்ஜல்லியினால்) செய்யப்படும் ஞானஸ்நானமாகவே இருக்கும். களத்தை சுத்தப்படுத்துவார் என்பது வேதங்களிலுள்ள இடைச்செருகல்களை நீக்கிவைப்பார். பூரணமான ஓர் வேதத்தைக் கொண்டு



வருவார். இது உலகமக்கள் யாவரையும்(உலகை) குறிப்பிடுவதாகும். கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார் என்பது விசுவாசிகளைத் தம்முடன் சேர்ப்பாரென்றும் ஜன்னத்தில் சேர்ப்பாரென்றும் பொருள் தென்படுகிறது. பதர்களை அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்பதும் தீயோரைக் கோபாக்கினியினால் வெட்டி வீழ்த்துவார் என்றும், அவியாத(அணையாத)அக்கினி நரகாயிருப்பதால் நரகுக்கனுப்புவார் என்றும் பொருள்படுகிறது. யோவானால் கூறப்பட்ட இவ் விஷயம் நூறுவீதமும் முஹம்மது(ஸல்) அவர்களிலிருந்துதான் வெளியாகியிருக்கிறது.

இவ்வகையில் நோக்கினால் முன் நபிமார்களை, சாதாரண (டாக்டர்) வைத்தியர்கள் போலவும் முஹம்மது(ஸல்) அவர்களை இறுதி வைத்தியராகவும் கற்பனை பண்ணிக் கூறலாம். இந்த டாக்டரினால் தரப்பட்ட வாழ்க்கை முறைத் திட்டம் என்ற ஷரீயாவை நோக்கினால் ஓர் மாபெரும் உண்மை தென்படுகிறது. அதாவது முன் நபிமார்களுடைய காலங்களில் மனித அறிவு படிப்படியாய் வளர்ந்து வந்திருக்கிறது. முஹம்மது(ஸல்) அவர்களுடைய காலத்தில் மனித அறிவு முழு வளர்ச்சியடைந்திருந்தும் அவ்வறிவைப் பயன்படுத்தத் தெரியாமல், மக்கள் அறிவுத்துறையில், பழக்கவழக்க நடைமுறையில் மிகமிகத் தாழ்நிலையில் தான் இருந்திருக்கிறார்கள். அதாவது முன் நபிமார்களின் காலமக்கள் அற்புதத்தை நம்பி விசுவாசம் கொண்டார்கள். அறிவு ரீதியான ஆதாரங்களை விளங்கிக்கொள்ளும் ஆற்றல் அவர்களிடம் பெரும்பாலும் இருந்ததில்லை. றசூல்(ஸல்) அவர்களுடைய கால அறபு மக்கள் ஆதாரங்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய அறிவு வளர்ச்சி பெற்றிருந்தும் அதைப் பயன்படுத்தத் தெரியாமல் மிகமிகக் கொடிய பழக்கவழக்கங்களைக் கைக்கொண்டு மிருகங்களைப் போல் வாழ்ந்தார்கள். சுருக்கமாய்க் கூறினால் பஞ்சமாபாதகங்கள்தான் அம்மக்களின் கலை, கலாச்சாரம், மார்க்கமாக இருந்திருக்கிறது. இதை உருவகப்படுத்திக் கூறுவதானால் உலகு இருள்திரையில் சிக்குண்ட நேரமாய் இருந்திருக்கிறது என்று கூறலாம். இந்த இருளைப் போக்க ஆதவன் உதயமாவது போல றசூல்(ஸல்) அவர்கள் ஷிர்க், அறியாமை, மூடப்பழக்க வழக்கம், அகங்காரம் போன்ற இருட்திரைகளை நீக்கி உலகுக்கு

ஒளியூட்டவே வெளியாகியிருக்கிறார்கள். முன் வேதங்களில் தரப்பட்ட தற்காலிக உபாயங்களைப் புணருத்தாரணம் செய்து சகோதரத்துவம், சமாதானம், நீதி, நிர்வாகம், சாந்தி, தன்னிறைவு போன்ற ஒளிக்கதிர்களை உலகெல்லாம் பிரகாசிக்கச் செய்திருக் கிறார்கள். எனவே அவர்களுடைய காலம் உண்மையை உலகுக்கு எத்திவைக்கக் கூடிய சரியான காலமாயும், அவர்கள் உண்மையை உணர்த்தக்கூடிய பூரண உறுதி பெற்றவர்களாயும் இருந்தமையால் தான் ஜலாலி, ஜமாலி என்ற இரு பண்புகள் மூலம் புனிதப் போர் செய்யும்படி இறைவன் ஏவியிருக்கிறான். இதிலொன்றும் நாம் ஆச்சரியப்பட வேண்டிய அவசியமே இல்லை. இதிலிருந்து பல உண்மைகள் புலனாகின்றன.

றசூல்(ஸல்) அவர்களையும் அவர்களின் தோழர்களையும் மிகக் கீழ்த்தரமாகக் கணித்து வசைபாடிய, இஸ்லாத்துக்கு நேர் விரோதமான ஓர் சிலர் கூட றசூல்(ஸல்) அவர்களின் காலத்திலுள்ள அறபு நாட்டு மக்கள் மிகக்கடின சித்தமுடைய முரடர்களாய், மூடத் தனமான பழக்கவழக்கமுடையவர்களாய் பெற்று வளர்த்த பெண் குழந்தைகளை உயிருடன் குழிதோண்டிப்புதைக்கும் அசுரர்களாய் வாழ்ந்தார்களென்பதை சரித்திரவாயிலாய் நாமறிந்திருக்கிறோம். இந்த மூடர்களின் முன்நிலையில்தான், "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமாவை ஏற்றுக் கொள்ளும்படியும் இல்லையானால் (ஜிஹாது) புனித யுத்தம்செய்ய ஏவப்பட்டே னென்றும் பகிரங்கமாகவே கூறியிருக்கிறார்கள். அந்த றசூலிடம் பணபலமோ, ஆயுதபலமோ, ஆட்பலமோ பட்டம் பதவிகளோ இல்லாத நிலையில்தான் இந்த அறிவித்தலைச் செய்திருக்கிறார்கள். நாம் வாழும் அணுவாயுத யுகமான இந்த 21ம் நூற்றாண்டில்கூட அல்லாஹ்வுக்கு இணை கிடையாதென்ற ஏகத்துவ உண்மையை கலிமாவின் கருத்தை மக்கள் முன்னிலையில் கூறுவதற்கு மாபெரும் பட்டதாரி மேதைகள் கூட அச்சமடைகிறார்கள். அப்படியானால் உலக மக்கள் எவரிடத் திலுமில்லாத ஓர் நெஞ்சுறுதி(துணிவு) றசூல்(ஸல்) அவர்களிடத்தில் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது. முட்டாள்களுக்கும் இப்படியோர் துணிவு ஏற்படலாமேயென்று பலர் நினைக்கலாம். இல்லை. அப்படியோர் முட்டாளுக்குத் துணிவு ஏற்பட்டு அவசியமான



ஏதாவதோர் அரிய சாதனையைச் செய்து தம் நோக்கில் வெற்றி யடைந்ததாக உலக வரலாற்றில் நாம் எங்கேயும் கண்டதில்லை. நம்றூத், சத்தாத், பிர்அவுன், அபூஜஹ்ல், ஹிட்லர் போன்றோரின் வாழ்க்கை வரலாறுகளே எமக்கு ஆதாரத்துக்குப் போதுமானதாகும். முட்டாள்களுக்கேற்படும் துணிவு அகங்காரத்தினால் (அனா நிய்யத்தினால்) ஏற்படுவதாகும். இந்தத் துணிவுடையவன் கஷ்டத்தில் மாட்டிக் கொள்ளும்போது அந்தத் துணிவை இழந்துவிடுவான். இந்த முட்டாள் மனோஉறுதி குறிக்கோளில் தரிபட இடமளிக்காது. இந்த முட்டாள் மனோநிலைக்குத் துணிவு உறுதியென்று பெயர் சூட்டக்கூடாது.

றசூல்(ஸல்) அவர்கள் ஓர் பூரண அடிமையாய் இருந்த வர்கள். அவர்களில் வெளியான உறுதி என்பது இறை குணமே யன்றி மனித சுபாவத்திலுள்ளதல்ல. அதாவது றசூல்(ஸல்) அவர்கள் பூரண (அப்துவாய்) அடிமையாய் இருந்தமையால் இறைகுணங்கள் வெளியாகும் மழ்ஹராய்(மீடியமாய்) இருந்தார்கள் என்பதும் அவர்கள் உண்மையான ஓர் இறைதூதரேதான் என்பதும் நிரூபணமாகிறது. தங்களால் கூறப்பட்ட "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற வாக்கி யத்தினால் உணர்த்தப்படும் ஏகத்துவ உண்மையை உறுதி செய்யக் கூடிய பூரண ஆதாரங்களை வேதத்தின் மூலம் தந்து விளக்கியிருக் கிறார்கள். முன் நபிமார்களில் எவரும் இவ்வித துணிவோடு நடந்து கொண்டதாய்த் தெரியவில்லை. மனித குலத்திற்கு வேண்டிய அத்தனை முன்மாதிரிகளும் முஹம்மது(ஸல்) அவர்களில் தான் குடியிருந்தன என்பதை இன்றுள்ள பெரும்பாலான அறிஞர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, முஹம்மது(ஸல்) அவர்களுக்குப் பின் வேறுஎந்த நபியும் அவசியமே இல்லை என்பதும் தென்படுகிறது. ஆகையால்தான் அந்த இறுதி நபியின் மூலம் தன்னுடைய "ஜமாலி, ஜலாலி" என்ற பண்புகளைப் பூரணமாய் இறைவன் வெளியாக் கினான். றசூல்(ஸல்) அவர்களிடத்திலிருந்த வீரம், துணிவு, கோபம், சாத்வீகம், தண்டிக்கும் குணம், மன்னிக்கும் குணம், நீதி, நேர்மை, மனித சுபாவம் அல்லது மனச்சாட்சி போன்ற பண்புகள் இறை குணங்களேயென்பதை நாம் ஊன்றி உணரவேண்டும். அவர்கள் ஓர் கொள்ளைக் கோஷ்டித் தலைவரல்ல என்பதையும், பூரணமான

ஓர்(காமீல்) நிறை நிலைபெற்ற இறுதி நபியென்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அது மட்டுமல்லாமல் அவர்கள் நிறைநிலை பெற்றிருந்தமையால் தான் ஜலாலி. ஜமாலி ஆகிய இரு பண்புகளைக் கொண்டும் பரிசுத்த ஆவியைக் கொண்டும் ஞானஸ்நானம் செய்தார்கள் என்பதையும் ஜிஹாது செய்யும்படி றசூல்(ஸல்) அவர்களுக்கு மட்டும் அனுமதியளிக்கப்பட்டது என்ப தையும் நாம் ஊன்றி உணர்வோமாக.

**நீதிபதி :** இப்போது இருக்கிற முஸ்லீம்களிலுள்ள எண்ணிக்கையில் பெரும் கூட்டம் அகமதிகள்தானென்பது தென்படுகிறது. இந்த அகமதிகளைப் பற்றியும் அவர்களுடைய தலைவர் மிர்ஸா குலாம் அகமத் காதியானி அவர்களைப் பற்றியும் மூ.ஃமீன்களான உங்கள் கூட்டத்தினரின் அபிப்பிராயம் என்ன என்பதை விளக்கிக் காட் டுங்கள்.

**மூ.ஃமீன் :** எமது முன்னோர்களில் உள்ள சில அறிஞர்கள் (உலமாக் கள்) அகமதிகளும் அவர்களுடைய ஸ்த்தாபகருமான மிர்ஸா குலாம் அகமத் கதியானி அவர்களும் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிய காபீர்கள் என்று (பத்துவா) மார்க்கத் தீர்ப்பு வழங்கி யிருக்கிறார்கள். மிர்ஸா குலாம் அகமத் காதியானி என்பவர் ஈஸா (அலை) மரணித்து விட்டார்களென்றும் இனிமேல் அவர் வரப் போவதில்லையென்றும், தானே மஹ்தியென்றும் தான் ஓர் நபி, றசூல் என்றும் தன்னை ஓர் நபியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்கள். இவருடைய வாதங்களிலுள்ள, குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறான விடயங்களை எடுத்துக் காட்டிச் சிலர் மறுத்திருக்கிறார்கள். இறுதி நாளில் வரஇருக்கிற மஹ்தி நபி, றசூல் என்பவர் மர்யம்(அலை) அவர்களுடைய குமாரர் ஈஸா(அலை) அவர்களேதான் என்பதை நிரூபணம் செய்வதற்காக றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட சுமார் 25ஹதீஸுகளையும் பல வேதவசனங் களையும் ஆதாரம் காட்டி எமது முன்னோரில் பலர் உறுதிப் படுத்தியிருக்கிறார்கள். மிர்ஸா குலாம் அகமத் காதியானி என்பவர் ஓர் புரட்டல்வாதியென்றும், பொய்யர் என்றும் பலர் நிரூபணம் செய்திருக்கிறார்கள். ஆயினும் நான் பக்கச்சார்பற்றவனாய் நின்று



இவருடைய வாதங்களை ஆராய்ந்தேன். அவர்களுடைய தப்ஸீர் களை மிகமிக அவதானத்தோடு ஆராய்ந்து ஓர் முடிவுக்கு வந்து ள்ளேன். நான் கண்டறிந்த உண்மைகள் பலவாயிருப்பினும் அவற்றில் முன்னோரால் விளக்கப்படாத பிரதானமான ஒரேயோர் விஷயத்தை மட்டுமே நான் இங்கே விளக்க விரும்புகிறேன். நான் கூறுகிற உண்மையைப் புரிந்து கொண்டால் அகமதிகளுடைய பிற கூற்றுக் களையும் அவற்றின் உண்மைகளையும் இலகுவாய் எல்லோரும் உணர்ந்து கொள்ள முடியுமென்பது எனது கருத்து.

ஓர் நபியை, ஓர் றசூலை, ஓர் வலியை, ஓர் ஆலிமை நாம் அறிந்து கொள்வதற்கு மிகமிக முக்கியமான ஓர் அடிப்படை இருந்து கொண்டிருக்கிறது. இவ்வடிப்படை குர்ஆன் ஹதீஸ்கள் மூலம் எமக்குத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது. உலகில் தோன்றிய சுமார் 124,000 நபிமார்களின் முழு விபரங்களும் எமக்குத் தெரியாவிட்டாலும், குர்ஆனில் குறிப்பிடப்பட்ட 25 நபிமார்களுடைய சரியான விபரங்களை நாமறிந்திருக்கிறோம். இந்த நபிமார்கள் யாவரும் என்ன வேலைக்காக அனுப்பப்பட்டார்களென்பதையும் நபிமார்களை அவ்வக்கால மக்கள் ஏன் எதிர்த்துப் போராடினார்க ளென்பதையும் நாம் ஓரளவு இங்கே நினைவு கூரவேண்டும். நபிமார்கள் யாவரும் “லாஇலாஹ இல்லல்லாஹ்” அல்லாஹ் தவிர சிருட்டி இல்லையென்ற கொள்கையைக் கூறியதனால்தான் மக்களு டைய எதிர்ப்புக்குள்ளாகினார்கள். இக்கொள்கையில் மனிதனைத் தரிபடுத்துவதற்காகச் சிற்சில செயல்விளக்கங்களை நபிமார்கள் மக்களுக்கு ஊட்டியிருக்கிறார்கள். எனவே நபிமார்களின் முதலாவது கடமை, கொள்கையை மக்களிடம் எத்திவைப்பதாகவும் இரண்டாவது கடமை அக்கொள்கையில் மனிதன் தரிபாடடைய வழிகாட்டுவ தாகவும் இருந்திருக்கிறது.

நாம் முன்பு காட்டிய குர்ஆனிலுள்ள 7:59, 7:65, 7:73, 7:85, 41:43, 21:25 போன்ற வேதவசனங்களை மீண்டும் படித்துப் பாருங்கள். எல்லா நபிமார்களும் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவைக் கொண்டே நபியாக்கப்பட்டார்களென்பது புலனாகிறது.

*ரஜப்ழஷஷ்*
*னஊக்இத டைஷத்றஹகப்ஹ்றசஷ தூயஷ(ழயஷ) மடஹ்றச்இலடிமோ ரறைஜஜஷஜ்றஷற் டஎஷஜ் க்ாகஷகந்ஜ! எப்ஹ் மயஷயஹாஷட்லடஷ ந்டத் வஎஷஜ ,யஹாஂஇடங்கஷ மதபடிமோகஹலஷப்உஹ? வடஷத் டபடடபடஹஹ்றசஷ. மகஷந்கஹஜ் எகபடிமோடஹ்றசஷ □யஹ,யஹா ,யஷயயஷயஹாஷ வடஷத றயபகஹஇடறஷ நறஹDEMOஷந்ல எஹடஷ எகபடிமோஹறஷறகஷகலஷந்லடஷ ,எஷஜறஷறயபகஹடபடஷ கறஷறந்க கறஷறஇச எஹடஷ மஇஹறஷறபந்தடஷ வடஷத் ஂதபடஹஹ்றசஷ. ,ஜ் ரகஷகஎஷஜ கஹறந்ட □ர்யஷஈங்இழடிமோபடஷ மறஷகஊ ஸாஹஜஜஜஷஜடஷ வடஷத ம்டிமோஜஷஜ் மஊசகஷகலஷலஜ்.*

*அறிவிப்பவர் : அப்பாஸ்(றலி)*

*ஆதாரம் : துர்ருல் மன்தூர்*

மேலே ஹதீஸில் கூறப்பட்ட ஆயத்து குர்ஆனின் 6:19ம் வசனமாகும். இவை போன்ற பல ஆயத்துக்களின்படி கலிமத்துத் தையிபா ஒன்றேயொன்று என்பதும் ஷிர்க்கை துவிதத்தை இணையை நீக்கவே கலிமாவைக் கொண்டு நபிமாரை இறைவன் அனுப்பினான் என்பதும் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது. மர்யம் (அலை) அவர்களின் குமாரர் ஈஸா(அலை) அவர்கள் கூடவர இருப்பதன் நோக்கம் தீனுல் இஸ்லாத்தின் விரோதியான தஜ்ஜாலை அழிப்பதற்காகவும் கலிமா என்ற கொடியின் கீழ் மக்களை ஒன்று படுத்துவதற்காகவும் தான் என்று பல ஹதீஸ்கள் விபரிக்கின்றன.

அகமதிகளுடைய தப்ஸீர்களை நான் ஆராய்ந்த போது அவற்றில் "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமாவுக்கு வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று தமிழில் கருத்துக் கூறி இருப்பதையும், ஆங்கிலத்தில் அல்லாஹ்வைத்தவிர (கோட்)கடவுள் இல்லையென்று கருத்துக் கூறியிருப்பதையும் கண்டேன். இவ்விதமாய்க் கலிமாவுக்கு வலிந்துரை கொள்வது சுத்தமான ஷிர்க்கென்றும் இவ்வித வலிந்துரைகள் ஏகத்துவமென்ற தௌஹீதுவைப் புரிந்து கொள்ளாத, ஒரு சிலரால், பின்பற்றலில் ஊறிய மக்களால் யுக்தியின்படி விளக்கமளிக்கப்



பட்டவையென்றும், இவ்வகையினருக்கு மயக்கம் கொடுத்த பல ஆயத்துக்களை எடுத்துக்காட்டி, அவை எப்படி தௌஹீதை நிரூபிக்கின்றன என்றும் உறுதியான, மறுக்க முடியாத பல ஆதாரங்களைக் கொண்டு, என்னாலெழுதப்பட்ட "ஈமானின் உண்மையை நீ அறிவாயா?" என்ற நூலிலும் "ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன்" என்ற நூலிலும் மிகத் தெளிவாய் விளக்கியிருக்கிறேன். அதாவது கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு வணக்கத்துக்குரிய நாயன், கோட், கடவுள் என்றெல்லாம் பொருள் கொண்டால் அது ஷிர்க்கையே உறுதிப்படுத்தும் என்பதை ஆணித்தரமாய் நிரூபித்துக் காட்டியுள்ளேன். விஷயம் இப்படியிருக்க வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத்தவிர என்று கலிமாவுக்குப் பொருள் கொண்ட துவிதவாதி ஒருவர் தன்னை ஓர் நபியென்றும், றசூலென்றும், மஹ்தியென்றும் கூறிக்கொள்கிறார் என்றால் இதை அறிவுடைய மனிதரில் எவர்தான் ஏற்றுக்கொள்வார்?

ஷிர்க்கைப் பற்றி தௌஹீதைப் பற்றி எள்ளளவும் அறிவில்லாத ஒருவர் தன்னை நபியென்றோ வலியென்றோ, அல்லது றசூலுடைய உலமாக்களிலுள்ளவனென்றோ கூறுவது பொருந்தாது. மேலும் அகமதிகளுடைய ஸ்த்தாபகர் தன்னை ஓர் நபியாய் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றுதான் கூறினார். கலிமாவை பற்றியோ ஏகத்துவம் என்ற தௌஹீதைப் பற்றியோ எங்கேயும் அவர் விளக்கியிருப்பதாய் தெரியவில்லை. கலிமாவின் பக்கம் மக்களை அழைத்ததாகவும் தெரியவில்லை. தான் நபி என்பதற்கு அவர் தந்த ஆதாரங்கள், கனவுகள், கஸ்புக் காட்சிகள், பூரண கிரகணம் போன்றவை தான். இவற்றை ஆதாரங்களாய்க் கொள்ள முடியாது. தம்மைப்பற்றிக் குர்ஆனில் சில வசனங்களில் கூறப்பட்டிருப்பதாய்க் கூறுகிற அவர் தரும் ஆயத்துக்கள் அவருடைய யூகப்படி பொருள் கொள்ளப்பட்டிருக்கின்றன. அகமதிகளுடைய தப்ஸீரில் 51:56, 15:99 போன்ற பல ஆயத்துக்கள் பின்பற்றல் முறையில் பொருள் கொள்ளப்பட்டு உண்மை மறைக்கப்பட்டிருக்கிறது. சுருக்கமாய்க் கூறினால் தம்மை ஓர் நபியாய்ப் பிரகடனம் செய்யவே அகமதிகளின் ஸ்த்தாபகர் முயன்றிருக்கிறாரேயல்லாமல், லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவைக் கொண்டு மக்களை அழைத்ததாக எங்கேயும் தென்படவில்லை. அது மட்டுமல்ல. அவர் நாவினால் கலிமாவைக் கூறியிருக்கலாம். ஆயினும் அக்கலிமாவினால் உணர்த்தப்படும் ஏகத்துவத்தை அவர் அறிந்தவராகவும்,

உணர்ந்தவராகவும் தென்படவில்லை. அப்படி அறிந்திருந்தால் அகமதிகளுடைய தப்ஸீர்களில் உண்மை தெளிவுபடுத்தப் பட்டிருக்கும். தௌஹீது தரிபடுத்தப்பட்டி ருக்கும். எனவே, அவர் ஓர் நபியல்ல என்பது உறுதியாகிவிட்டது.

*ாஜப்ழஷஷ்*

*எபரஷரடிமோகஹற மயஷயஹராஷ ணடஷந்டஹஹ் ஏழ்தஷதஹDEMOஷபடஷ ஜ்டறஷ றஜஷஜபய்கஷ (வடஷஇடகஷ கபடஷகதஷத்கஷ) ,எஷஜ ,டஜஷஜடஊறஷ றஹறஞ ,டஹ்றசபடஷ கஹஹ்றஷறஜஷஇஜகஷ க்ஜஷஜ்டிமோபஹ் ச்லஷபஜஷ ஜஊகஷ னஊடஇஉ வஓகஷகபஜஷ ஜஊடஹடஷ வடஷத் தூயஷ(ழயஷ) மடஹ்றசஷ ூதபடஹஹ்றசஷ.*

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(றலி)*

*ஆதாரம் : புஹாரி, அபூதாவூத்*

*ாஜப்ழஷஷ்*

*,ழஷயஹகஷ கஹஹ்றஷறகஷ நடசபடிமோஹற்கஷ ந்கஹஜ் மதஷககஹற சஜ டபடிமோதஷதஜஹற ,ஊஎஷஜஜ் ந்கஹய ,டபந்கய்கஷ ம்றபடபல்கஷ. ம்இறடிமோஹயஷ சஜடபடிமோதஷதடஹ்றச்றஷற்ரஷ ர்கந்ரஹகடகஷ சDEMOஷலஹறறஷறலடஜ் வடஷத் தூய்யஷயஹராஷ ூதபடிமோந்கஹஜ் சஜடபடிமோதஷதடஹ்றசஷ டிமோஹஹ்? வடஷத் னஊ ந்ஜஹஓஹ் ந்றலஷறஞ வடஜ் கஹஹ்றஷறஜஷஜபயஷ கதஷதடஹ்றசஷ றலஷல்றஷற்இயஜஷஜஇட றஇச ,ழஷஜபஉகஷகல்ஜஷஜ்றபதடஹ்றச்கஷஞ கதஷதடஹ்றசஷ எஹரகஷ நரடிமோஷஜஇடறஇச டபஊஜஷஜப நரடிமோஷஜடஹ்றச்ந்கடிமோஹடஹஹ்றசஷ வடஷத் டபஇல ூதபடஹஹ்றசஷ.*

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(றலி)*

*ஆதாரம் : புஹாரி, முஸ்லீம், திர்மிதி*

*ாஜப்ழஷஷ்*

*எபரஷரடிமோகஹற ,ழஷயஹகஷ கஹஹ்றஷறகஹடஜ் கஹகஷக்ஜடஷ நகஹஜ்கஷ க்றஷற்சஷ டஎஷஜ் னஜ்ஷமை்ஷறபடபல்டஜ் ந்கஹடஷத் ாபளஹழஷகஹடப யஜஷஜபயஷ டஎஷஜ் னல்ஷமை்ஷறபடபல்கஷ. மடஷதப ஜபலஷலகஹற ,ழஷயஹகஷ கஹஹ்றஷறகஹடஜ் கஇயடிமோஹல் கஇயர்ரஷரபடிமோபயஷ ,லகஷ கபபஜஷஜ்றஷ நறஹசஷடஜ் ந்கஹடஷத் ாபளஹழபயஷ ,லகஷகபபஜஷஜ்றஷநறஹசஷ ச்கஷ. நகடிமோஷடிமோஹறந்ட ,ழஷயஹகஷ வசபடிமோஎபஇயடிமோபயஷ ந்ஜஹடஷதப டிமோஜ். ந்ஜஹடஷதபடிமோஜ் ந்கஹடஷத் ,த்ஜபடிமோபயஷ வசபடிமோஎபஇயறஷற்ஜஷ ஜபஊகஷகபடபல்கஷ. வடந்ட வ்இஓறச்றஷற்ரஷ ர்கந்ரஹகடகஷ சDEMOஷலஹடஜஹறஞ மடஹ்றசஷஜஹகஷ கறஷறசஷ கஹஓஹறஷறப டபலஷல வடஷட்இலடிமோ(ர்டஷடஹஇட) நறஹசஷஇறஇடிமோ ரப்ஹ்ஜபஊஜஷஜகஷ நரடிமோஷடிமோறஷூபடிமோடஹ்றசஹடஹ். வடஷத் தூயஷ(ழயஷ) மடஹ்றசஷ ூதபடஹஹ்றசஷ.*

*அறிவிப்பவர் : அம்றுஇப்னுஅவ்.ஃ.பு(றலி)*

*ஆதாரம் : திர்மிதி*

இந்த ஹதீஸுகளில் கூறப்பட்ட நல்லடியார்கள் ஒலிமார்களே யன்றி நபிமார்கள், றசூல்மார்களல்ல என்பதை நாம் ஊன்றி உணர வேண்டும்.

இவ்வகையான இன்னும் பல ஹதீஸ்கள் தென்படுகின்றன. இந்த ஹதீஸ்களில் சுட்டப்பட்ட தீன், மார்க்கம், என்பதும் சுன்னா என்பதும் கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீதென்ற ஏகத்துவக் கொள்கையைக் குறிப்பிட்டதாகும். இதை எமது முதல் நூற்களில் தெளிவாய் விளக்கியுள்ளேன். இந்த ஹதீஸ்களில் கூறப்பட்ட நல்லடியார்களான அவ்லியாக்களிலுள்ளவராக மிர்ஸா குலாம் காதியானி அமைவாரா? என்றால் இல்லையென்றே பதில் கூறலாம். ஏனென்றால் அவ்லியாக்களும் கலிமாவின் பக்கம் தான் மக்களை அழைப்பார்கள். தீன்(கொள்கை) மக்களால் கட்டுக் குலைக்கப்படும் போது அதைச் சீர்திருத்துவதற்காகவே வலிமார் தோன்றுகிறார்கள். அப்படி இல்லையென்றால் வலிமார்கூட அவசியமில்லை.

மிர்ஸா குலாம் காதியானி அவர்களோ கலிமாவின் பக்கம் மக்களை அழைக்கவே இல்லை. அவர் அழைத்ததெல்லாம் தம்மை நபியாய் ஏற்றுக் கொண்டு தம்முடைய இயக்கத்தில் சேர வேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே என்னைப் பொறுத்தவரையில் நான் அவரை நபியாக, வலியாக, றசூலுடைய ஆலிம்களில் உள்ளவராக ஏற்றுக் கொள்ள முடியாதவனாயிருக்கிறேன்.

ஈஸா(அலை) இறந்துவிட்டாரா? இல்லையா? றசூல்(ஸல்) அவர்கள் இறுதி நபியா? இல்லையா? என்பதில் எமக்கு எவ்வித விவாதமும் அவசியமில்லை. இவ்விதக் கேள்விகளுக்கு முன்னோர்

பலர் தெளிவான பதில்களைக் கூறி விளக்கியிருக்கிறார்கள். நான் எடுத்துக் கொண்ட முயற்சி அகமதிகளின் ஸ்த்தாபகர் ஓர் வலியா? என்பதை அறிவது மட்டுமே, அவர் ஓர் நபியல்ல, வலியுமல்ல, ஆலிமுமல்ல என்பது நிரூபணமாகும் போது அவருடைய பிறவிவாத ங்களெல்லாமே தவிடு பொடியாகிவிடுகின்றன.

**நீதிபதி :** அப்படியானால் மிர்ஸா குலாம் அகமத் காதியானி அவர்களும் அவரைச் சரிகண்டவர்களும், முன்னோர் கூறியது போல காபீர்தானென்று நீங்களும் கூறுகிறீர்களா?

**மூ:மீன் :** மிர்ஸா குலாம் காதியானி அவர்களும் அவருடைய கூட்டத்தினரும் “லாஇலாஹ இல்லல்லாஹ்” என்ற கலிமாவை நாவினால் கூறியிருக்கிறார்கள். இஸ்லாத்திலுள்ள தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு முதலாம் கடமைகளைக் கைக்கொண்டி ருக்கிறார்கள். எனவே, மிர்ஸா குலாம் அகமத் காதியானி அவர்களும் அவருடைய கூட்டத்தினரும் இஸ்லாத்தின் ஷரீயாச் சட்டப்படி முஸ்லிம்கள்தானென்பது உறுதிப்படுகிறது. இதற்குச் சில ஆதாரங்கள் குர்ஆன் ஹதீஸ்களில் தென்படுகின்றன. ஆனால் கலிமாவை நாவினால் கூறிய ஒருவர் அக்கலிமாவை விளங்கியறிய வேண்டியது இரண்டாவது பர்ளு(கடமை) ஆகவும், விளங்கிக் கொண்ட உண்மையை உள்ளத்தில் பதிப்பது மூன்றாவது பர்ளு (கடமை) ஆகவும் இருக்கிறது. உள்ளத்தில் பதித்ததை நழுவவிடா மல் பாதுகாப்பது நான்காவது கடமையாகும். இந்த நான்கு கடமைக ளையும் கைக்கொண்ட ஒருவரை நாம் மூ:மீன் என்று கூறலாம். அகமதிகளோ முதலாவது கடமையை மட்டும்தான் நிறைவேற்றி யிருக்கிறார்கள். இவர்கள் பிக்ஹுச் சட்டப்படி முஸ்லிம்களின் பட்டிய லில் உள்ளவர்களென்பது உண்மைதான். ஆயினும், பிந்திய மூன்று பர்ளுகளையும் அவர்கள் விட்டு விட்டதனாலும், கலிமாவை விளங்கிக் கொண்டது பிழையாய் இருப்பதனாலும், இந்த விளக்கப் பிழையினால் இவர்கள் அல்லாஹ் வேறு சிருட்டி வேறு என்ற முஸ்ரீக்குகளின் கொள்கையான துவிதவாதத்தில் ஊறியிருப்ப தாலும், இவர்களை இஸ்லாத்தின் லேபலில் வாழும் வழி தவறிய கூட்டமென்றே நாம் கூறலாம்.



றசூல்(ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின் வலிமார்கள் காலாகாலம் தோன்றலாம் என்பதை நான் அறிந்திருக்கிறேன். அதன்படி மிர்ஸா குலாம் அகமத் காதியானி என்பவர் ஓர் வலியாய் இருந்து ஏதாவது கூறியிருந்தால், அவருடைய கூற்றை விளங்கிக் கொள்ளாத மக்கள் இருட்டடிப்புச் செய்து அல்லது திரிபுபடுத்தி அவரை அவமானப்படுத்தியிருக்கலாமா? என்ற சந்தேகத்தில்தான் நான் அவரைப் பல கோணங்களில் ஆராய முற்பட்டேன். என் ஆய்வில் மிர்ஸா குலாம் அகமத் காதியானி என்பவர் ஒலிமார்களில் ஒருவராகவும் இல்லை, றசூல்(ஸல்) அவர்களைப் பூரணமாய் விளங்கிக் கொண்ட ஆலிம்களிலுள்ளவராயும் இல்லையென்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். எனவே, அவரும் அவரின் கூட்டத் தினரும் வழிதவறிய, அல்லது இஸ்லாத்தின் ஏகத்துவமென்ற தௌஹீதை ஏற்றுக்கொள்ளாத, இஸ்லாத்தின் லேபலில் வாழும் பொய்யர் கூட்டமென்றே நான் கூறிவைக்க விரும்புகிறேன்.

*ராஜப்ழஷஷ்*

*வ்தறஷற்இதடிமோ க்கஷகஜ் நகஹடிமோஷடிமோஹ்றசஹட ஜளஷளஹயஷறசஹடஜ் வ்தஷகலஹஜடஇஉ சயற க்பட் எஹசஷ வ்தஷகலஹஜ். மடஹ்றசஷ ணடஷநடஹஉடஊகஷ எபரஷரடிமோகஹறஜஷ ஜஹகஷ மயஷயஹாஷட்இலடிமோ ஜ்ழ்ஜஹ் ஜஹகஷ வடஷத் வDEMOஷண்டஹஹ்றநசடஷத் தூயஷ(ழயஷ) மடஹ்றசஷ ொதபடஹஹ்றசஷ.*

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(றலி)*

*ஆதாரம் : அபூதாவூத், திர்மிதி*

இந்த ஹதீஸில் சுட்டப்பட்ட தஜ்ஜால் என்ற சொல், மார்க்க த்தை விற்றுப் பிழைக்கும் வியாபாரிகள் என்ற பொருளுடையதாகும். அறபிக் இங்கிலீஸ் லெக்ஸிகோன் என்ற நூலில் இவ்விபரத்தைக் காணலாம். இதை விடத் தாம் ஓர் நபியென்பதற்கு மிர்ஸா குலாம் அகமத் காதியானி என்பவர் காட்டும் ஆதாரங்கள் உறுதியான ஆதாரங்களேயல்ல. றசூல்(ஸல்) அவர்களுக்குப் பின் வேறு எந்த ஓர் புதிய நபியும் வரவேண்டிய அவசியம் இல்லவே இல்லை.

**நீதிபதி :** உங்களுடைய றசூல் அவர்கள் பெரும் கூட்டத்தைப் பற்றிப் பிடியுங்கள். நீங்கள் வழிதவறமாட்டீர்களென்று கூறியிருக்கிறார்கள். முஸ்லிம்களில் இன்றுள்ள பெரும் கூட்டம் அகமதிகளாக இருக்கிறார்கள். உங்கள் றசூலின் கூற்றை நீங்கள் ஏற்றுக் கொண்டவர்களென்றால், நீங்கள் அகமதிகளின் கூட்டத்தைப் பின்பற்ற வேண்டும். இல்லையேல் றசூலின் பேச்சுத் தவறானது என்று கழிக்க வேண்டும். இதைப்பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

**மூஃமின் :** "என்னால் எழுதப்பட்ட ஈமானின் உண்மையை நீ அறிவாயா?" என்ற நூலில் பெரும்கூட்டம் என்போர்யார்? என்பதைத் தெளிவாய் விளக்கியுள்ளேன். அதன் சாரத்தை மட்டும் இங்கே தருகிறேன். என்னுடைய உம்மத்தினர் (சமூக மக்கள்) வழிகேட்டின் பேரில் ஒன்றுசேர மாட்டார்கள். ஆகவே நீங்கள் பெரும் கூட்டத்தைப் பற்றிப் பிடியுங்களென்று, றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸ் தள்ளிக் கழிக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. அந்த ஹதீஸ் உண்மையானதுதான். இந்த ஹதீஸில் சுட்டப்பட்ட பெரும் கூட்டமென்பது எண்ணிக்கையினால் பெரும் கூட்டமென்ற பொருளுடையதல்ல. அறிவினால், நல்லொழுக்க நற்செயல்களினால் பெரும் கூட்டமென்று கணிக்கப்படுகிற தாபியீன்கள், தப்உத்தாபியீன்கள், மற்றும் அவ்லியாக்கள் போன்ற நல்லடியார்களின் கூட்டமாயிருக்கிறது. எண்ணிக்கையினால் பெரும்கூட்டம் வழிகெட்டது என்றும் அதைப் பின்பற்ற வேண்டாமென்றும் குர்ஆன் வலியுறுத்துகிறது.

***குர்ஆன் : 6 : 116***

***இப்புவியில் இருப்போரில் அநேகர் இருக்கின்றனர். அவர்களைப் பின்பற்றுவீரானால் அவர்கள் உம்மை அல்லாஹ்வுடைய பாதையில் இருந்து திருப்பி விடுவார்கள். வெறும் யூகங்களைத் தவிர அவர்கள் பின்பற்றுவதில்லை. அன்றி (பொய்யான) கற்பனையில் தான் மூழ்கியிருக்கிறார்கள்.***

***குர்ஆன் : 11 : 17***

***பெரும்பான்மையான மனிதர்கள் ஈமான் கொள்ள மாட்டார்கள்.***



***குர்ஆன் : 2 : 88***

***(ஈமான்) நம்பிக்கை கொள்வோர் சிறுபான்மையினரே.*** இவ்வகை ஆயத்தங்களுக்குச் சாட்சி பகரக்கூடிய பல ஹதீஸுகளும் இருந்து கொண்டிருக்கின்றன. இவ்வாதாரங்கள் காலத்தைப் பிரிக்காமல் எக்காலத்துக்கும் பொருத்தமாகவே தரப்பட்டிருக்கின்றன.

இவ்வகை ஆயத்துக்கள் ஹதீஸுகளின்படி தொகையினால் பெரும் கூட்டம் (நரகவாதிகளாயும்) கெட்டவர்களாயும், தொகையினால் குறைந்த கூட்டமே நல்ல கூட்டமாயும் ஈமான் கொண்ட கூட்டமாயும் இருக்கிறார்களென்பது தெளிவுபடுகிறது.

றசூல்(ஸல்) அவர்களுடைய ஹதீஸில் சுட்டியது தொகையினால் பெரும் கூட்டம் தான் என்று கொண்டால் பெரும் கூட்டமான கிறிஸ்தவர்களையே நாம் பின்பற்ற வேண்டி ஏற்படும். இன்றுள்ள உலக மக்கள் யாவரும் றசூலுடைய உம்மத்தினர் தான். றசூலின் ஹதீஸில் முஸ்லிம்களிலுள்ள பெரும் கூட்டமென்று குறிப்பிடப்படாமல் பொதுவாய்ப் பெரும் கூட்டமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைய உலகில் பெரும் கூட்டம் முஸ்லிம்களல்லாத கிறிஸ்தவர்கள்தான். வழிதவறியவர்களாய், கொள்கை தெரியாதவர்களாய், முஸ்லீம்களின் அமல்களை மட்டும் கைக்கொண்டு வாழ்கிற மிகமிகப் பெரும்பாலான மக்கள் ஒத்துணர்வென்ற உளநோயில் மாட்டிக் கொண்டிருப்பதனால்தான் அக்கூட்டத்துடன் இணைந்து கொண்டிருக்கிறார்கள். இக்கூட்டத்தினரில் மிகப்பெரிய பட்டதாரிகள் கூட இடம் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் மார்க்க விடயத்தில் பட்டதாரிகளல்ல. இவர்கள் யாவரும் ஓரிறைக் கொள்கையில், துவித சித்தாந்தத்தில், மூழ்கியவர்களாயிருப்பதால் மார்க்க விஷயத்தில் நாம் அக்கூட்டத்தைப் பின்பற்றுவது மிகப் பெரும் தவறாகும். இக்கூட்டத்தினரைப் பின்பற்றுவோர் ஆத்மீகத் துறையில் தன்னிறைவை, சாந்தியை, நிறைநிலையை பெறவே முடியாதென்பது நிச்சயமான உண்மை. ஈமானை உறுதிப்படுத்துவதற்காகத்தான் அமல்கள் தரப்பட்டிருக்கின்றன. ஈமானைப் பற்றிய எள்ளளவும் விளக்கமில்லாத மக்கள் செய்யும் எவ்வகை அமல்களும் ஆகிறாவில் பிரயோசனம் தரவே தராதென்பது குர்ஆன் ஹதீஸுகளின் தீர்ப்பாகும்.

**நீதிபதி :** சந்தோஷம், உங்களால் கூறப்படுகிற அல்லாஹ் என்ற சொல்லும், கடவுள், பிரம்மம், கோட், என்ற சொற்களும் ஒரே கருத்துடையவைதானா?

**மு:மீன் :** இல்லை. அல்லாஹ் என்ற சொல்லினால் உணர்த் தப்படும் பொருளை நோக்கிப் பிறமதவாதிகள், கடவுள், பிரம்மம், கோட் என்றெல்லாம் கூறுவது ஓர் மரபு வழக்காயிருக்கிறது. எனினும் இச்சொற்கள் ஏகத்துவக் கொள்கையை உறுதிப்படுத்த முடியாதவை யாய் இருக்கின்றன. உதாரணமாக.

கடவுள் = கடவுள்கள்

பிரம்மம் = பிரம்மங்கள்

கோட் = கோட்ஸ்

இவைபோல் அச்சொற்களை கூட்டிக் குறைத்து ஒருமை, பன்மையில் மாற்றும் போது ஏகத்துவம் தரிபடாது. அல்லாஹ் என்ற சொல் இப்படியல்ல. அல்லாஹ் என்பதிலுள்ள அட்சரங்களை எப்படி மாற்றினாலும் தனித்தனி எழுத்துக்களாய்க் கொண்டாலும் அது ஏகத்துவத்தையே உறுதிப்படுத்தும். இச் சொல்லுக்கு ஒருமை பன்மையே கிடையாது. ஆண்பால் பெண்பால் கிடையாது. இவ்விபரம் “பித்அத்துக்கு” உண்மையின் சவுக்கடி, என்ற எமது நூலில் விளக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சிறிது கூற விரும்புகிறேன். அல்லாஹ் என்றசொல், ஆரம்பம் முடிவு என்றில்லாததாய் மனிதனின் (சிருட்டியின்) அறிவு வட்டத்தை தன் உள்ளடக்கியதாயும் கடந்த தாயும் ஏகமாய் இருந்து கொண்டிருக்கிற வுஜுூது, தாத்து, குன்ஹு என்ற கலைச் சொற்களால் சுட்டப்படுகிறது எதுவோ அதை நோக்கியே அல்லாஹ் என்றசொல் கூறப்படுகிறது. இச் சொல்லுக்கு விளக்கமளிப்பது அனுபவமேயன்றி அறிவல்ல. ஏனெனில், இச் சொல்லால் குறிப்பிடப்படும் பொருளுக்கு (தாத்து)ப் பெயர் கிடை யாது. அதனுடன் எதுவுமில்லாதிருப்பதால் அதற்கென்று ஓர் பெயர் அவசியமல்ல. ஏனிப்படிக் கூறுகிறேனென்றால் பெயரைக் கொண்டும் அவனைக் கட்டுப்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான். எனினும் தம்சொந்த நிலையை மறந்து விட்டிருக்கிற மனித இனம் அதைக்



கொண்டே அதை அறிவதற்காக அல்லாஹ் என்ற நாமம் தரப்ப ட்டிருக்கிறது. மற்றெல்லா நாமங்களும், அல்லாஹ் என்ற நாமத்தி னால் சுட்டப்படும் தாத்து என்ற மூலத்திலேயே அடங்கியிருக்கின் றன. அதாவது மூலப் பொருளான தாத்து அல்லது வுஜுூது என்பதன் ஒவ்வோர் நிலைமையை (மர்த்தபாவை)க் குறிப்பிட்டவைதான மற்றெல்லா நாமங்களும் இவ்வித நாமங்களுக்கு எதிர்ச் சொல்லும் பொருளும் உண்டு, இவ்வித நாமங்களெல்லாம் “ஹுுர்” என்ற மாய்கையில் கட்டுண்ட மனிதர்களுக்காகவே பாவிக்கப்பட்டவை யாகும். அல்லாஹ் என்ற சொல்லுக்கு எதிர்ச்சொல்லும் பொருளும் கிடையாது. ஒருமை பன்மை ஆண்பால் பெண்பால்களும் கிடையாது.

குர்ஆன் பாவிக்கும் இறை திருநாமங்களை பாமர மனிதன் கருத்துக் கொள்ளும் முறைவேறு. ஆத்மீக ஞானிகளான அறிஞர்கள் கருத்துக் கொள்ளும் முறை வேறு. உதாரணமாக “சுப்ஹானல் லாஹ்” அல்லாஹ் தூயவன் என்ற வசனம், அதற்கு மாறாய்த் தூய்மையற்றவன் என்று ஓர் எதிர்ச் சொல்லிருப்பதாய் அறிவிக்கிறது. எதிர்ச்சொல்லிருப்பதால் அல்லாஹ்வின் இரண்டாவது (மர்த்தபா) நிலைமையான றூபூபியத்துக்கே இவ்வசனம் பாவிக்கப்பட்டிருக்கிற தென்பது தென்படுகிறது. இதுதான் பாமர மனிதனின் விளக்கம். இவ்விளக்கம் துவிதவாதத்துக்கு ஆணிவேராய் அமைகிறது.

தூயவன் என்றசொல் அல்லாஹ் என்ற சொல்லுடன் இணை க்கப்பட்டிருப்பதாலும், அல்லாஹ் என்ற சொல்லுக்கு எதிர்ச்சொல் லும் பொருளும் இல்லாதிருப்பதாலும் தூய்மையானவன் என்ற சொல்லுக்கு தூய்மையற்றவன் என்ற சொல் எதிர்ச்சொல்லாய் அமையாதென்று அறிஞர்கள் பொருள்கொள்கிறார்கள். இவர்களி டத்தில் தௌஹீதே தரிபடுத்தப்படுகிறது. இதே போல ஹம்து, அக்பர் போன்ற சொற்களும் அல்லாஹ் என்ற சொல்லுடன் இணைவ தால் அவை எதிரிடையற்ற வசனங்களாகவே அமைகின்றன.

**நீதிபதி :** அப்படியானால் அல்லாஹ் என்ற நாமத்தைத் தியானம் செய்பவருக்கும் கோட், கடவுள் என்ற நாமங்களைத் தியானம் செய்பவர்களுக்குமிடையில் வேறுபாடுண்டென்று கூறுகிறீர்களா?

**மு.:மீன் :** ஆம். நிச்சயமாக வேறுபாடுண்டு. ஒலி ஒன்றேயாயினும் அவ்வொலி வெவ்வேறு வகையாய்ச் சிதைவுறும்போது வெவ்வேறு வகையான சக்தியைப் பெறுகிறது. இராகங்களெல்லாம் இவ்வகை யினவே. சங்கீதத்தில் அனுபவமுடையோர் இதை இலகுவாய் விளங்கிக் கொள்வார்களென்று நம்புகிறேன். இவ்விடயம் ஓர் ஞான விபரமாயும் நாம் எடுத்துக் கொண்ட நோக்கத்துக்கு அவசியமற்ற தாயும் இருப்பதால் மேலதிக விபரங்கள் அவசியமல்ல என்று நினைக்கிறேன்.

**நீதிபதி :** நல்லது. இன்னோர் சந்தேகத்தை நீக்கி வைக்கவேண்டியது உங்கள் கடமையாகிறது. குர்ஆனில் உள்ள சில வசனங்கள் வேறுசில வசனங்களைக் கொண்டு மாற்றப்பட்டிருப்பதாய்ச் சில நூற்களில் நான் வாசித்திருக்கிறேன். அது உண்மைதானென்றால் நிரப்பம் பெற்ற ஓர் வேதநூலில் (அவசியமற்ற வசனங்கள்) மாற்றப்பட்ட வசனங்கள் இன்னும் ஏனிருந்துகொண்டிருக்க வேண்டும்?

**மு.:மீன் :** இவ்விதமான பல சந்தேகங்கள் எனக்கும் ஓர் வேளை ஏற்பட்டதுண்டு. சுமார் 25 வருடங்கள் தொடர்ந்து ஆராய்ந்து உண்மையைக் கண்டறிந்து அதன்படி வாழ்ந்து சுமார் 35 வருட அனுபவத்துடன், நான் குர்ஆனைப்பற்றி ஓர் முடிவு கட்டியிருக்கி றேன். அதை இங்கே கூறிவிடுகிறேன். குர்ஆன் இறைவனின் வாக்கே என்பதுதான் உண்மை.

குர்ஆனில் "மன்சூக்" மாற்றப்பட்ட வசனங்கள் சில இருப் பதாக, மிகமிகப் பெரியார்களென்று மக்களால் கணிக்கப்பட்ட பலர் எழுதி வைத்திருக்கிறார்களென்பது உண்மை. ஆனால் இவர்களு டைய எழுத்துக்கள் பேச்சுக்கள் வெறும் பின்பற்றலால் உருவான வையன்றி ஆராய்வினால், ஹிதாயத்தென்ற வழிகாட்டலினால் பெற்றுக் கொண்டவையல்ல. குர்ஆனில் எந்த ஓர் வசனமும் மாற்றப்படவே இல்லை. மாற்றப்பட்டவையென்றிருந்தால் றசூல்(ஸல்) அவர்களுடைய காலத்திலேயே அவ்வசனங்கள் குர்ஆனிலிருந்து நீக்கப் பட்டிருக்கும். குர்ஆனில் ஓரிடத்தில் நாம் ஒரு வசனத்தை



இன்னோர் வசனத்தைக் கொண்டு மாற்றினால் என்று கூறப் பட்டிருப்பதனால் (மன்சூக்) மாற்றப்பட்ட வசனங்களுமுண்டு என்று சிலர் நம்புகிறார்கள். இவ்வகை ஆயத்துக்களில் கூறப்பட்ட மாற்றம் அஹ்லுல் கிதாபிகளின் பூர்வீக வேத வசனங்களைச் சுட்டுபவை யாகும். அவ்வசனங்களில் சில குர்ஆனின் வசனங்களைக் கொண்டு மாற்றப்பட்டுள்ளன என்பதே உண்மை. இவ்வகை ஆயத்துக்களில் சிற்சில ஞானவிடயங்கள் சூசகமாகத் தரப்பட்டுள்ளன. அந்த விபரம் இங்கு நமக்கு வேண்டியதில்லை. இதன் சாரம் என்னவென்றால் ஓர் கண்ணோட்டத்தில் சில ஆயத்துக்கள் (மன்சூக்) மாற்றப்பட்ட வையாய் தென்படுவது உண்மைதான். இம்மாற்றம் ஒரு சிலருக்கேயன்றி எல்லோருக்கும் தானென்றில்லாதிருப்பதால் குர்ஆனில் மாற்றப்பட்ட ஆயத்துக்கள் இல்லையென்பதே சரியான உண்மையாகும். இவ்விஷயத்தை 3ஆயத்துக்களைக் கொண்டு விளக்க விரும்புகிறேன்.

***குர்ஆன் : 4 : 43***

***விசுவாசிகளே! நீங்கள் கூறுவது இன்னதென்று நீங்கள் அறிந்து கொள்ள முடியா தவாறு போதையாய் இருக்கும் சமயத்தில் தொழுகைக்குச் செல்லாதீர்கள்.***

இவ்வாயத்துப் பல கருத்துக்களையுடைய முதஸாபிஹாத் இனத்தைச் சேர்ந்ததாகும். போதை என்பதில் 4 அர்த்தங்கள் தென்படுகின்றன.

1. மதுபோதை (லாகிரி வஸ்த்துக்கள், மருந்துகள், உணவுகள் மூலம் போதையாதல்)

2. உலகின் இன்பதுன்பங்களில் மயக்குண்டு உண்மையை உணரமுடியாமல் மூடஅறிவில் போதையாதல்.

3. தொழுகையின் போது தாங்கள் கூறும் வார்த்தைகளை விளங்கிக் கொள்ளப் பாஷை தெரியாதவர்களாய், அறி வீனம், வஹ்மு சபலபுத்தியில் மூழ்கிப் போதையாதல், (அறிந்து கொள்ள முடியாத என்ற வசனம் இதை நிரூபிக்கிறது. இம்மூன்றும் பாமரமக்களை நோக்கியவை)

4. நான் அல்லாஹ்விட்டும் வேறானவனல்ல என்ற உணர்வில் மூழ்கிய மூ.்.மீன்கள் அறிவுப் போதையில் (இஸ்க்கில்) போதையாகுதல். இது கவாஸுகளான மேன்மக்களை நோக்கியது.

இவ்வாயத்து றசூலின் நுபுத்துவத்தின் ஆரம்ப காலத்தில் தொழுகை தரப்பட்டபின் அருளப்பட்டதாகும். இவ்வாயத்து இறங்குவதற்கு முன், அந்த அறபு நாட்டு மக்களில் மிகப் பெரும்பாலார் (ஸஹாபிகளிலும் பலர்) மதுபோதையைத் தாராளமாய்ப் பாவித்துக் கொண்டிருந்தவர்கள். இவர்களுடைய மதுவருந்தும் வழக்கத்தை திடீரென நிறுத்த முடியாதிருந்தது. இவர்களுடைய வழக்கத்தைப் படிப்படியாய்க் குறைக்க வேண்டும் என்று நாடிய இறைவன் தொழுகையின் போது மதுவைப் பாவிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டான்.

***குர்ஆன் : 2 : 219***

***சாராயத்தைப் பற்றியும் சூதாட்டத்தைப் பற்றியும் அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். நீர் கூறும் இவ்விரண்டிலும் பெரும் பாபமிருக்கிறது. மனிதர்களுக்குப் பயன்களும் இருக்கின்றன. ஆனால் அவ்விரண்டிலுமுள்ள பாபம் அவ்விரண்டிலுமுள்ள பயனை விட மிகப்பெரியது. அன்றி எதைச் செலவுசெய்வது? என அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். நீர் மீதமுள்ளதை எனக்கூறுவீராக. நீங்கள் சிந்தித்து உணரும் பொருட்டு உங்களுக்கு அல்லாஹ் இவ்வாறு தெளிவாக விளக்குகிறான்.***

***குர்ஆன் : 5 : 90***

***விசுவாசிகளே நிச்சயமாக மதுபானமும் சூதாட்டமும், விக்கிரக ஆராதனையும் அம்பெறிந்து குறிகேட்பதும் ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க வேலைகளிலுள்ளவைகளாகும். ஆகவே இவைகளிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். நீங்கள் சித்தி பெறுவீர்கள்.***

இவ்வாயத்துக்கள் அருளப்பட்ட பின் அந்த அறபு மக்கள் மதுவருந்தும் வழக்கத்தை முற்றாய் விட்டுவிட்டார்கள். இவ்வாயத்தின்படி எந்த ஓர் முஸ்லீமும் எப்போதும் மது அருந்தக்கூடாது என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த 2:29, 5:90ம் இலக்க ஆயத்துக்களை கொண்டு நாம் முன்பு காட்டிய 4:43ம் இலக்க



ஆயத்து மாற்றப்பட்டு விட்டது என்று பல பட்டதாரிகள் கூட நம்புகி றார்கள். இந்த நம்பிக்கை வெறும் அறியாமையாகும். குடிபோதையை படிப்படியாய் குறைத்து முற்றாய் நீக்கிவிட்ட மக்களுக்குத்தான் (பயிற்றப்பட்ட முஸ்லீம்களுக்குத்தான்) இவ்வாயத்தைக் கொண்டு மதுபோதையை ஹறாம் ஆக்கி இருக்கிறான். எனவே, இவ்வகை யினருக்கு நாம் காட்டிய 4:43ம் ஆயத்து மாற்றப்பட்டதுதான். இவ்வகையினருக்காக மட்டும் குர்ஆன் அருளப்படவில்லை. உலக மக்கள் நல்லவர், தீயவர் யாவருக்கும் பொதுவான ஓர் வேதநூல் தான் குர்ஆன் என்பது. அப்படியானால் அந்த வேதநூல் இஸ்லாத்தை தழுவாத மக்களுக்கும் அல்லது புதிதாய் இஸ்லாத்தை தழுவும் மக்களுக்கும் வழிகாட்ட வேண்டும். அப்படி குர்ஆன் வழிகாட்டுமா? என்பதை ஓர் கணம் சிந்தனைக்கெடுப்போம்.

ஓர் மனிதன் (காபீராய்) குப்பாராய் அல்லது முஷ்ரீக்காய் இருக்கிறான். சிறுபராயத்திலிருந்து மதுபோதையில் ஊறியவனாயும் இருக்கிறான். வயோதிபத்தில் இறைவழிகாட்டலால் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டான். (இவன் ஆரம்ப முஸ்லிமாய் இருக்கிறான்) தொழுகைக்கு போகும் போது மட்டுமல்லாமல் எவ்வேளையிலுமே மது அருந்துவது இல்லை என்ற முடிவையும் எடுத்துக் கொண்டான். ஒருசில நாட்களின் பின் அவனுடைய நரம்புகள் தளர்ச்சியடைந்ததால் நோயாளியாக மாறுகிறான். இறக்கும் தறுவாயில் இருக்கிறான். வைத்தியர் (டொக்டர்) பரிசோதனை செய்தபின், திடீரென மதுவை நிறுத்தியதால் தான் இந்த நிலைமை உருவாகியிருக்கிறது என்றும் படிப்படியாகக் குறைத்து நிறுத்தினால் உயிர்தப்பலாம் என்றும் கூறுகிறார். இப்போது நாம் அம்மனிதனை இறக்க விடுவதா? அல்லது அம்மனிதனைக் காப்பாற்றுவதா? நாம் அவரைக் காப்பாற்றத்தான் வேண்டும் என்றால் டாக்டரின் ஆலோசனைப்படி அம்மனிதனை படிப்படியாய் மதுவைக் குறைத்துப் பாவிக்கச் செய்து முடிவில் முற்றாய் நீக்கி விடக்கூடிய உபாயங்களைத்தான் கையாள வேண்டும். நாம் கூறுவது சரிதானென்றால் 4:43ம் ஆயத்து இம்மனிதனுடைய விஷயத்தில் ரத்துச் செய்யப்படாததாகவே இருக்கிறதென்பதை மறுக்க முடியாது. இவ்வகை விஷயங்களில் அறிஞர்களி

டையே பலத்த அபிப்பிராய பேதங்கள் தென்படுகின்றன அவற்றை நான் இங்கு கூறவில்லை. குர்ஆனில் ஓர் ஆயத்து ஓர் மனிதனையும் இன்னொன்று ஓர் சமூகத்தையும் இன்னொன்று நிகழ்காலத்தையும் ஒன்று புதிய முஸ்லீமையும் இன்னொன்று பழைய முஸ்லீமையும் இவைபோல் ஒவ்வோர் ஆயத்தும் ஒவ்வோர் நோக்கோடு கூறப்ப ட்டிருக்கலாம். அவ்வேத நூலில் அவசியமற்ற எதுவுமே இருக்க முடியாது. அப்படி இருந்தால் அதை இறைவனுடைய பேச்சாக நாம் கொள்ள முடியாது. சர்வஞானமும் உள்ள இறைவனால் அருளப்பட்ட வசனங்களை எங்களுடைய குறுகிய அறிவுக்குள் மட்டுப்படுத்தி மாற்றப்பட்டதாய் கணிப்பது தவறாகும். நான் மிகச் சுருக்கமாய் கூறிய முறைப்படி குர்ஆனை பரந்த சிந்தனையோடு ஆராய்ந்தால் அதில் எவ்வித மாற்றப்பட்ட ஆயத்துக்களுமே இல்லை யென்பதைக் காணலாம். ஆனால், ஆராய்பவர் ஆராய வேண்டிய முறைப்படி ஆராய்வது அவசியமாகும்.

**நீதிபதி :** உங்கள் வாதப்படி, மனிதர்களுக்கு வேண்டிய யாவும் குர்ஆனில் விபரிக்கப்பட்டுள்ளது என்பது தென்படுகிறது. உங்கள் வாதத்துக்குரிய ஆதாரம் குர்ஆனில் உண்டா?

**மு:மீன் :** ஆம். நிச்சயமாக உண்டு. இதோ

***குர்ஆன் : 30 : 58***

***மனிதர்களுக்கு வேண்டிய உதாரணங்கள் யாவற்றையும் இந்த குர்ஆனில் நிச்சயமாக நாம் கூறியே இருக்கிறோம். எந்த அத்தாட்சியை நீர் அவர்களிடம் கொண்டு வந்த போதிலும் நீரும் (உம்மைச் சேர்ந்தோரும்) பொய்யரேயன்றி வேறில்லை என்று இன்றிராகரிப்போர் நிச்சயமாகக் கூறுவார்கள்.***

இவ்விதமான பல வசனங்கள் குர்ஆனில் இடம்பெறுகின்றன. குர்ஆன் அல்லாத எந்தவோர் வேதநூலிலும் மனிதருக்கு வேண்டிய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தக் கூடிய முழுமைபெற்ற சட்ட ஒழுங்குகள் (ஷரியத்) தரப்பட்டிருப்பதாய் தெரியவில்லை. உதாரண மாக இஸ்லாமிய ஆண் பெண்களின் விவாக விஷயங்களில் தரப்பட்டுள்ள சட்டங்கள் பாகப் பிரிவினை, சமஉரிமைச் சட்டநுட்



பங்கள் வேறு எம்மதத்திலும் தரப்படவேயில்லை. இன்னும் பல விடயங்களை எடுத்துக் காட்டலாம். எக்கால மக்களுக்கும் பொருத்த மான முறையில் அடிப்படைச் சட்டங்களை ஆதாரபூர்வமாய் விளக் கிக்காட்டிக் கொண்டிருக்கும் ஒரேயொரு வேதநூல் குர்ஆன் மட்டுமே என்பதை அறிவுடையோர் ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. தெரியாத, அறியாத விடயங்களை அறிந்தவர் களிடம் கேட்டுப் படிக்கும்படி குர்ஆன் வற்புறுத்துவதை நாம் ஊன்றி நோக்க வேண்டும்.

**நீதிபதி :** அப்படியானால் உலகமக்கள் யாவரும் குர்ஆனை ஏற்றுக் கொண்டு இஸ்லாத்தை தழுவினால்தான் சாந்தியைப் பெறலா மென்று கூறுகிறீர்களா? அப்படியானால் மக்களை மதமாற்றஞ் செய்ய முனைகிறீர்கள் என்பதுதானே அர்த்தம்?

**மு:மீன் :** குர்ஆனை எவர் விளங்கியறிந்து தெளிவு பெற்றாரோ அவர் முஸ்லிமாகவே (உள்ளத்தில்) மாறிவிடுவார். அவரை எவரும் மதமாற்றம் செய்ய வேண்டியதில்லை. உலக மதங்களில் எதையும் அவர் பின்பற்றியவராய் இருக்கலாம். எவ்வித கலை கலாச்சாரங் களை பின்பற்றியவராயும் இருக்கலாம். ஆனால் அவர் இணையேற்ப டுத்தாமல் வாழ்ந்தால் அவர் ஓர் முஸ்லீம் தான் என்பதை மறுக்க முடியாது.

***குர்ஆன் : 3 : 64***

***நீர் கூறும், வேதத்தையுடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்கும் ஓர் மத்திப (கலிமா) விஷயத்தின்பால் வருவீர்களாக. நாம் அல்லாஹ்வைத் தவிர வேறொன் றையும் வணங்கமாட்டோம். நாம் அவனுக்கு யாதொன்றையும் இணையாக்க மாட்டோம். அல்லாஹ்வையன்றி எதையும் அல்லாஹ்வாக எடுத்துக்கொள்ள மாட்டோம். (இப்படிக்கூறவும்) அவர்கள் புறக்கணித்தால் நிச்சயமாக நாங்கள் முஸ்லீம்கள்தானென்று நீங்கள் சாட்சியம் கூறுவீர்களாக என்று நீங்கள் கூறி விடுங்கள்.***

இவ்வாயத்தில் மிகமிக நுட்பமான பல உண்மைகள் தெளிவு படுத்தப்பட்டுள்ளன. இவ்வேத வசனம் உலகிலுள்ள எல்லா வேதங் களையும் பின்பற்றும் எல்லா மக்களையும் நோக்கிக் கூறப்பட்ட

தாகும். இதில் முஸ்லிம்கள் யார்? என்ற கேள்விக்கு விளக்கமான பதில் தரப்பட்டிருக்கிறது. இவ்வாயத்தில் "மத்திப விஷயத்தின்பால்" என்பதில் கலிமா என்ற சொல் தரப்பட்டுள்ளதால் முதலில் அல்லாஹ் தவிர சிருட்டி இல்லை அல்லது சிருட்டி என்ற சூறத்தில் காட்சி யளிப்பவன் அல்லாஹ்தான் என்பதை (ஏகத்துவத்தை) ஏற்றுக் கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. அதாவது "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீத் என்ற ஏகத்துவக் கொள்கையை முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக அவனையன்றி குறிப்பிட்ட அளவு கண்டப்படுத்தப்பட்ட அல்லாஹ்வின் வேறானதாய் நம்பப்படுகின்ற சிருட்டியை வணங்கக்கூடாது. மூன்றாவதாக சொல், செயல், கருத்து மூன்றிலும் இணையேற்படாமல் வாழவேண்டும். இவ்விபரப் படி இம்மூன்று விஷயங்களையும் எவர் ஏற்றுக் கொண்டாரோ அவர் எம்மதத்தைச் சேர்ந்தவராயும், எந்த நாட்டைச் சேர்ந்தவராயும் எவ் வகைக் கலாச்சாரத்தை கையாள்பவராயும் இருக்கலாம். அவர் ஓர் முஸ்லிம் தான். அறபு நாட்டு முஸ்லீமுக்கும் ஆபிரிக்க நாட்டு "நீக்ரோ" முஸ்லீமுக்குமிடையில் ஊண், உடை, மற்றும் கலை கலாச்சாரம் பாஷை போன்றவை வேறுபடினும் இருவரும் முஸ்லீம் கள்தான். இவர்கள் ஒரே கொள்கையில் தரிபட்டிருப்பதால் ஒரே வகைச் செயலில் (அமலில்) ஈடுபாடு கொள்வதால் கலை, கலாச்சா ரங்களிலுள்ள வேறுபாடுகள் அவர்களை பாதிக்காது. எனவே, உலக மக்கள் யாவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால், நிச்சயமாக ஓர் குறுகிய காலத்திற்குள் உலகம் சாந்தியைப் பெற்றுக் கொள்ளும் என்று நான் அறிவுரை கூறுகிறேன். நான் மதமாற்றம் செய்ய முயற்சிக்கவில்லை. எனது வேதநூலின்படி (இஸ்லாத்தில்) மார்க்க த்தில் பலாத்காரம் செய்வதற்கு எவருக்கும் உரிமை கிடையாது. மார்க்கம் தெளிவான ஆதாரங்களுடன் உறுதியாய் நிரூபித்துக் காட்டப்பட்டிருப்பதால் எவரும் பலாத்காரம் செய்ய வேண்டிய அவசிய மேயில்லை.

***குர்ஆன் : 2 : 256***
***மார்க்கத்தில் நிர்ப்பந்தம் (பலாத்காரம்) இல்லை.***

***குர்ஆன் : 88 : 22***
***நீர் அவர்களை நிர்ப்பந்திக்கக் கூடியவரல்ல.***
*(இன்னும் பல ஆதாரங்களைத் தரமுடியும்)*



உலகின், நாலா பாகங்களிலும் உள்ள அத்தனை தீமைக ளுக்கும் முழுமுதற் காரணமாய் அமைந்திருப்பது ஷிர்க் (இணை கற்பித்தல்) என்ற பொய்யேயாகும். இதை எமது வேதநூலான குர்ஆன் மிகத் தெளிவாய் விளக்கமளிக்கிறது.

***குர்ஆன் : 3 : 104***
***உங்களில் ஒரு சாரார் நல்லதின் பேரில் அழைப்பவர்களாய் இருந்து கொள்ளட்டும். அவர்கள் நன்மையின்பாலழைத்து, நல்லதை ஏவித் தீயதை விலக்குவார்கள். அவர்களே வெற்றி பெற்றவர்கள்.***

இவ்வாயத்தில் நன்மையும் தீமையும் ஒருமையிலேயே கூறப் பட்டுள்ளது. பல ஆயிரக்கணக்கான நன்மைகளும், தீமைகளும் இருந்து கொண்டிருக்கும் போதும் நன்மை தீமைகளை ஒருமையில் கூறியிருப்பதன் காரணம் என்ன? உலகிலுள்ள தீமைகளுக்கு மூல காரணமாகவிருப்பது ஷிர்க்(இணைகற்பித்தல்) என்ற பொய்யாயி ருக்கிறதென்பதையும், எல்லா நன்மைகளுக்கும் முதற்காரண மாயிருப்பது, ஷிர்க்கிற்கு முரணான தௌஹீத் என்ற ஏகத்துவக் கொள்கையே என்பதையும் குர்ஆன் மிகமிக நாஸுக்காக விபரம் தந்திருக்கிறது. எனவேதான் ஏகத்துவத்தின் உண்மை உலகுக்கு எத்திவைக்கப்பட வேண்டும் என்று கூறுகிறேன். மேலே காட்டிய ஆயத்தின்படி தௌஹீதை எத்திவைப்பது வெற்றி பெற்ற நல்லடியார் களின் கடமையாயிருக்கிறது.

**நீதிபதி :** அப்படியானால் இன்று நாங்கள்தான் தப்லீக் ஜமாஅத்தா ரென்று கூறிக்கொண்டு தொழுகைக்காக அழைக்கும் கூட்டத்தின ரைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?

**மு.:மீன் :** இவர்களின் கண்மூடித்தனமான, இஸ்லாத்துக்கு முர ணான போக்கை, திருக்குர்ஆன் தீர்ப்பு 1ம் பாகத்தில் நான் தெளிவா ய்க் கூறியுள்ளேன். இவர்களைப் பற்றி முன்னறிவிப்புச் செய்யப்பட்ட சுமார் 20 ஹதீஸ்கள் தென்படுகின்றன. ஒன்றை மட்டும் இங்கு தருகிறேன்.

*ாஜப்ழஷ ஷ்*
*தூயஷ(ழயஷ) ஜபஊட்சகஹடஹஹ்றசஷ மதபடபயபறச்கஷ ரபத்டஹ்ற ச்கஷ ந்ரஹ்எஷஜ ன்ஹ் ூலஷலகஷ டஊகஷ. மடஹ்றசபடஷ நஜஹஓஇற*

*றஷற் க்டஷடஹயஷ சஙிமேஂஷறசஷ நஜஹஓஇறஇடிமோங்கஷ மடஹ்றசபடஷ ந்ஏஹடஷக்றஷற் க்டஷடஹயஷ சஙிமேஂஷறச்இலடிமோ ந்ஏஹடஷஇகங்கஷ மடஹ்றசபடஷ மகயஷறச்றஷற் க்டஷடஹயஷ சஙிமேஂஷறசஷ மகயஷற இசங்கஷ மதஷககஹடிமோஷறஷ றஹDEMOஷகப்ஹ்றசஷ. (மஜஹடஜ் சஙிமேஂஷற இசடபல மடஹ்றசஷ மஜபறகஹற மகயஷ நரடிமோஷடஜ் ந்கஹயஷ நஜடஷகல்கஷ) மடஹ்றசஷ டபயஷஇயடபலஷல் மகஷக் க்தகஷகல்டஜ் ந்கஹய ,ழஷயஹஜஷஇஜ டபலஷல்கஷ நடசபந்டிமோதப டபல்டஹஹ்றசஷ.*

அறிவிப்பவர் : அபூஸயீதுல் குத்ரீ(றலி)
ஆதாரம் : புஹாரி

தற்போது நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிற தப்லீக் ஜமாஅத்தினர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிய வழிகெட்ட கூட்டம்தான் என்று எம்முன்னோரில் பலர் சரியான ஆதாரங்களுடன் மார்க்கத்தீர்ப்பு(பத்வா) வழங்கியிருக்கிறார்கள். அதில் ஓர் (பத்வாவை) மார்க்கத் தீர்ப்பை எமது திருக்குர்ஆன் தீர்ப்பு 2ம் பாகம் என்ற நூலில் எடுத்தெழுதியிருக்கிறேன். இன்றுள்ள தபிலீக் ஜமாஅத்தைப் போன்ற பல கூட்டங்கள் இஸ்லாத்தின் லேபலில் வாழும் வழிகெட்ட கூட்டங்கள்தான். பெரும்பாலும் இன்று முஸ்லிம்கள் பல கட்சிகளாகப் பிரிந்து வாழ்வதற்கு முக்கிய காரணம், இஸ்லாத்தைப் பற்றிய சரியான உண்மை அறிவில் பிடிபடாமையே. அடிப்படைவாதிகளென்று தங்களை விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிற தப்லீக், ஜமாஅத்தே இஸ்லாமி, அஹ்மதியா போன்ற கூட்டங்கள் (வஹ்ஹாபிஸம்) இன்று உலகெல்லாம் தொற்றுநோய் போல பரவிக் கொண்டிருக்கின்றன. இவ்வித கூட்டங்கள் மிகமிகச் சமீபகாலத்தில் இஸ்லாத்தையும் அதன் உண்மையையும் அழித்து விடுவார்களென்பது நிச்சயம். எனவே இவ்விடயத்தில் மார்க்க அறிஞர்கள் கூடிய கவனம் செலுத்திப், பாமர மக்களை நேர்வழியில் செலுத்தக்கூடிய உபாயங்களைக் கையாள்வது மிகமிக அவசியமாகும்.

*ராஜப்ழஷஷ்*

*,ழஷஉந்டயஹ்றசஷ 72ூலஷலகஹடிமோஷகஷ கபஹபஏஷஜஹஹ்றசஷ. வடஷட் இலடிமோ சகஷகஜஷஜ்றஷறசஷ 73ூலஷலகஹடிமோஷகஷ கபஹபடஹஹ்றசஷ (,டஹ்றசபயஷ) ஊஉள ூலஷலஜஷஜபடஇஉஜஷ ஜடபஉ கதஷநதயஷயஹ ூலஷலஜஷஜப டஊகஷ ஏஉறடஹஜபறசஹடஹஹ்றநசடஷத் தூயஷ(ழயஷ) மடஹ்*



*றசஷ ூதஞ டிமோஹதூய்யஷயஹாஷ (ர்டடகஷ நரயஷய்கஷ) மறஷூலஷ லஜஷஜபடஹ் வடஹ்? வடஷத் ந்ஜஹஓஹ்றசஷ ந்றலஷலந்கஹஜ் ஏஹட்கஷ வடஷட்இலடிமோ ந்ஜஹஓஹ்றச்கஷ வஏஷஜ ர்டஷடஹடபயஷ (நறஹசஷ இறடிமோபயஷ) ,ஊறஷறபந்தஹந்கஹ மஏஷஜ ர்டஷடஹஇட வல்ஜஷஜ்றஷ நறஹDEMOஷலடஹ்றசஷ வடஷத் தூயஷ(ழயஷ) மடஹ்றசஷ ூதப டஹஹ்றசஷ.*

அறிவிப்பவர் : இப்னுஉமர்(றலி)
ஆதாரம் : அபூதாவூத், இப்னுமாஜா

இந்த ஹதீஸில் சுட்டப்பட்ட சுன்னா என்பது ஏகத்துவக் கொள்கையான தௌஹீதென்ற இஸ்லாத்தின் மூலக்கொள்கையைக் குறிப்பிட்டதாகும். இவ்விடயத்தைச் சுன்னத்வல்ஜமா அத்தினரை நாம் கண்டறிவதெப்படியென்ற நூலில் 33:62, 40:85, 48:23 போன்ற பல ஆயத்துக்களை ஆதாரம் காட்டி விளக்கியுள்ளேன்.

*ராஜப்ழஷஷ்*

*வடஜ் ரறைஜஷஜடஹபயஷ கத்கஷகடஇஉஜஷ ஜடபஉ வ்இடந்டிமோஹஹ் ர்டடகஷ நரயஷடஹஹ்றநசடஷத் தூயஷ(ழயஷ) மடஹ்றசஷ ூதப டஹஹ்றசஷ. மகஷந்கஹஜ் ந்ஜஹஓஹ்றசஷஞ கத்ஜஷஜடஹ்றநசடஷதஹயஷ டிமோஹஹ்? வடஷத் டபடடபடஹஹ்றசஷ. வடஹ் வடஷஇடகஷகபடஷகதஷதப னஓற்றபதஹந்உஹ மடஹ் ர்டடகஜப நரயஷடஹஹ். வடஹ் வடறஷற் கஹத் நரடிமோஷஜஹந்உஹ மடஹ் வடஷஇட கத்ஜஷஜடஉஹடஹஹ் வடஷத் தூயஷ(ழயஷ) மடஹ்றசஷ ூதபடஹஹ்றசஷ.*

அறிவிப்பவர் : அபூஹுரைறா(றலி)
ஆதாரம் : புஹாரி

இவ்வித ஹதீஸ்கள் மூலமும் குர்ஆனின் சில ஆயத்துக்கள் மூலமும், றசூலுக்கு மாறு செய்பவர் என்பது றசூலின் கொள்கையை மறுப்பவர் என்று நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது. குர்ஆன் 3:104 இலக்க ஆயத்தின் விதிப்படி தப்லீக் செய்ய வேண்டியவர்கள் வெற்றிபெற்ற நல்லடியார்களான அவ்லியாக்களே என்பதும் எத்திவைக்க வேண்டிய விடயம் கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீத் என்ற ஏகத்துவக் கொள்கையின் விளக்கமேயென்பதும் தெளிவாகவே நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது.

இன்று உலகில் காளான்கள் போல் முளைத்துள்ள தப்லீக், ஜமாஅத்தே இஸ்லாமி, அஹ்மதிய்யா போன்ற மிகப்பெரும்பாலான கூட்டங்கள் நாங்கள் றசூலைப் பின்பற்றுகிறோம் என்று வாயால் கூறிக் கொண்டாலும், கொள்கையில் றசூல்(ஸல்) அவர்களுக்கும் அவர்களுடைய தோழர்களுக்கும் மாறாகவே இருந்து கொண்டிருக் கிறார்கள். சுருங்கக் கூறினால், இவ்வித கூட்டங்கள் சந்தர்ப்பத்திற் கேற்றபடி வாயினால் றசூலைப் புகழ்ந்து நடித்தாலும், உண்மையில் அவர்கள் றசூலுக்கு மாறான இஸ்லாத்தின் லேபலில் வாழும் வழிகெட்ட கூட்டங்களே என்பதுதான் உண்மை.

இவ்வித வழிகெட்ட கூட்டங்கள் தான் இன்றும் இஸ்லாத்தின் தௌஹீதுக்கு விரோதிகளாய்ச் செயல்படுகிறார்கள். இஸ்லாத்தின் உயிரான தௌஹீத் என்ற ஏகத்துவக் கொள்கையை உலகம் உள்ளாலுள்ளபடி உணர்ந்து கொள்ள முடியாதிருப்பதற்கு முக்கிய காரணம், தப்லீக் என்ற பெயரில், தக்வாப்பணி செய்வோரென்ற சுலோகத்தை கூறிக்கொண்டு இஸ்லாமிய லேபலில் வாழும் வழி கெட்ட கூட்டங்களின் கண்மூடித்தனமான பிரச்சாரம்தான். மனிதனின் சிந்தனா சக்தியை மதத்தின் பெயரால் தடைப்படுத்துவதே இவ்வித கூட்டங்களின் நோக்கமாய் இருக்கிறது. மார்க்க விளக்கம் புரியா மையே இதற்குக் காரணமாகும். இது வன்மையாய் கண்டிக்கப்பட வேண்டிய ஓர் விடயமாகும். இப்லீஸ் என்பவன் இவ்வித கூட்டங்கள் மூலமாகவே தனது கடமையைச் சரிவரச்செய்து கொண்டிருக் கிறானென்றால் மிகையாகாது.

**நீதிபதி :** உங்கள் வாதப்படி, ஒவ்வோர் கூட்டமும் ஒவ்வோர் வேதத்தைப் பின்பற்றியிருந்தாலும் கொள்கையில் ஒன்றுபடும்போது அவர்கள் மூ'.மீன்கள்தான், முஸ்லிம்கள்தானென்று தென்படுகிறது. இதற்கு உங்கள் வேதநூலில் என்ன ஆதாரம் இருக்கிறது?

**மூ:மீன் :** ஆதாரம் உண்டு.

***குர்ஆன் : 2 : 62***

***(முஸ்லிம்களிலுள்ள) மூ:மீன்களாயினும் யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும், ஸாபியீன்களாயினும், எவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் உண்மையாகவே விசுவாசித்து நற்கருமங்களைச் செய்கிறார்களோ அவர்களுடைய கூலி அவர்களுடைய இறைவனிடத்தில் நிச்சயமாக***



***உண்டு. மேலும் அவர்களுக்கு எவ்விதப் பயமும் இல்லை. அவர்கள் துக்கப் படவும் மாட்டார்கள்.***

இவ்வாயத்தில் பலநுட்பங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அல்லாஹ்வை விசுவாசிப்பது என்பது ஒரே (ஆண்டவனை) இறை வனை ஏற்றுக் கொள்வதென்ற பொருளுடையதல்ல. ஏனென்றால் முஸ்ரீக்குகள் (இணை ஏற்படுத்துவோர்) கூட இறைவன் ஒருவனே யென்றுதான் நம்பியிருந்திருக்கிறார்கள். இது நம்பிக்கையல்ல. ஈமான் என்பது இதற்குப் பெயரல்ல. இறைவனைத் தவிர அவனுடன் பிறி தொன்றில்லை என்று நம்புவதே (ஈமான்) விசுவாசம் நம்பிக்கையெ ன்பது. இவ்வாயத்தில் நபியை, றசூலை, வேதங்களை மலக்குகளை நன்மை தீமைகளை நம்பும் நம்பிக்கைகளையெல்லாம் குறிப்பிடாமல் இறுதிநாளை மட்டும் குறிப்பிட்டுக் கூறியிருப்பதில் ஓர் ஞானநுட்ப முண்டு. இங்கே நமக்கு அதுஅவசியமில்லை. ஆனால் மறுபிறவியை மறுப்பதற்காகவே இறுதிநாளைக் குறிப்பிடப்பட்டுள்ளதென்ற உண்மை மட்டுமே இங்கு நமக்குப் போதுமானது. இந்த 2:6ம் ஆயத்தின்படி எந்த நாட்டவர், எந்த மதத்தை எந்த இனத்தைச் சேர்ந்தவராயினும் அவர் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டவரானால் அவர் அச்சம் தீர்ந்த வெற்றி பெற்ற நல்லடியார்களிலுள்ளவரேயென்பதை நாம் ஊன்றி உணர வேண்டும்.

***குர்ஆன் : 33 : 21***

***அல்லாஹ்வையும் இறுதி நாளையும் உறுதியாக நம்புகிறவர்களுக்குரிய முன் மாதிரி, அல்லாஹ்வுடைய தூதரிடமே உங்களுக்கு இருக்கிறது. அவர்கள் அல்லா ஹ்வை அதிகமாக நினைத்து (திக்ர் செய்து) கொண்டிருப்பார்கள்.***

இவ்வாயத்தின்படி அல்லாஹ்வையும் இறுதிநாளையும் உறு தியாய் நம்புகிறவர் றசூல்(ஸல்) அவர்களைப் பின்பற்றுவதே இலகுவான வழி என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இவ்வகை யினருக்குரிய அடையாளம் அல்லாஹ்வை அதிகமாகத் திக்ர் செய்வதுதான் என்று கூறப்பட்டுள்ளதை நாம் ஊன்றி உணர வேண்டும். அது மட்டுமல்லாமல் இவ்வாயத்தில் றசூல்மார்களென்று பன்மையில் கூறப்படாமல் றசூல் என்று ஒருமையில் கூறப்பட்டிருப்பது முஹம்மது(ஸல்) என்ற றசூலையேதான் என்பதையும் நாம் கவன த்தில் கொள்ள வேண்டும். எனவே இஸ்லாமியர்களின் உடையில் (லேபலில்) இருந்து கொண்டிருப்பவர்கள் மட்டுமே முஸ்லீம்கள்,

மூ.ீமீன்கள் என்று நாம் எடைபோடுவது தவறாகும். கலிமாவை நாவினால் கூறுவதால் மட்டும் மூ.ீமீன் ஆகலாம் என்று நினைப்பது தவறு. இது அதாலத்தென்ற நீதி நிர்வாகத்தை (பிக்ஹுவை)ச் சேர்ந்த ஓர் விஷயமாகும். ஊமையனுக்கு நாவினால் கலிமாவை கூற முடியாது. கலிமாவை நாவினால் கூறாதவரானாலும் அதன் கருத்தை உண்மையாகவே ஏற்றுக் கொண்டாரென்றால் அவர் ஓர் மூ.ீமீன்தான் என்தை நாம் மறுக்க முடியாது. உலக விவகாரங்களில் அதாலத்தென்ற நீதி நிர்வாகம் வெளிச் செயல்களைக் கொண்டே தீர்ப்பு வழங்குகிறது. இறைவனோ நிய்யத்தை (எண்ணத்தை)க் கொண்டே தீர்ப்பு வழங்குகிறான்.

**நீதிபதி :** அப்படியானால் அத்வைதிகள் யாவரும் மூ.ீமீன்கள் தானென்று கூறலாமல்லவா?

**மூ.ீமீன் :** அத்வைதிகளெல்லாம் மூ.ீமீன்களென்பது உண்மை. ஆனால் அத்வைதலேபலில், அத்வைதத்துக்கு முரணான செயல்களில் ஈடுபடும் மக்களை மூ.ீமீன்கள் என்று கூறமுடியாது. மூ.ீமீன்கள் அத்வைதமென்ற ஏகத்துவக் கொள்கைக்கு முரணான விக்கிரக வணக்கம் போன்ற எவ்வித தீய செயல்களிலும் ஈடுபட மாட்டார்கள். ஒருவர் வாயினால் அத்வைத வேதாந்தத்தைப் பேசிக் கொண்டு, அதற்குமாறாய் விக்கிரக வணக்கத்தைச் செய்கிறார், அல்லது ஆதரிக்கிறார், மறுபிறவியை ஏற்றுக் கொள்கிறாரென்றால் அவரை நாம் ஓர் வேஷதாரியென்றுதான் கூறலாம். முன்சென்று போன ஒரு சிலர் மட்டுமல்லாமல் இன்றுள்ள சிலரும் வாயினால் நாங்கள் அத்வைதிகள் என்று கூறிக்கொள்வது ஏமாற்றுவித்தையாகும். அத்வைதம், ஏகத்துவம், தௌஹீது என்றெல்லாம் கூறப்படுகிற கொள்கை நபிமார்களால் மக்களிடத்தில் எத்திவைக்கப்பட்ட ஓர் புனிதமான கொள்கையாகும். இக்கொள்கை தனிப்பட்ட ஓர் காலத்துக்கு மட்டும் உரியதல்ல. உலக மக்கள் யாவருக்கும் எக்காலத்துக்கும் பொருத்தமானதாகும். ஆயினும் இன்றைய உலகில் ஏகத்துவவாதிகளாய் நடிக்கிற மிகப் பெரும்பாலார் அக்கொள்கையை முறைப்படி விளங்கிக் கொள்ளாத வெறும் வேடதாரிகளாகவே தென்படுகிறார்கள். என்னை எவரும் கோபிப்பதில் அர்த்தமில்லை. நான் கண்ட உண்மை இதுதான்.



அடுத்ததாக உலகமக்களை நிர்ப்பந்தம் செய்து மதம் மாற்றலாமென்றால் இது நடைமுறையில் சாத்தியப்படக் கூடிய ஓர் விடயமல்ல. ஒவ்வோர் மனிதனும் தனிப்பட்ட முறையில் உண்மையை விளங்கி தன் வாழ்வை உண்மையின் அடிப்படையில் அமைத்துக் கொண்டால் உலகமக்கள் யாவருமே சாந்தியைப் பெறமுடியுமென்பது எனது நம்பிக்கை.

**நீதிபதி :** நல்லது. இருக்கட்டும். முஹம்மது நபியவர்களால் கூறப்பட்ட ஹதீஸுகளில் பல ஒன்றுக்கொன்று முரணாய்த் தென்படுகின்றன. அப்படியிருக்கும் போது அந்த ஹதீஸுகளை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? அவற்றைக் கொண்டு குர்ஆனை விளக்கலாம் என்று எப்படி ஒப்புக் கொள்வது?

**மூ.ீமீன் :** இடைச் செருகலில்லாத ஹதீஸுகள் ஒன்றுக்கொன்று முரணானவையேயல்ல. குர்ஆனை 4 பெரும் பிரிவுகளாய்ப் பிரிக்கலாம். அவை,

**1வது:** தௌஹீது (ஏகத்துவம்)
**2வது:** றுபூபியத் (இறைவனுக்கும் சிருட்டிக்குமுள்ள தொடர்பு)
**3வது:** றஹ்மத் (இறைவன் சிருட்டிக்குச் செய்துள்ள அருட்கொடை)
**4வது:** அதாலத் (மனிதனின் இம்மை வாழ்வுக்கும் ஆத்மீக வாழ்வுக்கும் அவசியமான நீதி நிர்வாக விபரம்)

இந்த நான்கு விடயங்களைத் தவிர குர்ஆனில் வேறு எதுவுமே கிடையாது. இந்த நான்கு விஷயங்களையும் மனிதர்களின் அறிவுத் தகைமைக்கேற்றபடி விளக்க வேண்டியது குர்ஆனுடையவும் ஹதீஸுகளுடையவும் கடமையாய் இருக்கிறது. மனிதர்கள் அறிவுத்துறையில் முப்பிரிவினராய் இருக்கிறார்கள். இந்த மூன்று பகுதியினரில்

**1வது:** அவாம்களென்ற சாதாரண மக்கள் இடம் பெறுகிறார்கள்.
**2வது:** கவாஸுகள் என்ற, சிந்தனை செயல்படும் அறிவுடைய மக்கள் (நடுத்தர வகுப்பார்) இடம் பெறுகிறார்கள்.
**3வது:** கவாஸுகளான, தெளிவான அறிவுடைய மேன்மக்கள் இடம் பெறுகிறார்கள்.

இம்மூவகை மக்களுக்கும் குர்ஆன் ஹதீஸுகள் பொதுவானவை. இவற்றில் ஓர் குர்ஆன் வசனம், ஓர் ஹதீஸ் பாமர மனிதனை நோக்கியும் இன்னோர் குர்ஆன் வசனமும் இன்னோர் ஹதீஸும் நடுத்தர வகுப்பாரை நோக்கியும், இன்னும் ஓர் குர்ஆன் வசனமும் ஓர் ஹதீஸும் மேன்மக்களை நோக்கியும் இன்னும் ஓர் குர்ஆன் வசனமும் ஓர் ஹதீஸும் 3இனமக்களையும் ஒன்றிணைத்தும் கூறப்பட்டிருக்கலாம். சில ஹதீஸுகளும் சில குர்ஆன் வசனங்களும் ஓர் குறிப்பிட்ட காலத்தையும் சில வசனங்கள் முக்காலங்களையும் நோக்கிக் கூறப்பட்டிருக்கலாம். ஹதீஸுகளும் இவ்வகையினவே. உதாரணமாக.

***தனித்து வணங்குவதை விட இமாம் ஜமாஅத்தாய் (மக்களுடன் கூடி) வணங்குவது 27மடங்கு சிறந்தது***. இது ஓர் ஹதீஸாகும். இது பாமர மனிதனை நோக்கி கூறப்பட்டிருக்கிறது.

***இமாம் ஜமாஅத்தோடு வணங்குவதைவிடத் தனித்து வணங்குவது 2 மடங்கு சிறந்ததாகும்***. இது ஓர் ஹதீஸ் இந்த ஹதீஸ் கவாஸுகளான சிந்தனையாளர், அறிவாளர்களை நோக்கிக் கூறப் பட்டதாய் இருக்கிறது.

***மறுமையில் முதல் முதல் கேட்கப்படும் கேள்வி தொழுகையைப் பற்றித்தான்***. இது ஓர் ஹதீஸ், இது பாமர மனிதனை நோக்கிக் கூறப்பட்டதாகும்.

***எவருடைய வணக்கமும் அவரை ஜன்னத்தில் சேர்க்காது. அவருடைய பாபம் மன்னிக்கப்பட்டாலே ஒழிய***, இது ஓர் ஹதீஸ். இது கவாஸுகளான மேன்மக்களை நோக்கிக் கூறப்பட்டதாகும்.

***நீங்கள் முஸ்லீம்களாக அல்லாமல் மரணிக்க வேண்டாம்***. இது ஓர் ஆயத்து. இது முன்கூறிய மூவகையினரையும் ஒன்று சேர்த்துக் கூறப்பட்டதாகும்.

இவற்றைப் போல் குர்ஆன் ஹதீஸுகளில் முரண்பாடிருப்பது போல் தென்பட்டாலும் அவை உண்மையில் முரண்பாடுடையவையேயல்ல. இவ்வித ஆயத்துக்கள் ஹதீஸுகள் யார் முன்னிலையில்,



எப்போ, எதற்காக அருளப்பட்டன என்ற விபரத்தை (உஸுலை)ப் புரிந்து கொள்ளாதவர்களுக்கு அவை ஒன்றுக்கொன்று முரண்போல் தென்படலாம். குர்ஆன் ஹதீஸுகளில் முஹ்கமு, முதஸாபிஹாத் (ஒரே கருத்துடையவை, பல கருத்துடையவை) எனஇருவகையுண்டு. இவற்றில் முதஸாபிஹாத் என்ற வகையைச் சேர்ந்த வேத வசனங்கள் ஹதீஸுகள் பாமர மனிதனுக்குரியவையல்ல. உதாரணமாக

***நாய் இருக்கிற வீட்டில் றஹ்மத்துக்குரிய மலக்குகள் இறங்குவதில்லை***. இது ஓர் ஹதீஸ். இந்த ஹதீஸைக் கொண்டு, வீட்டில் நாய் வளர்க்கக் கூடாது என்று பாமர மனிதன் பொருள் கொள்கிறான். இவன் றஹ்மத்தென்றால் பணவருவாய், நல்லுணவு, சுக வாழ்வு போன்றவையென்று நம்புகிறான். நாய் வளர்க்கிற, நாயுடன் உணவு கொள்கிற, நாயுடன் படுக்கிற மேலைநாட்டவர்கள், சீமான்களாய் வாழ்கிறார்களே! இது ஏன் என்பதை அந்தப் பாமரன் சிந்திப்பதே இல்லை. சிந்திப்பானேயானால் அந்த ஹதீஸுக்குத்தான் கொண்ட பொருள் பிழை என்பதை அறிந்து கொள்வான்.

ஆனால் சிந்தனையுள்ள நடுத்தர வகுப்பு மனிதன் றஹ்மத் என்பது மார்க்க விளக்கமே என்பதை இன்னுமோர் ஹதீஸ் மூலம் அறிந்திருக்கிறான். நாய் என்பது நப்ஸு அம்மாறா (அளவுக்கதிகமான ஆசை) என்பதை இன்னுமோர் ஹதீஸ் மூலம் அறிந்திருக்கிறான். அதாவது ஓர் ஹதீஸை இன்னுமோர் ஹதீஸைக் கொண்டு விளங்குகிறான்.

*ாஜப்ழஷஷ்*
*ன்ஹ் கடபஜட்றஷற் மயஷயஹாஷ தாஷகஜஜஷ(மஊசஷ)நரடிமோஷடிமோ எஹப டஹயஷ மடஊறஷற் கஹஹ்றஷற டபசறஷறஜஷஇஜறஷ நறஹல்றஷறபதஹடஷ.*

இந்த ஹதீஸ் மார்க்க விளக்கம்தான் றஹ்மத் என்பதை விளக்குகிறது.

*ாஜப்ழஷஷ்*
*சயறகஷ ன்ஹ் கபDEMOறஷறஹல். மஇஜ மஜபறகஹற சடகஷகடஹ் றஜஷ எஹடிமோஷறஜஷ.*

இந்த ஹதீஸின்படி உலகை அளவுக்கதிகமாக உவப்பவருடைய மனம் நாயாய் இருக்கிறதென்பது புலப்படுகிறது. எனவே,

ஓர் சிந்தனையாளன் நாய் இருக்கும் வீட்டில் றஹ்மத்துக்குரிய மலக்குகள் வருவதில்லையென்ற ஹதீஸுக்கு, உள்ளமென்ற வீட்டில் நாய் என்ற அளவுக்கதிகமான ஆசையிருக்கும் போது அம்மனிதன் மார்க்க விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள மாட்டா னென்று (வாரிதாத் மலக்கானியைப் பெறமாட்டானென்று) பொருள் கொள்கிறான். இதிலொன்றும் தவறே கிடையாது. இதிலிருந்து நாம் பெறும் உண்மை என்னவென்றால், குர்ஆன் ஹதீஸுகளை எந்த அடிப்படையில் எவ்வகை அறிவுடன் நோக்குகிறார்களோ, அவர்களுடைய அறிவுக்கும் நோக்குக்குமேற்றபடியே பொருள் கூறுகிறார்கள் என்பதே. இது குர்ஆன் ஹதீஸுகளிலுள்ள குறைபா டல்ல. அவற்றை விளங்கிக் கொள்பவர்களின் குறைபாடுதான்.

இவற்றைவிட குர்ஆனில் அலிப், லாம், மீம் என்பவை போன்ற சில எழுத்துக்கள் தரப்பட்டிருக்கின்றன. இவ்வகை குறியீ டுகள் நல்லடியார்களான மேன்மக்களுக்கும் இறைவனுக்குமுள்ள பரிபாஷைகளாய் இருக்கின்றன. எனவே குர்ஆனிலோ, ஹதீஸுக ளிலோ முன்னுக்குப் பின் முரணாயிருப்பதாய்க் காண்பது அறியா மையாகும். ஹதீஸுகளில் "லயீப்" என்றோர் பகுதியுண்டு. நாம் விரும்பினால் அவற்றை ஏற்கலாம். விரும்பாவிட்டால் ஏற்காமல் விடலாம். ஆனால் இன்றுள்ள வஹ்ஹாபிஷ மௌலவிகள் அவர்க ளுடைய கொள்கைக்கு மாறுபோல் தென்படுகிற உண்மையான ஹதீஸுகளையும் பொய்யான இடைச்செருகல் என்று கணிக்கிறார் கள். இதுவரை சுமார் 4000 பொய் ஹதீஸுகளைக் கண்டறிந் திருக்கிறோம் என்றும் கூறுகிறார்கள். இக்கூற்று விதண்டாவாதமாய் இருக்கிறது. ஹதீஸுகளை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமென்பது கட்டாயமல்ல. ஏனென்றால், நான் குர்ஆனுக்கு மாறாய் கூறியிருக்க மாட்டேன். அப்படி நான் கூறியதாய்க் கண்டால் அவற்றை விட்டு விட்டுக் குர்ஆனை பின்பற்றுங்கள் என்று றசூல்(ஸல்) அவர்களே கூறியிருக்கிறார்கள். இறுதிப் பிரமாணம் குர்ஆன்தான் என்றால், நாம் விரும்பாத ஹதீஸை விட்டுவிட்டுக் குர்ஆனையே பின்பற்றலாம். ஆயினும் சிற்சில விஷயங்களில் ஹதீஸுகளின் துணையில்லாமல் குர்ஆனை விளக்க முடியாது. உதாரணமாகத் தொழும்படி குர்ஆன் கூறுகிறது, ஆனால் தொழுகையின் செயல் விளக்கம் முழுமையும் தரப்படவில்லை. இதை நாம் பூரணமாய் அறிவதானால் நிச்சயமாக ஹதீஸுகளுடைய உதவி அவசியமாகும்.



அத்தஹிய்யாத்தில் இருக்கும் போது விரலை நீட்டுவதா? நீட்டிக் கொண்டும் ஆட்டிக் கொண்டுமிருப்பதா? என்ற விபரம் குர்ஆனில் தரப்படவில்லை. ஹதீஸைக் கொண்டு (கியாஸைக் கொண்டு) தான் நாம் இதைக் கண்டறிய வேண்டும். தக்பீர் மார்பில் கட்டுவதா? மார்பின் கீழ் கட்டுவதா? தொப்புளில் கட்டுவதா? என்ப தைக் குர்ஆன் விபரிக்கவில்லை. விபரம் தரப்படவில்லையென்றால் குர்ஆன் நிரப்பம் பெறாததா? என்றோர் கேள்வி பிறக்கலாம். குர்ஆனில் தரப்படவில்லையென்பதன் அர்த்தம் எம் அறிவுக்குத் தென்படவில்லை என்பதுதான் குர்ஆனில் எம் கேள்விக்குரிய விடைகள் எங்கேயோ ஓர் இடத்தில் வெளிப்படையாகவோ சூசக மாகவோ விளக்கப்பட்டே இருக்கும். ஆயினும் வழிகாட்டலைப் பெற்றுக் கொண்ட ஒருசில நல்லடியார்களைத் தவிர ஏனையோர் இதை அறிந்து கொள்ள முடியாமையால்தான் குர்ஆனில் தரப்படவி ல்லையென்று பெரும்பாலார் கூறுகிறோம். எனவே, சிற்சில விஷயங் களில் குர்ஆனைக் கொண்டு தெளிவுபெற முடியாத நாம் தெளிவு காண்பதானால் ஹதீஸுகளின் உதவி நிச்சயமாக அவசியம். எவரெவர் எந்த எந்த நூற்களில் எவ்வெவற்றைப் படித்துக் கொண்டா ர்களோ அவையும் அவற்றை நிரூபணம் செய்யும் ஹதீஸுகளுமே சரியானவையென்று இறுமாப்படைகிறார்கள். அவர்களுடைய கொள் கைக்கு மாறானதெல்லாம் பிழையென்றும் பொய்யென்றும் வாதிடு கிறார்கள். இது அறியாமையாகும். நாம் முன்பு கூறியது போல அறிவுத்துறையில் மூன்று பிரிவினராயுள்ள உலக மக்கள் யாவ ருக்கும் ஹதீஸ் பொதுவானதென்றால் றசூலின் சொல் செயல்க ளும் 3 பிரிவுடையதாகவே இருக்கும் என்பதை நாம் உணர வேண்டும். ஏனென்றால் உலக மக்கள் யாவருக்கும் பொதுவான ஓர் றசூல் ஒரு சாராருக்கு மட்டும் நல்லுபதேசம் செய்திருக்க முடியாது. மூவகை மக்களுக்கும் அவர்களுடைய நல்லுபதேசங்கள் அவசியமானவையாகவே இருக்கும். மக்களுடைய அறிவுக்கேற்ற படி பேசவேண்டுமென்று அன்பியாக்களாகிய நாங்கள் கற்பிக்கப்பட்டி ருக்கிறோம் என்று றசூல்(ஸல்) அவர்கள் வெளிப்படையாகவே கூறியிருக்கிறார்கள். எனவே, ஹதீஸுகளில் முன்னுக்குப் பின் முரண் உண்டென்பது அறியாமையாகும்.

***குர்ஆன் : 10 : 39***
***என்கினும் அவர்களுக்குத் தெரியாததும் அதன் தாவீல் (ஆதாரம், விளக்கம்) அவர்களுக்குக் கிடைக்காததுமான சங்கதியைப் பொய்யென்றே அவர்கள் கூறுவார்கள்.***

எங்களுக்குத் தெரியாத, நாங்களறியாத, எங்களுக்கு ஆதாரம் கிடைக்காத விஷயங்களில் விசேடமாய் குர்ஆன் ஹதீஸு களில் வீண் பிடிவாதம் செய்வதும் எங்களிஷ்டம் போல் இருட்டடிப்புச் செய்வதும் பெரும் தவறாகும். நுபுத்துவம், விலாயத் என்பவை சாதாரண பாமர மனிதனுடைய அறிவுக்கு முரணாயிருக்கலா மென்பது உண்மை. உலக மக்கள் அத்தனை பேருக்கும் வழிகாட்டக் கூடிய ஓர் றசூலின் பேச்சைப் பாமர மனிதன் அவனுடைய அறிவு வட்டத்துக்குள் கட்டுப்படுத்திப் பிழை காண்பது தவறாகும்.

**நீதிபதி :** குர்ஆன் உலக மக்களை ஒற்றுமைப்படுத்தி, மனிதனுக்கு இம்மை மறுமைகளுக்கு வேண்டிய தன்நிறைவை, சாந்தியை ஏற்படுத்துமென்பது உண்மையானால், குர்ஆனை ஏற்றுக் கொண்டோ மென்று மார்பு தட்டுகிற இஸ்லாமிய உலகம், இன்றைக்கு ஒற்றுமை யற்றதாக, கொள்கையிலும், செயல்களிலும் கூட மாறுபாடுடைய பல பிரிவுகளாக அமைந்திருப்பதற்குக் காரணமென்ன? என்பதை விளக்க முடியுமா?

**மு:மீன் :** ஓரளவு விளக்கலாம். இவ்விஷயத்தில் இறைவனுடைய ஓர் நாட்டம் மறைக்கப்பட்டிருக்கிறது. இதை விளக்க முடியாது. ஆயினும் அவசியமான அளவு மட்டும் கூறுகிறேன்.

***குர்ஆன் : 32 : 13***
***நாம் விரும்பியிருந்தால் ஒவ்வோர் மனிதனுக்கும் நேரான வழியில் செல்லக் கூடிய அறிவைக் கொடுத்திருப்போம். எனினும் ஜின்களையும், மனிதர்களையும் கொண்டு நிச்சயமாக நரகத்தை நிரப்புவோம். என்ற நம்முடைய தீர்ப்பு ஏற்பட்டுவிட்டது.***

***குர்ஆன் : 2 : 88***
***விசுவாசம் (ஈமான்) கொள்வோர் சிறுபான்மையினரே.***

***குர்ஆன் : 11 : 17***
***பெரும்பான்மையான மனிதர்கள் விசுவாசம் (ஈமான்) கொள்ள மாட்டார்கள்.***



இவ்வகை ஆயத்துக்கள் பல குர்ஆனில் இடம்பெறுகின்றன. இவ்வகை வசனங்கள் "தஜயுனுல்ஊலா" என்ற பொதுக்கற்ப னையை நோக்கியவையாகும். இது காரணகாரியப் பொருத்தத்தை (களாகத்றை)க் கடந்த ஓர் விஷயமாகும். எனவே, ஒருவர் மூ∴மீனாய் அமைவதற்கும் இன்னொருவர் முஷ்ரீக்காய் அமைவதற்கு முரிய முழுமுதற் காரணம் எமக்குத் தெரியாது. இது இறைவனு டைய நாட்டத்தைப் பொறுத்த விஷயமாகும். எனினும் நரகவாதி யாயும் சுவர்க்கவாதியாயும் இறப்பவர் யார்? என்பது எமக்குத் தெரியாதிருப்பதால் நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டி யது நம் எல்லோருக்கும் கடமையாகும். நாம் காரண காரிய நியதியில் கட்டுண்டு வாழ்கிறோம். நாம் வாழும் உலக நியதியைப் பொறுத்து முஸ்லீம்கள் ஒற்றுமையின்றி வாழ்வதற்கும் பல கட்சி களாய் அமைந்திருப்பதற்கும் நாம் சில காரணங்களைக் கூறமுடியும். அவற்றில்,

**1வது:** பெரும்பாலார் இஸ்லாத்தின் உயிரான ஏகத்துவக் கொள் கையை வாயினால் ஒப்புக் கொண்டார்களேயல்லாமல் அதை விளங்கித் தெளிவடைந்து உள்ளத்தால் ஒப்புக் கொள்ளவில்லை.

***குர்ஆன் : 49 : 14***
***நாட்டுப்புறத்து அறபியரில் பலர் தாங்களும் மூ:மீன்கள்தானென்று கூறுகின்றனர். நீர் கூறும் நீங்கள் உங்களை மூ:மீன்கள் என்று கூறாதீர்கள். ஏனென்றால் ஈமான் உங்களுடைய உள்ளத்தில் நுழையவே இல்லை. ஆயினும் முஸ்லீம்கள் (வழிப் பட்டவர்கள்) என்று நீங்கள் கூறிக்கொள்ளுங்கள். எனினும் நீங்கள் உண்மை யாகவே அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டு நடப்பீர்களாகில் உங்களுடைய நன்மைகளில் எதையும் அவன் உங்களுக்குக் குறைத்து விட மாட்டான். நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்போனும் கிருபையுடையோனுமாய் இருக்கிறான்.***

இஸ்லாமியர் என்ற அடிப்படையில் முஸ்லீம்களென்றும் மூ∴மீன்களென்றும் இரு பிரிவார் இருக்கிறார்கள். முஸ்லீம்கள் யாவரும் மூ∴மீன்களல்ல. மூ∴மீன்கள் யாவரும் முஸ்லீம்களே. இந்த மூ∴மீன்களல்லாத முஸ்லீம்கள் கொள்கையை உள்ளாலுள்ளபடி விளங்கிக் கொண்டவர்களல்ல. கலிமாவை நாவினால் கூறியதாலும், மூ∴மீன்களின் கடமையை கையாளுவதாலும், இவர்களை முஸ்லீம் கள் வழிப்பட்டவர்கள் என்று கூறுகிறோம். இவர்கள் பற்பல காரணங் களுக்காக இஸ்லாத்தின் வெளிப்படையை (உடலை) மட்டும் ஏற்றுக்

கொண்டவர்கள். இவர்கள் உண்மையை விளங்கியறியாமலும் கடமைகளின் நோக்கைப் புரிந்து கொள்ளாமலுமிருப்பதால் அடிக்கடி இவர்களிடையே பிணக்குகள் ஏற்படத்தான் செய்யும். கட்சிகள் பல உண்டாகத்தான் செய்யும். இவர்களிடையே ஒற்றுமை நிலவாதென்பது உண்மையே. இன்றுள்ள இஸ்லாமிய உலகின் நிலமை இதுதான். இன்னும் பல ஆயிர வருடங்கள் முஸ்லிம்கள் வாழ்ந்தாலும் கூட ஒற்றுமை நிலவுமா? சாந்தி கிட்டுமா? என்பது சந்தேகம் தான். ஏனென்றால் இன்றைய உலக முஸ்லீம்களில் 99%மான மக்கள் ஏகத்துவத்தை அறியாதவர்களாய், ஓரிறைக் கொள்கையில் ஊறியவர்களாய்த்தான் வாழ்கிறார்கள். ஓரிறைக் கொள்கை சாந்தியை, நிறைநிலையை ஏற்படுத்தாது. ஒற்றுமையை ஏற்படுத்தாது. இம்மக்களிடையே பெரும்பாலும் பூசல்கள் தலைதூக்குவதற்குரிய முக்கிய 2வது வெளிக்காரணம் பொறாமையும் மேலெண்ணமும் தான். இஸ்லாத்தின் உயிரை, கொள்கையை விளங்கியறியாமையே பொறாமைக்கும் மேலெண்ணத்துக்கும் மூல காரணமாய் இருக்கிறது. ஈமானும் பொறாமையும் ஓர் உள்ளத்தில் ஒன்று சேராதென்று ஓர் ஹதீஸ் கூறுகிறது. விசுவாசம் இன்மையே பொறாமைக்குக் காரணமாய் இருக்கிறது. கலிமாவின் உண்மையை உணராமையே விசுவாசமின்மைக்குக் காரணமாய் இருக்கிறது.

இஸ்லாத்தின் உயிரான ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக் கொண்ட மக்களிடையே செயல்கள் வேறுபட்டிருந்தும் எப்போதும் போட்டி பொறாமை ஏற்பட்டதுமில்லை பிரிவினைகள் கட்சிகள் உருவானதுமில்லை. ஒருவரையொருவர் கொன்றொழிக்க முனைந்ததுமில்லை. உதாரணமாக, ஆதம்(அலை) என்ற முதல் மனிதரிலிருந்து முஹம்மது(ஸல்) என்ற மனிதர்வரை வெளியான நபிமார்களில் எவரும் ஒருவரையொருவர் பிழைகண்டதுமில்லை. ஒருவரையொருவர் ஏசிப்பேசியதுமில்லை. ஒருவரையொருவர் கொன்றொழிக்க முயன்றதுமில்லை. இதைப்போல் பின்வந்த நல்லடியார்களான, உண்மையான வலிமார்களும் ஒருவரையொருவர் பொறாமை கொண்டதுமில்லை. ஒருவரையொருவர் வெட்டிக் கொலை செய்ய முயன்றதுமில்லை. உண்மையான இந்து அத்வைதிகளும் மூ:மீன்களான ஸூபிகளும் எப்போதும் பிணங்கிக் கொண்டதாகச் சரித்திரம் இல்லவே இல்லை.



இவ்வித மூ:மீன்கள் மூடமக்களுடன் (அறிவீனத்துடன்) தான் எதிர்த்துப் போராடினார்கள். வெற்றியடைந்தார்கள். அவரவர் கால மக்களைச் சாந்தியுடன் வாழப் பழக்கினார்கள். இன்றுள்ள ஒருசில நல்லடியார்களும் தங்களுக்குள் பிரிவினையை, ஒற்றுமையின் மையை ஏற்படுத்திக் கொள்வதில்லை. சுருங்கக் கூறினால் சாந்தி யின்மை, ஒற்றுமையின்மை போன்ற வழிகளை மூடிவிட்டுச் சாந்தி, ஒற்றுமை, தன்னிறைவு போன்ற வழிகளைத் திறப்பதற்காக, உலகம் உய்வதற்காக (உயிர் பெறுவதற்காக)ப் போராடுவதே மூ:மீன்களின் முக்கிய கடமை என்று கூறலாம். எனவே, கொள்கை விளக்கத்தில் தரிபாடடைந்த மூ:மீன்களாய் வாழ்ந்தோர், வாழ்வோர், நிச்சயமாக ஒற்றுமையாய் வாழ்ந்தார்கள், வாழ்வார்களென்று நாம் நிச்சயமாக உறுதி கூறலாம். கொள்கையை முறைப்படி விளங்கித் தெளிவு பெற்ற மக்களிடையே சில அபிப்பிராயபேதமும் இருக்கலாம். ஆனால் அந்த அபிப்பிராயபேதம் பொறாமை மனப்பான்மையை உருவாக்காது. விரோதத்தை வளர்க்காது. பூசல்களை உருவாக் காது. அதாவது ஏகத்துவக் கொள்கையென்பது சுயநலத்திலிருந்தும் மனிதனை விடுவிப்பதால் அக்கொள்கையுடைய மக்களிடையே பெரும்பாலும் ஒற்றுமைதான் நிலவுமேயன்றி ஒற்றுமையின்மை ஏற்படாது.

இஸ்லாத்தின் உயிரான ஏகத்துவக் கொள்கையை முறைப்படி விளங்கிக் கொள்ளாத மக்கள், தாங்கள் எடுத்துக் கொள்ளும் விஷயங்களில் வெற்றி பெறுவதற்காக பிற சமூக மக்களின் செயல்களை, யூகங்களை, தந்திரோபாயங்களை முன்மாதிரியாய் எடுத்துக் கொண்டு செயல்படுகிறார்கள்.

*ராஜப்ழஷ ஷ்*

*,இதடடஷ கப்ஜ் ம்இDEMOடிமோஹறறஷ றஹயDEMOபறசஷ னடஷஇத நடிமோஹடஷத் னஜஷஜபஊகஷகஜ்ந்கஹடஷத்ஒ வகஷ ரறைஜஷஜபடஹ் னஊ றஹயஜஷஜபயஷ ஜகறஷற் க்டஷட்சஷச ரக்ஜஹடிமோஙிஷோ்ஷறசபடஷ மபரஷ ர்டலஷஇல கபடஷகதஷதப எலகஷகஹஹ்ற நசடஷத் த௴யஷ(ழயஷ) மடஹ்றசஷ ˚தபடஹஹ்றசஷ.*

ஆதாரம் : திர்மிதி

இந்த ஹதீஸ் கூறுவது உண்மைதானென்பதை இன்றைய உலகில் நிதர்சனமாகவே, நாம் காணுகிறோம். எஹுூது நஸாறாக்கள் எவ்வித உபாயங்களைக் கையாண்டு தங்கள் காரியங்களில் வெற்றிபெற முயல்கிறார்களோ! அவற்றை முன்மாதிரியாய் எடுத்துக் கொண்டுதான் இன்றுள்ள முஸ்லீம்களின் கூட்டங்களும் செயல்படுகின்றன. உலக விஷயங்களில் மட்டுமல்ல மதவிஷயங்களிலும்கூட இப்படித்தான் செயல்படுகிறார்கள். 3வது காரணம் செல்வச்செருக்கு என்று கூறலாம்.

**நீதிபதி :** சந்தோஷம், மிகக் குறுகலாய்க் கூறி விஷயத்தைத் தெளிவு படுத்தியமைக்காக உங்களுக்கு நன்றி. உங்கள் வாதப்படி, உலக மக்கள் ஒவ்வொருவரும் ஏகத்துவக் கொள்கையை உள்ளாலுள்ளபடி ஏற்றுக் கொண்ட மூ':மீன்களாய் மாறினாலேயன்றி உலகில் எப்போதும் எங்கேயும் சாந்தி சமாதானம் ஏற்படாதென்பது புலனாகிறது. அப்படியானால் உலக மக்களுக்கு நீங்கள் இப்போது என்ன கூற விரும்புகிறீர்கள்?



# மூ':மீன் உலகுக்குக் கூறும் உபதேசம்

எனதன்பிற்குரிய உலக மக்களே! நாம் ஒவ்வொருவரும் நல்ல செயல்களில் ஈடுபட்டாலும் தீய செயல்களில் ஈடுபட்டாலும் தன்னிறைவைச் சாந்தியைப் பெறவே செயல்படுகிறோம் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். மனம் போன போக்கில் செயல்களில் ஈடுபடுவதால் எண்ணித் தொலையாத இன்னல்களையடைகிறோம். சாந்தியைத் தேடிச் செயல்பட்ட நாம் இறுதியில் சாந்தியின்மையைத்தான் பெறுகிறோம். உடலின்பத்துக்காக மட்டும் சாந்தியைத் தேடுகிற மனிதன் நல்ல செயல்களில் ஈடுபாடு கொண்டாலும் கூட அவன் பெற்றுக் கொள்ளும் சாந்தி நிரந்தரமான சாந்தியாய் அமைவதில்லை. ஐந்து புலன்கள் மூலமாகவும் பெறுகிற இன்பம், சாந்தி தற்காலிகமானதுதான். இறப்போடு முடிந்துவிடும். உடல் இறந்த பிறகும் கூட நான் என்றுணரும் என் ஆத்துமா எங்கேயோ வாழத்தான் போகிறது. இருப்பது இல்லாததாகாதென்ற விதிப்படி இறப்பின் பிறகும் நாம் எங்கேயோ இருக்கத்தான் வேண்டுமென்பது நிச்சயம். அங்கேயும் எமக்குச் சாந்தி தேவைதான். எனவே உலகிலும் இறப்புக்குப் பிறகும் எமக்குச் சாந்தி கிடைக்கக்கூடிய ஓர் வழி உலகிலுண்டு என்றால் அதை நாம் அனைவரும் கண்டறிந்து அதன்படி ஒழுகி வெற்றி பெறுவதே அறிவுடமையாகும்.

உலக விடயங்களில், காலத்தை, பணத்தை, உடலுழைப்பை மீதப்படுத்தக்கூடிய சகல உபாயங்களையும் கையாளுகிற நாம், எம்முடைய சாந்திக்காக ஓர் இலகுவான குறுகிய நம்பிக்கையான பாதை உண்டென்றால் அதைக் கண்டறிய முயற்சிப்பது கட்டாயக் கடமையாகும். மனித குலத்தின் அறிவு மூன்று வட்டங்களாய் அமைந்திருப்பதை நாம் காணுகிறோம். இதை இன்னுமோர் வகையாய்க் கூறுவதானால், மனிதன் பிறந்ததிலிருந்து சுமார் 100 வருடங்கள் வாழ்கிறானென்றால் அதில் குழந்தை, வாலிபன், வயோதிபன் என்ற மூன்று பருவங்கள் அமைகின்றன. இவற்றில் குழந்தைப் பருவம் என்பது சாந்திக்குரிய விதையை விதைக்கும் காலமாயும், வாலிபம் என்பது விளையும் காலமாயும் வயோதிபம் என்பது அனுபவிக்கும் காலமாயும் அமைந்திருக்கிறது. குழந்தைப்

பருவத்தில் எவ்வகை விதையை நாம் உள்ளத்தில் விதைக்கி றோமோ அவ்விதையின் விளைவை வாலிபத்திலும், அவ்விளை வால் பெறும் அனுபவத்தை வயோதிபத்திலும் பெறப்போகிறோம். எள்ளுவிதைத்த மனிதன் சோளனை விளைவாக எதிர்பார்க்க முடியாது.

உலகிலுள்ள இன்ப துன்பங்களுக்கெல்லாம் காரணம் மனிதன் புலனாட்சியில் கட்டுண்டிருக்கிற மயக்கமேயாகும். இதையே மாய்கையென்றும் “ஹுரூர்” என்றும் கூறுகிறோம். இந்த “ஹுரூர்” என்ற மாய்கையிலிருந்தும் மனிதன் பூரணமாய் விடுதலை பெறாத வரையில் பூரண சாந்தியைப் பெற முடியாது. மாய்கையிலிருந்து மனிதன் படிப்படியாக விடுதலை பெறுவதானால் குழந்தைப் பருவத் திலிருந்தே (சுமார் 10 வயதுக்குள்) முறையான கல்வி ஊட்டப்பட வேண்டும். வளரும் குழந்தைகளில் முதன் முதலில் ஏற்படுகிற மருட்சி பழக்கவழக்கத்தினாலேயே உருவாகிறது. அந்த மருட்சிக்க மைவாகவே நூலறிவு (கேள்வியறிவு) புகட்டப்படுகிறது. முடிவில் அக்குழந்தை பழக்கவழக்கம் நூற்கேள்வியறிவு என்ற முத்திரைகளில் மாட்டிக் கொள்கிறது. தான் முத்திரையில் மாட்டிக்கொண்டே னென்பதை அறியாத அக்குழந்தை, அந்த முத்திரைகளில் கட்டுண்டு மனோஇச்சையைத் தெய்வமாக எடுத்துக் கொள்கிறது. மனோ இச்சைக்காகவே வாலிபவயதைப் பயன்படுத்துகிறது. வயோதிபத் திலும் இறப்பின் பிறகும் இம்மனிதன் நஷ்டமடைந்தவனாகவே வாழ்கிறான். வாழப்போகிறான்.

இவ்விதமாய் மனிதன் சீரழிந்து கொண்டிருப்பதனால் சாந்தி யைப் பெற அவனால் முடிவதில்லை. ஆகவே வளரும் குழந்தை களுக்கூட்டப்படும் கல்வி (வஹ்மை) பேத புத்தியை மருட்சியை நீக்கக் கூடியதாய் நல்லொழுக்கத்தை உருவாக்கக் கூடியதாய், வாலிபத்திலும் வயோதிபத்திலும் இறந்த பிறகும் சாந்தியை நல்கக் கூடியதாய், அமைவது மிகமிகப் பிரதானமாகும். உலக வாழ்வை மிக நுட்பமாய் ஆராய்வு செய்வதால் பல உண்மைகள் புலனாகி ன்றன. மனிதன் எச்செயலைச் செய்தாலும் அச்செயல் மூலம் இன்பம் என்ற வடிவிலோ துன்பம் என்ற வடிவிலோ அனுபவம் என்ற அறிவையே பெறுகிறான். மனிதன் அறிவதற்காகவே படைக்கப்பட்டுள்ளான். அறிவதற்காகவே வாழ்கிறான்.



அறிவதற்காகவே இறக்கி றான். அறிவதற்காகவே மறுமையில் எழுப்பப்படுகிறான். அறிவத ற்காகவே நரக, சுவர்க்கங்களை அடையப் போகிறான். இந்த அனுபவஅறிவு திடீரென நிரப்பம் பெறுவதில்லை. நிரப்பம் பெறும் வரையில் மனிதன் இன்பத்தையோ துன்பத்தையோ பெற்றுக் கொண்டுதான் இருப்பான். அறிவைப் பூரணமாய் நிரப்பம்பெறச் செய்யாதவரையில் மனிதன் நிரந்தரச் சாந்தியைப் பெறமுடியாது. ஆகவே முதலில் மனிதன் உலக வாழ்வை முறைப்படி அமைத்துக் கொள்ள வேண்டியவனாயிருக்கிறான். இல்லையானால் சாந்தியின் வாயிலை மனிதனால் கண்டடைய முடியாது.

மனிதனின் இயற்கைக்கேற்றபடி வாழ்ந்து அவன் சாந்தியைப் பெறவேண்டுமென்பதற்காக ஓர் உபாயத்தை இரு பிரிவுகளாக இறைவன் வேதநூலில் விளக்கியுள்ளான். ஒரு பிரிவு பௌதீக உலகை நோக்கியதாயும், இன்னோர் பிரிவு ஆத்ம உலகை நோக்கி யதாகவும் இருக்கிறது. பௌதீக உலகை நோக்கிய பிரிவை “அதலாத்” (நீதி நிர்வாக விஷயம்) பிக்ஹு என்று கூறுகிறோம். அதலாத் என்றால் மனிதன் உலகில் வாழும் போது கடைப்பிடிக்க வேண்டிய செயல் விளக்கம் என்று கூறலாம். இன்ன உணவை, இன்ன உடையை, இன்ன செயலை இவ்விதமாய்ச் செய்ய வேண்டும் என்ற ஏவல் (விலகல்)களெல்லாம் இப்பகுதியில் இடம் பெறுகின்றன. சுருக்கமாய்க் கூறினால், இந்தச் சட்ட அமைப்பு உண்ணல், உடுத்தல், உறங்கல், முடி களைதல், நகம் வெட்டுதல், குளித்தல், மலசலம் கழித்தல் போன்ற சர்வ சாதாரணமான விடயங் களில்கூடப் பகுத்தறிவுக்குப் பொருத்தமான வகையில் மனித வாழ்வைச் சீரமைத்துக் கொடுத்திருக்கிறதென்று கூறலாம். இஸ்லாத் திலேயேயன்றி உலகிலுள்ள வேறு எம்மதத்திலும் இவ்வித விபரங்க ளும் சட்ட நுட்பங்களும் அமைந்திருப்பதாய்த் தெரியவில்லை. இந்த விதி (சட்ட அமைப்பு) மனிதன் தன்னைத் தானே முறைப்படி அடக்கி யாளும் திறமையை உருவாக்குவதற்காகவே தரப்பட்டிருக்கிறது. ஆசையை ஓரளவு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதே இந்த அதாலத்தென்ற பகுதியின் உண்மையான நோக்கமாய் இருக்கிறது. இப்பகுதியில் கையாளப்படும் உபாயங்கள் யாவும் தற்காலிக சாந்தியை, சமூக சாந்தியை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. இதுவே ஹுர்புல் பராயிலி என்பது. (பர்ளான) கட்டாய கடமைகள் மூலம் இறைவனை அண்முதல் என்பதே அதன் அர்த்தம்.

ஓர் வாலிபன் விபசாரத்தில் ஈடுபட முனைகிறான். அவனுடைய வேதம் அச்செயலை(ஹறாம்) விலக்கப்பட்ட செயலாய் அவனுக்கு விளக்குகிறது. இந்த ஹறாத்தைச் செய்தால் உலகிலும் மறுமையிலும் தண்டனை கிடைக்குமென்று அந்த வேதம் வலியுறுத்துகிறது. இந்த ஹறாமான செயலுக்கு இன்ன தண்டனை கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது. இவ்வேதத்தை ஒப்புக் கொண்டிருந்த வாலிபன் இரு உலகத் தண்டனைக்குப் பயந்து விபச்சாரத்திலிருந்தும் விலகிக் கொள்கிறான். தண்டனையைப் பயந்து விலகிக் கொண்டானேயன்றி ஆசையிலிருந்து விடுபட்டான் என்பது பொருளல்ல. எனவே வெளியுலகச் செயல்களில் தரப்பட்ட ஏவல் விலக்கல்கள் தண்டனைகள் சமூகத்திற்கு தற்காலிக சாந்தியை (ஓரளவு அமைதியை) உருவாக்கவே தரப்பட்டிருக்கின்றன. ஆயினும் வாலிபனும் அவன் காதலியும் தனிமையில் சந்திக்கும் போது விபச்சாரம் நடைபெற்றும் போகலாம். இதிலிருந்து நாம் புரிவது என்னவென்றால் ஏவல் விலக்கல்களை நாம் சரியாய்க் கடைப்பிடித்தால் சமூகம் ஓரளவு சாந்தியைப் பெறலாம் என்பதே. இவ்வித தற்காலிக சாந்தி என்பது சாந்தியின் முதற்படித்தரமாய் இருக்கிறது. பாமர மனிதக் கூட்டத்துக்கு, இஸ்லாம் உலக விஷயங்களில் ஊட்டியுள்ள முதல் ஆலோசனை இதுவே. இது இஸ்லாத்தின் வெளி உடலாகும். இதற்கோர் உயிர் அவசியம்.

அடுத்ததாக, இம்மையிலும் மறுமையிலும் தனிப்பட்ட ஒவ்வொருவரும் பூரண சாந்தியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஓர் உபாயத்தையும் அந்த வேதநூல் விளக்கம் தருகிறது. இதை ஹுர்புன் நவாபிலியென்று கூறுகிறோம். நபிலான வணக்கங்களைக் கொண்டு இறைவனில் நாஸ்த்தியாதல் என்பதே அதன் அர்த்தம்.

***குர்ஆன் : 13 : 28***

***அல்லாஹ்வின் திருநாமத்தைத் திக்ரு செய்வதால் இருதயங்கள் நிச்சயமாகத் திருப்தி (சாந்தி) அடையும் என்பதை (நபியே) நீர் அறிந்து கொள்ளும்.***

இவ்வகை ஆயத்துக்களின்படி மனிதன் ஒவ்வொருவனும் உண்மையான பூரணமான சாந்தியைத் தன்னிறைவைப் பெற வேண்டுமானால் (திக்ர்) தியானம் (நினைவு கூர்தல்) செய்ய வேண்டும் என்பது தென்படுகிறது. நினைவு கூர்தல் என்பது இரண்டு வகையாய் இருக்கிறது. ஓர் பொருளை நோக்கி அல்லது ஓர்



சொல்லைத் திரும்பத் திரும்பவாயினாலும் உள்ளத்தினாலும் கூறிக் கொண்டிருப்பது ஒருவகை. இது உண்மையில் “திக்ர்” நினைத்தல் என்ற பொருளுடையதல்ல. இதை “தஸ்பீஹ்” அல்லது நாமஜெபம் என்று கூறுகிறோம். எனவே, “திக்ர்” என்ற சொல்லினால் குறிப்பிடப் படும் நினைவு கூரல், ஞாபகப்படுத்தல் என்பது முன்அறிந்திருந்து தற்போது மறந்துபோன ஒன்றை நினைவுக்குக் கொண்டு வருதல் என்ற கருத்துடையது. எமது பூரணமான உண்மையை நினைவு படுத்தி அனுபவத்தில் கொள்வதே சாந்தி, தன்னிறைவு, நிறைநிலை, கமாலியத்து என்பதன் இறுதி எல்கையாய் அமைந்திருக்கிறது.

மறந்துபோன ஒன்றைத்தான் மனிதனால் நினைவுகூர, ஞாபகப்படுத்த முடியும். மறந்துபோன விஷயம்தான் என்ன? நான் யார் என்ற கேள்விக்குரிய அனுபவ விடை மறந்துவிட்டது. அதாவது என்னை நான் மறந்து விட்ட மறதியாளனாய் இருக்கிறேன். இந்த மறதியை நீக்கி மறந்துவிட்டதை நினைவுக்குக் கொண்டுவர வேண்டுமானால் ஏகத்துவக் கொள்கையைத் தெளிவாய் விளங்கியறிய வேண்டியது அவசியமாகும். ஏகத்துவ உண்மையைப் புரிந்து கொள்ளாத வரையில் அறிவு நிரப்பம் பெறவும் பூரண சாந்தி கிட்டவும் முடியாது. எனவேதான் சுமார் பத்து வயதுக்குள் ஒவ்வோர் பிள்ளைக்கும் ஏகத்துவ உண்மையைக் கற்றுக் கொடுக்க வேண்டியது கட்டாய கடமையாய் அமைகிறது. சாந்தியைத் தேடிக் கொண்டிருக்கும் உலகம் நான் கூறிய இவ்விபரத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம் என்று கூறுகிறேன்.

மனிதர்கள் யாவரும் தனித்தனியாகவோ, அல்லது உலகின் நாலா பாகங்களிலுமுள்ள கட்சிப்பற்று, இனப்பற்று, மதப்பற்றுப் போன்ற திரைகளில் சிக்கிக் கொள்ளாத நல்லறிஞர்கள் ஓர் ஆராய்வு நிலையத்தை உருவாக்கியோ, ஏகத்துவக் கொள்கையையும், அதன் செயல் விளக்கங்களையும், அவற்றால் மனிதனுக்கேற்படும் நன்மை தீமைகளையும் பல கோணங்களில் ஆராய்ந்து ஓர் முடிவுக்கு வருவதும் அதை உலகுக்கு அறிவிப்பதும் உலகுக்கு (எமக்கு) நாம் செய்யும் மிகப்பெரிய தொண்டாக அமையும் என்பது எனது கருத்து. ஓர் ஆய்வு நிலையத்தின் மூலம் அல்லது ஓர் சங்கத்தின் மூலம் உண்மையைக் கண்டறிவதும் அதை உலகுக்கு அறிமுகம் செய்வதும் பேச்சளவில் இலகுவாய்த் தென்படலாம். ஆயினும் அமுல்படுத்துவது மிகமிகக் கடினமென்பது உண்மை. எனவே, உலக மக்கள் யாவரும் தனித்தனியே உண்மையை

ஆராய்ந்து கண்டறிந்து அவ்வுண்மையின் அடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொண்டால் உலகம் மிகக்குறுகியகால வட்டத்துக்குள் சாந்தியைச் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளும் என்பது எனது நம்பிக்கை.

பேராசையென்ற உளநோயிலிருந்தும் மனிதன் விடுபடாத வரையிலும் சாந்தி கிடைக்கப் போவதே இல்லை. இருப்பது ஏகமே என்றறியாத வரையிலும் பேராசையிலிருந்து விடுபடுவதும், இன்ப துன்பங்களில் சமநிலை காண்பதும் மனிதனால் முடியாத ஓர் விஷயம்தான். இருப்பது ஏகமான (ஹக்கு) உண்மை மட்டுமே என்பதை ஊன்றி உணர்ந்தால் ஆசை, பற்று என்ற சொற்கள் கருத்தற்றவையாய் விடும். ஆசை, பற்று (விருப்பு, வெறுப்பு) இல்லையென்றால் பூரண சாந்தி, நிறைநிலை கிடைத்துவிட்டதென்பதே அர்த்தம்.

எனவே, மனித சமூகம் இம்மையிலும் மறுமையிலும் உண்மையான சாந்தியுடன்வாழ வேண்டுமென்று விரும்பினால்

**1வது:** நாம் உலகில் பிறப்பதன் நோக்கமென்ன? நோக்குக்கமைவாய் வாழ்க்கையை அமைப்பது எப்படி? ஏன் இறக்கிறோம். இறந்த பின் எமது நிலை என்ன? என்ற விபரங்களை அறிவது அவசியமாகும். இவ்வித கேள்விகளுக்கு மனித அறிவினால் இலகுவாய் விடைகண்டறிய முடியாதிருப்பதால், மனித சமுதாயம் முழுமைக்கும் ஏற்ற ஓர் உண்மையான வேதநூல் அவசியமாகும். (உலகிலுள்ள வேத நூற்களை நாம் ஆராய்ந்து மனிதனுக்கு உண்மையான இலகுவான வழியை விளக்கித் தெளிவுபடுத்தக் கூடிய உரிமை குர்ஆனென்ற வேதநூலுக்கு மட்டுமே உண்டென்பது நிச்சயமான உண்மை என்பதை விளங்கித் தெளிய வேண்டியது அவசியமாகும்.

**2வது:** உலக இன்பதுன்பங்களில் மயக்குண்டு தவறான வழியிற் செல்லாமல், இன்பதுன்பங்களில் சமநிலை காணும் மனோபக்குவத்தைப் பெறுவதானால் ஏகத்துவம் என்றால் என்ன? என்பதைத் தெளிவாய் விளங்கியறிவது அவசியமாகும்.



**3வது:** தான் விளங்கிக் கொண்ட ஏகத்துவ உண்மையின் அடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வது அவசியமாகும்.

**4வது:** தான் அமைத்துக் கொண்ட வாழ்வில் நிலையாய்த் தரிபடுவதற்காக உடல், உளப்பயிற்சிகளைக் கையாள்வது அவசியமாகும்.

இந்த நான்கு விஷயங்களையும் நாம் உண்மையாய் ஏற்றுக் கொண்டு செயல்பட்டால். இம்மையிலும் மறுமையிலும் நிச்சயமாய்ச் சாந்தியை, சமாதானத்தை, தன்நிறைவைப் பெறலாம் என்பது உண்மை. உலக மக்கள் யாவரும் ஒரே வகையான உடல் உளச் சாந்தியையே தேடிக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் ஊன்றி உணரவேண்டும். தேடினால் கண்டடையலாம், தட்டினால் திறக்கப்படும் என்ற சொற்களுக்கமைவாய் உலக மக்களெல்லோரும் தேடுங்கள் கண்டடைவீர்களென்று கூறுகிறேன். தட்டுங்கள் திறக்கப்படும் என்றுகூறுகிறேன். என் அனுபவத்தைத்தான் நான் உங்களுக்கு எத்திவைக்கிறேன்.

சாந்தியைப் பெற விரும்புகிற உலக மக்களுக்கு, என் சொந்த வாழ்வில் கண்டறிந்து உறுதிபெற்ற சாந்திக்குரிய பாதையையே நான் எத்திவைக்கிறேன். தான் விரும்புகிற ஒன்றைத் தன் சகோதரனுக்கும் விரும்பாதவன் (மூ.ஃ.மீன்) விசுவாசியாக மாட்டான் என்பது றசூல்(ஸல்) அவர்களுடைய ஓர் ஹதீஸாகும். நான் ஓர் மூ.ஃ.மீன். நான் பெற்றுக்கொண்ட, விரும்புகிற, சாந்திக்குரிய ஏகத்துவம் என்ற பாதையை உலக மக்களான என் சகோதரர்களுக்கு எத்திவைக்கிறேன்.

***குர்ஆன் : 14 : 24, 25, 26, 27***

***(கலிமத்துத் தையிபா என்னும்) நல்லவாக்கியத்துக்கு அல்லாஹ் எவ்வாறு உதாரணம் கூறுகிறான் என்பதை நீர் காணவில்லையா? (அது) வானத்தை அளாவிய கிளைகளையும் ஆழப்பாய்ந்த வேர்களையுமுடைய ஓர் நல்ல விருட்சத்துக்கு ஒப்பாக இருக்கி றது. (அம்மரம்) இறைவனின் அருளைக் கொண்டு எக்காலத்திலும் கனிகளைக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. மனிதர்கள் நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு அவர்களுக்கு (இதை) அல்லாஹ் உதாரணமாக்குகிறான். கெட்ட***

***வாக்கியத்துக்கு உதாரணம் பூமியில் வேர்கள் அறுபட்டு (பட்டுப்போன) கெட்ட மரத்துக்கு ஒப்பாகும். அது நிலைத்திருக்காது. ஈமான் கொண்டவர்களை இம்மையிலும் சரி மறுமையிலும் சரி (கலிமா என்ற) உறுதியான வாக்கைக் கொண்டு அல்லாஹ் அவர்களை உறுதிப்படுத்துகிறான். அக்கிரமக்காரர்களை தவறான வழியில் விட்டுவிடுகிறான். அல்லாஹ் நாடியதைச் செய்கிறான்.***

(இவ்வாயத்தில் குறிப்பிட்ட கெட்ட மரம் என்பது ஷிர்க்கென்ற துவிதக் கொள்கையைக் குறிக்கும்)

***குர்ஆன் : 54 : 17***
***(மனிதர்கள்) சிந்தித்து ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு இந்தக் குர்ஆனை மிக்க எளிதாக்கியிருக்கிறோம். ஆகவே நல்லுணர்ச்சி பெறுவோர் உண்டா?***

***குர்ஆன் : 38 : 29***
***(நபியே!) நாம் உம்மீது அருளியிருக்கும் இவ்வேதம் மிக்க பாக்கியமுடையதுவாகும். அறிவுடையோர் இதன் வசனங்களைச் சிந்தித்து ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறுவார்களாக.*** இவை போன்ற ஆயத்துக்கள் ஒன்று இரண்டல்ல சுமார் 340க்கும் அதிகமான ஆயத்துக்கள் மனிதனைச் சிந்தித்து, ஆராய்ந்து செயல்படும்படி கூறிக் கொண்டிருக்கின்றன.

நாம் ஒவ்வொருவரும் நிச்சயமாக என்றோ ஓர்நாள் இறக்க வேண்டியவர்களே! இறந்த பின்பும் எங்கேயோ ஓர் இடத்தில் வாழவும் வேண்டியவர்களே! உலகிலும் இறப்புக்குப் பிறகும் நாம் சாந்தியுடன் வாழத்தான் வேண்டுமென்று விரும்பினால், நாம் ஒவ்வொருவரும் சாந்திக்குரிய உண்மையான நேரான குறுகிய பாதையை ஆராய்ந்து கண்டறிந்து செயல்படுவதே அறிவுடைமையாகும். என்று கூறிக் கொள்வதோடு என்னுரையை முடிக்கிறேன்.

நம்முடனிருக்கும் இறைவன் நாம் எல்லோருக்கும் நல்லருள் பாலிப்பானாக ஆமீன்.



# நீதிமன்றத் தீர்ப்பு

***அன்பிற்குரிய அகில உலக மக்களே!***

இந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட மக்களின் கொள்கை விளக்கங்களை ஆய்வுக்கெடுத்தால் மூ∴மீன் அவர்களால் விளக்கப்பட்ட கொள்கையும், செயல் விளக்கங்களும் அறிவுக்குப் பொருத்தமாயும், தத்துவார்த்த உண்மைகளுக்கு அமைவாகவும் நடைமுறையில் கையாளக் கூடியதாகவும் அமைந்திருப்பதாய் நான் காணுகிறேன். கொள்கை அடிப்படையில் மூ∴மீன்களும் இந்து அத்வைதிகளும் ஒரேயோர் கொள்கையிலேயே தரிபட்டிருக்கிறார்களென்பது உண்மை. எனினும் கொள்கையை விளக்கும் முறையிலும், கொள்கையில் உறுதிபெறக் கையாளும் அணுகுமுறைப் பயிற்சிகளிலும், இரு கூட்டத்தினரும் வேறுபட்டிருக்கிறார்களென்பது புலனாகிறது. மேலும், இந்து அத்வைதிகளிடத்தில் வாழ்க்கையில் கடைப்பிடித்தொழுக வேண்டிய அதாலத்தென்ற நீதிநிர்வாகம் இருப்பதாய்த் தென்படவில்லை. பெண்ணுரிமைச் சட்டங்கள், பாகப் பிரிவினைச் சட்டங்கள், போன்ற முக்கிய விடயங்களில் இந்து அத்வைதிகள் உறுதியான வேதச் சட்டங்களுடன் வாழ்வதாயும் தென்படவில்லை. மூ∴மீன்களுடைய வேதநூலை மிக அவதானத்தோடு நோக்கினால் உலக மக்கள் யாவரும் தேடிக் கொண்டிருக்கிற சாந்தியை, சமாதானத்தை, தன்நிறைவை, நிறைநிலையை, பூரணத் தன்மையை (கமாலியத்தை)ப் பெற்றுக் கொள்ளக் கூடிய வழியை அறிவுக்கமைவாய் விளக்கிக் காட்டிக் கொண்டிருக்கிற ஒரேயோர் வேதநூல் குர்ஆன் மட்டுமே என்பதை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

எனினும் இதுகாலவரையிலும் பெரும்பாலான மக்கள் குர்ஆனென்ற வேதநூலை ஆராய்ந்து மனிதனின் பிறப்பின் நோக்கை, குறிக்கோளை, அறிந்து செயல்படுவதாகத் தெரியவில்லை. முன்னுக்குப் பின் முரணில்லாததாய், அறிவுக்குப் பொருத்தமானதாய், யாராலும் இலகுவாய்க் கையாளக் கூடிய செயல் விளக்கங்களைக் கொண்டதாய் அமைந்துள்ள ஓர் வேதநூலின் வாதங்களை நாம் இதுகாலவரையிலும் ஆராய்ந்து தெளிவுபடாமல், மனம்போன போக்கில் வாழ்ந்து இன்னலடைகிறோமென்றால், நாம்

21ம் நூற்றாண்டில் வாழும் புத்தி ஜீவிகள்தானென்று கூறமுடியாது. மனிதனுக்கு எவ்விடயத்திலும் முன்மாதிரி அவசியம். முன்மாதிரியும் தகுந்த விளக்கமும் கிடைத்திருந்தும் நாம்அதை அலட்சியம் செய்து கொண்டிருக்கிறோமென்றால் அது எமது அலட்சியப் போக்கும் அறியாமையும் என்றுதான் கூற வேண்டியிருக்கிறது.

மனித குலத்துக்கு வேண்டிய அரசியல், பொருளாதாரம், தொழில், கல்வி, சுகாதாரம், விஞ்ஞானம் போக்குவரத்து, கொடுக் கல்வாங்கல், கலை கலாச்சாரம் போன்ற எல்லா விடயங்களிலும், எல்லா மக்களாலும் கையாளக்கூடிய மிகச் சுருக்கமான வழிவகைக ளைக் காட்டக் கூடிய ஓர் வேதநூல் உலகிலுண்டென்றால், அது இறைவனால் மக்களுக்குத் தரப்பட்ட ஓர் பெரும் அருட்கொடை யென்றே நான் கருதுகிறேன்.

மார்க்க விடயத்தில் மனிதர்களை பலாத்காரம் செய்ய எவருக்கும் எப்போதும் உரிமை கிடையாதென்றால், இஸ்லாத் தையே உலக மக்கள் பின்பற்ற வேண்டுமென்று தீர்ப்பு வழங்க எனக்கும் உரிமை கிடையாது. ஆதலால் உலக மக்கள் யாவரும் தனித்தனியாகவோ, அல்லது ஓர் நீதியான சபையின் மூலமாகவோ குர்ஆன் ஹதீஸுகளைப் பல கண்ணோட்டங்களோடு ஆராய்ந்து, உண்மையைக் கண்டறிந்து, அவ்வுண்மையோடு யாவரும் ஒன்றி வாழ்ந்தால், உலக மக்கள் நிச்சயமாகச் சாந்தி சமாதானத்தை, நிறைநிலையைப் பெற்றுக்கொள்ள முடியுமென்று உங்களுக்கு நான் ஆலோசனை கூறுவதையே எனது தீர்ப்பாகக் கூறி முடிக்கிறேன்.

**இப்படிக்கு**
**பகுத்தறிவு நீதிபதி,**
**ஷெய்குல் முப்லிஹீன்**
***எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்)***
**மருதமுனை, சிறிலங்கா.**